PRINTED FOR ACADEMIC PURPOSE ONLY
(Souvenir for those participated in the Virtual Meet)

E-ISSN: 2581-7140

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

INTERNATIONAL JOURNAL OF TAMIL LANGUAGE AND LITERARY STUDIES

(IJTLLS) UGC CARE LISTED JOURNAL
A Bi-Yearly Peer-Reviewed International Journal

மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி
(தன்னாட்சி) பசுமலை, மதுரை

MANNAR THIRUMALAI NAICKER COLLEGE,
(Autonomous) PASUMALAI, MADURAI

சிறப்பிதழ்

தமிழ் இலக்கண இலக்கிய உரை மரபுகள்

TEXTUAL TRADITION IN TAMIL GRAMMAR AND LITERATURE

தொகுதி – 3, சிறப்பிதழ் 2, தொகுதி – 1 திசம்பர் 2020

VOLUME – 3, SPECIAL ISSUE 2, VOL – 1, DECEMBER 2020

E-ISSN: 2581-7140

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

INTERNATIONAL JOURNAL OF TAMIL LANGUAGE AND LITERARY STUDIES

(IJTLLS) UGC CARE LISTED JOURNAL
A Bi-Yearly Peer-Reviewed International Journal

மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி

(தன்னாட்சி) பசுமலை, மதுரை

MANNAR THIRUMALAI NAICKER COLLEGE,

(Autonomous) PASUMALAI, MADURAI

சிறப்பிதழ்

தமிழ் இலக்கண இலக்கிய உரை மரபுகள்

TEXTUAL TRADITION IN TAMIL GRAMMAR AND LITERATURE

தொகுதி - 3, சிறப்பிதழ் 2, தொகுதி - 1, திசம்பர் 2020

VOLUME– 3, SPECIAL ISSUE 2, VOL – 1, DECEMBER 2020

தமிழ் இலக்கண இலக்கிய உரை மரபுகள்

TEXTUAL TRADITION IN TAMIL GRAMMAR AND LITERATURE

பதிப்பாசிரியர் குழு/EDITORIAL BOARD

Advisory Editorial Board

PUBLISHER: **Maheswari Publishers**
(The publishing unit of PANDIAN EDUCATIONAL TRUST- TN32D0026797)
3/350, Veterinary Hospital Back side,
Virudhunagar – 626001.
Mobile: 8526769556
Mail: maheswari@ijtlls.com
dmakesh88@gmail.com, ijtllsetamiljournal@gmail.com

PUBLISHER'S MESSAGE

Aim & Objectives

International Journal for Tamil Language and Tamil Studies is an online Peer-Reviewed International Journal published twice in a year on July and January, which is published by **Maheswari Publishers,** patronized by **Pandian Educational Trust, Virudhunagar, Tamil Nadu, India**. It also publishes **Literary Druid, for English Language and Literature (Online)** to foster research in the domain areas**. International Journal for Tamil Language and Tamil Studies** aims to bring down Academic Research to promote research support for the academicians and scholars in the field of Tamil Language and Literature. Research through this medium is motivating in all aspects of main and inter-disciplines by consequent projects and e-publication. Making Internationalization of the research works in the globalized world aid the scholarly community to develop scholarly profile in research through the quality of publications. The audacity and vision of academic research on internet could foster green printing and open access nature in research. All of these motivate best distribution of research that produces positive outcomes for the betterment of the world. In achieving the aim, our journal International Journal of Tamil Language and Tamil Studies has been listed in UGC CARE List from July 2020.

Disclaimer

International Journal for Tamil Language and Tamil Studies is committed to research Ethics and consider plagiarism as a crime. The authors are advised to adhere academic ethics with respect to acknowledgment of quotations from other works. The Publisher & Editors will not be held responsible for any lapse of the provider regarding plagiarism in their manuscripts. The submissions ought to be original, must accompany the declaration form stating your research paper as an original work, and has not been published elsewhere for any research purpose. The contributor will be the sole responsibility for such lapses on any legal issues and publication ethics. **Contact** ijtllsetamiljournal@gmail.com for submission and other information. See www.ijtlls.com for guidelines.

Message from the Editor-in-Chief

International Journal for Tamil Language and Tamil Studies is an online Peer-reviewed International Journal of Tamil Language and Literature which is committed to academic research, welcomes scholars and students all over the world who to advance their status of academic career and society by their scholarly ideas. The journal welcomes publications of quality papers on the domain area. Research ought to be active to create a major frontier in the academic world. It must augment the neo-theoretical frame that facilitates re-evaluation and augmentation of existing practices and thoughts. In due course, this will effect in a prime discovery and lean to the knowledge acquired. Research is to establish, substantiate facts, restate previous works ant to resolve issues. An active venture to endow cogent approach to these types for educational reformations through academic research has become the central intent of the journal. I am glad to say that our journal has been approved in the UGC CARE List. It is an achievement by the clear protocol of academic and ethical policies maintained by the journal and I thank the authors for their original articles with proper ethical writing methods.

Publisher, Director and Editor
D.Maheswari

வாழ்த்துரை



பொறியாளர் திரு.சு.இராஜகோபால்,
தலைவர்,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி (தன்னாட்சி),
பசுமலை, மதுரை 625 004.

தமிழ் இலக்கிய இலக்கண நூல்கள் காலந்தோறும் தோன்றுவன. இந்நூல்களுக்கு உரைகள் இல்லாவிட்டால் அவற்றின் முழுமுதற் பொருளை அறிந்து கொள்வது கடினம். அவ்வரிய பணியைச் செய்தவர்கள் உரையாசிரியர்கள். தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு ஆக்கந்தரும் முறையில் அமைந்த இவ்வுரைகளை இயற்றிய புலமைச் செல்வர்களாகிய உரையாசிரியர்களின் வரலாறு, மதிநுட்பம், உலகியல் அறிவு, அக்காலச் சமூகச்சூழல் ஆகியவற்றை அவர்கள் இயற்றிய இலக்கிய இலக்கண உரைகளால் தெரிந்துகொள்ள முடிகிறது. தமிழ்மொழியில் உரைநூல்கள் தோன்றி வளர்ந்த வரலாற்றினையும் இறையனார் அகப்பொருளுரை, இளம்பூரணர் உரை எனத்தொடங்கி சிவஞான முனிவர் வரையுள்ள உரையாசிரியர்களின் தமிழ்த்தொண்டினையும் ஆய்வாளர்கள் தங்கள் கட்டுரைகளில் வெளிப்படுத்தி இருப்பது உரையாசிரியர்களின் தேவையைப் புலப்படுத்துகிறது.


தமிழ் இலக்கண இலக்கிய உரை மரபுகள் எனும் பொருண்மையில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள், முனைவர்பட்ட ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் எனக் கட்டுரை வழங்கிய அனைவரையும் பாராட்டுகிறேன்.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ் (IJTLLS) ஆய்வுக்கட்டுரைகளைச் செப்பம் செய்து ஆய்விதழாகப் பன்னாட்டுத் தரக்குறியீட்டு எண்ணுடன் (ISSN) வெளியிட்டு சிறப்பிதழ் காணொளி இருக்கை நடத்தியது சிறப்பு. ஆய்வுக்கட்டுரைகள் இதழ் ஆக்கம் பெறுவதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு பன்னாட்டுக் காணொளி இருக்கை நடைபெறுவதற்கு பல்லாற்றானும் உழைத்த சிறப்பிதழ் ஆசிரியர்களான தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதிப்பிரிவு) முனைவர் தி.பரிமளா, முனைவர் க.குமரகுருபரன் அவர்களையும் மற்றும் பன்னாட்டு ஆய்விதழின் ஆசிரியர் முனைவர் திருமதி த.மகேஸ்வரி அவர்களையும் மனதாரப் பாராட்டுகிறேன். எம் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் மற்றும் பேராசிரியப் பெருமக்களையும் மனமுவந்து வாழ்த்துகிறேன்.

இடம் : மதுரை — தலைவர்

நாள் : 31.12.2020 — பொறியாளர் திரு.சு.இராஜகோபால்

வாழ்த்துரை



உயர்திரு மூ.விஜயராகவன்,

செயலர்,

மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி (தன்னாட்சி),

பசுமலை, மதுரை 625 004.

தமிழ் இலக்கியங்களின் வளர்ச்சியில் உரையாசிரியர்களின் பங்கு மகத்தானது. உரைகளின் பின்புலத்தில் இருந்த உரையாசிரியர்கள் பெரிதும் போற்றப்படாது இருந்தனர். உரையாசிரியர்களின் சிறப்பு வெளிப்படாது போகுமோ என்ற நிலையை மாற்றி இன்று உரையாசிரியர்களின் பெருமையை உணர்த்த 'தமிழ் இலக்கண இலக்கிய உரைமரபுகள்' என்னும் பொருண்மையில் ஆய்வுக்கட்டுரைகள் இதழ் ஆக்கம் செய்யப்பட்டுள்ளது. உரையாசிரியர்களின் நுண்மான் நுழைபுலம் இனிவரும் காலங்களில் சிறப்பிக்கப்படும்.

தமிழ் இலக்கண இலக்கிய உரை மரபுகள் எனும் பொருண்மையில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள், முனைவர் பட்ட ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் எனக் கட்டுரை வழங்கிய அனைவரையும் பாராட்டுகிறேன்.

கட்டுரைகளைச் செப்பம் செய்து ஆய்வுக்கோவை பன்னாட்டுத் தரக்குறியீட்டு எண்ணுடன் (ISSN) வெளியிடப்படுவது சிறப்பு. ஆய்வுக் கட்டுரைகள் இதழ் ஆக்கம் பெறுவதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு பல்லாற்றானும் உழைத்த சிறப்பிதழ் ஆசிரியர்கள் முனைவர் தி.பரிமளா, முனைவர் க.குமரகுருபரன், அவர்களுக்கும் பன்னாட்டு ஆய்விதழின் ஆசிரியர் திருமதி த.மகேஸ்வரி அவர்களுக்கும் தமிழ்ப்பணியைச் சிறப்பாகச் செய்திட வாழ்த்துக்கள். தமிழ்மொழியின் பல்வேறு பரிமாணங்களை வெளிப்படுத்தும் வகைகளில் நூல்கள் வெளிவரவேண்டும் என்றும் இவர்களின் பணி மேன்மேலும் சிறக்கவேண்டும் எனவும் வாழ்த்துகிறேன்.

இடம்: மதுரை — செயலர்

நாள்: 31.1.2020 — உயர்திரு மூ.விஜயராகவன்

வாழ்த்துரை

லெ.கோவிந்தராஜன்,
பொருளாளர்,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி(தன்னாட்சி),
பசுமலை, மதுரை 625 004.



மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரித் தமிழ்த்துறையில் (சுயநிதிப்பிரிவு) இருந்து இலக்கிய இலக்கண உரைகளால் அமைந்த சிறப்பிதழ் ஆய்வுக்கட்டுரைகளை ஆய்வுக்கோவையாக பன்னாட்டுத் தரக்குறியீட்டு எண்ணுடன் (ISSN) வெளியிடுவதில் மகிழ்கிறேன். மொழிக்காகச் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பாண்டிய மன்னர்கள் பற்றியும் முச்சங்க வரலாறு பற்றியும் இறையனார் அகப்பொருளுக்கு நக்கீரர் எழுதிய உரையின் வாயிலாகவே அறிய முடிகின்றது. ஒரு நூலுக்கு எழுதப்பட்ட பல்வேறு உரையாசிரியர்களின் உரைகளைத் தொகுத்துக் காணவும், உரைவேற்றுமைகளைக் கண்டு சீர்தூக்கிப் பார்க்கவும் இச்சிறப்பிதழ் பயன்பாடு உடையதாக அமைந்துள்ளது. உரையாசிரியர்கள் பற்றியும் உரைகளின் தனித்தன்மைகள் பற்றியும் ஆராய்ச்சியாளர்கள் தங்கள் கட்டுரைகளின் வாயிலாக எடுத்துரைத்துள்ளனர். அது மட்டுமன்றி தமிழ் இலக்கண இலக்கிய நுட்பங்களையும் நயங்களையும் அதனை உரையாசிரியர்கள் எடுத்துரைத்துள்ளமையையும் அறிய முடிகின்றது. உரையாசிரியர்கள் இல்லையென்றால் மூல நூல்களின் உயர்ந்த கருத்துக்கள் அறியப்படாமலேயே இருந்திருக்கும். மூலநூல்கள் எனும் தங்கச் சுரங்கத்தை உரையாசிரியர்களின் உரை என்னும் வெளிச்சத்தில் காண முடிகின்றது. ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்த கட்டுரைகள் தமிழ் மொழிக்கு மேலும் ஓர் அணிகலனாக அமையட்டும் என வாழ்த்துகிறேன்.

இடம் : மதுரை — பொருளாளர்

நாள் : 31.12.2020 — உயர்திரு லெ.கோவிந்தராஜன்

அணிந்துரை

முனைவர் பா.மனோகரன்,

முதல்வர்,

மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி (தன்னாட்சி)

பசுமலை, மதுரை – 625 004.



பண்டைக்காலம் தொட்டே தனித்த பாரம்பரியத்தோடு விளங்குவது மதுரை மாநகர். இம்மாநகரைத் தன்னுடைய ஆட்சியில் சீர்மிகு நகராக மாற்றியவர் மாட்சிமை தங்கிய மன்னர் திருமலை நாயக்கர் அவர்களாவர். அவர்தம் பெயர் கொண்டு 1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு நாயுடு மகாஜன சங்கத்தாரால் தொடங்கப்பட்டது எங்கள் 'மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி'. கடந்த 46 ஆண்டு காலமாக கல்விப்பணியாற்றி வரும் எங்கள் கல்லூரியில் 1998 ஆம் ஆண்டு பகுதி-1 தமிழை மட்டும் பாடமாகக் கொண்டு தமிழ்த்துறை சுயநிதிப்பிரிவு தொடங்கப்பட்டது. பின்பு 2011 மற்றும் 2014 ஆம் ஆண்டு முறையே இளங்கலை மற்றும் முதுகலைத் தமிழ் தொடங்கப்பட்டது. கிராமப்புற மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்கள் பெரிதும் பயிலும் எங்கள் கல்லூரி சுயநிதிப்பிரிவில் உள்ள தமிழ்த்துறை 17 ஆசிரியர்களைக் கொண்டு இயங்கும் பெரிய துறை ஆகும். வருடந்தோறும் பல்வேறு சிறப்புச் சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், பயிலரங்குகள், போன்ற நிகழ்வுகளைக் கொரோனா காலகட்டத்திலும் வெபினார் மூலமாக தமிழ்த்துறை சிறப்பாக நடத்தி வருகிறது. தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ் (IJTLLS) மற்றும் எம் கல்லூரி சுயநிதிப்பிரிவு தமிழ்த்துறையும் இணைந்து 'தமிழ் இலக்கண இலக்கிய உரைமரபுகள்' எனும் பொருண்மையில் சிறப்பிதழ் காணொளி இருக்கை நடத்தி, ஆய்வுக்கட்டுரைகளைச் சிறப்பிதழாக வெளியிடுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். உரையின்றி பழைய செய்யுள்களின் கருத்துக்களை முழுமையாக உள்வாங்க முடியாது என்பது அனைவரும் அறிந்ததே. உரையாசிரியர்கள் சிறந்த ஊடகமாக இருந்து பழைய கருத்துக்களை நம்மிடம் கொண்டு வந்து சேர்த்தவர்கள் என்பதால் அவர்களுக்கு சிறப்பு செய்யும் விதமாகவும், அவ்வுரையாசிரியர்களை இன்றைய தலைமுறையினரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்திலும் வெளியிடப்பட்ட இவ்விதழ் ஆய்வுலகில் சிறப்பிடம் பெறும் என்பதில் ஐயமில்லை. சுயநிதிப்பிரிவின் தமிழ்த்துறை இன்னும் இது போன்ற பல நிகழ்வுகளை நடத்தி துறைக்கும் கல்லூரிக்கும் பெருமை சேர்க்க மனதார வாழ்த்துகின்றேன்.

இடம் : மதுரை — முதல்வர்

நாள் : 31.12.2020 — முனைவர் பா.மனோகரன்

வாழ்த்துரை



முனைவர் க.அழகுசுந்தரம்,
இயக்குநர்,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி (தன்னாட்சி),
பசுமலை, மதுரை 625 004.

பார்புகழும் மதுரை மாநகரில் சீர்மிகு கல்விப் பணியாற்றும் மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியின் சுயநிதிப்பிரிவு தமிழ்த்துறையும் தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழும் (IJTLLS) இணைந்து நடத்திய 'தமிழ் இலக்கண இலக்கிய உரைமரபுகள்' என்னும் பொருண்மையில் ஆய்வாளர்களிடமிருந்து பெறப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் இதழ் ஆக்கம் பெறுவது கண்டு மகிழ்வடைகின்றேன்.

தமிழின் தொன்மையான இலக்கண இலக்கியங்களை இன்றைய தலைமுறையினர் படித்து இன்புறவும் அதனை வாழ்வில் பின்பற்றவும் வழிகாட்டியவர்கள் உரையாசிரியர்களே. தொல்காப்பியம் போன்ற இலக்கணச் சூத்திரங்களுக்கான பொருளையும், சங்க இலக்கியப் பாடல்களுக்கான பொருளையும் எடுத்துக் கூறினர். அது மட்டுமன்றி இலக்கணக் குறிப்பு தருதல், பாடபேதங்களை எடுத்துரைத்தல், பழமொழிகளை தக்க இடத்தில் பயன்படுத்திக் காட்டுதல், மரபுவழித் தொடரைப் பதிவு செய்தல், வரலாற்றுக் குறிப்புரைத்தல், பண்பாட்டு மேன்மைகளைக் கூறுதல், பழக்கவழக்கங்கள் போன்ற தகவல்களையெல்லாம் உரையாசிரியர்களின் உரைகளின் வழியாக அறிய முடிகின்றது. தமிழ்த்துறை சுயநிதிப்பிரிவு பேராசிரியர்கள் இக்கட்டான இந்தக் காலத்திலும் அறிவுத்தாகமுடையோர்களுக்கு செறிவான கருத்தளித்தது மட்டுமன்றி இந்த வாய்ப்பினை தவறவிட்டவர்களுக்கும் உரையாசிரியர்கள் பற்றிய கருத்தானது இதழ் வடிவில் சென்று பயனளிக்க வேண்டும் என்ற உயரிய சிந்தனையில் வெளியிடுவது ஆராய்ச்சி உலகில் பெரும் பயன் நல்கும். இலக்கண இலக்கிய உரைமரபுகள் எனும் பொருண்மையிலான ஆய்விதழ் சிறப்புடன் வெளிவருவதற்கு காரணமாக இருந்த ஆய்விதழின் ஆசிரியர் திருமதி த.மகேஸ்வரி அவர்களையும் எம் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் மற்றும் பேராசிரியப் பெருமக்களையும் மனமுவந்து வாழ்த்துகிறேன். மேலும் இது போன்ற ஆக்கப்பூர்வமான நிகழ்வுகளைத் தொடர்ந்து நடத்தவேண்டும் என அன்புடன் வேண்டுகிறேன்.

இடம் : மதுரை — இயக்குநர்

நாள் : 31.12.2020 — முனைவர் க.அழகுசுந்தரம்

வாழ்த்துரை



முனைவர் சீ.காயத்ரிதேவி,

தமிழ்த்துறைத் தலைவர்,

மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி (தன்னாட்சி),

பசுமலை, மதுரை 625 004.

தமிழ் இலக்கிய வரலாற்றில் பல இலக்கண நூல்களும் இலக்கிய நூல்களும் நிரம்பி இருத்தல் போல அவற்றை விளக்கம் செய்யும் உரைநூல்களும் நிரம்பியுள்ளன. மூலநூல்களைப் போலவே உரைநூல்களும் சிறப்பு வாய்ந்தவை. மூல நூல்களை மக்களிடையே மதிப்புடன் வாழச்செய்கின்ற பெருமை உரை நூல்களுக்கே உண்டு. இங்ஙனம் வளர்ச்சி பெற்று வரும் உரை நூல்களை இயற்றிய உரையாசிரியர்கள் பலராவர். இவ்வாறு தமிழ் இலக்கண இலக்கிய உரைகளின் சிறப்பை வெளிக்கொணரும் வண்ணம் தமிழ் இலக்கண இலக்கிய உரைமரபுகள் என்ற பொருண்மையிலான ஆய்வுக்கட்டுரைகள் தொகுக்கப்பட்டு இதழ் ஆக்கம் செய்யப்பட்டுள்ளது.

பல கல்லூரி மற்றும் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், ஆய்வு மாணவர்கள், தமிழ் ஆர்வலர்கள் ஆகியோரிடமிருந்து சிறப்பான கட்டுரைகள் பெற்றுத் தொகுத்து வடிவமைக்கப் பட்டுள்ளது. இப்பணியைச் செவ்வனே செய்த சுயநிதிப்பிரிவு தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் தி.பரிமளா, தமிழ்துறைப் பேராசிரியர் முனைவர் க.குமரகுருபரன் மற்றும் பன்னாட்டு ஆய்விதழின் ஆசிரியர் திருமதி த.மகேஸ்வரி அவர்களையும் மனதார வாழ்த்துகிறேன்.

இடம் : மதுரை — தமிழ்த்துறைத் தலைவர்

நாள் : 31.12.2020 — முனைவர் சீ.காயத்ரிதேவி

என்னுரை



முனைவர் தி.பரிமளா,
தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதிப்பிரிவு),
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி (தன்னாட்சி),
பசுமலை, மதுரை 625 004.

தமிழ்நாடு நாயுடு மகாஜன சங்கத்தினரால் 1974 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18 ஆம் நாள் தொடங்கப்பட்ட கல்லூரி, கல்விநிலையிலும் பொருளாதார நிலையிலும் பின்தங்கிய கிராப்புற மாணவர் வாழ்விற்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்து வருகின்றது. அறிவுத் திருக்கோயிலாக விளங்கிவரும் இக்கல்லூரியில் சுயநிதிப்பிரிவு தமிழ்த்துறையானது பல்வேறு கருத்தரங்குகளை பல்வேறு பொருண்மைகளில் நடத்தியுள்ளது. அதன் தொடர்ச்சியாக உரை என்றால் என்ன? உரை ஏன் தேவைப்படுகிறது? உரையின் தோற்றம் வளர்ச்சி! ஒரு நூலுக்கு ஏன் பல்வேறு உரையாசிரியர்கள் உரை எழுதியுள்ளனர்? ஒருவர் எழுதிய மூல நூலுக்கு மற்றவர் உரை எழுதிய நிலையில் நூலாசிரியரே உரை எழுதிய சூழல் போன்றவற்றை இன்றைய மாணவர்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் இச்சிறப்பிதழ் ஆய்வுக்கோவை அமைகின்றது. கற்றுத் துறை போகிய ஆசிரியப் பெருமக்கள் உரை செய்யும் உதவி, உரையின் வகைகள், மொழிநடை, உரைச்சிறப்புகள், உரை வேற்றுமை, உரை நுட்பம் போன்றவற்றை இலக்கண உரையாசிரியர்கள், இலக்கிய உரையாசிரியர்கள், காப்பிய உரையாசிரியர்கள், சமயநூல் உரையாசிரியர்கள் என பல்வேறு தலைப்புகளில் கட்டுரையாளர்கள் தங்கள் ஆய்வுச் சிந்தனைகளை பதிவு செய்துள்ளனர். இச்சிறிய முயற்சியினால் நாங்கள் முன்னெடுக்க அதன் பயனறிந்து பன்னாட்டு ஆய்விதழின் நிறுவனர் திருமதி த.மகேஸ்வரி அவர்கள் இதழ் ஆக்கம் செய்து வெளியிட முன்வந்த நிலை,

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

என்ற வள்ளுவரின் வாய்மொழிக்குச் சான்றாக விளங்கும் அவரையும் பாராட்டுகின்றேன். தமிழ்த்துறை முன்னெடுக்கும் அனைத்துக் கருத்தரங்குகளுக்கும் ஊக்கம் தந்து உதவி செய்து வருகின்ற மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி நிருவாகத்தினர் அனைவருக்கும் நன்றி. எனது இந்த முயற்சிக்கு உறுதுணையாக இருந்து உதவி செய்த முனைவர் க.குமரகுருபரன் அவர்களின் உதவி பெரிதும் நினைவு கூறத்தக்கது. மேலும் எம்துறை அனைத்துப் பேராசிரியப் பெருமக்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுளேன். எங்களின் சிறிய முயற்சியில் உருவாகியுள்ள சிறப்பிதழ் ஆய்வுக்கட்டுரைகளை தமிழ் அறிஞர்களும் ஆசிரியர்களும் மாணவச் செல்வங்களும் படித்துப் பயன்பெற வேண்டுகிறேன்.

இடம் : மதுரை தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதிப்பிரிவு)

நாள் : 31.12.2020 முனைவர் தி.பரிமளா

பதிப்புரை



திருமதி. த.மகேஸ்வரி,
இயக்குநர் மற்றும் பதிப்பாசிரியர் - IJTLLS,
தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,
விருதுநகர் - 626 001.

தமிழ்மொழி மற்றும் இலக்கியத்திற்காக எமது "தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்" (Ijtlls) தம் இலக்கிய மற்றும் ஆராய்ச்சி அரும்பணியைச் செம்மையாக செய்து வருகின்றது. தமிழ்மொழியின் வளர்ச்சியினை எண்ணி செயல்பட்டு "தமிழ் இலக்கண இலக்கிய உரை மரபுகள்" *(TEXTUAL TRADITION IN TAMIL GRAMMAR AND LITERATURE)* என்ற பொருண்மையில் சிறப்பிதழ் கௌரவ ஆசிரியராக திறம்பட செயல்பட்ட முனைவர் தி.பரிமளா மற்றும் க.குமரகுருபரன் ஆகியோருக்கும் அவர்களுக்கு ஒப்புதல் அளித்து ஊக்குவித்த மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி நிர்வாகத்தினருக்கும் எமது இதழ் சார்பாக நன்றியினை உரித்தாக்குகின்றோம். தமிழ்த்துறைத் தலைவர் மற்றும் தமிழ்த்துறைப் பேராசிரியார்கள் அனைவருக்கும் எமது நன்றியினை உரித்தாக்குகிறோம். தமிழின் பல தொன்மை நூல்களுக்கு உரை வகுத்த உரையாசிரியர்கள், உரைத்தன்மை, உரை வளர்ச்சி, தற்கால உரைகள், உரை வகுக்கும் விதம் என பல்வேறு பொருண்மைகளில் கிடைத்த ஆய்வுக் கட்டுரைகளை கருத்துத் திருட்டு மற்றும் ஒப்பீடு சரிசெய்து மதிப்பீடு செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. ஆய்வுக் கட்டுரைகளை வழங்கி சிறப்பித்த தமிழ் பேராசிரியர்கள், ஏனைய அனைத்து துறைப் பேராசிரியர்கள், எழுத்தாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களை மனதார பாராட்டுகிறோம். தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ் (IJTLLS) செம்மையாய் செயல்பட்டு ஆய்வுக் கட்டுரைகளை இணையத்தில் பதிப்பு செய்து வருகின்றது. எதிர்காலத்தில் தமிழ் ஆராய்ச்சிகளை உலக அரங்கத்திற்கு எடுத்துச் செல்ல ஓர் ஆய்வுக்களமாக எமது இதழ் முன்மாதிரியாகச் செயல்பட்டு வருகிறது. அதற்கு உறுதுணை அளித்த அனைவருக்கும் நன்றி

த.மகேஸ்வரி

பொருளடக்கம்

வ.எண் S.No	தலைப்பு / பெயர் Title / Author Name	பக்க எண் Page No
1.	தொல்காப்பிய மெய்ப்பாட்டியலில் உரையாசிரியர்களின் கருத்துக்கள் **Opinions of Commentators on Tholkappiam Realism** அ. அக்ஸிலியா மேரி / **A.Auxilia Mary**	1
2.	திருநாவுக்கரசர் தேவாரத்தில் உரை மரபுகள் **The Textual Conceptualization of Thirunavukkarasar's "Thevaram"** முனைவர் சி. அற்புதராணி / **Dr S.Arputharani**	6
3.	பத்துப்பாட்டு உரைகள் **Paraphrases of Pathu Paattu** முனைவர் வீ.அன்னபூரணி / **Dr.V.Annapoorani**	12
4.	தொல்காப்பிய எழுத்ததிகார உரையில் பாட வேறுபாடுகள் **Textual Differences in the Notes of Eluththathikaram of"Tholkappiyam"** தோ.அனிதா / **D.Anitha** முனைவர் சு. ஆனந்தவேல் / **Dr.S.Ananthavel**	19
5.	"ஆசாரக் கோவை" உரையும் உரையாசிரியரும் **The Secondary Sources of "Acarakkovai" and the Secondary Commentators** முனைவர் மோ.அனுசூயா / **Dr M.Anusooya**	26
6.	உரையாசிரியர்கள் காட்டும் தமிழர்வாழ்வும் பண்பாடும் **Tamil Life and Culture As Portrayed in Prose Writings** வீ.இராஜேந்திரன் / **V.Rajendran** அ. பாக்கிய முத்து / **Dr.A.Packiamuthu**	32
7.	தொன்னூல் விளக்கத்தில் வீரமாமுனிவரின் உரைத்திறன் **Textual Dexterity of Veeramamunivar in *Thonnool Vilakkam*** முனைவர் க.உமாராணி / **Dr.KUmarani**	39
8.	சிலப்பதிகார கானல்வரியில் உரையாசிரியர் ச.வே.சுவின் திறனாய்வுப் பார்வை **Commentator Sa.Ve.Su'S Investigative View on Kanal Vari Poem of *Silapathigaram*** ச.உஷா /**C.Usha** முனைவர் க. ரமேசு / **Dr.K.Ramesh**	46
9.	"தொல்காப்பியம்" – உரைவளக் கோவையும் அதன் பெருமைகளும் குறித்த சிந்தனைகள் **"Tholkappiam" - Thoughts on the Descriptive Note and its Excellence** முனைவர் இரா. கண்ணன் / Dr.R.Kannan	53

வ.எண் S.No	தலைப்பு / பெயர் Title / Author Name	பக்க எண் Page No
10.	உரையாசிரியர்களின் உரைநெறிகளில் "தொல்காப்பியம்" - கிளவியாக்கத்தில் தொடரியல் கோட்பாட்டுச் சிந்தனைகள் **"Tholkappiam" in the Textual Writings of Elucidative Writers- Syntactic Perspective of Kilavuyakkam** முனைவர் உ.கருப்பத்தேவன் / **Dr.U.Karupputhevan**	58
11.	கூழங்கைத் தம்பிரானின் *நன்னூல்* எழுத்ததிகார எழுத்தியல் பதவுரை மரபு **The Glossarial Interpretation of *Nanool* by Koolngai Tambiran** முனைவர் வி.கலாவதி / **Dr. V.Kalavathi**	66
12.	ஆறுமுக நாவலரின் உரை சிறப்புகள் **The Explanatory Excellence of Arumuga Navalar** முனைவர் த.கலாஸ்ரீதர் / **Dr.T.Kalasridhar**	74
13.	பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் உரைத்திறன் **The Textual Excellence of Pinnathur Narayana Swami Iyyer** முனைவர் இரா.கவிதா / **Dr.R.Kavitha,**	80
14.	வை.மு.கோ பார்வையில் கம்பராமாயணத்துள் மண்டோதரி **Mandothari of "Kambaramayanam" in the View of Vai.Mu.Ko** முனைவர் ப. கவிதா / **Dr. P. Kavitha**	86
15.	தமிழர் மரபை உணர்த்தும் இளம்பூரணர் உரைப்பணி **Inculcation of Tamil Tradition in the Writings of Ilambooranar** முனைவர் மு.கவிதா / **Dr.M.Kavitha**	93
16.	சங்கரநமச்சிவாயரின் நன்னூல் உரைத்திறன் **The Efficiency of Sangara Namachivayar's "Viruththiyurai"** முனைவர் கா.காமாட்சி / **Dr K.Kamatchi**	99
17.	தொல்காப்பிய உரைகாரர்கள் வழி அமையும் குறியிடமும் குறிகளும் **Signs and Symbols of the Tolkappiya Derivative Authors** முனைவர் சீ.காயத்ரிதேவி / **Dr.S.Gayathri Devi**	105
18.	திருப்பாணாழ்வார் பாசுரத்தில் உரை வேறுபாடுகள் **Text Differences in the Pasuras (Hymns) of Thirupanalwar** முனைவர் க.கிரிவாசன் / **Dr.K.Girivasan**	112
19.	பன்னிருதிருமுறை உரைகள் **The Prose Works of Twelwe Holy Works** பூ.கிருஷ்ணம்மாள் / **B.Krishnammal** முனைவர் ஆ.முருகன் / **DR. A.Murugan**	119

வ.எண் S.No	தலைப்பு / பெயர் Title / Author Name	பக்க எண் Page No
20.	"குறுந்தொகை" மூவர் உரை மரபுகள் **"Kuṟuntokai" Textual Tradition of the Trio** முனைவர் இரா.குணசீலன் / **Dr.R.Gunaseelan**	124
21.	தொல்காப்பிய களவுக் கோட்பாட்டு உருவாக்கமும் உரை மரபும் **Love (Kalavu) Theoretical Development in "Tholkapiam" and Textual Convention** முனைவர் க.குமரகுருபரன் / **Dr.K.Kumarakurubaran**	131
22.	இளம்பூரணரின் தொல்காப்பிய உரைத்திறன் **The Textual Excellency of Ilampuranar's *Tholkappiam*** முனைவர் சொ.கோதை ஈசுவரி / **Dr. S. Kothai Eswari**	139
23.	தமிழ் உரை வரலாற்றில் சித்தர் இலக்கிய உரைகள் **Siddhar Literary Prose Works in the History of Tamil Prose** மா. கோமதி / **M.Gomathi** முனைவர் இரா.வசந்தமாலை / **Dr.R.Vasanthamalai**	145
24.	திருவருட்பாவின் இலக்கணக் குறிப்பும் ஔவை சு.துரைசாமிப்பிள்ளை உரைப்பதிப்பும் **Grammatical Scrutiny of "Tiruvarutpa" and the Edition of Auvai Su. Duraisamy Pillai's Commentary** வீ.கௌசல்யா / **V.Gowsalya** முனைவர் த.கண்ணன் / **Dr.T.Kannan;**	153
25.	கல்லாடரின் உரைத்திறன் **The Textual Expertise of Kalladar** முனைவர். தெ.சந்திரா / **Dr.T.Chandra**	162
26.	ந.மு.வேங்கடசாமி நாட்டாரின் சிலப்பதிகார உரைத்திறன் **The Textual Explanatory Skill of Venkataswami Nattar's "Silapathigaram"** முனைவர் து.சிவசித்ரா / **Dr.D.Sivachitra;**	168
27.	ஒப்பியல் நோக்கில் உரையாசிரியர்களின் பெருந்திணைக் கோட்பாடு **Comparative Study of Commentator's Peruntinai Theory** முனைவர் பெ.சுமதி / **Dr.P.Sumathi**	173
28.	இன்றைய கல்விச் சூழலில் ச. திருஞானசம்பந்தத்தின் நன்னூல் உரை **S.Thriugnanasambatham's Nannool Urai in Today's Educational Environment** ம. செந்தில்குமார் / **M.Senthilkumar** முனைவர் ரா.தேவணன் / **Dr.R.Devanan**	183

வ.எண் S.No	தலைப்பு / பெயர் Title / Author Name	பக்க எண் Page No
29.	தமிழ் உரைநடையின் ஆளுமை **The Influence of Tamil Prose** முனைவர் மா.ஞானமணி / **Dr.M.Gnanamani**	189
30.	நம்பியகப் பொருளும் நாற்கவிராச நம்பி உரையும் **Nambiyagap Porul and the Textual Commentary of Narkavirasa Nambi** முனைவர் இரா. தனலெட்சுமி / **Dr.R.Dhanalakshmi**	194

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

தொல்காப்பிய மெய்ப்பாட்டியலில் உரையாசிரியர்களின் கருத்துக்கள்

Opinions of Commentators on Tholkappiam Realism

அ. அக்ஸிலியா மேரி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அக்சிலியம் கல்லூரி, வேலூர்.
A.Auxilia Mary, Assistant Professor of Tamil, Auxilium College, Vellore.
ORCiD: https://orcid.org/0000-0002-8204-8926
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.001

Abstract

Sign language is the language spoken by man since from the dawn of time. They expressed their feelings through mundane actions and gestures. Over time the gesture changed in to language. We interact with the emotion when one study literature. Tholkappiyar takes this concept to mean 'meipadu'. Meipadukal is the sixth principle in "Tholkappiyam". This article presents the insightful meaning of meipadukal as evinced in the classic work. Moreover it covers up the nature, positions, and the explanatory texts given by the successive text writers about the reality of the concerned domain.

Keywords: "Tholkappiyam", Realism, Commentator, Text

முன்னுரை

உலகம் தோன்றிய காலத்தே மனிதன் பேசிய மொழி சைகைமொழி. சைகைகள் மூலமாக தங்களுடைய உணர்ச்சிகளை வெளிப்படுத்திக் கொண்டார்கள். பண்டைய கால மக்களின் உணர்ச்சிகளின் தரத்தைப் பொறுத்தே அவர்களுடைய வாழ்க்கைத் தன்மையும் அமைந்தது. பின்னர் காலப்போக்கில் சைகையானது மொழியாக மாற்றம் பெற்றது. இலக்கியத்தைப் பயிலும்போது அது வெளிப்படுத்தும் உணர்ச்சியோடு நாம் தொடர்பு கொள்கிறோம். இதனை தொல்காப்பியர் 'மெய்ப்பாடு' என்று பொருள்கொள்கிறார். தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் ஆறாவது இயலாக மெய்ப்பாட்டியல் அமைந்துள்ளது. செய்யுளியல் முதல் நூற்பாவில் தொல்காப்பியர் செய்யுள் உறுப்புக்களைக் குறிப்பிடுகின்றார். அவ்வுறுப்புக்களின் வரிசையில் மெய்ப்பாடு என்பதும் ஒன்றாகும். செய்யுளுக்குரிய ஒருறுப்பாயினும் இதன் சிறப்பினைக் கருதி இதனைத் தனியாக ஓரியலில் விளக்கிச் சொல்லியுள்ளார் தொல்காப்பியர். இக்கட்டுரையானது தொல்காப்பிய மெய்ப்பாட்டியியலில் தொல்காப்பியர் சுட்டும் மெய்ப்பாடுகளையும், உரையாசிரியர்களின் கருத்துக்களையும் ஆராய முற்படுகிறது.

தொல்காப்பியரின் மெய்ப்பாட்டுக் கொள்கை

தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் அகப்பொருளுக்கும் புறப்பொருளுக்கும் பொதுவாக உரிய உணர்ச்சிகளை விளக்கியுள்ளார். இவ்விரண்டிற்கும் உரியமெய்ப்பாடு எட்டு என்றும் இவ்வெட்டு மெய்ப்பாடுகளும் முப்பத்திரண்டு உணர்ச்சிகளால் தோன்றும் என்றும்

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

கூறுகின்றார். "பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும் கண்ணிய புறனேநானான்கென்ப" உள்ளுணர்வுகளின் தொகுதியாகத் தோன்றும் முப்பத்திரண்டு அனுபவங்களின் அடிப்படையில் எழும்முப்பத்திரண்டு உணர்ச்சிகளும் முறையே நான்கு நான்காகத் தொகுத்துக்காணின் எட்டுவகை மெய்ப்பாட்டிற்குக் காரணமாக அமையும்" என்பது இந்நூற்பாவின் பொருள். நாடகத்துள், பாடுவோரும் ஆடுவோரும், பாடலின் பொருள் வெளிப்படும்படி பாடியும் ஆடியும், கேட்போர்க்கும் பார்ப்போர்க்கும் பாட்டின் பொருளை இனிது விளக்குதலே மெய்ப்பாடு எனப்படும். அவ்வாறு வெளிப்படும் மெய்ப்பாட்டுப்பொருள் முப்பத்திரண்டாகும்.

> **நகையேயழுகைஇளிவரல்மருட்கை**
> **அச்சம்பெருமிதம்வெகுளியுவகையென்**
> **றப்பாலெட்டேமெய்ப்பாடென்ப (தொல். பொருள் 247)**

நகைமுதலாகச்சொல்லப்பட்டஎட்டும்மெய்ப்பாடுஎன்றுகூறுவர்தொல்காப்பியர்.

மெய்ப்பாடு	சுவைப்பொருள்	பொறியுணர்வு	குறிப்பு	விறல்
நகை	குழவி பேசும், அயலார் பேசும் தமிழ்	கேட்டல்	உள்ளக்கிளர்ச்சி	புன்முறுவல், சிரிப்பு
அழுகை	சுற்றத்தார் இறத்தல், பொருளை இழத்தல்	பார்த்தல், கேட்டல்	இரக்கம் (உள்ளமுருகுதல்)	அழுதல்,ஏங்குதல், பெருமூச்செறிதல்
இழிவு	பிணம், தொழுநோயாளர்	பார்த்தல், கேட்டல்	அருவருப்பு	முகஞ்சுளித்தல், கண்மூடல், மெய்ம்மயிர்சிலிர்த்தல்
வியப்பு	புதிய விலங்கு, புதிய பறவை, புதியபொருள்	பார்த்தல், கேட்டல்	மனத்துணுக்கு	முகஞ்சுளித்தல், சிறுநகைகண்ணிமை யாமை
அச்சம்	திருடர், பாம்பு, கடிநாய்	காணல், கேட்டல்	மனநடுக்கம்	உடல்நடுக்கம், வியர்த்தல், நாக்குழறல்
வீரம்	பகைவர்	பார்த்தல்	மனவெழுச்சி	தோள்துடித்தல், இமைகொட்டாமை, கண்சிவத்தல்,

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

				புன்சிரிப்பு
வெகுளி	அடித்தல், இடையூறு	உற்றறிதல், உணர்தல்	மனநோதல்	கண்சிவத்தல், உடல்துடித்தல்
உவகை	விளையாட்டு நற்செய்தி	பார்த்தல்	மனமகிழ்ச்சி	சிறுநகை, முகமலர்தல்

இவை போன்ற பிறவும் கொள்க.

உரையாசிரியர்களின் கருத்துக்கள்

இளம்பூரனார்

"யாதானும் ஒன்றைக் கூறிய வழி அதன்கண் அமைந்த பொருண்மையை விசாரித்து உணர்தலின்றி அவ்விடத்து வரும் பொருண்மையை மெய்ப்பாடு தோன்ற முடிப்பது மெய்ப்பாடு என்னும் உறுப்பாம்" என்பர் உரையாசிரியர் இளம்பூரனார். இதனைத் தெளிவுபடுத்த அவர்,

ஐயோஎனின்யான்புலிஅஞ்சுவலே
அணைத்தனன்கொளினேஅகன்மார்புஎடுக்கவல்லேன்
என்போல்பெருவிதிர்ப்புஉறுகநின்னை
இன்னாதுற்றஇறன்இல்கூற்று
நிரைவளைமுன்கைபற்றி
வரைநிழல்சேரநடத்திசின்சிறிதே (புறம் 225)

என்னும் புறநானூற்றுப் பாடலைக் காட்டுவர்.

போர்க்களத்தில் தன் கணவன் புண்பட்டான் என்பதனைக் கேள்வியுற்றாள் அவன் இல்லாள். அவ்விடத்திற்குச் சென்று அவனைக் கண்டாள், அவன் நிலை அவள் ஐயோ எனக்கூவி அரற்றும்படி இருந்தது. ஆனால் தன் அழுகையொலி கேட்டுப் புலிவந்து விடுமோ! வந்தால் இவ்வுடலையும் காண முடியாதே என அஞ்சினாள். அவனை அணைத்து எடுத்துச் செல்லவும் இயலவில்லை. அவன் மார்பினை எடுக்கும் வலிமை அவளுக்கு இல்லை. இத்தகைய நிலையடையச் செய்த கூற்றம் என்னைப் போலப் பெருந்துயர் அடைவதாகுக என்று சாபமிட்டாள். அவள் பேதைநெஞ்சம் தன் அன்பன் இறந்தான் என்று எண்ணவும் மறுத்தது. அதனால் அன்பே! வளையல் வரிசையமைந்த என் முன்கையினைப் பற்றிக்கொள். அந்தமலை நிழலை நோக்கிச் சிறிதே நடந்துவா எனப் பேசினாள். இப்பாடலைப் பாடும் போது நாம் சொற்களையும் அவற்றின் தனித்தனிப் பொருளையுமா உணர்கிறோம்! கணவனை இழந்த காதலின் உணர்ச்சிகள் வழிந்தோடும் உருவத்தினயல்லவா உணர்கிறோம்.

உள்ளத்து உணர்ச்சிகளை எவ்வளவு எளிதாகவும் சிறப்பாகவும் புலப்படுத்தியுள்ளார் புலவர்! இவ்வாறு பாத்திரங்களின் மெய்ப்பாடு தோன்ற முடித்தல் வேண்டும் என்பது

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

இளம்பூரணர் கருத்தாகும். புலவர் தன் கூற்றாகப்பாடாமல் அத்தலைவியின் கூற்றாக அமைத்துப் பாடி அவ்வுணர்ச்சியினை எளிதாக வெளிப்படுத்திருக்கும் உத்தியும் கருதற்பாலதாகும்.

"அச்சமுற்றான் மாட்டு நிகழும் அச்சம் அவன் மாட்டுச் சத்துவத்தினாற் புறப்பட்டுக்காண் போர்க்குப் புலனாகுந்தன்மை மெய்ப்பாடெனக் கொள்ளப்படும். மெய்யின் கண் தோன்றுதலின் மெய்ப்பாடாயிற்று. அஃதேல் இவ்விலக்கணம் கூத்தினும் பயன்படல் உண்டாதலின் ஈண்டு வேண்டாவெனின், ஈண்டு ஒரு செய்யுற் செய்யுங்காற்சுவை படச் செய்யவேண்டுதலின் ஈண்டுங்கூற வேண்டுமென்க" என்ற இளம்பூரணர் உரையாலும் மெய்யின் கண் மாற்றத்தை உண்டாக்குவதே உணர்ச்சி என்றஉண்மை வலிமையுறுகின்றது.

பேராசிரியர்

ஒருவரின் உள்ளத்தில் எழும் உணர்ச்சிகள் மற்றவர்கண்டும் கேட்டும் அறியபுறவுடற் குறியால் புலப்படுபவையே மெய்ப்பாடு எனப்படும். மெய் – உடற்புறத்தில், பாடு – தோன்றுதல் எனப் பொருள் கொள்ளலாம். "உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோராற்றான் வெளிப்படுதல்" என்று பேராசிரியர் இதற்குவி ளக்கம் கூறுகிறார். சுவைக்கப்படும் பொருளும், அதனை நுகர்ந்த பொறியுணர்வும், அது மனத்துட்பட்ட வழி உள்ளத்து நிகழும் குறிப்பும், குறிப்புகள் பிறந்த உள்ளத்தாற் கண்ணீர் அரும்பலும் மெய்ம்மயிர்சிலிர்த்தலும் முதலாக உடம்பின்கண் வரும் வேறுபாடாகிய சத்துவங்களுமென நான்காக்கி அச்சுவை யெட்டோடுங் கூட்டி ஒன்று நான்கு செய்து உறழ, முப்பத்திரண்டாம் என்பது. எனவே, சுவைப்பொருளும், சுவையுணர்வும், குறிப்பும் விறலுமென நான்காயின. விறல் எனினும் சத்துவம் எனினும் ஒக்கும். பொறியுணர்வுகள் அவ்வச்சுவையெனப்படும் என்று மெய்ப்பாட்டிற்கு விளக்கம் அளிக்கின்றார் பேராசிரியர்.

வல்லார்முன்சொலல்வல்லேன்என்னைப்பிறர்முன்னர்க்

கல்லாமைகாட்டியவள்" (கலித்தொகை 141)

என்பது கல்வி பற்றிய பெருமிதம். எவ்வாறெனில், சொல்வல்லார் முன்னும் வல்லவனாகிய என்னைஎனத்தன் பெருமிதம் தோன்றக் கூறியமையால் இதுகல்வி பெருமிதம் (தொல்காப்பியம். பேராசிரியர்: பக்கம் 25)

செயிற்றியனார்

"உய்ப்போன் செய்தது காண் போர்க்கெய்துதல் மெய்ப்பாடென்ப மெய்யுணர்ந் தோரே" எனச் செயிற்றினார் உரைக்கிறார். "ஓர் உணர்ச்சியை எய்தியவன் அதன் அறிகுறிகள் தன் உடலின் கண்புலப்படுமாறு செய்தல் மெய்ப்பாடாகும்" என்பது இந்நூற்பாவின் பொருள். இதனின்றும் உடலின்கண் மாற்றங்களை உண்டாக்கும் தன்மையுடையது உணர்ச்சி என்பது பெறப்படுகிறது.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

முடிவுரை

இலக்கியத்தைப் பயிலும் போது அது வெளிப்படுத்தும் உணர்ச்சியோடு நாம் தொடர்பு கொள்கிறோம். உண்மை வாழ்க்கையில் பிறர் உணர்ச்சியோடு முழுமையாகத் தொடர்பு கொள்ள நமக்கு இயலுவதில்லை. ஏனென்றால், உண்மை வாழ்க்கையில் உணர்ச்சியின் பெரும் பகுதி சிலகாரணங்களையொட்டி மறைக்கப் படுகின்றது. நம்மிடம் உள்ள உணர்ச்சிகளைப் போலவே பிறருக்கும் உண்டு என்பதை இலக்கியம் நம்மை உணரச்செய்கிறது. தொல்காப்பியரின் மெய்ப்பாட்டியலை உரையாசிரியர்கள் தெளிவாக விளக்கவுரை கூறியிருப்பது ஆய்வாளர்களை மேலும் உற்சாகப்படுத்தியும், தெளிவுபடுத்தியும் காட்டியுள்ளது.

பார்வை நூல்கள்

[1]. *இலக்கியத் திறனாய்வியல்*, டாக்டர்தா.ஏ. ஞானமூர்த்தி, ஐந்திணை பதிப்பகம், சென்னை.
[2]. *தொல்காப்பியம்* பொருளதிகாரம், புலவர் குழந்தை, அர்ஜித் பதிப்பகம்.
[3]. *தொல்காப்பியம்* பொருளதிகாரம், இளம்பூரணனார் உரை, சாரதா பதிப்பகம், சென்னை.
[4]. *புறநானூறு*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை.
[5]. *கலித்தொகை*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

அக்ஸிலியா மேரி, அ. "தொல்காப்பிய மெய்ப்பாட்டியலில் உரையாசிரியர்களின் கருத்துக்கள்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 1, *திசம்பர்* 2020, பக். 1-5. டிஓஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.001**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Auxilia Mary, A. "Opinions of Commentators on Tolkien Realism." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020, pp. 1-5. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.001**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020 Available at: www.ijtlls.com

திருநாவுக்கரசர் தேவாரத்தில் உரை மரபுகள்
The Textual Conceptualization of Thirunavukkarasar's "Thevaram"

முனைவர் சி. அற்புதராணி, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, யாதவர் கல்லூரி, மதுரை – 14.
Dr S. Arputharani, Assistant Professor, Department of Tamil, Yadava College, Madurai -14.
ORCiD: https://orcid.org/0000-0001-8736-5341
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.002

Abstract

In Tamil Spiritual Literature, "Thevaram" of Saiva sect is an enchanting stretch of poems that glorify the omnipotence of Lord Shiva. It has is peculiar style in the depiction of the bliss and ever fullness of Lord Shiva. Twelve times Lord Shiva explains the whole nature of the Lord and His disciples from time to time to those who are blessed by him. The structure of the poems is also noted for its style and conceptualization. Thirunavukkarasar has made a mesmerizing effect by his peculiar textual composition that outpours the spiritual cascade that drenches the devotee in spiritual union. Hence, this article explains the literary, grammatical, philosophical concepts found in it, and the ability to dare to express the nuances of the Vedic scriptures.

Keywords: Textual Conceptualization, Thirunavukkarasar, "Thevaram"

"தொன்மை தானே உரையொடு புணர்ந்தபழமை மேற்றே" [1] எனும் தொல்காப்பிய நூற்பா உரையின் தொன்மையினை உணர்த்துகின்றது. பண்டைய நூல்களுக்கு உரை காணுதல் என்பது எளிதான செயல் அன்று. அவற்றிலும் திருமுறைகளுக்கு உரை காணுதல் எளிதல்ல. திருமுறைகளில் தேவாரத் திருமுறைகளே முதன்மையானது. தேவாரம் பாடியவர்களுள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் இருவரையும் சைவ சமயத்தின் இரு கண்கள் என்பார் சேக்கிழார். சம்பந்தர் தேவாரம் உண்மைப் பொருளைக் கேட்கும் முறையில் ஒரு சொல்லால் முடித்துக் கூறும் தொகை மொழி என்றால், அவற்றைச் சிறப்பிக்கும் நிலையில் இனிது விளக்கும் விரிமொழி திருநாவுக்கரசர் தேவாரம் என்றும் கூறுவார். அதனால்தான் சேக்கிழார் நாவரசரை **"அலகில்கலைத் துறைதழைப்ப அவதாரம் செய்தார்"** [2] என்று கூறியுள்ளார். இத்தகு சிறப்பை உடைய நாவரசரின் தேவாரப் பாடல்களுக்கு எழுதப்பட்ட உரைகளில் தருமை ஆதீனப் பதிப்புகளில் காணலாகும் உரை மரபுகளை விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

தருமையாதீனப் பதிப்பின் சிறப்பு

"முகவுரை பதிகம் அணிந்துரை நூன்முகம் புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்"[3] என்னும் நன்னூல் நூற்பா நூலில் கூறப்படும் பரந்த பொருளைத் தன்னுள் அடக்கிக் கூறுவது பாயிரம் என்கிறது. முகவுரை, பதிகம், அணிந்துரை, நூன்முகம், புறவுரை, தந்துரை எனும் ஏழும் பாயிரத்தின் பெயர்கள் ஆகும். இதில் முகவுரை என்பது நூலுக்கு முன் உரைக்கப்படுவது. நூலுக்கு முதலில் எழுதப்படுவது. நூலுக்கு முகம்போல் அமைந்ததால்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020 Available at: www.ijtlls.com

முகவுரை எனப்படும். பதிகம் என்பது நூல், நுவல்வோன் எனும் பதினோரு பொருள்களை உணர்த்துவது. அணிந்துரை நூலினது பெருமையும் அழகும் வெளிப்படுமாறு அழகுபடுத்திச் சொல்வது. நூல்முகம் நூலுக்கு முன் உரைக்கப்படுவது, நூலுக்கு முகம் போல் அமைவதால் நூல்முகம் எனப்பட்டது. புறவுரை நூல் சொல்லிய பொருள் அல்லாதவவைகளைச் சொல்வது. தந்துரை நூலில் சொல்லப்படாத பொருள்களைத் தந்துரைப்பது. புனைந்துரை நூலினது பெருமை முதலியவற்றை புனைந்து அழகுபடுத்திச் சொல்வது எனும் நன்னூலாரின் கூற்றிற்கிணங்க தருமையாதீனம் வெளியிட்ட திருமுறைப் பதிப்புகளில் மேற்கூறிய உரைகள் அனைத்தும் ஆசியுரை, பதிப்புரை, மதிப்புரை, முகவுரை, குறிப்புரை, திருப்பதிக வரலாறு எனும் பெயர்களில் அமைந்திருப்பது தருமையாதீனத் திருமுறைப் பதிப்புகளின் சிறப்பினைக் காட்டுகின்றது.

தேவார உரையாசிரியர்கள்

தருமை ஆதீனம் பல புலவர்களைக் கொண்டு திருமுறைகளுக்கு குறிப்புரை முதலானவற்றை எழுதி வெளியிட்டுள்ளது. தருமையாதீனப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் குருசாமி தேசிகர், சிங்காரவேலனார், வச்சிரவேல் முதலியார், அருணைவடிவேல் முதலியார் போன்றோரின் அறிவுத்திறனும், ஆராய்ச்சித் திறனும், அரிய கருத்துக்களை விளக்கும் பாங்கும் காணமுடிகிறது. மெய்க்கலையின் அளவற்ற நுண்பொருள்கள், விழுமியக் கருத்துக்கள் நாவுக்கரசர் தேவாரத்தில் நிரம்பி உள்ளன. அவற்றில் சிலவற்றை பின்வருமாறு அறியலாம்

திருநாவுக்கரசர் தேவாரம்

"என் கடன் பணி செய்து கிடப்பதே" (5-19-9) என்பதைக் குறிக்கோள் உரையாகக் கொண்டு வாழ்ந்து காட்டியவர் திருநாவுக்கரசர். **"சிவனல்லது ஓசை அறையோ உலகில் திருநின்ற செம்மை உளதே" (4-8-1)** என இறைவனைப் பாடிப் பரவுவதோடு கையில் உழவாரப்படை ஏந்திக் கைத் தொண்டும் புரிந்தவர். **"திருத்தொண்டின் நெறிவாழ வருஞானத் தவமுனிவர்"4** என இவரைச் சேக்கிழார் போற்றுவார். திருநாவுக்கரசரின் திருப்பதிகங்கள் ஒவ்வொன்றும் பத்துப் பாடல்களைக் கொண்டதாகும். ஒவ்வொரு பதிகத்தின் பத்தாம் பாடலிலும் இராவணனுக்கு அருள்புரிந்த செய்தி கூறப்பட்டுள்ளது.

வாக்குக் கருணகிரி வாதவூர் கனிவில்
தாக்கில் திருஞானசம்பந்தர் - நோக்கிற்கு
நக்கீரதேவர் நயத்துக்குச் சுந்தரனார்
சொற்குறுதி அப்பர் எனச் சொல் [5].

என்னும் வெண்பா, அப்பர் பாடல்கள் உய்தி பெறுவதற்குரிய உறுதிச் சொல்லால் ஆனதை எடுத்துரைக்கிறது. அப்பதிகங்கள் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளாக உள்ளன. நான்காம் திருமுறைப் பதிகங்கள் சூலைநோய் நீங்கியது, யானையைக் கண்டு அஞ்சாதது, கல்லைத் தெப்பமாக கொண்டு கரையேறியது, இடபக்குறி, சூலக்குறி பொறித்தது, அப்பூதி அடிகள் மகனை உயிர்ப்பித்தது, கையிலைக் காட்சி கண்டது முதலான அற்புதங்களை உணர்த்தும் வகையில் அமைந்துள்ளன. ஐந்தாம் திருமுறை குறுந்தொகை எனும் யாப்பிலும், ஆறாம் திருமுறை தாண்டக அமைப்பிலும் அமைந்துள்ள சிறப்பினை உடையது.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020 Available at: www.ijtlls.com

வினா விடை அமைப்பு

பாடம் கருத்தே சொல்வகை சொற்பொருள்
தொகுத்துரை உதாரணம் வினாவிடை விசேடம்
விரிவு அதிகாரம் துணிவு பயனோடு
ஆசிரிய வசனம் என்றுஈர் ஏழு உரையே"[6].

என்னும் நன்னூல் நூற்பா, உரை வகைகளை பதினான்காகக் கூறும். இதில், பொருள் விளக்கம் பெற வேண்டிய இடங்களில் தாமே வினாவை அமைத்துக் கொள்ளுதலும், தாமே எழுப்பிய வினாவுக்கு விடை கூறும் முறையிலும் உரைகள் அமையும் என்கிறது நன்னூல். நாவுக்கரசரின் முதற்பதிகத்துள்,

கூற்றாயின வாறு வலக்கலீர்
கொடுமைபல செய்தன நான்அறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே (4-1-1).

என்ற முதல் பாடலுக்குரிய உரையை இதற்குச் சான்றாகக் கூறலாம். இறைவன் வினவுவதுமாகவும் நாவரசர் பதில் உரைப்பதுமாகவும் உரையாசிரியர் எழுதிய உரையில், ஏன் இங்கு வந்தாய்? என்பால் தீர்தற்கு உன்பால் உள்ள குறை என்ன? வீரட்டானத்து இறைவரே எனக்குச் சூலை நோய் தரக் காரணமென்ன? என வினவுவதற்கு, விடையாக அவரவர் வினைவழி அவரவர் அனுபவம் என்றும், கொடுஞ்செயல்கள் நான் செய்வது அறியேன். பாவ கன்மங்கள் விலகச் செய்ய வேண்டியவை, விலகும் வரை பொறுத்துக் கொள்ளுதல், இறைவனிடம் வேண்டுதல் என வினா விடை அமைப்பில் அமைந்துள்ளதை விளக்கும் முறையினைக் காணலாம்.

அருஞ்சொற்களை விளக்குதல்

சொற்களைக் குறித்து எழுதும் உரை, சொல்லுக்குப் பொருள் எழுதும் பதவுரை இரண்டையும் தேவாரப் பதிக உரைகளில் காணமுடிகிறது.

பரப்பொப் பானைப் பகலிருள் நன்னிலா
இரப்பொப் பானை யிளமதி சூடிய
அரப்பொப் பானை யரத்துறை மேவிய
சுரப்பொப் பானைக் கண்டீர்நாந் தொழுவதே" (5-3-4).

எனும் பாடலில் இரப்பு, அரப்பு, சுரப்பு என்னும் சொற்களின் பொருள் குறிப்பிடுகையில் இறைவனின் குணங்களைப் புலப்படுத்துவனவாக உள்ளன. பரப்பு- இறைவன் ஞாயிற்றின் ஒளியைப் போல் பேருணர்வாய் எங்கும் நிறைந்துள்ளான் என்றும், இரப்பு - உயிர்களது அறிவின்கண் உள்ள இருளைப் படிமுறையால் அகற்றும் சிவஞானத்தை மேலோங்கி வளரச்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020 Available at: www.ijtlls.com

செய்பவன் என்றும் கூறி, "**பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே**"[7] எனும் திருவாசகத்தோடு ஒப்பிடுவதையும் காணமுடிகிறது. அரப்பு ஒப்பனை - தான் செய்யும் செயல்களை விளையாட்டுப் போல எளிதில் செய்வோன். கரப்பு ஒப்பனை - சிவலிங்கம் முதலிய திருமேனிகளை சாத்திர மந்திரங்களால் வழிபடும் யோகியருக்கு கரந்த போது வெளிப்படும் பால்போல் அருள்பவன் என விளக்குவதைக் கூறலாம்.

துணிந்துரைத்தல்

"மூலநூலின் சொல்லிற்கு பொருள் முடிவு காணுவதில் ஐயம் உண்டான இடங்களில் இதற்கு இதுவே பொருள் என துணிந்து உரைப்பது துணிந்துரை"[8] என்கிறது நன்னூல். "சொல்லுக்குறுதி அப்பரெனச்சொல்லு" என்னும் அடி அப்பரின் சொல்லாட்சிச் சிறப்பை உணர்த்தும். சொற்களை இடமறிந்து, தரம் அறிந்து எடுத்தாளும் அழகு பெரிய கவிஞர்களுக்கே உரியது என்பர். சொல்வன்மை எனும் அதிகாரத்தில் வள்ளுவர்,

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து"[9]

என்பார். அப்பரடிகள் கூறும் சொற்கள் இனிய எளிய தமிழ்ச் சொற்களாக, உணர்ச்சிப் பிழம்புகளாக உள்ளதைக் காணலாம். திருமுறை உரையாசிரியர்கள் இத்தகு இடங்களில் அறிஞர்கள் வியக்கும் வண்ணம் பொருள் கூறியிருப்பது அவர்களின் பொருள் கூறும் திறனை நன்கு புலப்படுத்துகின்றது.

இச்சையால் மலர்கள் தூவி இரவொடு பகலும் தம்மை
நச்சுவார்க் கினியர் போலும் நாகஈச் சரவனாரே (4-66-1).

என்ற பாடலில் நச்சுதல் என்ற சொல்லில் நசை - நச்சு – நச்சினார் என்பன விருப்பம் எனும் பொருளில், விரும்புவார்க்கு இனியவராய், கற்றவர்கள் விரும்பும் கற்பகக் கனியாய் உள்ளவன் இறைவன் என்று கூறுவதைக் காணலாம். மேலும், எட்டு மலர்கள் இட்டு வழிபடுதலைக் கூறும் திருப்பதிகத்துள், **"ஏழித் தொன்மலர் கொண்டு பணிந்தவர்" (5-54-6)** என்பதில் எட்டு என்பதை ஏழை முன்னதாகக் கொண்ட மலர்கள் எனப் பொருள் விளக்குவதையும் அறியமுடிகின்றது.

நுண் பொருள் உரைத்தல்

'வேதாந்தத் தெளிவாம் சித்தாந்தம்' எனப் போற்றப்படும் சித்தாந்த நுண்பொருள்கள் எல்லாம் திருமுறைகளில் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

பஞ்சின் மெல்லடிப் பாவை பலிகொணர்ந்
தஞ்சி நிற்பது ஐந்தலை நாகமே (5-9-6).

என்பதில், ஐந்தலை நாகம் என்பது குண்டலினி எனப்படும் சுத்தமாயை எனவும், அதன் தலை ஐந்தும் சுத்த மாயையின் காரியமாகிய சிவம், சக்தி, சாதாக்கியம், ஈசுவரம், சுத்தவித்தை என்னும் சுத்த தத்துவங்கள் என்றும் புலப்படுத்தப்பட்டுள்ளது. **"கரும்பொப்பானைக் கரும்பினிற் கட்டியை" (5-3-2).** எனும் அடியை விளக்குகையில், இறைவன் சாதகர்க்கு கரும்பில் உள்ள சாற்றைப் போல அவர்தம் சாதனங்களால் மறைந்து நின்று, அவர் சாதித்த

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020 Available at: www.ijtlls.com

வழி அன்பினில் விளைந்த ஆரமுதாய்த் தோன்றுவதால் கரும்பொப்பானை என விளங்குவதைக் காணலாம்.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்”[10]
மாதா பிதா குரு தெய்வம்”

என்னும் முன்னோர் மொழிகள் கண்ணிற்குத் தெரியும் மாதா, பிதாவாகிய தெய்வங்களைக் காட்டி அவர்களை எல்லாம் தந்தவன் பரம்பொருள் என்கிறது. இதனை அப்பர் தேவாரம்,

அப்பன்நீ, அம்மைநீ, ஐயனும்நீ
அன்புடைய மாமனும், மாமியும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண் பொருளும்நீ
ஒரு குலமும் சுற்றமும் ஓரூரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய்நீ
துணையாய் என்னெஞ்சம் துறப்பிப்பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்தும்நீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன்நீ (6-95-1).

என்னும் அடிகளில் ஐயன் என்பதைக் குரு என்றதோடு, அண்ணன் எனப் பொருள் கூறுவார் அருணை வடிவேலனார், இங்ஙனம் துணிந்துரைக்கும் திறத்தை திருமுறை ஆசிரியர்களின் உரைகளில் காணமுடிகிறது.

முடிவாகச் சில,

திருமுறைகள் சிவபெருமானது முழுமுதற் தன்மையினையும், அடியார்களுக்கு அவன் அவ்வப்பொழுது தோன்றி அருள் செய்த பேரருளையும் இனிது விளக்கி அவனிடத்தில் அன்பு விளைவிப்பனவாகும். அவற்றில் காணலாகும் இலக்கணம், இலக்கிய நயம், தத்துவக் கருத்துக்கள், வேத, ஆகம, சித்தாந்த நுண் பொருள்களைத் துணிந்து விளக்கும் திறம் திருமுறை உரையாசிரியர்களிடம் காணப்படுவதை மேற்கூறிய உதாரணங்கள் வழி அறியலாம்.

துணைநூல் பட்டியல்

1. தொல்காப்பியம், செய்யுளியல், நூற்பா – 238.
2. திருத்தொண்டர்புராணம், பாடல் – 1283.
3. நன்னூல், எழுத்ததிகாரம், நூற்பா – 3.
4. திருத்தொண்டர்புராணம், பாடல் – 1266.
5. தனிப்பாடல் திரட்டு - 12
6. நன்னூல், எழுத்ததிகாரம், நூற்பா – 21.
7. திருவாசகம், சிவபுராணம், அடி - 65.
8. நன்னூல், நூற்பா – 21.
9. திருக்குறள், 645.
10. கொன்றைவேந்தன், 1.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020 Available at: www.ijtlls.com

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

அற்புதராணி. "திருநாவுக்கரசர் தேவாரத்தில் உரை மரபுகள்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 1, *திசம்பர்* 2020, பக். 6-11. டிஓஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.002**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Arputharani**. "The Textual Conceptualization of Thirunavukkarasar's "Thevaram"."** *International Journal of Tamil Language and Literary Studies,* Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020, pp. 6-11. **DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.002**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

பத்துப்பாட்டு உரைகள்
Paraphrases of Pathu Paattu

முனைவர் வீ.அன்னபூரணி, தமிழ்த்துறை, உதவிப் பேராசிரியர், இம்மாகுலேட் மகளிர் கல்லூரி, கடலூர் -607 002.
Dr.V.Annapoorani, Assistant Professor in Tamil, Immaculate College for Women, Cuddalore – 607 002.
ORCiD: https://orcid.org/0000-0002-1714-3580
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.003

Abstract

In Sangam Literature, Pathu Paattu has lots of paraphrases because of its archaic reflection of a classical society. Though many have written commentaries on Sangam literary texts, Nachinarkiniyar is the first person to write its paraphrase in an erudite manner. Some scholars supports Nachinarkiniyar point of view and some criticize him and have given their views on it. In recent time it has been modulated and is very easier and understandable for the students of Tamil Literature, so, the present study investigates on the overall commentaries of the paraphrases of "Pathu Pattu" in general and concentrates on the commentaries of Nachinarkiniyar.

Keywords: *Pathu Paattu*, Nachinarkiniyar Parapharase, Other writers, Sangam Poetry

முன்னுரை

தமிழிலக்கிய வரலாற்றில் சங்க காலம், நீதி நூல் காலம், காப்பிய காலம், பக்தி இலக்கிய காலம், சிற்றிலக்கிய காலம் என்று வகுப்பது போல் தமிழ் இலக்கிய இலக்கண நூல்களுக்கெல்லாம் அதிகமாக உரை எழுதப்பட்ட காலத்தை உரையாசிரியர் காலம் என்று வரையறுக்கப்பட்டு உள்ளது. கி.பி. 9 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.16 ஆம் நூற்றாண்டு வரை மிகுதியான உரை நூல்கள் தோன்றியிருந்தாலும் கி.பி. 11 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 14 ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தை உரையாசிரியர் காலம் என்று குறிப்பிடுகின்றனர். அவ்வகையில் பத்துப்பாட்டிற்கு நச்சினார்க்கினியர் தொடங்கி இன்று வரை வெளிவந்துள்ள உரைகளைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

பத்துப்பாட்டு உரையாசிரியர்கள்

பத்துப்பாட்டிற்கு வசன நடை, கவிதை நடை, திறனாய்வு நடை எனப் பல வடிவங்களில் விளக்கம் எழுதப்பட்டுள்ளது. அவ்வாறு நச்சினார்க்கினியர் தொடங்கி இன்று வரை பத்துப்பாட்டிற்கு 14 பேர் உரையெழுதியுள்ளனர். அவற்றின் விவரம்:

1.நச்சினார்க்கினியர் (பதிப்பு:1889), 2.பொ.வே.சோமசுந்தரனார் (பதிப்பு:1956), 3. வை.மு.கோபாலகிருஷ்ணமாசாரியர் மற்றும் அவரது மாணாக்கர் சி.ஜகந்நாதாசாரியர் (பதிப்பு:1961), 4.ம.வி.சுதாகர் (பதிப்பு:1990), 5.எம். நாராயணவேலுப்பிள்ளை (பதிப்பு:1992), 6.அ.மாணிக்கம் (பதிப்பு:1999), 7.க.த.நீலகண்டன் (பதிப்பு:2000), 8.ஞா.மாணிக்கவாசகன் (பதிப்பு:2002), 9.ச.வே.சுப்பிரமணியன் (பதிப்பு:2003), 10.ம.வே.பசுபதி (பதிப்பு:2003),

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

11.வி.நாகராசன், இரா.மோகன் (பதிப்பு:2004), 12.கதிர்முருகு (பதிப்பு:2009), 13.பொதுவன் அடிகள் (பதிப்பு:2009), 14.வெ.மணிசங்கர் (பதிப்பு:2009) முதலியனவாகும்.

உரையும் மூலமுமாக உரையெழுதியவர்கள் 14 பேர் என்றாலும் உரைமட்டும் எழுதியவர்கள், பல்கலைக்கழகங்களில் பாடமாக வைக்கப்பட்ட ஒரு பத்துப்பாட்டுப் பாடலுக்கு மட்டும் உரை எழுதியவர்கள் என்று பல பேர் உள்ளனர். நச்சினார்க்கினியர் பத்துப்பாட்டிற்கு உரை எழுதும் முன்பே திருமுருகாற்றுப்படைக்கு மட்டும் நான்கு உரைகள் தோன்றியுள்ளதை அறிய முடிகிறது. அவை 1.பரிமேலழகர் உரை, 2. உரையாசிரியர் உரை, 3. கவிபெருமாள் உரை, 4.பரிதி உரை என்பனவாகும். திருமுருகாற்றுப்படை திருமுறையில் உள்ளதாலும் அதனைப் பாராயணம் செய்யும் வழக்கம் உள்ளதாலும் அதை மட்டும் பலபேர் உரை எழுதி பதிப்பித்துள்ளனர். இப்பாடலைப் பாடினால் அடியவர்களின் மனக்குறைகள் தீரும் என்றும் வேணடியவற்றை முருகன் தந்தருள்வார் என்றும் போற்றுகின்றனர்.

நச்சினார்க்கினியர் உரை சிறப்பு

நச்சினார்க்கினியரின் இலக்கிய உரைகளில் இலக்கண வளமும், இலக்கண உரைகளில் இலக்கிய வளமும் காணப்படும். மிக நெடிய பாடல்களுக்கும் வினை முடிபு கூறி உரை எழுதிச் செல்வதில் சிறப்பு மிக்கவர். அவருடைய சிறப்பு குறித்து அறிஞர்கள் கூறுவதைக் கீழே காணலாம். அறிஞர் மா. இராசமாணிக்கனார் (1970:781) தமது பத்துப்பாட்டு ஆராய்ச்சி என்னும் நூலில்,

> **நச்சினார்க்கினியர், எவ்வளவு நீண்ட செய்யுளாய் இருப்பினும் அதில் பல இடங்களில் சிதறிக் கிடக்கும் சொற்களைக் கொண்டு கூட்டிப் பொருள் கூறுதலில் பெருஞ்சமர்த்தர் என்பதைப் பத்துப்பாட்டுகளுக்குஇவர் எழுதிய உரை நன்கு உணர்த்தும்**

என்று பாராட்டுகின்றார். நச்சினார்க்கினியரின் உரைத் தொண்டினைப் பாராட்டும் வ.சுப. மாணிக்கம்,

> **உரைப்பணியில் நச்சினார்க்கினியரின் தொண்டு சாலப்பெரிது. இவர் ஒருவரே பல்லும் நாவும் போல, இலக்கணவுரையாசிரியராகவும் இலக்கியவுரையாசியராகவும் இணைந்து விளங்கும் பெருமகன்**

என்று தம்முடைய சிந்தனைக் களங்கள் நூலில் பாராட்டுகின்றார். மு.வை.அரவிந்தன்

> **எழில் மிகுந்த சொற்றொடர், உள்ளங் கவரும் உவமை, இனிய ஓசை கெழுமிய வாக்கியம், என்றும் நெஞ்சத்தில் நின்று நிலவும் எடுத்துக்காட்டு, இலக்கியச் சுவை முதிர்ந்த கவிதை மேற்கோள் ஆகியவற்றை நச்சினார்க்கினியர் உரையில் காணலாம்.**

என்று தம்முடைய உரையாசிரியர்கள் என்ற நூலில் குறிப்பிடுகின்றார். (2010:281)

நச்சினார்க்கினியரின் மாட்டேற்றுப் பொருள்கோடல்

நச்சினார்க்கினியர் பத்துப்பாட்டிற்கு மாட்டேற்றுப் பொருள்கோடல் முறையில் உரை எழுதியுள்ளார். அவ்வுரையை அறிஞர்கள் எதிர்மறையாகவும் நேர்மறையாகவும் கருத்துக்களைக் கூறியுள்ளனர்.

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

மாட்டு : உரையாசிரியர்கள் விளக்கம்

அகன்று பொருள் கிடப்பினும் அணுகிய நிலையினும்
இயன்று பொருள் முடியத் தந்தனர் உணர்த்தல்
மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின் (தொல். செய் – 210)
மாட்டும் எச்சமும் நாட்டல் இன்றி
உடனிலை மொழியினுந் தொடைநிலை பெறுமே (தொல். செய்-211)

என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு,

பொருள் கொள்ளுங்கால் அகன்று பொருள் கிடப்பச் செய்யினும் அணுகிக் கிடப்பச் செய்யினும் இருவகையானுஞ் சென்று பொருள் முடியுமாற்றாற் கொணர்ந்துரைப்பச் செய்தலை மாட்டென்னும் உறுப்பென்று சொல்லுவர் செய்யுள் வழக்கின்”

என்று இளம்பூரணரும்,

பொருள் கொள்ளுங்கால் அகன்று பொருள் கிடப்பச் செய்யினும் அணுகிக் கிடப்பச் செய்யினும் இவ்விருவகையானும் சென்று பொருள் முடியுமாற்றாற் கொண்டு வந்து கூட்டியுரைப்பச் செய்தல் மாட்டென்னும் உறுப்பென்று கூறுவர் செய்யுள் வழக்கினுள்

என்று பேராசிரியரும் உரை கூறுகின்றனர்.

மாட்டு : அறிஞர்களின் எதிர்மறை கருத்து

மறைமலையடிகள், மு.வை.அரவிந்தன், வையாபுரிப்பிள்ளை, மு.அண்ணாமலை, கு.வே.பாலசுப்ரமணியன் போன்ற அறிஞர்கள் நச்சினார்க்கினியரின் மாட்டு என்ற உத்தி முறைக்கு எதிரான கருத்துகளை வைத்துள்ளனர்.

மறைமலையடிகள் (1998: 58, 59, 84) மாட்டு என்ற உத்தி முறையைப் பற்றிக் கூறும்போது,

ஓர் அடியில் ஒரு சொல்லையுந் தொலைவிற் கிடக்கும் வேறோர் அடியில் வேறொரு சொல்லையுந் தமக்குத் தோன்றியவாறெல்லாம் எடுத்து இணைத்துத் தாமோர் உரை உரைக்கின்றார்.

செய்யுளுக்கு இசைய உரை எழுதுதல் வேண்டுமேயன்றி உரைக்கு ஏற்பச் செய்யுளை அலைத்து மாற்றல் வேண்டுமென்றால் முடிக்குத் தக்க தலை செய்து கொள்வோம் என்பார் சொற்போல் நகையாடுதற்கே ஏதுவாமென்றொழிக

பொற்சாரிகை பின்னிய நற்பட்டாடையினைத் துண்டு துண்டாக்கட கிழித்துச் சேர்த்துத் தைத்து அவம்படுவார் போலச், செய்யுட் சொற்றொடர்களை ஒரு முறையுமின்னித் துணித்துத் துணித்துத் தாம் வேண்டியவாறு சேர்த்துப் பின்னி உரை வரைகின்றார்.

என்று நச்சினார்க்கினியரை விமர்சனம் செய்கின்றார். மு.வை.அரவிந்தன் (2010. 243) **“மாட்டு என்ற பெயரால் நச்சினார்க்கினியர் செய்யுட்களைக் கலைத்து அடிகளை மாற்றிச் சொற்களைப் பிரித்து முன் பின்னாகக் கூட்டி வலிந்து பொருள் கொண்டு தம் கருத்தைப் பாட்டில் திணித்து விடுகின்றார்”** என்று கூறுகிறார். நச்சினார்க்கினியரின் பத்துப்பாட்டு

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

உரையைப் பதிப்பித்த உ.வே.சா. (2004: 541) அவர்கள் அந்நூலைப் பதிப்பிக்கும் போது ஏற்பட்ட இடர்களைத் தமது என் சரித்திரத்தில் குறிப்பிடுகிறார்.

> **நச்சினார்க்கினியர் உரையினால் புதியபுதிய விஷயங்களை உணர்ந்தேன். இரண்டு விஷயங்களில் அவரிடம் சிறிது வருத்தம் உண்டாயிற்று. பல இடங்களில் மாறிக் கூட்டிப் பொருள் விளக்குகிறார். ஓரிடத்திலுள்ள பாட்டிலிருக்கும் சொல்லைப் பல பாட்டுக்கு முன்னே மற்றோரிடத்திலுள்ளதோடு இணைத்து மாட்டெறிகின்றார். அத்தகைய இடங்களில் அவர் உரையில் சிறிது வெறுப்புத் தட்டியது."**

என்கிறார். இதிலிருந்து மாட்டு பொருள்கோடல் முறை பதிப்பசிரியருக்கு எத்தகைய சிக்கலை ஏற்படுத்தியது என்பதை உணரலாம்.

மாட்டு: உடன்பாட்டுக் கருத்து

தற்போதுள்ள ஆய்வாளர்கள் நவீனப் போக்குகளைக் கடைபிடிப்பதனால் மாட்டு என்ற உத்திமுறையை ஏற்றுக்கொள்கின்றனர். தமிழண்ணல், தமிழவன்,. சுப்பிரமணியம் பரமேஸ்வரன், ஆ.சதிஷ், ப.இளமாறன் ஆகியோர் மாட்டு உத்தி முறையை ஆதரிக்கின்றனர்.

மாட்டு என்ற உத்தியை ஆதரித்துக் கூறும் தமிழண்ணல் (2011:125),

> **நச்சினார்க்கினியரின் கொண்டு கூட்டுதல் சற்றுக் கூடுதலாக இருக்கலாம். இரண்டொன்றைச் சிறிது மாற்றி முடிவு காட்ட நேரலாம். எனினும் பாட்டு முழுவதும் எங்கே தொடங்கி, எங்கெங்கு எச்சம் பெற்றுத் தொடர்ந்து, எங்கே பயனிலை கொண்டு முடிகிறதென்பதை உணர இது வழி செய்கிறது.**

என்று குறிப்பிடுகின்றார். தமிழவன் (2007: 252),

> **நச்சினார்க்கினியர், கொண்டுகூட்டு உத்திமூலம் ஆசிரியன் மொழிகூட ஒரு குறியீடுதான் என்றும் அம்மொழி அவனது உள்ளுணர்வின் நேரடி பிரிதிபலிப்பு இல்லை, ஓர் இடுகுறித்தன்மை கொண்ட வெளிப்பாடு என்றும் புரிந்துள்ளார்.**

என்கிறார். அ.சதிஷ் (2008: 44), நச்சினார்க்கினியர் மாட்டு உறுப்பை ஒரு நீக்கல் உத்தியாகவே பிரதியினுள் பயன்படுத்தியுள்ளார் என்று கூறுகிறார். இதனை,

> **ஒரு குறிப்பிட்ட பிரதிக்கு (முல்லைப்பாட்டு) ஒரு குறிப்பிட்ட விளக்கத்தைக் கூறுவது (முல்லை-இருத்தலும் இருத்தல் நிமித்தமும்) உரையின் தலையாய செயல்பாடாக அமைகிறது. அதற்கு இப்பிரதியில் உருவாகும் பிற அர்த்தங்களை (நெய்தல் – இரங்கலும் இரங்கல் நிமித்தமும்) நீக்குவதன் மூலமே அதை உறுதிபடுத்த முடியும். அதற்குத்தான் மாட்டு என்ற பொருள்கோடலைப் பயன்படுத்துகின்றார் நச்சினார்க்கினியர்.**

என்று கூறுகின்றார். "வரலாற்று நோக்கில் மாட்டு" என்ற கட்டுரையில் இளமாறன்(2015:48) மாட்டு என்ற உத்திமுறை மறுக்கப்படுவதற்கான காரணங்களாக,

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

> **நச்சினார்க்கினியர் அவ்வுறுப்பினைக் கைக்கொண்ட இரண்டு தன்மைகளில், மூலபாடத்தைக் கொண்டுகூட்டிச் சிதைத்துவிட்டார் என்ற ஒரு தன்மையைக் குறித்தே எதிர்விவாதங்களை எழுப்பிய பலரும் இன்னொரு தன்மையான தவறான பொருள்கோடலிலிருந்து கொண்டுகூட்டுவதன் மூலம் சரியான பொருளை அடையமுடியும் என்பது குறித்துச் சுட்டிக்கூட சொல்லவில்லை.**

என்று கூறுகின்றார். நச்சினார்க்கினியர் (1931:39) தமது திருமுருகாற்றுப்படைஉரையில்,

> **அகன்று பொருள் கிடப்பினும் அணுகிய நிலையினும் இயன்று பொருண்முடியத் தந்தனர் உணர்த்தன் மாட்டெடன மொழிப பாட்டியல் வழக்கின் என்னும் மாட்டிலக்கணத்தான் இப்பாட்டுக்கள் பத்தும் செய்தார்களாதலின் இவ்வாறே மாட்டி முடித்தல் யாண்டும் வருமென்றுணர்க**

என்று கூறுவதன் மூலம் நூலாசியர்களே மாட்டு என்ற இலக்கணத்தின் அடிப்படையில் தான் பத்துப்பாட்டிற்கு உரை எழுதியதாக கூறியுள்ளார். தொல்காப்பியர் தம் நூலில் மாட்டு என்ற உத்தி முறையைக் கூறியிருப்பதும், அதற்கு உரை எழுதிய பேராசிரியர் பத்துப்பாட்டிலிருந்தே மேற்கோள் காட்டியுள்ளதையும் உணரலாம்.

பொ.வே.சோமசுந்தரனார் உரை சிறப்பு

நச்சினார்க்கினியர் உரையை இரண்டாவது முறையாகப் பதிப்பித்த உ.வே.சா. அவர்கள் நூலாசிரியர் வரலாறு, பாட்டுடைத்தலைவன் வரலாறு, உரையாசிரியர் வரலாறு ஆகியவற்றை நூலின் தொடக்கத்திலேயே குறிப்பிடும் வழக்கத்தைத் தொடங்கி வைத்துள்ளார். அதனைப் பின்பற்றி உரை எழுதிய பொ.வே.சோமசுந்தரனார் முதன்முதலாகப் பத்துப்பாடல்களுக்கும் தனித்தனியாக உரை எழுதி வெளியிட்டுள்ளார். உ.வே.சாவைப் போலவே நூலின் முன்பக்கத்திலேயே நூலாசிரியர் வரலாறு, பாட்டுடைத்தலைவன் வரலாறு எழுதுவதோடு ஒவ்வொரு பாடலுக்கும் உரைப்பாயிரம் என்ற ஒன்றையும் புதிதாக எழுதியுள்ளார். இது நச்சினார்க்கினியரிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். ஒவ்வொரு பாடலுக்கும் மிக விரிவான நீண்ட விளக்கமான உரைப்பாயிரம் எழுதியுள்ளார். இதில் பல இலக்கண இலக்கிய நூல்களிலிருந்து மேற்கோள்களை எடுத்துக்காட்டியுள்ளார். நச்சினார்க்கினியர் உரையைப் பின்பற்றியே தமது உரையை நடத்திச் செல்கிறார். ஒருசில இடங்களில் சொற்களை இடமாற்றி பொருள் எழுதுவதை மறுத்து தமது விமர்சனத்தையும் முன்வைக்கிறார்.

வை.மு.கோபாலகிருஷ்ணமாசாரியர் மற்றும் சி.ஜகந்நாதாசாரியரின் உரை சிறப்பு

நச்சினார்க்கினியருக்கு அடுத்தபடியாக வை.மு.கோ. பத்துபாட்டிற்கு உரை எழுதியுள்ளார். 1929 ஆம் ஆண்டு மதுரைக்காஞ்சி, குறிஞ்சிப்பாட்டு, மலைபடுகடாம் தவிர்த்து மற்ற ஏழு பாடல்களுக்கும் உரை எழுதி வெளியிட்டுள்ளார். ஆனால் அவ்வுரை கிடைக்கப்பெறவில்லை. உரை வெளிவந்த தகவல் மட்டுமே கிடைத்துள்ளது. அவரது மாணவர் சி. ஜகந்நாதாசாரியர் விடுபட்ட மற்ற மூன்று பாடல்களுக்கும் நச்சினார்க்கினியரைத்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

தழுவி உரை எழுதியுள்ளார். இவ்வுரைகள் வை.மு.கோவின் உரையோடு இணைத்து 1961 இல் வெளியிட்டுள்ளது. சி.ஜகந்நாதாசாரியர், வை.மு.கோவின் உரையில் சிறுசிறு மாற்றங்களைச் செய்து வெளியிட்டுள்ளார் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ஆனால் வை.மு.கோ. உரையில் சி.ஜகந்நாதாசாரியர் செய்த மாற்றங்கள் எவையென்று பிரித்து அறிய இயலவில்லை.

பிற பத்துப்பாட்டு உரைகள்

நச்சினார்க்கினியர், பொ.வே.சோ., வை.மு.கோ. மற்றும் சி.ஜகந்நாதாசாரியர் எழுதிய உரைகளுக்குப் பிறகு உரை எழுதிய அனைத்து உரைகளும் சுருக்கமாகவும் மாணவர்களுக்குப் புரியும் வகையில் எளிமையாகவும் எழுதப்பட்டுள்ளது. 2009 இல் உரை எழுதிய பொதுவன் அடிகள் தமது உரையில் அங்காங்கே உரைக்கருத்தினை விளக்கும் நிழற்படங்களை வெளியிட்டுள்ளது ஒரு புதுமையான முயற்சியாக பார்க்கப்படுகிறது. இது மற்ற உரையாசிரியர்களிலிருந்து வேறுபட்டு உள்ளது.

முடிவுரை

நச்சினார்க்கினியர் தொல்காப்பியத்திற்கும் சிறப்பானதொரு உரையை எழுதியுள்ளார். அதனால் உரை எழுதுவதற்கான உத்தி முறைகளாகத் தொல்காப்பியம் சுட்டுவனவற்றை மிக நுட்பமாகக் கைக்கொண்டு பிற இலக்கிய இலக்கணங்களுக்கும் உரை எழுதியுள்ளார் எனலாம். நச்சினார்க்கினியருக்கு அடுத்த நிலையில் வை.மு.கோ. மற்றும் அவரின் மாணவர் ஜகந்நாதாசாரியர், பொ.வே.சோ. ஆகியோர்களின் உரைகளைச் சிறப்புடையவையாகக் குறிப்பிடலாம். இவர்களைத் தொடர்ந்து எழுதிய பத்துப்பாட்டு உரைகள் சுருக்கமான உரைகளாக, மாணவர்களின் பாடத்திட்டத்திற்காகஅமைக்கப்பெற்றுள்ளன.

துணைநூல் பட்டியல்

[1] பத்துப்பாட்டு மூலமும் மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் உரையும், கேசரி அச்சுக்கூடம், சென்னை, 1931.

[2] மா.இராசமாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு, சென்னை, 1970.

[3] பத்துப்பாட்டு, பொ.வே. சோமசுந்தரனார், தென்னிநிதிய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1973.

[4] வ.சுப.மாணிக்கம், சிந்தனைக்களங்கள், வசந்தா பதிப்பகம், சென்னை, 1975.

[5] பத்துப்பாட்டு, வை.மு. கோபாலகிருஷ்ணமாசாரியர்;& சி.ஜகந்நாதாசாரியர். சென்னை, 1976.

[6] தமிழவன், தமிழும் குறியியலும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1992.

[7] மறைமலையடிகள், முல்லைப்பாட்டு ஆராய்ச்சி உரை, பூம்புகார் பதிப்பகம், சென்னை.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

[8] உ.வே.சாமிநாதையர், என் சரித்திரம், விகடன் விரசுரம், சென்னை, 2004.

[9] பேராசிரியர், தொல்காப்பியம் பொருளதிகாரம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2007.

[10] ஆ.சதிஷ், சங்க இலக்கிய உரைகள், அடையாளம் பதிப்பகம், திருச்சி, 2008.

[11] மு.வை, அரவிந்தன். உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2010.

[12] இளம்பூரணர், தொல்காப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை, 2011.

[13] தமிழண்ணல், உரைவிளக்கு, விழிகள் பதிப்பகம், சென்னை, 2011.

[14] பா.இளமாறன், வரலாற்று நோக்கில் மாட்டு, புதிய பனுவல், சென்னை, 2015.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

அன்னபூரணி, வீ . "பத்துப்பாட்டு உரைகள்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 1, *திசம்பர்* 2020, பக். 12-18. டிஓஐ: **DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.003**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Annapoorani, V. "Paraphrases of *Pathu Paattu*." *International Journal of Tamil Language and Literary Studies,* Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020, pp. 12-18. **DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.003**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி/Author Contribution Statement: இல்லை/NIL

கட்டுரையாளர் நன்றியுரை/Author Acknowledgement: இல்லை/Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

தொல்காப்பிய எழுத்ததிகார உரையில் பாட வேறுபாடுகள்

Textual Differences in the Notes of Eluththathikaram of "Tholkappiyam"

தோ.அனிதா, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோவை – 46.
D. Anitha, Research scholar, Department of Tamil, Coimbatore – 46
முனைவர் சு. ஆனந்தவேல், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழகம் கோவை – 46.
Dr.S.Ananthavel, Assistant Professor, Department of Tamil, Coimbatore – 46
ORCiD: https://orcid.org/0000-0001-6772-0780
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.004

Abstract

Course variations are more common in ancient literary grammar texts of Tamil Language. In that sense, this article examines the differences between the old texts of Ilampuranar, Nachchinarkiniyar and the texts of contemporary commentators such as Balasundaranar and Tamilannal. All of them have minute details on Eluththathikaram with concern to the traditional Thoalkappiya script, on the basis of difference in writing, difference in meaning and difference in examples. Hence, the article contemplates a deep study on the preferred theme.

Keywords: Types of Differences, Eluththathikaram, "Tholkappiyam"

ஒரு நூலாசிரியர் பயன்படுத்திய மொழியமைப்பில் அமைந்த சொல்லாட்சிகள் மூலப்பாடங்கள் (original texts) எனக் குறிப்பிடப்பெறும். இச்சொல்லாட்சிகளுக்கு இணையாக அவற்றின் இடத்தில் பிற்காலத்தில் நுழைந்த பொருளுடைய அல்லது பொருளற்ற சொற்கள் பாடவேறுபாடுகள் (variations) எனச்சுட்டப்பெறும். குறிப்பிட்ட மூலப்பாடத்திலிருந்து பொருளாலும், வடிவாலும் வேறுபட்டு அமையும் காரணத்தால் இவை பாடவேறுபாடுகள் என வழங்கப்பட்டன. பொருள் மாற்றத்திற்கு இடம் தந்தும், தராதும் ஒரு சொல் அல்லது தொடருக்கு அமையும் எழுத்து மற்றும் சொல் மாற்றங்களே பாடவேறுபாடுகள் எனலாம்.

பாடவேறுபாடுகளைப் பாடபேதங்கள் என்றும் பாடாந்திரங்கள் என்றும் உரைப்பர். பாடபேதம் என்று குறிப்பது ஒரு சொல்லுக்குப் பிரதியாக வரும் பிறிதொரு சொல். உதாரணமாக கோளறிமாதவன் என்பதற்குக் கோளரிவாமனன் என்று வருவது போல்வன பாடபேதங்கள் எனப் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை பாடபேதம் என்பதனைச் சான்றுடன் விளக்குவர். (தமிழ் நூல்களில் பாட வேறுபாடுகள். வெ.பழனியப்பன்.ப.2)

பாடவேறுபாடு என்பது பாட்டின் வடிவம் பற்றியதோர் கூறுபாடு என்று பொது நிலையிலும் பாடவேறுபாடு என்பது ஒரு சொல்லுக்கு மாறாக அதே ஓசையுடைய வேற்றுச்சொல் அல்லது அதே பொருளுடைய பிறிதொரு சொல் வந்து வழங்குவதாகும் என்று விளக்கமாகவும் கூறியுள்ளார். பாடாந்திரம் என்பதும் இதே பொருளுடையதாகும் ஒரு மூல பாடத்தின் இடத்தில் அதற்குப் பிரதியாக அமையும் பேதம் என்ற காரணத்தாலும் பல்வேறு ஏட்டுப் பிரதிகளில் ஒன்றுக்குப் பேதமாக அமைவது என்ற காரணத்தாலும் பாடபேதம்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

என்பதற்குப் பிரதி பேதம் என்பதும் மற்றொரு சொல்லாகும். (திருக்குறள் யாப்பு அமைதியும் பாடவேறுபாடும். மு.சண்முகம்பிள்ளை. ப.117).

பாடவேறுபாடு ஏற்பட காரணங்கள்

பழைய நூலாசிரியர்களின் மூல ஏடுகள் இன்று நமக்குக் கிடைக்கப் பெறாதவை. நூல் தோன்றிய காலம் முதல் இன்று வரை அந்நூல் பலராலும் பல்வேறு நிலைகளில் படி எடுக்கப்பட்டுள்ளது. பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சீகன் பால்கு தமிழில் அச்சு முறையை முதன் முதலாகக் கொண்டுவந்தார். ஏட்டுப்படிகளாக இருந்தவை அச்சுப்படிகளாக உருவெடுத்தன. பல படிநிலைகளையும் காலத்தையும் கடந்து நிலைப்பெற்றுள்ள ஒரு நூலின் மூல பாடங்களில் சிலவோ பலவோ பல்வேறு வடிவமாற்றம் பெற்றிருத்தல் இயல்பாகும்.

பாடங்கள் வேறுபடுவதற்குரிய காரணங்களாக

- ஏடு பார்த்து நகல் எடுத்தல்
- தன்கொள்கைக்கு ஏற்பப் பாடங்களைத் திருத்திக்கொள்வதாலும்
- உரிய இடங்கள் பாடலில் நினைவு வராதபோது இடத்திற்குத் தக்கவாறு தாமே சொற்களை அமைத்துக் கொள்வதாலும்
- தாம் கருதும் எதுகை, மோனை அமைப்புக்கேற்பப் பாடங்களைத் திருத்துவதாலும்
- இருக்கும் பாடலை மட்டமென்று கருதித் தாம் விரும்பியவாறு அமைப்பதாலும்
- அச்சிடுங்காலத்தில் பாடங்களை ஒப்புமை நிலையில் திரித்துப் பதிப்பிப்பதாலும் பாடங்கள் வேறுபடுகின்றன என்று சொ.முருகப்பா குறிப்பிட்டுள்ளார்.

(கம்பர்காவியம். சொ.முருகப்பா.பக்.124-133)

தொல்காப்பியத்தில் உரையாசிரியர் காலங்களில் பாடவேறுபாடுகள் அவரவர் கருத்திற்கேற்ப வேறுபட்டு பெருகுகின்றன. சான்றாக, “விழுமம் சீர்மையும் இடும்பையும் செய்யும்” (தொல்.சொல்.நூ.347) என்பது தொல்காப்பிய நூற்பா. இதற்கு உரை வழங்கிய இளம்பூரணர் விழுமம் ன்ற சொல்லுக்கு இடும்பை சீர்மை என்பன பொருள்கள் என்று கூறியுள்ளார். அடுத்து உரை வழங்கிய நச்சினார்க்கினியர் சேனாவரையர் காலத்தில் இச்சொல்லுக்குச் சீர்மை இடும்பை என்பவற்றோடு சிறப்பு என்ற பொருளும் சேர்ந்தது. எனவே புதிய பொருளையும் சேர்த்த நிலையில் நூற்பாவின் வடிவம் ‘விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும்பையும்’ என மாறியது. பின்னர் வந்த தெய்வச்சிலையார் இளம்பூரணர் கொண்ட அமைப்பையும் சேர்த்து இணைத்த வகையில் நூற்பாவின் வடிவத்தை அமைத்துக் கொண்டார். எனவே ‘விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும்பையும் செய்யும்’ என நூற்பாவின் வடிவம் மாற்றம் பெற்றது.

தொல்காப்பிய பாடவேறுபாடுகள்

தொல்காப்பிய எழுத்ததிகாரத்தின் 483 நூற்பாக்களில் காணப்படக்கூடிய

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

பாடவேறுபாடுகளை கண்டறிவதே முதன்மை நோக்கமாகும். தொல்காப்பிய உரையாசிரியர்களில் காலத்தால் முற்பட்டவராகவும் தொல்காப்பியம் முழுமைக்கும் உரை கண்ட சிறப்புடையவராகவும் உள்ள இளம்பூரணர் கொண்ட பாடங்களை அடிப்படையாகக் கொண்டு நச்சினார்க்கினியர் வேறுபடும் இடங்களையும், தற்கால உரையாசிரியர்களான ச.பாலசுந்தரம், தமிழண்ணல் கொண்ட பாடங்களில் வேறுபடும் இடங்களையும் தொகுத்து அவற்றை,

- எழுத்து வேறுபாடு
- பொருள் வேறுபாடு
- சான்று வேறுபாடு

எழுத்து வேறுபாடு

- எழுத்து சேர்க்கை
- எழுத்து விடுபடல்

எழுத்து சேர்க்கை

'சுட்டு முதலாகிய இகர இறுதியும்' என்ற தொகைமரபு நூற்பாவில் இளம்பூரணர், "சொல்லிய மருங்கின் உளவென மொழிப" (தொல்.எழுத்து.நூ.160) என்று நூற்பாவை குறிப்பிட்டுள்ளார். இதே நூற்பாவை நச்சினார்க்கினியர் 'சொல்லியல் மருங்கின்' என ஒரு எழுத்து சேர்த்து பாடம் கொண்டுள்ளார். பிற்காலத்தில் வந்த பாலசுந்தரனார் இளம்பூரணரையே பின்பற்றி 'சொல்லிய மருங்கின்' என்று நூற்பா வழங்கியுள்ளார். அடுத்து வந்த தமிழண்ணல் 'சொல்லியல் மருங்கின்' என்று நச்சினார்க்கினியரையே பின்பற்றியுள்ளார்.

எழுத்து விடுபடல்

'உயிரீறாகிய முன்னிலைக் கிளவியும்' எனத்தொடங்கும் தொகைமரபு நூற்பாவில், "இயல்பா குநவும் உறழ்பா குநவுமென்று" (தொல்.எழுத்து.நூ.152) என்பது இளம்பூரணர் கொண்ட பாடம். நச்சினார்க்கினியர் உரையில் 'உறழாகுநவும்' என்று பாடம் கொண்டுள்ளார். உறழாகுநவும் என்பதற்கு உறழ்ந்து முடிவனவும் என நச்சினார்க்கினியரும் உறழ்ச்சியாவனவும் என இளம்பூரணரும் உரை கூறியுள்ளனர். உறழ்பாகுநவும் என்பதில் உள்ள '**ப**' என்ற எழுத்து விடுபட்டமையால் உறழாகுநவும் என்று பாடம் அமைந்தது. இவற்றிடையே பொருள் வேறுபாடு இல்லை என்பதை இருவரது உரைப்பகுதிகளாலும் அறியலாம். அதுபோலவே பாலசுந்தரனார் இளம்பூரணரையே பின்பற்றி 'உறழ்பா குநவுமென்று' என்று நூற்பா வழங்கியுள்ளார். அடுத்து வந்த தமிழண்ணல் 'உறழா குநவுமென்று' என்று நச்சினார்க்கினியரையே பின்பற்றியுள்ளார்.

அதுபோலவே உயிர்மயங்கியலில், "ஏனவை வரினே மேல்நிலை யியல்பே" (தொல்.எழுத்து.நூ.257) என்பது இளம்பூரணர் கொண்ட பாடம். இதில் இயல்பே என்ற

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

சொல்லின் இறுதியில் அமைந்த எழுத்து விடுபட்டு ஓசை நிறைவுக்கு ஏற்ப 'இயல' என ஆகி நச்சினார்க்கினியர் உரைப் பதிப்பில் 'இயல' என்பதே பாடமாகவுள்ளது. இளம்பூரணத்திலிருந்து சற்று மாறி 'மேனிலை இயல்பே' என புணர்ச்சியில் குறிப்பிட்டுள்ளார் பாலசுந்தரனார். இவரைத் தொடர்ந்து தமிழண்ணலும் 'மேல்நிலை யியல்பே' என பாடம் கொண்டுள்ளார். இவரது உரையில் உகர ஈற்றுச் சுட்டின் முன் வல்லினம் அல்லாத பிற கணங்கள் வரின் முன்பு அகரவீற்றுச் சுட்டிற்குக் கூறிய இயல்பினைப் பெறும் என உரையிலும் இயல்பு என்ற சொல்லையே கையாண்டுள்ளார். எனவே இளம்பூரணரின் பாடமே சரியானது என்பது நன்கு விளங்குகிறது.

பொருள் வேறுபாடுகள்

பொருள் நிலையில் மாற்றம் நிகழ்வன பொருள் வேறுபாடுகள் என்னும் பகுப்பில் அடங்கும். இம்முறையில் ஒரு சொல் நிற்குமிடத்தில் மற்றொரு சொல் பயின்று வரும்போது அது இருவகையில் அமைகின்றது. அவை, 1.மிகுதியும் பொருள் வேறுபாடின்றி ஏறத்தாழ ஒரே பொருளைத்தரும் வேறு சொல் பயின்று வருதல். 2.மிகுதியும் பொருள் வேறுபாட்டுடன் வேறு பொருளைத் தரும் பிறிதொரு சொல் பயின்று வருதல் என்பன.

கடினமான அரியச்சொல்லை எளிமைப்படுத்தும் விருப்பத்தாலும் தாம் கருதியபொருள் அமைப்பிற்குத் தக்கவாறு பாடத்தைத் திருத்தும் முயற்சியாலும் முறையே இவ்விரு வகை வேறுபாடுகளும் எழுகின்றன எனலாம்.

ஒருபொருள் வேறு சொல்

எழுத்ததிகாரத்தில், "இகர இறுபெயர் திரிபிட னுடைத்தே" (தொல்.எழுத்து.நூ.155) என்ற தொகை மரபு நூற்பாவில் இகர ஈற்றுப் பெயர் என்னும் தொடர் இளம்பூரணர் கொண்ட பாடம். இதற்கு இகரமாகிய இறுதியை உடைய பெயர் என்று இளம்பூரணர் உரை வரைந்துள்ளார். இளம்பூரணரின் உரைப் பகுதியில் அமைந்த தொடர் 'இறுபெயர்' என்னும் பாடத்தைத் தோற்றுவிக்க, நச்சினார்க்கினியருக்குத் துணையாக அமைந்திருக்கலாம். இளம்பூரணர் கூறும் உரைத்தொடரின் அமைப்பினைப் பின்பற்றி 'இகர இறுபெயர்' என்னும் பாடம் நச்சினார்க்கினியரால் கொள்ளப்பட்டுள்ளது. 'இகர இறுபெயர்' என்பதற்கு இகர ஈற்றுப் பெயர் என நச்சினார்க்கினியர் உரை கூறுகின்றார்.

பொதுநிலையில் கூறும்பொழுது நச்சினார்க்கினியர் இளம்பூரணரின் உரைத் தொடரை அடிப்படையாகக் கொண்டு தம் பாடத்தைக் கூறினார் என்றும் இளம்பூரணரின் மூலத் தொடரை தன் உரைத் தொடராகக் கூறினார் என்றும் கூறலாம். ஈற்றுப்பெயர் - இறுபெயர் என்ற இத்தொடர்கள் சொல்லளவில் வேற்றுவடிவின ஆயினும் ஒரே பொருளைத் தருவனவாகும். பிற்காலத்தில் வந்த பாலசுந்தரனாரும் தமிழண்ணலும் **'இகர இறுபெயர்'** என்றே பாடம் கொண்டுள்ளனர்.

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில், "லகரம் நகரஒற் றாதலும் உரித்தே" (தொல். எழுத்து. நூ.215) என்ற உயிர் மயங்கியல் நூற்பாவிற்கு 'லகரம் றகர வொற்றாதலுமுரித்தே' என்னும் தொடரில் 'ஆதலும்' என இளம்பூரணர் கொண்ட பாடத்திற்கு மாற்றாக 'ஆகலும்' எனத் தோற்றமளிக்க வாய்ப்புண்டு. எனவே தோற்றத்தில் ஒத்து அமையும் இச்சொல் நச்சினார்க்கினியரின் பாடமாகவும் ஆயிற்று எனலாம். பாலசுந்தரனார் உரையில் 'லகரம் றகரஒற் றாதலும் உரித்தே' என்ற நூற்பாவில் றகர ஒற்றாதல் என்றே குறிப்பிட்டுள்ளார். ஆனால் தமிழண்ணல் 'றகரஒற் றாகலும் உரித்தே' என்றே பாடம் கொண்டுள்ளார்.

மேலே குறிப்பிட்டது போல பாலசுந்தரனார் இளம்பூரணரையும் தமிழண்ணல் நச்சினனார்க்கினியரையும் பின்பற்றுகின்றனர் என்பது தெளிவாகிறது.

வேறு பொருள் - வேறுசொல்

இப்பகுதியில் குறிப்பிடப்பெறும் பாடங்கள் பொருள் நிலையில் மாற்றம் உடையன. பொருள் வேறுபாடுடைய பாடங்களில் பொருத்தமுடைய பாடங்கள் எவை என்பது பற்றிப் பின்னே ஆராயப்படும். எழுத்ததிகாரத்தில் புள்ளி மயங்கியலில், "மக்க ளென்னும் பெயர்நிலைக் கிளவியும்" (தொல்.எழுத்து.நூ.405) என்ற நூற்பாவில் வரும் தொடரில் 'பெயர்நிலைக் கிளவியும்' என்ற இளம்பூரணர் பாடத்திற்கு மாற்றாக 'பெயர்ச்சொல்லிறுதி' என்பதைப் பாடமாக நச்சினார்க்கினியர் கொண்டுள்ளார். கிளவி - இறுதி என வரும் இரு சொற்களும் சொல்லளவில் வேறு வேறு பொருளைக் குறிப்பன ஆயினும் அவற்றால் உணர்த்தப்படும் பொருளில் வேறுபாடு இல்லை. இளம்பூரணர் இத்தொடரின் பொருளைக் கூறுமிடத்து 'மக்கள் என்னும் பெயர்ச் சொல்லின் இறுதி' என விரித்து 'இறுதி' என்ற சொல்லையும் சேர்த்து மொழிவர். இளம்பூரணரின் உரைப்பகுதியில் கண்ட சொல்லமைப்பின் வழியே 'பெயர்ச் சொலிறுதி' என்ற பாடத்தை நச்சினார்க்கினியர் படைத்திருக்க வேண்டும் எனக் கருதலாம்.

அதுபோலவே பாலசுந்தரனாரும் 'பெயர்நிலைக் கிளவி' என்றே பாடம் கொண்டுள்ளார். ஆனால் உரையில் மக்கள் என்னும் பெயர் அஃறிணைக்குரிய 'கள்' விகுதி பெற்று உயர்திணைப்பெயராய் நிற்பதொன்றாகலின் மக்கட் பண்பினைச் சுட்டி வருங்கால் திரிந்தும் பிறவாறு வருங்கால் இயல்பாயும் நிகழுமெனக்கோடல் ஓராற்றான் அமைவதன்றி மக்கள் உயிர்நீங்கிக் கிடக்கும் நிலையில் இச்சொல் திரிபுறும் என உரையாசிரியர் கூறுவது பொருந்துமாறில்லை என்று உரையில் வேறுபடுகிறார். ஆனால், தமிழண்ணல் நச்சினார்க்கினியரையே பின்பற்றுகிறார்.

சான்று வேறுபாடு

தொல்காப்பிய எழுத்ததிகார நூன்மரபில் சுட்டு எழுத்துக்களைப் பற்றி குறிப்பிடும் தொல்காப்பியர், "அ இ உ அம் மூன்றுஞ் சுட்டு" (தொல். எழுத்து. நூ. 31) எனக்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

குறிப்பிட்டுள்ளார். இதற்கு உரை வழங்கிய இளம்பூரணர் அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம் எனச் சான்று வழங்கியுள்ளார். இந்த நூற்பாவிற்கு அக்கொற்றன், இக்கொற்றன், உக்கொற்றன், எப்பொருள் என சான்று வழங்கியுள்ளார். தற்கால உரையாசிரியர்களான பாலசுந்தரனார் **'யா'** என்னும் உயிர்மெய் எழுத்துப் பன்மை வினாப்பெயராயும், யாவன், யாவள், யாவர், யாது, யாவை என்று சான்று வழங்கியுள்ளார். இவற்றுள் யாது, யாவை, போன்றவை தற்கால வழக்கத்தில் பயன்பாட்டில் இருப்பதால் மாணவர்களுக்கு இந்நூற்பா எளிதில் விளங்கும். தமிழண்ணல் இந்நூற்பாவிற்கு சான்றுகள் வழங்கவில்லை.

அதுபோலவே நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியும் பற்றி குறிப்பிடும் தொல்காப்பியர், "உயிரிறு சொல்முன் உயிர்வரு வழியும் உயிரிறு சொல்முன் மெய்வரு வழியும்..." (தொல்.எழுத்து.நூ.108) என்று நூற்பா வழங்கியுள்ளார். இந்நூற்பாவிற்கு உரை வழங்கிய இளம்பூரணர் இதற்குச் சான்றாக, ஆஈ, ஆ வலிது, ஆல் வீழ்ந்தது எனக் குறிப்பிட்டுள்ளார். இவற்றுள் ஆ, ஆல் ஆகியவை தற்காலத்தில் படிக்கும் மாணவர்களுக்கு சற்று கடினமானது. இவை அகராதியின் துணை கொண்டே பொருள் அறிய முடிகிறது. நச்சினார்க்கினியரும் இளம்பூரணரை பின்பற்றி ஆவுண்டு, ஆவலிது, ஆலிலை, ஆல்வீழ்ந்தது என்றே சான்று வழங்கியுள்ளார்.

பாலசுந்தரனார் இந்நூற்பாவிற்கு கபிலர் நூல், நம்பி கற்றான், உண்டான் சாத்தன், வந்து நின்றான் என சான்று வழங்கியுள்ளார். இவை தற்காலத்திற்கு ஏற்புடையதாகவும், எளிதில் விளங்கக்கூடியதாகவும் உள்ளது. தமிழண்ணல் இந்த நூற்பாவிற்கு உரை வழங்கியுள்ளார். சான்று வழங்கவில்லை. இது போன்று பல நூற்பாக்கள் எழுத்ததிகாரத்தில் உள்ளன. சிலவே இங்கு சான்றாக வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட விளக்கத்தின் மூலம் தொல்காப்பிய எழுத்ததிகார நூற்பாக்களில் பல பாட வேறுபாடுகள் காணப்படுகின்றன என்பதும், உரையாசிரியர்களிடையே உரைகளும் சான்றுகளும் வேறுபடுகின்றன என்பதும், தற்காலத்தில் தமிழ் படிக்கின்ற மாணவர்களுக்கும், தமிழ் அறிஞர்களுக்கும் தொல்காப்பிய எழுத்ததிகாரம் கற்பதற்கு தற்காலச் சான்றுகளே ஏற்புடையதாக உள்ளன என்பதையும் அறிய முடிகிறது.

பார்வை நூல்கள்

[1] இளம்பூரணர் உரை, தொல்காப்பியம் (எழுத்து), கழக வெளியீடு, திருநெல்வேலி, 2000.

[2] நச்சினார்க்கினியர் உரை, தொல்காப்பியம் (எழுத்து), தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2003.

[3]. ச.பாலசுந்தரம், தொல்காப்பியம் (எழுத்து), காண்டிகையுரை, பெரியார் பல்கலைக்கழக வெளியீடு. சேலம், 2012.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

[4] தமிழண்ணல், தொல்காப்பியம் (எழுத்து), மணிவாசகர் பதிப்பகம். சென்னை, 2009.

[5] வெ.பழனியப்பன், தமிழ் நூல்களில் பாட வேறுபாடுகள், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1990.

[6] மு.சண்முகம்பிள்ளை, திருக்குறள் யாப்பும் அமைதியும் பாடவேறுபாடும், சென்னை, சென்னைப் பல்கலைக்கழகம், 1971.

[7] சொ.முருகப்பா, கம்பர் காவியம், சென்னை, இந்து பதிப்பகம், 2012.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

அனிதா & ஆனந்தவேல் "தொல்காப்பிய எழுத்ததிகார உரையில் பாட வேறுபாடுகள்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 1, *திசம்பர்* 2020, பக். 19-25. டிஒஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.004**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Anitha & Ananthavel. "Textual Differences in the Notes of Eluththathikaram of "Tholkappiyam"." *International Journal of Tamil Language and Literary Studies,* Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020, pp. 19-25. **DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.004**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

"ஆசாரக் கோவை" உரையும் உரையாசிரியரும்
The Secondary Sources of "Acarakkovai" and the Secondary Commentators

முனைவர் மோ .அனுசூயா,உதவிப்பேராசிரியர், புனித அன்னாள் கலைமற்றும் அறிவியல்கல்லூரி, சென்னை.
Dr M. Anusooya, Assistant Professor, HOD, Department Tamil, St. Annes Arts and Science College, Chennai.
ORCiD: https://orcid.org/0000-0002-7746-4001
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.005

Abstract

"Acarakkovai", the book of ethics deals with rituals those are essential to human life. The word 'Asaram' (Vadamozhi) means 'Etiquette' in English. The meaning of the work gives out the sense that it is the voluminal work of moral and ethics. The summary of the instructions is said to be consisting of more than 100 songs of various Venpa (Meter and Stanzas) genres. Every song and discipline is related to the concept Iyampukinratu. In it, nineteen of the texts are non-internal and about external folklore. The lyrics of the collection "Acarakkovai" have enthralling effects on the readers when it comes out of true understanding. Many scholars had written secondary texts for the didactic treatise "Acarakkovai" all have its peculiar traits in deciphering the original text. Hence, this article ponders over the Secondary Sources of "Acarakkovai" and the Secondary Commentators in a shrewd manner.

Keywords: "Acarakkovai", Secondary Commentators, Secondary Sources

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத ஆசாரங்களை அதாவது ஒழுக்கங்களை எடுத்துக்கூறும் ஒரு நூல் ஆசாரக்கோவை. ஆசாரம் என்பது வடச்சொல் . தமிழில் ஒழுக்கம், நெறிமுறை வழி என்ற சொற்கள் கூறும் பொருளை வடமொழி ஆசாரம் கூறுகிறது. வழிமுறைகளை தொகுத்து கூறுவது கோவை என்று கூறப்படுகிறது. பல்வேறு வெண்பா வகைகளால் அமைந்த 100 பாடல்களால் கொண்டது. ஒவ்வொரு பாடலும் ஒழுக்கம் தொடர்பான கருத்தை இயம்புகின்றது. பதினெண்கீழ்கணக்கு நூல்களில் அகமும் புறமும் சாராத நாட்டுப்புறப் பாடல்களின் திரட்டைப் போன்ற நூல் ஆசாரக்கோவை.

ஒழுக்கங்களின் பட்டியல்:

1. ஆசார வித்து, 2. ஒழுக்கம் தவறாதவர் அடையும் நன்மைகள், 3. தக்கிணை முதலியவை மேற்கொள்ளல், 4. முந்தையோர் கண்ட நெறி, 5. எச்சிலுடன் தீண்டத் தகாதவை, 6. எச்சிலுடன் காணக் கூடாதவை 7. எச்சில்கள் 8. எச்சிலுடன் செய்யக் கூடாதவை, 9. காலையில் கடவுளை வணங்குக 10. நீராட வேண்டிய சமயங்கள் 11. பழைமையோர் கண்ட முறைமை12. செய்யாமல் தவிர்க்க வேண்டியவை13. செய்யத் தகாதவை14. நீராடும் முறை15. உடலைப்போல் போற்றத் தக்கவை16. யாவரும் கூறிய நெறி17. நல்லறிவாளர் செயல்18. உணவு உண்ணும் முறைமை19. கால் கழுவிய பின் செய்ய வேண்டியவை 20. உண்ணும் விதம்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

21. ஒழுக்கம் பிழையாதவர் செய்வது 22. பிற திசையும் நல்ல 23. உண்ணக்கூடாத முறைகள் 24. பெரியோருடன் இருந்து உண்ணும் முறை 25. கசக்கும் சுவை முதலிய சுவையுடைய பொருள்களை உண்ணும் முறைமை 26. உண்ணும் கலங்களைக் கையாளும் முறை 27. உண்டபின் செய்ய வேண்டியவை 28. நீர் குடிக்கும் முறை 29. மாலையில் செய்யக் கூடியவை 30. உறங்கும் முறை 31. இடையில் செல்லாமை முதலியன 32. மலம், சிறுநீர் கழிக்கக்கூடாத இடங்கள் 33. மலம் சிறுநீர் கழிக்கும் முறை 34. மலம், சிறுநீர் கழிக்கும் திசை 35. வாய் அலம்பாத இடங்கள் 36. ஒழுக்க மற்றவை 37. நரகத்துக்குச் செலுத்துவன 38. எண்ணக்கூடாதவை 39. தெய்வத்துக்குப் பலியூட்டிய பின் உண்க 40. சான்றோர் இயல்பு 41. சில செய்யக் கூடியவையும் செய்யக் கூடாதவையும் 42. மனைவியைச் சேரும் காலமும் நீங்கும் காலமும் 43. உடன் உறைதலுக்கு ஆகாத காலம் 44. நாழி முதலியவற்றை வைக்கும் முறை 45. பந்தலில் வைக்கத் தகாதவை 46. வீட்டைப் பேணும் முறைமை 47. நூல் ஓதுவதற்கு ஆகாத காலம் 48. அறம் செய்தற்கும் விருந்து அளித்தற்கும் உரிய நாட்கள் 49. நடை உடை முதலியவற்றைத் தக்கபடி அமைத்தல் 50. கேள்வியுடையவர் செயல் 51. தம் உடல் ஒளி விரும்புவார் செய்யத் தக்கவை 52. தளராத உள்ளத்தவர் செயல் 53. ஒழுக்கமுடையவர் செய்யாதவை 54. விருந்தினர்க்குச் செய்யும் சிறப்பு 55. அறிஞர் விரும்பாத இடங்கள் 56. தவிர்ப்பன சில 57. நோய் வேண்டாதவர் செய்யக் கூடாதவை 58. ஒருவர் புறப்படும் போது செய்யத் தகாதவை 59. சில தீய ஒழுக்கங்கள் 60. சான்றோருடன் செல்லும் போது செய்யத் தக்கவை 61. நூல்முறை உணர்ந்தவர் துணிவு 62. சான்றோர்க்குச் செய்யும் ஒழுக்கம் 63. கற்றவர் கண்ட நெறி 64. வாழக்கடவர் எனப்படுவர் 65. தனித்திருக்கக் கூடாதவர் 66. மன்னருடன் பழகும் முறை 67. குற்றம் ஆவன 68. நல்ல நெறி 69. மன்னன் செய்கையில் வெறுப்படையாமை முதலியன 70. மன்னன் முன் செய்யத் தகாதவை 71. மன்னன் முன் சொல்லக் கூடாதவை 72. வணங்கக்கூடாத இடங்கள் 73. மன்னர் முன் செய்யத் தகாதவை 74. ஆசிரியரிடம் நடக்கும் முறைமை 75. சான்றோர் அவையில் செய்யக் கூடாதவை 76. சொல்லும் முறைமை 77. நல்ல குலப்பெண்டிர் இயல்பு 78. மன்னர் அவையில் செய்யக் கூடாதவை 79. பெரியோரிடம் உள்ள முச்செயல்கள் 80. சான்றோர் பெயர் முதலியவை கூறாமை 81. ஆன்றோர் செய்யாதவை 82. மனைவியின் உள்ளம் மாறுபடுதல் 83. கடைபோக வாழ்வோம் என எண்ணுபவர் மேற்கொள்ள வேண்டியவை 84. பழகியவை என இகழத் தகாதவை 85. செல்வம் கெடும் வழி 86. பெரியவரை உண்டது யாது என வினவக் கூடாது 87. கட்டிலில் படுத்திருப்பவருக்குச் செய்யத் தகாதவை 88. பெரியோர் போல் வாழ்வோம் என எண்ணுபவர் செய்கைகள் 89. கிடைக்காதவற்றை விரும்பாமை 90. தலையில் சூடிய மோத்தல் 91. பழியாவன 92. அந்தணரின் சொல்லைக் கேட்க 93. சான்றோர் அவையில் குறும்பு முதலியன செய்யாமை 94. ஐயம் இல்லாத அறிவினர் செய்கை 95. பொன்னைப் போல்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

காக்கத் தக்கவை 96. எறும்பு முதலியவை போல் செயல் செய்தல் 97, சான்றோர் முன் சொல்லும் முறை 98. புகக் கூடாத இடங்கள் 99. அறிவினர் செய்யாதவை 100. ஒழுக்கத்தினின்று விலகியவர் என்று நூறு ஒழுக்கங்களை பற்றி ஆசாரக் கோவை கூறுகிறது.

உரையாசிரியர்

ஆசாரக் கோவைக்கு முதன் முதலில் உரை எழுதிய பெருமை திருத்தணிகை விசாகப் பெருமாளையரைச் சாரும். இவர் சாலி வாகன சகம் 1720 ஆம் ஆண்டு பிங்கல ஆனி 24 (1720) பிறந்தவர். இவர் திருத்தணிகைக் கந்தப்பையர் எனும் வீர சைவரின் மூத்த மகனாவார். இவர் இயற்றமிழாசிரியர் இராமானுசக் கவிராயரிடம் கல்வி பயின்றவர். விசாகப் பெருமாளையர் சென்னை மாகாணக் கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராக இருந்தவர். உவின்ஸ்லோ தமிழ் அகராதிக்குத் துணைபுரிந்தவர். இலக்கணச் சுருக்க வினாவிடை என்னும் நூலை 1828 ஆம் ஆண்டு, பாலபோத இலக்கணம் என்னும் நூலை 1852 ஆம் ஆண்டு எழுதி அச்சிட்டவராவர். அணியிலக்கண வினாவிடை 1857, யாப்பிலக்கண வினாவிடை, கல்விப் பயன் என்னும் நூல்களையும் எழுதி வெளியிட்டவர்.

பதிப்பு நூல்கள் திருக்கோவையாருக்கு உரை எழுதி 1857 ஆம் ஆண்டு அச்சிட்டுப் பதிப்பித்துள்ளார். இவர் நன்னூலுக்குக் காண்டிகையுரையுடன் 1840 ஆம் ஆண்டு எழுதிப் பதிப்பித்துள்ளார். இது 1868, 1882 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது. இவரை இலக்கண விசாகப் பெருமாளையர் என்னும் கவிராயர் என்றும் அழைத்து வந்தனர். இவருக்குச் சென்னையில் கல்வி விளக்க அச்சகம் ஒன்று இருந்தது. இவரும் இவருடைய இளவல் சரவணப் பெருமாளையரும் சேர்ந்து திருவள்ளுவ மாலை என்ற நூலை 1830 ஆம் ஆண்டு அச்சிட்டுப் பதிப்பித்துள்ளனர்.

முதல் பதிப்பு அமைப்பு

திருத்தணிகை விசாகப் பெருமாளையர் முன்னிலையில் தில்லையம் பூர்ச் சந்திரகசேகர கவிராஜப் பண்டிதரால் இலட்சுமி விலாச அச்சுக்கூடத்திற் 1857 ஆம் ஆண்டு ஆசாரக்கோவை பதிப்பிக்கப்பட்டது. இந்நூல் சிறப்பு பாயிரம் நீங்கலாக நூறு செய்யுட்கள் உள்ளன. வெண்பாவின் வகையாகிய குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, பஃறொடை வெண்பா ஆகிய பாக்களால் ஆனாது. சிறப்புபாயிரம் பாடல் நூல் இறுதியில் காணப்பெறுகின்றது. இந்நூற் பாடல்கள் பத்துப்பாட்டு, சீவகசிந்தாமணி முதலிய இலக்கிய உரைகளிலும் நன்னூல், இலக்கண விளக்கம், பிரயோக விவேகம் முதலிய இலக்கண நூல்களின் உரைகளிலும் மேற்கோளாகப் எடுத்தாளப்பெற்றுள்ளன. இந்நூல் முழுமைக்கும் பழைய பொழிப்புரை காணப்பெறுகின்றது.

பதிப்பிக்க கிடைத்சுவடிகள்

1. டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூலகம் சென்னை – 6சுவடிகள்
2. கீழ்த்திசை சுவடி நூலகம் ,சென்னை -2சுவடிகள்
3. கீழ்த்திசை சுவடி நூலகம் திருவனந்தபுரம் – 2 சுவடிகள்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

4. தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர் -1 சுவடி
5. இந்திய தேசிய நூலகம் , கொல்கத்தா – 2சுவடிகள்
6. தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி பேரூர், கோவை – 1 சுவடி 1

உரை பதிப்பு அமைப்பு:

ஆசாரக்கோவை உரை பதிப்பு அமைப்பானாது கடினமான செயலாக இருந்தது என்பதை "ஆசாரக்கோவை முதன்முறை அச்சாகி ஏறக்குறைய ஐம்பதாண்டிகளாகின்றமையால் பிரதிகாண்பது கடினமாயிற்று. ஆகவே பிரதி கிடைப்பது எளிதாயின் இந்நூல் பயன்படாமற் போகாது என நினைந்தது இதனை இப்போது அச்சிடுவேனாயின் எனப் பதிப்புரையில்"[1] அவர் குறிபிட்டுள்ளார். இதிலிருந்து ஆசாரக்கோவையை ஏறத்தாழ 1850 ஆம் ஆண்டளவில் மூலத்தையும் அதற்கான பழைய உரையையும் அச்சிட்டிருப்பர் போலும் அச்சிட்டு வெளியிட்டவர் பெயரை அறிய முடியவில்லை ஆயினும் முதன் முதறையாக ஆசாரக்கோவையைப் பழைய உரையுடன் பதிப்பித்தவர் அதன் உரை நச்சினார்க்கினியரிடையது எனக் கருதியுள்ளார். ஆசாரக்கோவையைப் பதிப்பித்த செல்வக்கேசவராயரோ அப்பழையவுரை நச்சினார்க்கினியருடையதன்று என மறுத்து அதைப் பிண்ட உரை என்று கண்ணழிவு செய்து பதிப்பித்ததாகவும் கூறுகின்றார். பழந்தமிழ் நூல்களைப் பாதுகாக்க வேண்டும் எனும் நோக்கம் இவரிடையே இருந்தமை கீழ்வரும் பகுதியிலிருந்து வெளிப்படுகின்றது.

"இந்நூல் கூறும் பற்பல ஆசாரங்களின் சம்பிரதாயங்களை இக்காலத்தறிவது கூடாமையால் கருத்துரையில் பிழைப்பட்ட இடங்களை ஆன்றோர் பிழை பொறுத்துக் கோடல் வேண்டும் அடியேனைப் பழிப்பதில் பயனின்று. பாக்களையேனும் இழவாமல் பாதுகாத்தல் வேண்டும் என்பதொன்றுமே இந்நூலை அச்சிட்டநோக்கம் என்று கூறுகிறார் . ஆசாரக்கோவையின் நூறுபாடல்களும் பழைய பொழிப்புரையுடனும், செல்வக்கேசவராயரின் பதவுரையுடனும் மற்றும் குறிப்புரையுடனும் பதிப்பாகியுள்ளன. தற்சிறப்புப் பாயிரப் பாடல் ஒன்றும் இப்பதிப்பில் அமைந்துள்ளது . இப்பாடல் போன்ற தற்சிறப்புப் பாடல்களைப் பதினெண்கீழ்கணக்குகளில் நூலாசிரியர்களே பாடியிருக்கக் கூடும் என்பது இவர் கருத்து அதற்குச் சான்றாக இவர் பதிப்பித்த பழமொழி நானூற்றின் பதிப்புரையிலிருந்து ஒரு பகுதியை எடுத்துக்காட்டலாம்".[2]

"சம்பந்தர் சடகோபர் முதலாயினோரும் திவாகரரும் பதினெண்கீழ் செய்தாரும் முன்னாகப் பின்னாகப் பதிகங் கூறுவது காண்க எனப் பிரோயோகவிவேக முடையார் கூறுதலால் இந்தப் பாயிரம் முன்றுரையரையரேகூறியது போலும்"[3] என்று கூறப்பட்டுள்ளது. ஆசாரக்கோவையின் தற்சிறப்புப்பாயிரப் பாடலை அதன் ஆசிரியர் பெருவாயின் முள்ளியாரே பாடியிருப்பார் என்பது இவர் கருத்தாகலாம் முதலில் நூலின் பாடலை அமைத்து அதன் கீழ்ப் பழைய உரையை அமைத்து அடுத்தாகத் தம் விளக்கங்களைச் சுருக்கமாக இவர் அமைத்துள்ளார். பலர் ஆசாரக்கோவையைப் பதிப்பித்திருந்தாலும் முன்னோடியான முழுமைப் பதிப்பாகச் செல்வக்கேசவராயாரின் பதிப்பை கொள்ளமுடியும் .

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

ஆசாரக்கோவையின் தற்சிறப்புப் பாடலை காணும் போது ஏனைய பாடல்கள் எல்லாம் மூன்றடி முதல் ஐந்தடிகளில் இருக்க தற்சிறப்புப்பாயிரத்தில் ஆறடிகள் காட்டப்பெற்றுள்ளன. இப்பாடலைச் செல்வக்கேசவராயர் பதிப்பித்தலிருந்து சீர்திருத்தி அமைக்கலாம்.

ஆரெயின் மூன்று மழித்தா னடியேத்தி
யாரிடத்துந் தானறிந்த மாத்தி ரையா
யாசாரக் கோவை யெனத் தொகுத்தான் ரீராத்
திருவாயி லாய திறல்வண் கயத்தூர்ப்
பெருவாயின் முள்ளி யென்பான்"4

இப்பாடல் பின்னால் எழுதிச் சேர்த்த்து என்பதை இதன் வடிவத்தால் அறியலாம் . மூன்றடி முதலாக ஐந்தடி வரை ஆசாரக்கோவையின் பாடல்கள் அமைந்திருக்க ஆறடிகளில் அதுவும் மூன்று கண்ணிகளில் இருப்பதற்கு இடமளிப்பதாகவும் தெரிகிறது. நூலாசிரியர் பாடிய பாடலாகத் தற்சிறப்புப் பாடல் அமையவில்லை எனலாம். இந்நூலாசிரியர் சைவர் எனக் கொள்ளத்தக்க சான்றுகள் அமைந்துள்ளன . வண்கயத்தூர் எனும் ஊர் கயத்தூர் எனும் மற்றொரு ஊரிலிருந்து வேறுப்பட்டதாகத் உள்ளது. அவர் கடல் சார்ந்த ஊரினராய் இருந்திருந்தல் கூடும் பெருவாயின் முள்ளி (யார்) என்பதில் உள்ள முற்பெயரை இவரின் தந்தை பெயர் பெருவாயினன் என அபிதான சிந்தாமணி கூறுகின்றது. "முள்ளி (யார்) எனும் பெயர் இயற்பெயரா, காரணப்பெயரா எனத் தெரியவில்லை முள்ளி நாடு என நாடு ஒன்று அறியப்பெறுகின்றது. இந்நூலின் ஆசிரியர் களப்பிரரை மிகவும் தாழ்வானவராகக் கருதி எழுதியுள்ள குறிப்பை இப்பாடல்களில் காணலாம். களப்பிரரால் விலக்கப்பட்ட அரசகுடியினரே அக்களப்பிரரைத் தாழ்வாகாக் கருதுவர். அந்நிலையில் பெருவாயின் முள்ளியார் அரசகுலத்தவரில் வந்தவராகலாம். களபிரர் காலத்தொடக்கத்தில் (கி.பி 4 ஆம்நூற்றாண்டு) வாழ்ந்தவராகவும் கருதலாம். அவ்வாறெனில் பதினெண்கீழ்க்கணக்குள் ஒன்றான ஆசாரக்கோவை கி.பி 4 ஆம் நூற்றாண்டின் இறுதியிலோ, 5 ஆம் நூற்றாண்டின் முதலிலோ பாடப்பெற்று , அதர்குப் பிற்காலத்தில் களப்பிரர் பாண்டியன் கடுங்கோனால் விலக்கப்பட்ட காலக்கட்டத்தில் (கி.பி 6 ஆம் நூற்றாண்டின் இறுதியில்) கீழ்க்கணக்குள் ஒன்றாகச் சேர்க்கப்பட்டிருக்கலாம். ஆசாரக்கோவையின் பாடலுக்கு இதுவரையிலும் பொருள் விளக்கம் கண்டிருப்போர் அந்நூல் சங்ககாலத்து முற்ப்பட்ட மற்றும் சிறிது பிற்பட்ட காலக்கட்டத்தைப் பதிவு செய்துள்ளது எனும் உண்மை புலப்படாமலே பொருள் விளக்கம் கண்டு வந்துள்ளனர்.செல்வக்கேசவராயரும் இதற்கு விதிவிலக்கன்று சான்றாக

ஈன்றாள் மகள் உடன்பிறந்தாள் ஆயினும்
சான்றோர் தனித்தா உறையற்க ஐம்புலனும்
தாங்கற் கரிதாக லான்"5

என்ற பாடலுக்குப் பிர எல்லோரும் 'அறிஞர் தாய்,மகள், உடன்பிறந்தாள் ஆகியோருடன் தனித்து உறைதல் கூடாது என்றே பொருள் கண்டுள்ளனர். செல்வக்கேசவராயரும் இவ்வாறே

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

கண்டுள்ளார் ஆனால், இதற்கு விளக்கம் அளிக்கும் மயிலை சீனி.வேங்கடசாமியோ அறிஞர் கருத்து அன்று என்றும், அங்கே சான்றோர் எனும் வீரரையே கூறினார் என்றும் 'சான்றோன்' எனும் தம் ஆய்வுக் கட்டுரையில் (பக்355) குறிப்பிட்டுள்ளார். வண்கயத்தூர் பெருவாயின் முள்ளியாரின் கருத்தைக் கருதியே பொருளுரைக்க வேண்டுமே அல்லது தம் விருப்பப்படி யாரும் பொருள் கொள்ளல் கூடாது. இது பதினெண் கீழ்கணக்கின் பிற நூல்களுக்கும் பொருந்தும். இந்நூலில் பத்துப்பாட்டு, சீவக சிந்தாமணி முதலிய இலக்கிய உரைகளிலும் நன்னூல், இலக்கண விளக்கம், பிரயோக விவேகம் முதலிய இலக்கண நூல்களின் உரைகளிலும் மேற்கோள்கள் எடுத்தாளப்பெற்றுள்ளன. பழந்தமிழ் நூலான ஆசாரக்கோவை உரை பதிப்பு அமைப்பானாது கடினமான செயலாக இருந்தது என்பதை அறியமுடிகிறது. வெவ்வேறு காலங்கட்டங்ககளில் கிடைத்தசுவடிகளை கொண்டு பதிப்பித்து உள்ளனர். அதன் பின்னர் உரையாசிரியர்கள் உரை எழுதி பதிப்பித்துள்ளனார் என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது.

துணை நூற்பட்டியல்

[1] ஆசாரக்கோவை மூலமும் உரையும், விசாகப் பெருமாளையங்கார், ப.4.

[2] திருமணம் செல்வகேசவராய முதலியார், பதிப்பு.2004, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்

[3] மேலது ப. 68.

[4] மேலது ப. 69.

[5] பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம், மயிலை வேங்கடசாமி, ப.355.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள் :

அனுசூயா. "“ஆசாரக் கோவை” உரையும் உரையாசிரியரும் ." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 1, *திசம்பர்* 2020, பக். 26-31. டிஓஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.005**

Cite this Article in English (*MLA 8 Style*) as:

Anusooya. “The Secondary Sources of “Acarakkovai” and the Secondary Commentators.” *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020, pp. 26-31. **DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.005**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்
32
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

உரையாசிரியர்கள் காட்டும் தமிழர்வாழ்வும் பண்பாடும்
Tamil Life and Culture As Portrayed in Prose Writings

வீ.இராஜேந்திரன், முனைவர் பட்ட ஆய்வாளர், ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி, தமிழாய்வு மையம், நாகர்கோவில்.
V.Rajendran, Ph.D Scholar, Scott Christian College, Nagarcoil.
ORCiD: https://orcid.org/0000-0002-8204-8926

அ. பாக்கிய முத்து, தமிழ்த் துறைத் தலைவர், திருவள்ளுவர் அறிவியல் மற்றும் கலைக்கல்லூரி, பாபநாசம்..
Dr. A. Packiamuthu, Associate Professor & Head, Department of Tamil, Thiruvalluvar College, Papanasam.
ORCiD: https://orcid.org/0000-0002-8204-8926
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.006

Abstract

In the past all ideas or thoughts or lessons were conveyed through poems. Then, the pantheon of prose writers used prose to communicate their thoughts and ideas. Notable among them were Ilampuvanar, Nachinarkiniyar, Sonavaraiyer and Adiyarku Nallar. They were followed by the modern prose writers i.e. Parimelazhaker, Narayanasamy Ayyar and V.O.S.DuraisamyPillai. Due to their untiring effort the essence of old Tamil literature became available to the modern succeeding generations. Thirukkural remains the crown of Tamil literature even today. Many wrote prose explanations to Thirukkural and it still continues. Some works have become popular because of the prose explanations made by the explanatory writers. Sanskrit language became dormant because of the lack of prose form. From this we can understand the importance of prose as a form of literature. In prose writings, feminism is abundant all over the world. Tamil language is no exception to that. In this study, a humble attempt is made to bring to light the theme of feminism and women's rights in the modern prose writings.

Keywords: Tamil Life, Culture, Prose Writings, Feminism

முன்னுரை

பல ஆண்டுகளுக்கு முன் பாடல் வடிவில் எழுதப்பட்ட தமிழ்நூல்களின் பொருளை உரைவடிவில் விரித்து எழுதியவர்கள் தமிழ் உரைநூல் ஆசிரியர்கள் ஆவர். தமிழ் உரைநடை உரைகளால் சிறப்பாக வளர்ச்சியுற்றது. உரைநடை தெளிவாகவும் தருக்கமுறையாகவும் வளரக் கூடிய வகையில் செய்யுள் வடிவிலானவற்றுக்கு உரைஎழுதி விளக்கும்சூழல் உருவானது. இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர், சேனாவரையர், அடியார்க்குநல்லார், பரிமேலழகர், பின்னத்தூர் நாராயணசாமி, ஒளவைசு. துரைச்சாமிப் பிள்ளை முதலான உரையாசிரியர்கள் உரைநடையை வளர்த்தனர். இந்தஉரையாசிரியர்கள் காட்டும் தமிழர்வாழ்வும் பண்பாடும் என்றத்தலைப்பில் பெண்ணியத்தின் மதிப்புக்களைப் பற்றி உரையாசிரியர்கள் எவ்வாறு கையாண்டுள்ளார்கள் என்பதைப்பற்றிப்பார்ப்போம்

உரையாசிரியர்கள் காட்டும் தமிழர்வாழ்வும் பண்பாடும் சங்ககாலத்தில் தமிழைக்காக்கும் பொறுப்பைமன்னர்கள் பெற்றிருந்தனர். தமிழ்ப்பணியை மேற்கொண்டனர். பிற்காலச்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

சோழர்காலத்தில் தான் பல உரையாசிரியர்கள் தோன்றித்தமிழின் காவலராய் விளங்கினர். உரையாசிரியர்களின் இடைவிடாத முயற்சியாலும் தொடர் பணியாலும் பழந்தமிழ் இலக்கியங்கள் வருங்கால சந்ததியினருக்கு உதவுகின்றன. சங்கத் தமிழ் நூல்களின் பிரிவுகள்

1. இலக்கியம்
2. இலக்கணம்
3. தத்துவம்
4. கலை

இலக்கியம், இலக்கணம் ஆகியவற்றின் உரைகள் மிகுதியாகத் தோன்றியுள்ளன. தத்துவம், கலை ஆகிய பிரிவுகளில் தேவையான அளவு உரைகள் தோற்றவில்லை. இருட்டறையிலுள்ள எழில்மிக்க ஓவியத்தைக் காணக்கண்கள் மட்டும் இருந்தால் பயனில்லை. இருளைப்போக்கும் ஒளிவேண்டும். இனி, பலாப்பழத்தைச் சுவைத்து மகிழ அதனை முறையாக அறுத்துச்சுளை எடுத்துத்தருபவரின் உதவி வேண்டும். இவ்வாறே பழம்பெரும் இலக்கண, இலக்கியச் செல்வங்களைக் கற்று மகிழ்வதற்கு, தக்க உரையாசிரியர்கள் வேண்டும்.

கல்விக் கோயிலின் பெருவாயிலைத் திறந்து விட்டவர்கள் உரையாசிரியர்கள்

"யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்றஉயர்ந்த நோக்கத்தோடு உரையாசிரியர்கள் பணியாற்றியுள்ளனர். கல்விக் கோயிலின் பெருவாயிலைத் திறந்துவிட்ட சான்றோர்கள் தான் உரையாசிரியர்கள். இலக்கிய வரலாற்றில் உரைகளுக்கு மிகுந்த உயர் இடம் உண்டு. தமிழ்மொழிவளர்ச்சிக்கும், இலக்கிய இலக்கணப் பயிற்சிக்கும் உரைகள் இல்லாது இருக்குமேயானால் பழந்தமிழ் இலக்கிய இலக்கணங்கள் நமக்கு விளங்காமல் போயிருக்கும். நமக்கு கிடைத்துள்ள உரைகள் யாவும் புதையல் போன்றவையாகும்.

இலக்கியஉரைகள்:

நச்சினார்க்கினியர்உரைகள்

- பத்துப்பாட்டு
- கலித்தொகை
- சீவகசிந்தாமணி

இந்தநூல்களின் உரைகள், பிற்காலத்தவர் சங்கஇலக்கியங்களுக்கு உரைகாணுவதற்குப் பெரிதும் பயன்பட்டன. இந்த உரைகள் மூலம் சங்க இலக்கியத்தில் தமிழர்களின் வாழ்வையும், நாகரிகப் பண்பாடுகளையும் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்கள். தமிழர்களின் பழக்கவழக்கங்கள், தொழில் முறைகள், உணவுகளை உற்பத்தி செய்யும் முறைகள், இறை வழிபாடு இவை அனைத்தும் தெளிவான

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

உரைகள் மூலமே நாம் தெரிந்து கொள்ள முடிகிறது. மன்னர்களின் போர்ச் சிறப்புகள், கொடைப்பண்புகள் புலவர்களின்கவியாற்றல் பெண்களின் பெருமைகள் இவைகள் அனைத்தும் சங்க இலக்கிய உரைகள் மூலம் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.

முல்லைப் பாட்டிற்கு நச்சினார்க்கினியர் உரை கூறும் கருத்துக்கள்

பத்துப்பாட்டு வரிசையில் ஐந்தாவதாக வைக்கப்பட்டுள்ள முல்லைப்பாட்டு நூல் 103 அடிகளைக் கொண்டபாடல். இதன் ஆசிரியர் நப்பூதனார், நப்பூதனார் இயற்றிய பாடல்களுக்கு நச்சினார்க்கினியர் தெளிவான உரைகள் மூலம் தமிழ்மொழியைச் செழுமையாக்கியுள்ளார். போருக்குச் சென்ற தலைவன் தான் மீண்டும் கார்காலத்து வக்கத்தில் திரும்புவதாக அறிவித்துச்செல்ல, அவன்வரவை எதிர்நோக்கித் தலைவியும், தலைவியின் நினைவாகப் போர்முனையிலிருந்த தலைவனும் வருத்தமுற்று, பின் மீண்டும் இனணவதைச் சொல்கிறது முல்லைப்பாட்டு உரைநூல்.

கார்காலத்தின் இயற்கை, தலைவியின்தனிமை உணர்வு, போர்க்களத்தின் சூழல் ஆகியன செம்மையாக விவரிக்கப்படுவதாகத் தமிழறிஞர்களின் பாராட்டைப்பெரும் இலக்கியம் முல்லைப்பாட்டு. எட்டுத்தொகையில் கலித்தொகைநூலுக்கு நச்சினார்க்கினியர் உரைகூறும் கருத்துக்கள்: களிற்றையும் அடக்கும் ஆற்றல் இசைக்கு உண்டு என்ற உண்மையும், நீராடல் பற்றிய செய்தியும், மக்களின் நல்வாழ்விற்கான நெறிகளும் இவற்றில் விளக்கப் பட்டுள்ளன. மடலேறுதல், பொருந்தாக்காதல், ஒருதலைக்காமம் ஆகியன பற்றி செய்திகள் அதிகம் உள்ளன. மக்கள் காமனை வழிபாடுசெய்தமைப் பற்றியும், ஐந்திணைகள் மூலம் தமிழக மக்களின் வாழ்வும் பண்பாடும் சிறப்பான உரையின் மூலமே நாம் அறிய முடிகிறது.

எட்டுத்தொகையில் குறுந்தொகை நூலில் பேராசிரியர் கூறும் உரைக்கருத்துக்கள்

தன்மகள் தன் காதற் கணவன் வீட்டில் எப்படியிருக்கின்றாள் என்பதைக் கண்டறியும் பொருட்டுச் சென்ற செவிலித்தாய் அங்கிருவரும் மிக்கநேயமுடையராய் வாழ்வது கண்டு தன்னுள்ளே மகிழ்ந்து சொல்லியதாக இதுபாடப் பட்டிருக்கின்றது." என் மகள் வற்றக்காய்ச்சின கட்டித்தயிரைப் பிசைந்த காந்தள் மலர் முகிழ் போற் சிவந்த மெல்லிய விரல்களால், நன்கு கழுவி வெண்மையான உயர்ந்த ஆடை சமையல் செய்யும் விரைவினால் இடுப்பினின்றும் அவிழ்ந்து கழல அதனைக் கைகழுவாமலே உடுத்திக்கொண்டு குவளைப்பூப்போன்ற மைதீட்டிய தன்கண்களிலே தாளிப்புச் செய்யும் புகைபட்டு மணக்கவும் அதனையும் பாராது, தான் துடுப்பினால் துழாவி மிக்க அன்பொடு சமைத்த சுவை மிகுந்த புளிப்பாகினைத் தன்கணவன் மிகவும் இனிதாயிருக்கின்றத்தென்றுச் சொல்லிக்கொண்டே உண்ணுதலைப் பார்த்து ஒளிமிகுந்த நெற்றியினையுடைய என்மகளின் முகம் பள்ளுக்குள்ளே நுப்பமாய் மகிழ்ச்சிஅடைந்தது" என்பது தான் உரையின் கருத்து. பாருங்கள்| இவ்வுரையில்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

இயற்கையழகும், இதன் கட்காட்டப்பட்டிருக்கும் மனவுணர்வின் இயல்பும் எவ்வளவு அருமையாக இருக்கின்றன! இவ்வாறு தமிழர்களின் பண்பாட்டுக்களை உரையாசிரியர் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார்கள் உரையாசிரியர்களால் மிகுதியாக மேற்கோள்காட்டப் பட்ட நூல் குறுந்தொகையே.

உலகப் பொதுமறையான திருக்குறள் உரைகள்

தமிழில் தோன்றிய நூல்களில் திருக்குறளுக்குப் பலவகையான சிறப்புகள் உண்டு. ஒருநூலுக்கு காலந்தோறும் உரைகள் தோன்றி வருவது அந்தநூலின் சிறப்பினையேக் குறிக்கும். திருக்குறளுக்கு எண்ணற்ற உரைகள் தோன்றியுள்ளன.

இதற்கு நேரடியாக உரை எழுதியோர் மட்டுமல்லாமல் இளங்கோவடிகள், சீத்தலைச்சாத்தனார், சேக்கிழார், கம்பர் போன்ற எண்ணற்ற புலவர்கள் தத்தம் நூல்களில் திருக்குறளை எடுத்தாண்டு விளக்கமும் எழுதியுள்ளனர். நீதிநூல்களை எழுதிய அனைத்துச்சான்றோர்களும் திருக்குறளுக்கு உரைவகுத்துள்ளனர் என்றே கூறலாம். மிகப்பலர் திருக்குறளுக்கு உரைஎழுதி இருந்தாலும் பரிமேலழகர் எழுதிய உரையே சிறப்பானதாகக் கருதப்படுகிறது.

பாலெல்லாம் நல் ஆவின்பாலா
பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்
நூல் ஆமோ? நூலிற்
பரித்தவுரை யெல்லாம் பரிமேலழகர்
தெரித்தவுரையாமோதெளி

என்ற தொண்டை மண்டல சதகச் செய்யுளால் இவரது உரையின் பெருமையை அறியலாம். சங்கத் தொகை நூலாம் பரிபாடலுக்கு பரிமேலழகர் ஓர் அரிய உரையை வகுத்துள்ளார். பத்துப்பாட்டு நூலான திருமுருகாற்றுப்படை நூலுக்கும் இவர் உரை எழுதியுள்ளார்.

உலக மக்களிடையே நன்கு பழகி அவர்களின் பேச்சு, பழக்கவழக்கங்கள், ஆகியவற்றை அப்படியே குறிப்பிடுகின்றார். ஓரிடத்தில்" குற்றமே இல்லாதவர் உலகத்து இன்மையில் " என்று கூறுவதிலிருந்து இவரது உலகியல் அறிவை அறியலாம். மானம் என்ற அதிகாரத்திற்கு உரை எழுதும்போது உடலின் நிலையின்மையும், மானத்தின் நிலைப்பேற்றையும் வலியுறுத்திக் கூறியுள்ளார். மக்கள் பதடி என்னும் குறளுக்கு "அறிவு என்னும் உள்ளீடு இன்மையின் பதடி என்றார்" என்பதாக விளக்குகிறார். "வேண்டாத அடைமொழிகளுக்கு இடம் தராமல் நேரிய முறையில் உரிய பொருளை விளக்கும் அளவிற்கே சொற்களை அளந்து பயன்படுத்துவார். செறிவு, நேர்மை ஆகிய பண்புகள்

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

அமையத்தமிழ் உரைநடையைக் கையாண்டவர் இவர்" என்று மு.வரதராசனார் பாராட்டியுள்ளார். பொருட்பாலிலுள்ள ஒவ்வொரு அதிகாரத்திலும் பரிமேலழகரின் அரசியலறிவு வெளிப்படுகிறது. இசைப்புலமை, மருத்துவஅறிவு, யோகா, திட்டநுட்பஅறிவு, இலக்கணஅறிவு, இலக்கியஅறிவு, சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் ஆகிய இவை அனைத்தும் ஒருங்கே பெற்றவர் பரிமேலழகர்.

பேராசிரியர்உரை

இவர் குறுந்தொகைக்கும் உரை எழுதியிருக்கிறார். கோவை நூல்களில் சிறப்புடையதாய், இராசாக்கோவை என்று கூறப்படும் மாணிக்கவாசகப் பெருமாள் அருளிச்செய்த திருக்கோவையாருக்கு இவர் அழகியதோர் உரையினைச் செய்துள்ளார். இதனால் இவரைச் சைவர் என்பர். இவர் வறுமை என்பதற்குப் "போகம் துய்க்கப் பெறாத பற்றுள்ளம்" என்று உரையெழுதிய பான்மை சிறப்புடையதாகும்.

அடியார்க்குநல்லார்உரை:

சிலப்பதிகாரம் முழுமைக்கும் அடியார்க்கு நல்லார் உரையெழுதியுள்ளார். எனினும்18 காதைகளுக்கான உரையே கிடைத்துள்ளது. வடமொழியிலும், தமிழிலும் புலமைமிக்கவர் இவர். அக்காலத்திலிருந்த இசைத்தமிழ், நாடகத்தமிழ் நூல்களைப் பற்றிய கருத்துக்களையெல்லாம் இவரது உரையில் தான் காண்கிறோம். இவரது உரைநடை சில இடங்களில் பாட்டிற்குரிய ஓசையுடன் காணப்படுகிறது. மேலைநாட்டுத்திறனாய் வாளரைப்போல அடியார்க்கு நல்லார்சிலம் பினைப் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்துள்ளார். தமது உரையுள் முந்நீர் என்பதற்கு முச்செயலைக் கொண்ட முந்நீர் என்று விளக்கம் தருகின்றார். மூன்று செய்கை யாவன மண்ணைப் படைத்தலும், மண்ணைக் காத்தலும் மண்ணை அழித்தலும் ஆகும் என்று கூறுமிடம் நயமிக்கதாகும் மருந்தும் நிழலுமெனப் பாவும் உரையும் பொருந்த எல்லாப் பொருளும் தெரிந்து நல் அமிர்தம் போன்ற உரையை வகுத்துள்ளார் என்பர் தமிழிசை மறுமலர்ச்சிக்கு உதவியது இவரது அரங்கேற்று காதை உரையேயாகும் காப்பிய அமைப்பு, நிகழ்ச்சி ஒருமைப்பாடு, காப்பிய மாந்தர் பண்புகள் செயல் நிகழும் கால எல்லை, இடம் கவி யுள்ளம் இவற்றை யெல்லாம் நுணுகி ஆராய்ந்து புலப் படுத்தியுள்ளார்.இவற்றால் அடியார்க்கு நல்லார் சிறந்த திறனாய் வாளராகத் திகழ்கிறார். சிலப்பதிகாரத்தின் முத்தமிழ்களையும் சிறப்பித்துக் கூறியதால் இவை முத்தமிழ் காப்பியம் என்று அழைக்கப்படுகிறது.

தமிழர்களின் பண்பாடு

தமிழ் கலாச்சாரம், தமிழ் மக்களின் பண்பாடு ஆகும். தமிழ் கலாச்சாரம் இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் உலகம் முழுவதும் தமிழர்கள் வாழ்க்கை வழிகளில் வேரூன்றி உள்ளது. தமிழ் கலாச்சாரம் மொழி, இலக்கியம், இசை, நடனம் , நாட்டுப்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

புறக்கலை, தற்காப்புகலை, ஓவியம், சிற்பம், கட்டிடக்கலை, சிற்பம், விளையாட்டு |ஊடகங்கள், நகைச்சுவை, உணவு, ஆடைகள் , திருவிழாக்கள், தத்துவம், மதங்கள், மரபுகள், சடங்குகள், நிறுவனங்கள், அறிவியலை வெளிப் படுத்தப் படுகிறத் தொழில் நுட்பம் இவை அனைத்தும் தமிழகளின் பண்பாடு களை வெளிப் படுத்தக் கூடிய நிகழ்வுகள் ஆகும்.

தமிழர் பண்பாடு தமிழ் மொழியின் ஊடகமாகவும், தமிழர் தாயகப் பிணைப்பின் ஊடகமாகவும், தமிழர் மரபுகள், வரலாறு, விழுமியங்கள், கலைகள், சமூகப் பொருளாதாரம், இவை அனைத்தும் தனித்துவப் பண்பாட்டுக் கூறுகளைக் குறிக்கும். இக்கருத்துக்களை சங்க இலக்கிய உரைகள் மூலமாகத் தெரிந்து கொள்ள முடிகிறது.

தமிழர் பண் பாடு பலகாலமாகப் பேணப் பட்ட, திருத்தப் பட்ட, மேம்படுத்தப்பட்ட அம்சங்களைக் குறித்து நின்றாலும், அது தொடர் மாற்றத்துக்குட்பட்டு நிற்கும் ஒரு இயங்கியல் பண்பாடேயாகும். பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம், நாகரிகம் என்பது திருந்திய வாழ்க்கை. "முன்னது அகக்கூறு" "பின்னது புறக் கூறு", நாகரிகம் சேர்ந்த பண்பாடும் உண்டு, நாகரிகம் இல்லாத பண்பாடும் உண்டு, தமிழர் பண்பாடு இவ்விரண்டிலும் மெச்சத்தக் கது என்று பாவாணர் கூறுகிறார். பல சந்தர்ப்பங்களில் தமிழர் பண்பாடு இது,

தமிழர் பண்பாடு இது வல்ல என்று தெளிவாக வரையறுப்பது கடினமாகினும் ஒரு அறிவு சார் மதிப்பீடு செய்ய முடியும். எடுத்துக் காட்டாக யூத சமயமோ, சீக்கிய சமயமோ தமிழர் பண்பாட்டு வட்டத்துக்குள் வரமாட்டா. மாறாகச் சைவ சமயத்துக்குத் தமிழர் பண்பாட்டுடன் ஒரு இறுகிய தொடர்பு உண்டு. இந்த பண்பாடு சார்ந்த அனைத்துமே சங்க இலக்கியத்தில் மேற் கணக்கு நூல்கள், கீழ் கணக்கு நூல்களின் உரைகள் மூலமாக தெளிவாக வெளிக் கொணரப் படுகிறது.

உரையாசிரியர்களின் சிறப்புகள்

"உரையாசிரியர்கள் பண்டைத் தமிழ் நூல்களுக்குச் செய்த ஒரு பெருந்தொண்டு மூலச் செம்மையாகும்" என்பார் வ.சு.ப.மாணிக்கம். உரைகள் தோன்றியிராவிட்டால் திருக்குறள் மூலம் பல மூலங்களாயிருக்கும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இலக்கண நூல்களுக்கு உரை எழுதிய ஆசிரியர்கள் விளக்கங்களில் பொருள் தெளிவைத் தருகிறார்கள். குறள் போன்ற இலக்கிய நூல்களின் உரைகளிலோ பொருள் தெளிவோடு நயங்களும் பெருகிக் காணப்படுகின்றன. திருக்குறளுக்கு உரை எழுதிய உரையாசிரியர்கள் வள்ளுவர் மேல் மிகுந்த மதிப்பு வைத்திருந்தனர். காலிங்கர்" வள்ளுவக் கடவுள்" என்று சொன்னார். பரிமேலழகர் "தெய்வப் புலமைத் திருவள்ளுவர்" என்று உயர்த்திக் குறிப்பிடுகிறார். சிவப்பிரகாசர்" இறைவன் திருவடி யோடி ஒத்த மதிப்பு" திருக் குறளுக் கு த் தந்தார்.

முடிவுரை

இவ்வளவு சிறப்பியல்புகளைத் தன்னிடம் கொண்டுள்ளமையினாலேயே பல நூற்றாண்டு களைக் கடந்தும், வாழும் கலைச்செல்வமாக " உரையாசிரியர்களின் உரை மூலம் தமிழர் வாழ்வும் பண்பாடும் ஒளிர் விட்டு பரந்து பரிணமிக்கின்றது.

துணைநூல் பட்டியல்

[1] பக்தவத்சல பாரதி. மானிடவியல் கோட்பாடுகள்– புதுவை, வல்லினம் பதிப்பகம்-2005, பக்கம் 13, 14

[2] முனைவர் அ.தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ஐந்திணைப் பதிப்பகம், 2019, சென்னை-40, பக்கம். 1, 2, 34, 36, 54, 55, 58,101,

[3] சிலப்பதிகாரம் மூலமும் உரையும், புலியூர்க்கேசிகன், சாரதா பதிப்பகம்- டிசம்பர் 2010, இராயப்பேட்டை சென்னை – 14, பக்கம் 11.

[4] பரிபாடல் மூலமும் உரையும். புலியூர்க் கேசிகன், சாரதா பதிப்பகம் 2009, சென்னை 14, பக்கம் 102,103

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள் :

இராஜேந்திரன் & பாக்கிய முத்து. "உரையாசிரியர்கள் காட்டும் தமிழர்வாழ்வும் பண்பாடும்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 1, *திசம்பர்* 2020, பக். 32-38. டிஓஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.006**

Cite this Article in English (*MLA 8 Style*) as:

Rajendran & Packiamuth. "Tamil Life and Culture As Portrayed in Prose Writings." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020, pp. 32-38. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.006**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

தொன்னூல் விளக்கத்தில் வீரமாமுனிவரின் உரைத்திறன்
Textual Dexterity of Veeramamunivar in Thonnool Vilakkam

முனைவர் க.உமாராணி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, சீதாலட்சுமி இராமசுவாமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி.
Dr K.Umarani, Assistant Professor, Department of Tamil, Seethalakshmi Ramaswami College, Tiruchirapalli.
ORCiD: https://orcid.org/0000-0002-1611-8527
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.007

Abstract

Veeramamunivar was an Italian who came to India for religious propaganda in the 17th century. In Tamil Nadu, he started his religious work and he also learnt Tamil language and had contributed to Tamil Literature in a lofty manner. Nearly, twenty seven books were produced by him. After learning Tamil, he wrote a Tamil Grammar book named as 'Tonnul vilakkam'. In this grammar book, he explains the structure of Tamil language in Ezhuthu, Sol, Porul, Yappu and Ani. His work renders an excellent service to the second language learners who learn Tamil language as a second language. Classical Tamil and Spoken Tamil features are mentioned in Senthamizh Ilakkanam and Kodunthamizh Ilakkanam. His book 'Tonnul vilakkam' in Tamil Language explains the contents of the Suththiram with full insight to learn Tamil Language with flawless grammar. This article shows the textual ability established by Veeramamunivar.

Keywords: Textual Dexterity, Veeramamunivar, Thonnool Vilakkam

இலக்கண, இலக்கியங்களின் பொருள் நயத்தை உணர்ந்து கொள்வதற்கும், தமிழ்மொழியின் நயத்தைச் சுவைப்பதற்கும் உரைகள் துணைபுரிகின்றன. தமிழ்மொழியில் எழுதப்பட்ட இலக்கண, இலக்கியங்களின் பொருட்சிறப்பை உணர்ந்து கொள்வதற்கும், ஆய்வுத்தடங்களை உருவாக்கிக்கொள்வதற்கும் அதன் உரைகள் துணைபுரிகின்றன. வீரமாமுனிவரின் ஐந்திலக்கண நூலான தொன்னூல்விளக்கத்தில் அவர்தம் உரைத்திறனை இவண் காண்போம். **"பாட்டு, உரை, நூலே, வாய்மொழி, பிசியே, அங்கதம், முதுசொல்" (தொல்.1336)** என ஏழு வகை இலக்கிய வகைகளைத் தொல்காப்பியம் யாப்பின் வகைகள் எனச் சுட்டுகின்றது.

தொல்காப்பியம் கூறும் உரை வகைகள்

ஒல்காப்புகழ் "தொல்காப்பியம்" உரையின் வகைகளை நான்காகக் குறிப்பிடுகின்றது.

பாட்டிடை வைத்த குறிப்பினானும்,

பாவின்றி எழுந்த கிளவியானும்,

பொருளொடு புணராப் பொய்ம்மொழியானும்,

பொருளொடு புணர்ந்த நகைமொழியானும்,

உரை வகை நடையே நான்கு என மொழிப. (தொல்.1429)

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

என நவில்கின்றது "தொல்காப்பியம்". அதாவது பாட்டினிடையே வரும் பொருட்குறிப்புகள், பாவாக நடைபெறாமல் செய்யுள் தொடர்களால் வருகின்ற குறிப்புகள், பூப்போன்ற பொருள் கனவு காண்பதாகக் கூறுவது போன்ற பொய்ம்மொழியாக வருபவை, பொளொடு பொருந்திய நகைமொழியாக வருபவை என்ற நான்கு நிலைகளில் உரையானது வரப்பெறும் என்று வகைப்படுத்துகிறார் தொல்காப்பியர். "சிலப்பதிகாரம்" உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக அமைந்துள்ளது. செய்யுளுக்கு விளக்கமாக செய்யுள் தொடர்களாலேயே அமைக்கப்படுகின்ற குறிப்புகள் இளம்பூரணர், சேனாவரையர், கல்லாடனார் போன்றோரின் உரை விளக்கத்தில் காணமுடிகின்றது. மேலும் செய்யுளுக்குரிய பொருளை மிகைப்படுத்திக் கூறக்கூடிய நிலையிலும், நகைச்சுவைப்படுத்திக் கூறக்கூடிய நிலையிலும் உரையானது அமைந்திருக்கும்.

வீரமாமுனிவரின் மொழி ஆர்வம்

இத்தாலி நாட்டில் பிறந்து சமயப்பணிக்காக இந்தியாவிற்கு வந்த கான்ஸ்டன்டைன் யுசேபியுல் ஜோசப் பெஸ்கி என்ற இயற்பெயர் கொண்ட வீரமாமுனிவர் தமிழ்மொழியைப் பயின்றதோடு மட்டுமல்லாமல் ஏறத்தாழ இருபத்தேழிற்கும் மேற்பட்ட படைப்புகளைப் படைத்தளித்துள்ளார். இவரின் மொழி ஆர்வம் தமிழ்மொழியில் ஐந்திலக்கண நூலை இயற்றுமளவிற்கு சிறந்து விளங்கியிருந்தது. அயல்நாட்டவர்கள் தமிழ்மொழியி;ன் கட்டமைப்பை, இலக்கண பாரம்பரியத்தை, இலக்கிய நயத்தை உணர்ந்து கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடும், சமயப்பணிக்கு மொழியறிவு துணை செய்யும் என்ற குறிக்கோளோடு கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம் என்ற இரண்டு நூல்களை எழுதினார். கொடுந்தமிழ் இலக்கணம் வீரமாமுனிவரால் 1728-ஆம் ஆண்டு இலத்தீனில் எழுதப்பட்டது. இதன் ஆங்கில மொழிபெயர்ப்பு ஜார்ஜ் வில்லியம் மஹோான் என்பவரால் A Grammar of the Tamil Language called 'கொடுந்தமிழ்' என்னும் தலைப்பில் 1848-இல் வெளிவந்தது. கொடுந்தமிழ் ளுஎன்பது கொச்சை வழக்குகளைக் குறிக்காமல் பேச்சுத்தகுமொழி (Standard Language) பொது கிளை மொழி என்ற பொருளைச் சுட்டுகிறது.[1]

1.செ.வை.சண்முக், கிறித்துவ அறிஞர்களின் இலக்கணப்பணிகள், பக்.68. செந்தமிழ் இலக்கணம் 1730-இல் எழுதி முடிக்கப்பட்டு 1822-இல் ஆங்கில மொழிபெயர்ப்புடன் அச்சிடப்பட்டது. ஆங்கில பதிப்பில் **'A Grammar of the High Dialect of the Tamil Language termed as Shentamil to which is added an introduction to Poetry'** என்ற தலைப்பு காணப்படுகிறது. மேலும் தமிழ்மொழியின் எழுத்து**(Letters)**, சொல்; **(Words)**, பொருள் **(Porul)**, யாப்பு (**Prosody**), அணி **(Rhetorical Embellishment)** என்ற ஐந்து இலக்கணங்களையும் விளக்கும் விதமாக தொன்னூல் விளக்கம் எனும் நூலினைத் தமிழிலேயே எழுதி தமிழ்மொழிக்கு தனது பங்களிப்பை நல்கியுள்ளார் முனிவர்.

வீரமாமுனிவரும் உரைநடையும்

உரையாசிரியர் காலத்துக்குப் பின் தனிநூல் இயற்றித் தமிழ் உரைநடைக்கு வளமை சேர்த்தவர் வீரமாமுனிவர். இவரின் தமிழ் படைப்புகளில் உரைநடை நூல்களான 'வேதவிளக்கம்', 'லுத்தேர் இனத்தியல்பு'; 'வேதியர் ஒழுக்கம்' பரமார்த்த குரு கதை, வாமன்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

சரித்திரம், திருச்சபைக் கணிதம், திருக்கடையூர் திருச்சபைக் கெழுதிய நிருபம், திருக்குறள் உரை என்பவை குறிப்பிடத்தக்கவை.

தொன்னூல் விளக்கம்

சங்க காலத்தில் கபிலரால் தமிழ் அறிவுறுத்தப்பட்ட ஆரிய அரசன் பிரகதத்தன் தமிழ்ப்பாட்டு எழுதும் அளவிற்குத் தக்க புலமைபெற்றான் என வரலாறு சுட்டுகிறது. இவ்வாறே பிற்காலத்தும் வெளிநாட்டவர்கள் தமிழகம் வந்து தமிழினைக் கற்றுப் பாடிச் சிறந்து விளங்கினார்கள். மேலும் தமிழுக்கு இலக்கணம் செய்யவும் முற்பட்டு அத்துறையிலும் புகழ்பெற்றார்கள். இத்தகைய தமிழ்த்தொண்டுகளில் முன்னின்ற கிறித்தவர்களில் போற்றுவதற்கு உரிய புலமையர் வீரமாமுனிவர். இவர் இயற்றிய தொன்னூல் விளக்கம் ஐந்திலக்கணமும் கூறுகிறது. **'அருந்தமிழ் இலக்கணம் ஐந்தையும் விரித்து விளக்கினன் வீரமாமுனியே'** என்பது தொன்னூல் விளக்கப் பாயிரம். **தொன்னூல் பொன்னூலாக இலங்குகிறது என்பார் சேதுப்பிள்ளை[2].** (சோ.இளவரசு இலக்கண வரலாறு பக்.197)

வீரமாமுனிவரின் தொன்னூல்விளக்கம் பவணந்தி முனிவரின் நன்னூலைப் பின்பற்றி எழுதப்பட்டதாகக் கருதப்படினும் தமிழின் முழுமுதல் இலக்கண நூலாம் ஒல்காப் புகழ் தொல்காப்பியத்தின் தாக்கம் தொன்னூல்விளக்கத்தில் பெரிதும் காணப்படுகிறது. முன்னோர் மொழிபொருளைப் பொன்னேபோல் போற்றிய வித்தகராகவே வீரமாமுனிவர் திகழ்கின்றார். தமிழகத்தில் வாழ்ந்த புலவர்களுள் பல்துறை வித்தகராகத் திகழ்ந்த வீரமாமுனிவரின் இலக்கண அறிவு, இலக்கியப் புலமை, மொழியியல் உணர்வு, பக்தி இலக்கிய ஆற்றல், ஆய்வியற் சிந்தனை, பல்கலை அறிவு, பண்பாட்டில் தோய்வு எனப் பலவகைத் திறமைகளும் போற்றுதற்குரியன.

தொல்காப்பியத்தை மேற்கோளாகக் கையாளுதல்

தொன்னூல்விளக்கத்தில் வீரமாமுனிவர் தொல்காப்பிய மேற்கோள்களைக் கையாண்டுள்ள திறம் முனிவரின் உரைவிளக்கத்தை மேலும் செம்மைப்படுத்துகின்றது. தான் கூற வந்த சூத்திரத்தின் பொருளை விரித்துரைப்பதற்கும், விளக்கியுரைப்பதற்கும், ஒப்புமைப்படுத்துவதற்கும் இம்மேற்கோள்கள் துணைபுரிகின்றன. தொன்னூல்விளக்கச் சொல்லதிகாரத்தில் 73 இடங்களிலும், யாப்பதிகாரத்தில் 26 இடங்களிலும், அணியதிகாரத்தில் 12 இடங்களிலும் தொல்காப்பிய மேற்கோள்கள் முனிவரால் கையாளப்பெற்றுள்ளன. சான்றாக,

தொன்னூல்விளக்கச் சொல்லதிகாரத்தில் உயிரின் குணமும், உயிரின் தொழிற்குணமும் பற்றி முனிவர் விளக்கம் கூறும்பொழுது, தொல்காப்பிய நூற்பாவினை மேற்கோள் காட்டியிருக்கிறார். அதாவது, வீரமாமுனிவர் உயிரின் குணமென்றும், உயிரின் தொழிற்குணமென்றும்,

அறிவரு ளாசை யச்ச மான
நிறைபொறை யோர்ப்புக் கடைப்பிடி மைய
னினைவு வெறுப்புவப் பிரக்கநாண் வெகுளி
துனிவழுக் காறன் பெளிமை யெய்த்த
றுன்ப மின்ப மிளமை மூப்பிகல்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

வென்றி பொச்சாப் பூக்க மறமத
மறவியினைய வுடல்கொ ளுயில்க் குணந்
துய்த்தறுஞ்ச றெழுத லணித லுய்த்தலாதி
யுடலுயிர்த் தொழிற் குணம் (தொ.வி.139)

என்று வகைப்படுத்துகின்றார். அறிவு, அருள், ஆசை, அச்சம், மானம், நிறை, பொறை, ஓர்ப்பு, கடைப்பிடி, மையல், நினைவு, வெறுப்பு, உவப்பு, இரக்கம், நாணம், வெகுளி, துணிவு, அழுக்காறு, அன்பு, எளிமை, எய்த்தல், துன்பம், இன்பம், இளைமை, மூப்பு, இகல், வென்றி, பொச்சாப்பு, ஊக்கம், மறம், மதம், மறதி என்கிற முப்பத்திரண்டும் உடம்போடு கூடிய உயிரினுடைய குணங்களாகும் என்றும், துய்த்தல், துஞ்சல், தொழுதல், அணிதல், உய்த்தல் என்கிற ஐந்தும் உடம்போடு கூடிய உயிரினுடைய தொழிற்குணங்களாகும் என விரித்துரைக்கும் வீரமாமுனிவர், உடம்போடு கூடிய உயிரின் தொழிற்குணங்கள் என்றிருக்கையில் உடலிலா உயிரும் உள்ளதென்பதை, தொல்காப்பிய நூற்பாவினை மேற்கோளாக எடுத்துக்காட்டி விளக்குகின்றார்.

ஒன்றறிவதுவே யுற்றறிவதுவே
யிரண்டறிவதுவே யதனொடு நாவே
மூன்றறிவதுவே றவற்றொடு மூக்கே
நான்கறிவதுவே யவற்றொடு கண்ணே
ஐந்தறிவதுவே யவற்றொடு செவியே
ஆறறிவதுவே யவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே. (தொல்.1526)

இவ்வாறு தொல்காப்பியம் கூறும் உடலிலா உயிர்களின் நிலைப்பாட்டை கூறியிருக்கின்றார் முரளும் ஈரறிவினவே, பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே, சிதலும் எறும்பும் மூவறிவினவே, பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே, நண்டும் தும்பியும் நான்கறிவினவே, பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே, மாவு மாக்களும் ஐயறிவினவே, பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே, மக்கள் தாமே ஆறறிவுயிரே, பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே, என்று உயிர்களின் வகைப்பாட்டை தொல்காப்பியத்தின் வழி நிறுவுகின்றார்.

நன்னூல் மேற்கோள்கள்

நன்னூல் மேற்கோள்களை தொன்னூல் விளக்கத்தில் ஆங்காங்கே கையாண்டிருப்பினும் நன்னூலில் உள்ளவாறே ஐந்திடங்களில் பயன்படுத்தியுள்ளார் வீரமாமுனிவர். யாப்பதிகாரத்தினை விளக்கிக் கூறத் தொடங்கும் முன் கடவுள் வணக்கமாக சிறப்புப்பாயிரத்தை,

யாப்புற நலமெலா மிணைந்தவோர் சட்குணன்
காப்புற வடிதொழீஇக் காட்டுதும் யாப்பே. (தொ.வி.201)

என்று கூறிய பின்னர், உரைவிளக்கத்தில் நன்னூலார் உரைத்த பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் ஆகியவற்றின் இலக்கணத்தை மேற்கோளாகக் காட்டி யாப்பதிகாரத்தைத் தொடங்குகிறார் முனிவர். உரையில், எந்நூரைப்பினும் அந்நூற்கு பாயிரமுரைத்தே

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

நூலுரைக்கப்படுவது மரபு எனத்தொடங்கும் முனிவர் நன்னூலில் இடம்பெற்றுள்ள நூற்பாக்களான,

மாடக்குச் சித்திரமு மாநகர்க்குக் கோபுரமு
மாடமைத்தோ ணல்லார்க் கணியும்போல் - நாடிமுன்
ஐதுரையா நின்ற வணிந்துரையை யெந்நூற்கும்
பெய்துரைய வைத்தார் பெரிது. (நன்.55)

யாப்பிலக்கணத்தை விளக்கிக் கூறும் இயலின் முதல் நூற்பாவில் இவ்வாறு நன்னூல் மேற்கோளினை எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார் முனிவர்.

திருக்குறள் மேற்கோள்

தமிழை இரண்டாம் மொழியாகக் கற்றிருப்பினும் மிகுந்த ஆர்வத்துடன் கற்று உரைவிளக்கத்தோடு தமிழ் இலக்கணம் படைத்துள்ள முனிவரின் மொழியார்வம் போற்றுதற்குரியது. சூத்திரத்திற்கான பொருளைக் கூறும் பொழுது இலக்கண, இலக்கிய மேற்கோள்களைக் கையாண்டுள்ள முனிவர் திருக்குறள் மேற்கோளை அதிக இடங்களில் பயன்படுத்தியுள்ளார். எடுத்துக்காட்டாக,

சீரிலக்கணம் கூறும் நூற்பாவில் நேரசை, நிரையசை இரண்டும் தனித்தும் தொடர்ந்தும் வந்தால் அது சீர் எனப்படும் என்றும் சீரானது அசைச்சீர், இயற்சீர், உரிச்சீர், பொதுச்சீர் என நால்வகைப்படும் என்றும் கூறும் முனிவர் இவற்றுள் அசைச்சீர் நேரசை, நிரையசை என இருவகைப்படும், இவை நாள், மலர் என்ற வாய்ப்பாட்டில் முடியுமென்பதை குறள்வெண்பாவின் மூலம் சான்று காட்டியிருக்கின்றார்.

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார் (குறள்.3)
கற்றதனா லாயபயனென் கொல் வாலறிவன்
நற்றார் தொழார் எனின் (குறள்.2)

இக்குறட்பாக்களில் 'வார்' 'எனின்' என்பவை முறையே வார்- நெடில் ஒற்று நேரசை, எனின்- குறிலிணை ஒற்று நிரையசையாக வந்துள்ளன என்பதை உரைவிளக்கத்தில் கூறுகின்றார்.

தண்டியலங்கார மேற்கோள்

தமிழிற்கே உரியது என்று சொல்லக்கூடிய தனியானதோர் அணியிலக்கணம் தமிழில் இல்லையென்றே சொல்ல வேண்டும். அணியிலக்கணம் என்று தமிழில் வழங்கி வரும் தண்டியலங்காரம் வடமொழி அலங்கார நூலான 'காவ்யா தர்சம்' என்னும் நூலின் மொழிபெயர்ப்பாகும்.[3] 3.கொ.இராமலிங்கத் தம்பிரான், தண்டியலங்காரம். பதிப்புரை பக்.87. அணிகளில் சிறந்தது உவமை அணியே என்பது தமிழறிஞர்களின் கருத்தாகும். தொன்னூல்விளக்கத்தில் அணியதிகாரத்தில் உவமையணியை விளக்கிக் கூறும்போது தண்டியலங்காரத்தை மேற்கோளாகக் காட்டியிருக்கின்றார் முனிவர். இருபொருட்கள் தம்முள் குணத்தாலும், தொழிலாலும், பயனாலும் ஒத்தனவாகக் காட்டுவது உவமை என்று கூறும் முனிவர் இவற்றுள் ஒரு பொருட்கு ஒரு பொருள் உவமையும், ஒரு பொருட்குப் பலபொருள் உவமையும், பலபொருட்கு ஒரு பொருள் உவமையும், பல பொருட்குப் பல பொருள் உவமையும் வருமென்று உரை விளக்கத்தில் கூறுகின்றார்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

"பண்புவமை:பவளத்தன்னசெவ்வாய், தொழிலுவமை: அரிமாவன்ன போர்முகத்துப் பகை பயனுவமை: மாரியன்ன பொழிவண் கையான்" என்று விளக்கம் தந்துள்ள முனிவர் தண்டியலங்காரத்தில்,

பண்புந் தொழிலும் பயனும் என்றிவற்றின்
ஒன்றும் பலவும் பொருளொடு புணர்ந்த
ஒப்புமை தோன்றச் செப்புவ துவமை. (தண்டி 30)

என்று நூற்பாவினை மேற்கோள் காட்டியிருக்கின்றார். உரையினைச் செம்மைப்படுத்துவதற்கு வீரமாமுனிவர் கையாண்டுள்ள மேற்கோள் திறன் சிறப்பிற்குரியது.

தொகுப்புரை

அயல்நாட்டவரான வீரமாமுனிவர் சமயப்பணியாற்றும் பொருட்டு இந்தியாவிற்கு வந்து சமயப்பணியோடு சமுதாயப்பணியும் இலக்கண, இலக்கியப் பணியும் செய்திருப்பது தமிழ் மொழி இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாகும். பாதிரிமார்கள் தமிழ் மொழியினைக் கற்கவும், பேசவும் செந்தமிழ், கொடுந்தமிழ் இலக்கணங்களை இலத்தீன் மொழியில் எழுதியிருந்தார். ஆனால் தமிழிலேயே இயற்றப்பட்ட நூல் ஐந்திலக்கணத் தொன்னூல்விளக்கம் ஆகும். தொன்னூல்விளக்கம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்திலக்கணங்களையும் கூறுகின்றது.இதில் மரபிலக்கணங்களின் நூற்பாக்கள் நயமுடன் உரைவிளக்கத்தில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. வீரமாமுனிவர் தாம் இயற்றிய தொன்னூல்விளக்கத்திற்கு தாமே உரையெழுதிய திறம் சிறப்பிற்குரியது. சூத்திரத்திற்கான பொருளைத் தெளிவாகவும், விளக்கமாகவும் மேற்கோள்களுடனும் விளக்கியிருப்பது சாலச் சிறப்புடையதாகும். சூத்திரங்களுக்கான விளக்கத்தைப் பல்வகை இலக்கண, இலக்கியங்களிலிருந்து மேற்கோள் காட்டியிருக்கின்றார். வீரமாமுனிவரின் உரைத்திறமும், நயமும் இலக்கண உரைக்கான ஆய்வுத்தளங்களை உருவாக்கித்தருகின்றது.

துணைநூற்பட்டியல்

[1] இத்தாலி நாட்டு வித்தகத் தமிழர் - அமுதன் அடிகள, விடியல் பதிப்பகம், திருச்சி. 1986.
[2] இலக்கண வரலாறு – சோ.இளவரசு. மெய்யப்பன் பதிப்பம், சிதம்பரம். 2003.
[3] ஐந்திலக்கணத் தொன்னூல்விளக்கம்- திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.1984.
[4] கிறித்துவ அறிஞர்களின் இலக்கணப்பணி – செ.வை.சண்முகம், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. 1993
[5] கிறிஸ்தவத் தமிழ்த் தொண்டர்-ரா.பி.சேதுப்பிள்ளை, சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை.1981
[6].தண்டியலங்காரம்-.கொ.இராமலிங்கத்தம்பிரான், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை. 1938.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

உமாராணி. "தொன்னூல் விளக்கத்தில் வீரமாமுனிவரின் உரைத்திறன்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 1, *திசம்பர்* 2020, பக். 39-45. டிஓஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.007**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Umarani. "Textual Dexterity of Veeramamunivar in Thonnool Vilakkam." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020, pp. 39-45. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.007**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

சிலப்பதிகார கானல்வரியில் உரையாசிரியர் ச.வே.சுவின் திறனாய்வுப்பார்வை

Commentator Sa.Ve.Su'S Investigative View on Kanal Vari Poem of *Silapathigaram*

ச.உஷா, முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, சண்முகாதொழிற்சாலை கலை (ம) அறிவியல் கல்லூரி, திருவண்ணாமலை.
C.Usha, Research Scholar, Tamil Department, Shanmuga Industries Arts and Science College Thiruvannamalai.
ORCiD: https://orcid.org/0000-0001-6728-1490
முனைவர் க. ரமேசு தமிழ்த்துறை, சண்முகாதொழிற்சாலை கலை (ம) அறிவியல்கல்லூரி, திருவண்ணாமலை.
Dr.K.Ramesh, Tamil Department, Shanmuga Industries Arts and Science College Thiruvannamalai.
ORCiD: https://orcid.org/0000-0001-6373-9855
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.008

Abstract

This research article is based on the research perspective of the Tamil Veteran Scholar Sa.Ve.Subramaniyam and his explanation on the lives of Kovalan, Kannaki and Madhavi in concern with the lifestyle and love of the Sangam period. It gives a basic understanding and curiosity to the reader while viewing through the writings of Sa.Ve.Su; it also creates a sense that the life situations are brought in front of the reader because of his erudite discussions on the classic epic "Silapathigaram".

Keywords: *"Silapathigaram"*, Kanalvari, Sa.Ve.Su, Metaphor, Kovalan, Kannaki,

நோக்குக் களம்

சா.வே.சு அவர்களின் ஆய்வு பார்வையினால் எழுதப்பட்ட இவ்வுரையானது கோவலன் கண்ணகி மாதவி இவர்களில் வாழ்க்கை முறை மற்றும் அன்பு ஆகியவற்றை முழுமையான புரிதலை ஏற்படுத்தக் கூடியதாக அமைகிறது. மேலும் வாசகரின் சிந்தனைத் திறனை தூண்டுவதாகவும் சா.வே.சு அவர்களின் உரையானது அமைகிறது என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தொடக்கமாக

ஐம்பெருங்காப்பியங்களுள்முதல்காப்பியமாகவும்முத்தமிழ்காப்பியமாகவும்அமைந்துள்ளதுசிலப்பதிகாரம் ஆகும். இந்நூலுக்கு பலரும் பதவுரை, பொழிப்புரை, விளக்கவுரைகளை எழுதியுள்ளனர் ச.வே.சு அவர்கள், அனைவரும் ஆய்வுநோக்குடன் எளிமையாக புரிந்து கொள்ளும் வகையில் தெளிவுரையாக ஐம்பெருங்காப்பியங்களுக்கும் உரை அமைத்துள்ளார். அவற்றுள் சிலப்பதிகாரத்தில் அமைந்துள்ள கானல்வரியில், ச.வே.சு அவர்களின் உரைத் திறமாகியத்திறனாய்வுப் பார்வையானது எவ்வாறெல்லாம் வெளிப்பட்டுள்ளது என்பதனை இக்கட்டுரைவழி ஆய்வோம்.

சிலப்பதிகாரம் – கானல்வரி

சிலம்பினை முதன்மையாகக் கொண்டு அமைப்பட்டதனால் இந்நூல் சிலப்பதிகாரம் எனப்பெயர் பெற்றது. சிலம்பு என்ற சொல்லானது தொல்காப்பியத்தில் இல்லை. இருப்பினும்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

சங்க இலக்கியத்தில் மிகுதியாக இருப்பதனை உரையாசிரியர் நூல் அறிமுகத்திலேயே குறிப்பிடுகின்றார். இவ்விடம்கொண்டேஇவரின்ஆய்வுப்பார்வையினைஅறியமுடிகின்றது.

இந்நூலினை இயற்றியவர் இளங்கோவடிகள் ஆவார். சிலப்பதிகாரத்திற்கு இரண்டு பழமையான உரைகள் உள்ளன. 1. அரும்பதஉரை (பதினோராம்நூற்றாண்டு) 2. அடியார்க்குநல்லார்உரை (தமிழகத்தில்வாழ்ந்தவர்) இச்செய்திகளையும் நூல் அறிமுகம் கொண்டே அறியாலம். மேலும் சிலப்பதிகாரமானது 30 காதைகளையும் மூன்று காண்டப் பகுப்புகளையும் கொண்டுள்ளது. அவற்றுள் புகார்க்காண்டத்தின் ஏழாவதுகாதையாக அமைந்துப்பதே கானல்வரி என்னும்பகுதியாகும். கோவலனும் மாதவியும் கடற்கரைச் சோலையில் பாடும் பாடல்களைக் கூறுவதாக இப்பகுதியானது அமைந்துள்ளது.

அறிஞர்.ச.வே.சுப்பிரமணியன்

சா.வே.சு அவர்கள் தமிழில் 154 நூல்களையும், ஆங்கிலத்தில் 5 நூல்களையும் மலையாளத்தில் சிலப்பதிகாரம்–வஞ்சிக் காண்டத்தையும் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். மிகுந்த தமிழ்பற்று கொண்ட இவருக்கு செந்தமிழ்ச் செம்மல் முதலான பத்துக்கும் மேற்பட்ட விருதுகள் குவித்துள்ளன.

கானல்வரி–கதைத்திறம்

'வரி' என்னும் பெயரில் சிலப்பதிகாரத்தில் மூன்று காதைகள் இடம் பெற்றுள்ளன. கானல்வரி இசையாலும், வேட்டுவ வரி, ஊர்சூழ் வரி இரண்டும் கூத்தினால் பெற்ற பெயர்கள் என்கிறார் அடியார்க்குநல்லார். நெய்தல் நிலமக்களின் வாழ்க்கை முறை பழக்கவழக்கங்களைக் குறிப்பிடுவதாகவும் யாழின் உறுப்புகளையும் அவற்றின் இயக்கங்கள் பற்றிக் கூறுவதாகவும் அமைந்துள்ளது. கோவலன், கண்ணகி, மாதவி மூவரின் வாழ்க்கை நிலையினை உள்ளுறைப் பொருள் கொண்டு விளக்குவதாகவும் இப்பகுதியானது அமைந்துள்ளது. மேலும். கோவலன் பாடல்களைப் பாடவில்லை யாழினைக் கொண்டே இசைத்தான் என்பதும் உரையில் அறியப்படும் செய்தியாகும். இதனை, **“மாதவிதன்மனமகழவாசித்தல்தொடங்குமன”** (சிலம்பு.கானல் 20) வரி கொண்டும் அறியலாம்.

கோவலன் கண்ணகியின் பண்புகளை நினைத்துப் பாடிகிறான். மாதவி அதற்கு எதிர்ப் பாடல் பாடும் பொழுது, இவன் ஒரு பெண்ணை எண்ணிப்பாடுவதாக நினைத்து தான் ஒரு தலைவனை கற்பனையில் நினைத்துப்பாடுகிறாள். ஆனால் மாதவி கற்பனையில் நினைத்தது கோவலனைத்தான். இதனைத் தவறாக புரிந்து கொண்ட கோவலன் ஊடல் கொண்டு மாதவியை தனியாக விடுத்து பிரிந்து சென்றான். மாதவி செயலற்ற நிலையில் தனியாக வீடு திரும்பினாள் என்பதே கானல்வரியின் கதை சுருக்கமாக இவ்வுரையின் வழிஅறிய முடிகின்றது.

ச.வே.சு (திறனாய்வுப்பார்வை)

ஆற்றைப் பெண்ணுடன் உவமை கூறுதல்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

நாட்டை செழிக்கச் செய்வது ஆறு, அதே போல் வீட்டை வளமிக்குபவள் பெண். எனவே காவிரியையும் கங்கைகளையும் பெண்ணாக அமைக்கிறார் இளங்கோ. இதனை உரையாசிரியர், கண்ணகியின் எண்ணம் மேலோங்கி இருக்கும் கோவலன், காவிரியினைப் பாடத் தொடங்கும் இடத்தில் புணர்த்தல், கற்பு, புலத்தல் போன்ற சொற்களைக் கையாள்கின்றான். இங்கு கோவலன் சோழனாகவும் காவிரி கண்ணகியாகவும் மாதவி கங்கையாகவும் உருவகிக்கப்படுகின்றனர் என்பது உரையாசிரியரால் அறியப்படுகிறது. மேலும், கங்கையாறு பாயும் நாட்டினை சோழன் வென்றது தவறில்லை. அதே போல் மாதவியினைக் கோவலன் பெற்றதும் தவறில்லை என்பது அடிகளாரின் கருத்தாக உரையாசிரியர் கூறுகிறார்.

கங்கைதன்னைப்புணர்த்தாலும்
புலவாதுஒழிதல்கயற்கண்ணாய்
மங்கைமாதர்பெருங்கற்பென்று
அறிந்தேன்வாழிகாவேரி (சிலம்பு. கானல்.இசைப்பாடல்.01)

கோவலனின் மனநிலை

கோவலன் மாதவியுடன் சிறு வீடு கட்டி விளையாடுவது போல் எண்ணம் கொண்டு வாழ்கிறார். கண்ணகியின் தினைவலைகள் அவனைமாற்றுகின்றது. எனவே, ஊடல் கொண்டு மாதவியைப் பிரிகிறான். இதற்குமுன்

மாதரார்கண்ணும்மதிநிழல்நீர்
இணைகொண்டுமலர்ந்தநீலப்
போதும்அறியாதுவண்டுஊசல்
ஆடும்புகாரேஎம்மூர் (சிலம்பு.கானல்.இசைப்பாடல்.05)

என்றபாடல்வழிஉரையாசிரியர், இவன் மணம் கண்ணகியிடம் உள்ளதா? மாதவியிடம் உள்ளதா? என்று பெண்ணின் கண்களுக்கும் நீலமலருக்கும் வேறுபாடு அறியாமல் வண்டு தடுமாறுவதனை இவன்மனம் ஒத்திருப்பதனை அழகாக வெளிப்படுத்தியுள்ளார். இதனைத்தொடர்ந்து, **அணங்குறையும் என்பது அறியேன் அறிவேனேல் அடையேன்மன்னே** (சிலம்பு. கானல் இசைப்பாடல்.08) எனக் கூறி அடுத்து வரும் பாடலில் (சிலம்பு.கானல்.இசைப்பாடல்.10) மாதவியை உருவகத்தில் அமைத்து, உவமானப் பொருளைக்கூறி, உவமேயத்தைக் கூறாத நிலையினைக் கூறுகிறார். அதாவது, கண்ணுக்குகயல், புருவம் – வில், கூந்தல் – மேகம், எனக்கூறிமுகத்தை முழுமதியாக்கி, வானில் இருக்க வேண்டிய சந்திரன் பூமிக்கு எவ்வாறு வந்தது! வானில் உள்ள அரவுக்கு அஞ்சி மீன்பிடி தொழில் செய்யும் இவ்விடம் வந்து வாழ்கின்றதோ! என்னும் இடமானது உரையாசிரிரால் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. **முழுமதிபுரைமுகமேமுரிபுருவில்லினையே எழுதருமின்னிடையேஎனைஇடர்செய்தவையே** (சிலம்பு.கானல்இசைப்பாடல்.13) என்ற பாடலின் விளக்கம் கூறும் இடத்து, முன்பு முகத்தை மட்டும் வர்ணித்த கோவலன், இப்போது

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

முகம், மார்பு, இடை இவைகளை வர்ணிக்கிறான். அவளிடம் பேசுகிறான். அதனால் அவளின் குற்றமற்ற சொற்களையும் கேட்கின்றான். **சேரல்மடவன்னம்சேரல்நடைஓவ்வாய்** (சிலம்பு.கானல்.இசைப்பாடல்.22) இவ்வாறாக இவள் பின் செல்லாதே என்பதாகயாழில் தன் மனநிலையை வாசித்து முடிக்கிறான் கோவலன்.

மாதவி உரைக்கும் பாடல்–ஆய்வு

இங்கு காவிரியாக மாதவி தன்னை நினைக்கின்றாள். கோவலனின் மனைவியாகவே வாழ்ந்து வரும் மாதவி, தன்னை சமூகம், கோவலனின் மனைவி எனக்கூற வேண்டும் என்ற எண்ணம், அவள் மனதில் இருந்ததனை **கருங்கயற்கண் விழித்து ஒல்கிநடந்த வெல்லாம்நின் கணவன் திருந்து செங்கோல் வளையாமை அறிந்தேன்வாழிகாவேரி"** (சிலம்பு.கானல்.இசைப்பாடல்.23) என்றஅடிகளின்விளக்கமாகஅளித்துள்ளார். உரையாசிரியர் பொது நிலையில் கார் காலத்தில் மயில் ஆடும், வேனில் காலத்தில் குயில்கள் பாடும். இரண்டும் ஒரே காலத்தில் இணைந்து ஆடுவதும் இல்லை, பாடுவதும் இல்லைகானல் வழி பாடியது இளவேனில் காலம், கதிரவனின் கதிர்கள் நுழைய முடியாத அளவுமரங்கள் நெருக்கமாக இருந்ததினால் எப்போதும் கார்காலம் போல் தோன்றியது கடற்கரைச் சோலை அதனால் மயில்கள் ஆடின. இயற்கைக் காலத்தில் நடைபெறாத இரண்டையும் அடிகள் இணைக்கக் காரணம், மயிலாக மாதவியையும் குயிலாக கண்ணகியையும் உள்ளுறையாக்குகிறார் அடிகள். இளவேனில் காலத்தில் குயில்கள் பாடும் கண்ணகி இருக்க வேண்டிய இடத்தில் மாதவி இருக்கின்றாள். தொடக்கம் முதல் இறுதி வரை கண்ணகி, மாதவியைப் பற்றி ஒரு வார்த்தைக் கூடக் குறைவாகப் பேசியதில்லை. மாதவி கண்ணகியைக் குலப்பிறப்பாட்டி எனப் பெருமையோடு கூறுகிறாள். இருவரும் புறநிலையால் இணையாவிடினும், அகநிலையில் இணைவதைக் காட்டவே இங்கு மயிலையும், குயிலையும் இணைக்கிறார் அடிகள் என்று உரையாசிரியர் விளக்கத்தினைக் கொண்டு அவரின் திறனாய்வுத் தன்மையினை அறியலாம். இதனை,

பூவர் சோலைமயில் ஆலப்புரிந்து குயில்கள் இசைபாடக்
காமர்மாலை அறகசைய நடந்தாய் வாழிகாவேரி (சிலம்பு.கானல்.இசைப்பாடல்.24)

கொண்டுஅறியலாம். மேலும்,

வாழியவன் தன்வளநாடு மகவாய் வளர்க்கும் தாயாகி
ஊழிஉய்க்கும் பேருதவி ஒழியாய்வாழி காவேரி' (சிலம்பு. கானல்.இசைப்பாடல்.25)

இங்கு, சோழன் கோவலன், கண்ணகிக்குக் கிடைக்காத தாய்மைப் பேறு தனக்குக் கிடைத்திருப்பதைப் பெருமையாகக் கருதுகிறாள் மாதவி. என விளக்கியுள்ளார் உரையாசிரியர்.

ஊடல்வருத்தம்

"நிறைமதியும்மீனும்எனஅன்னம்நீள்புன்னைஅரும்பிப்பூத்த" (சிலம்பு. கானல். இசைப்பாடல். 27) இவ்வாறு செயற்கையினை இயற்கை என எண்ணி ஏமாறும் ஊர் எங்கள்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

ஊர். எனவே, தலைவியும் உன் பேச்சை உண்மை என எண்ணி ஏமாறுகிறாள். இது உள்ளுறைப் பொருளாக இருப்பதை உரையாசிரியர் கூறுகிறார். **"புண்தோய் வேல்நீர்மல்கமாதர் கடல்தூர்க்கும்புகரே எம்மூர்"** (சிலம்பு.கானல்.இசைப்பாடல்.28) என்ற வரிகள், எவ்வாறு இப்பெண்குழந்தைகள் மணலை அள்ளி எறிந்து கடலைத் தூர்க்க முடியாதோ, அதுபோல் உங்களிடம் சினப்பதால் எப்பயனும் இல்லை எனத் தலைவியின் மனப்பாங்கினை உரைவழி வெளிப்படுத்தியுள்ளார். அதே போல் தன்னால் கனவிலும் காண இயலாத தலைவனைத் தன்னோடு வாழ்கின்ற நெய்தல் மலராவது கண்டால் போதும் என நினைத்துத்தன் ஆற்றாமையை வெளிப்படுத்துகிறாள் தலைவி. இதனை, (சிலம்பு. கானல். இசைப்பாடல். 31) பாடல் வெளிப்படுத்துகிறது **"பூந்தண்பொழிலே! புணர்ந்தாடும் அன்னமே ஈர்ந்தண்துறையே இதுதகாதுஎன்னீரே"** (சிலம்பு.கானல். இசைப்பாடல். 33)

தலைவனோடு கூடிய காலத்தில் உடனிருந்தவை அலை, பொழில், அன்னம், கடற்றுறை, இவை எல்லாம் அன்று ஒன்றாக இருந்தாலும், இன்று அவன் பிழையைத் தட்டுக் கேட்கவில்லையே என நினைக்கின்றாள். இவ்வாறு உரையாசிரியர் மேலும் விளக்கம் கூறி பாடல்களை விளக்கிச் சென்றுள்ளார்.

மாலைப் பொழுது

வையமோகண்புதைப்பவந்தாய்மருள்மாலை
மாலைநீயாயின்மணந்தார்அவராயின்
ஞாலமோநல்கூர்ந்ததுவாழிமாலை (சிலம்பு.கானல்.இசைப்பாடல்.48)

ச.வே.சு அவர்கள் மாலைப் பொழுதின் மயக்குவதாக இப்பகுதி அமைந்துள்ளது. இதனை, மயக்கத்தைத் தருவதற்காகவே வந்தனை நீ மாலைப் பொழுதுமால் + ஐ – என்றால் நீயே மயக்கமுடையை, எங்களுக்கும் மயக்கத்தினைத் தருகின்றாய். மாலை நீ ஆயின், மணந்து பிரிந்தவர் அவர் ஆனால், இவ்வுலகம் வறுமையுற்றது என்பதாக விளக்கியுள்ளார்.

தெய்வம் வணங்குதல் – மாதவி

தீத்துழை இவந்த இச்செல்லல் மருள்மாலை
தூக்காது துணிந்த இத்துயரெஞ்சு கிளவியால்
பூக்கமழ்கானலிற் பொய்ச்சூள் பொறுக்க என்று
மாக்கடல் தெய்வநின் மலரடி வணங்குதும் (சிலம்பு,கானல்.இசைப்பாடல்.49)

என்ற பாடலின் உரையானது , தலைவன் பிரிவால் தலைவி எவ்வளவு துன்பம் அடைந்தாலும் தலைவன் நன்றாக இருக்க வேண்டும் அவனுக்குத் தீமை வரக்கூடாது எனக் கருதி, கடல் தெய்வத்திடம் வேண்டிகிறாள் தலைவியாகிய மாதவி இங்கு மாதவியின் மனநிலையினை வெளிப்படுத்தியுள்ளார், ச.வே.சு அவர்கள்

முடிவுரை

இவ்வாறாக மேற்கண்ட உரை விளக்கத்தின் வழியாக, ஆற்றைப் பெண்ணுடன் உவமைப்படுத்தி யப்பாங்கினையும், கோவலன் கண்ணகி மீது கொண்ட அன்பினையும் ,

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

கோவலன் தன் தவறினை உணரும் பாங்கும், மாதவியின் மனநிலையும், ஊடலினால் அவள் அடைந்த வருத்தமும் மாலைப் பொழுது குறித்த விளக்கமும் இறுதியாக மாதவியின் தூய்மையான அன்பையும் உரையாசிரியரின் திறனாய்வுப் பார்வையினைக் கொண்டு அறிய முடிகிறது.

துணைநூற்ப்பட்டியல்

[1] ஐம்பெருங்காப்பியங்கள் மூலமும் தெளிவுரையும், உரையாசிரியர் அறிஞர் ச.வே.சுப்பிரமணியன், பதிப்பு, டிசம்பர், 2013, மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 108.

[2] அகத்தியலிங்கம், ச., தொல்காப்பியச் சிந்தனைகள், அண்ணாமலைநகர், சிதம்பரம், 1985. அகத்தியலிங்கம், ச. (பதி.ஆ), தொல்காப்பிய மொழியியல், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், 1984.

[3] அரங்கன், கி., மாற்றிலக்கண மொழியியல், தமிழ் நூலகம், சென்னை.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

உஷா & ரமேசு **"சிலப்பதிகார கானல்வரியில் உரையாசிரியர் ச.வே.சுவின் திறனாய்வுப்பார்வை."** *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* தொகுதி 3, சிற**.**இதழ் 2, தொகுதி 1, *திசம்பர்* 2020, பக். 46-52. டிஒஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.008**

Cite this Article in English (*MLA 8 Style*) as:

Usha & Ramesh. "Commentator Sa.Ve.Su'S Investigative View on Kanal Vari Poem of *Silapathigaram*." *International Journal of Tamil Language and Literary Studies,* Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020, pp. 46-52. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.008**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

"தொல்காப்பியம்" – உரைவளக் கோவையும் அதன் பெருமைகளும் குறித்த சிந்தனைகள்

"Tholkappiam" - Thoughts on the Descriptive Note and its Excellence

முனைவர். இரா. கண்ணன், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, உருமு தனலெட்சுமி கல்லூரி, திருச்சி – 9.
Dr.R.Kannan, Assistant Professor, Urumu Dhanalakshmi College, Thricy-19
https://orcid/000-0002-3953-8786
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.009

Abstract

The title ''Tholkappiam had been discussed by many of the erudite scholars like S.V. Subramanian, Dr. Porko, Mr. Agathiyalingam, T.P. Meenachisundranar. Everyone is a doyen of research in Tamil Studies especially in "Tholkappiam". Their interpretations in their elucidative ideology differ according to their contemplations but their thoughts and ideas are illustrative and exemplanary in nature. This present article discuss on the features and excellence of the secondary descriptive volumes on "Tholkappiam".

Keywords: "Tholkappiam", Descriptive Notes, Excellence,

அறிமுகம்

ஓலைச்சுவடிகளை ஆராய்ந்து பார்த்து பாதுகாத்த பெருமை தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதையருக்கே உரியாதாகும். பல புதைந்து கிடந்த அரிய வகையான நூல்களைப் பதிப்பித்தும் பழந்தமிழ் நூல்களுக்குத் தெளிவுரை எழுதியும் அவர்களின் வழிமுறை எழுதிய பல தலைசிறந்த மாணவர்களை உருவாக்கியும் தந்த பெருமையை தமிழறிஞர் ச. வே. சுப்பிரமணியரைச் சாரும். இவர் மட்டுமல்லாமல் அவரோடு முன்னோடியாக திகழும் பொற்கோ, இளம்பூரணர், மூ. முவை. அரவிந்தன், ஆகியோரது உறைவளத்தை குறித்து அதன் பெருமை பற்றி இவ்வாய்வு கட்டுரை அமைக்கிறது. தமிழ் படைப்புகளுக்கு உரையினை அவர்கள் எடுத்துரைத்துள்ளனர். அந்த உரையினை அறிஞருடைய சொற்பொழிவனையும் ஆயுவுனையும் ஆராயாத எவரும் இருக்க முடியாது என்பதற்கு தொல்காப்பியர் தொல்காப்பியத்தில் ஆழங்கால் பட்டவர் என்பதை நமக்கு படம்பிடித்து காட்டுகின்றன. இத்தகைய சிறப்பு வாய்ந்த தொல்காப்பியம் குறித்துக் குறிப்பிடும் கருத்துக்களில் சிலவற்றைக் காணலாம்.

தொல்காப்பியம் உரைவளம்

இந்தியாவில் உள்ள மொழிகளுக்கெல்லாம் இலக்கணநூல் தோன்றுவதற்கு முன்பே முதன் முதலில் தமிழ்மொழியில் தோன்றிய இலக்கணநூல் தொல்காப்பியம். இந்நூலில் தோன்றிய பின்னரே வடமொழியின் இலக்கண நூலான அஸ்டாத்தியாயி தோன்றியுள்ளது. திராவிடமொழிகளில் தமிழ்மொழிக்குப் பின்னரே கன்னடத்தில் கவராறுமார்க்கமும் தெலுங்கில் ஆந்திரசப்தசிந்தாமணியும் மலையாளத்தில் லீலாதிலகமும் ஆங்கிலத்தில் தோன்றின. பெங்காலி மொழிக்குரிய முதல் இலக்கணநூல் போர்த்வர்கீசு மொழியிலும் இரண்டாம் நூல் ஆங்கில மொழியிலும் எழுதப்பெற்றுள்ளன.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

ச.வே.த உரைவளம்

தமிழறிஞர் ச.வே. சுப்பிரமணியன் அவர்களின் நூல்களை எல்லாம் மதிப்பீடு செய்தாலே ஒரு முனைவர் பட்டம் பெறலாம். அத்தகைய அளவிற்கு இலக்கண நூல்களையும், இலக்கிய நூல்களையும், தமிழ் நிகண்டுகளையும், தமிழ் அகராதிகளையும் பதிப்பித்துத் தந்திருக்கிறார். ஓர் ஆசிரியர் எப்படி இருக்கவேண்டும் என்பதைப் பவணந்தி அடிகள் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய பண்பினைக் கொண்ட அறிஞர் ச.வே. சுப்பிரமணியன் ஆவார். இவர் பதிப்பித்த "தொல்காப்பியம்" உணர்ந்தும் கருத்துச் செற்பிலிருந்து சிறு துளிகள் உறையச் செய்தியும் பார்ப்போம். கடலைக் குவலயத்தில் அடைக்கும் முயற்சிதான் இந்த நூல் மதிப்பிடுவதாகும் ஆகும். வான் அளவிற்குப் பேரறிஞர் நூல்களை எழுதிக் குவித்திருந்தாலும் சாண் அளவிற்கு எடுத்து இயம்பிட முயன்றுள்ளேன் என்று உணர்வதை எடுத்துரைக்கின்றார்.

உரைவளர்ச்சி சிந்தனையாளர்கள்

உள்ளடக்கமாகக் கீழ்காணும் தலைப்புகள் காணப்படுகின்றன. அவையாவன பல உரைப்பேராசிரியர்களின் உரைவளம். தொல்காப்பியம் அறிமுகம் – தமிழ், தொல்காப்பியம் அறிமுகம் – ஆங்கிலம், தொல்காப்பியச் சுவடிகள், தொல்காப்பியப் பதிப்புகள், உரையாசிரியர்கள், இருபதாம் நூற்றாண்டு உரையாசிரியருள் சிலர் சொல்லதிகார உரையாசிரியர்களான, இளம்பூரணர், சேனாவரையார், தெய்வச்சிலையார், நச்சினைக்கினியார், கல்லாடர், பழைய உரை – அரசு உரை, சொல்லதிகாரம் – ஆங்கிலம், சொல்லதிகாரம் அறிமுகம் – தமிழ், வினையயியல் அறிமுகம் – ஆங்கிலம், வினையியல் அறிமுகம் – தமிழ், வினையியல், நூற்பா முதற்குறிப்பு அகராதி, பயன் கொண்ட நூல்கள் முதலியன இடம் பெற்றுள்ளன.

இந்நூலில் இளம்பூரணர் பதிப்பின் நூற்பா வடிவமும், நச்சினார்க்கினியர் பதிப்பின் நூற்பா வடிவமும், இதுவரை எந்த உரைப்பதிப்பிலும் காணப்படாத தொல்காப்பிய நூற்பிரிவின் சுவடி வேறுபாடுகளும், இப்பேரறிஞரின் ஆங்கில மொழி பெயர்ப்பும் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கவையாகும். "தோன்றின் புகழோடு தோன்றுக" என்னும் உலகப் பொதுமறைகளை திருவள்ளுவர் ஓரிடத்தில் எடுத்துரைக்கிறார் காண்பது. ஒரே நேரத்தில் இரண்டு குதிரைகளின் மேல் இலாவகமாகப் பயணிப்பதுப்போல உணரப்படுகிறது. சான்றாக,

அர் ஆர் ப என வரூஉ மூன்றும்
பல்லோர் மருங்கிள் படர்க்கைச் சொல்லே (தொல். சொல். நு. 691)

இந்நூற்பாவிற்குச் சுவடி வேறுபாடு சுட்டிதோடு இளம்பூரணர் படர்க்கையின் காண்பதற்குப் "புறத்தள்" என்னும் சொல்லைச் சுட்டியிருப்பது கவனிக்கத்தக்கதாகும். மேலும், சேனாவரையர், தெய்வச்சிலையார், நச்சினார்கினியர், கல்லாடர் அவர்கள் வழியில் மற்றும் பல பொற்கோ முதலிய உரையாசிரியர்களும் கருத்துகள் ஓரிடத்தில் காணப்படுவது வாசகனுக்கத் தெளிந்த நீரோடைபோல கண்ணாடியாக இந்நூற்பாவையில் பற்றிய செய்திகளைத் தெளிவாக்கின்றேன்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

தொல்காப்பியம் உரைவளம்

தொல்காப்பியம், தமிழ்மொழிக்கு மட்டுமின்றி, உலகம் அனைத்திற்குமான இலக்கண, இலக்கிய செய்திகளைப் பொருளதிகாரத்தில் அடங்கியுள்ளதினை ஆங்கிலத்திலும் மொழிப்பெயர்த்திருக்கிறார். ச.வே.சு அவர்கள் சான்றாக வினையின் வரை விலக்கணத்தை, ‘‘Verbs are these which will not have case markers but will show time sense” இவ்வாறு மொழிபெயர்த்திருப்பது, தமிழறிஞர் ச.வே.சுப்பிரமணியன் மிகுந்த தமிழராயாவும் அறிவுறுந்தத் தகுதியுள்ள ஜாம்பவராகவும் நம்மில் திகழ்கிறார் என்பதை உணர்த்துகிறது பேச்சுக்கலை, எழுத்துக்கலை மட்டுமின்றி மொழிபெயர்த்துக் கூறுவதும் முத்திரையைப் பதித்திருக்கிறார். ஒரு நூலை வாசிக்கும்போது ஒரு வாசகனின் மனக்கண்ணில் காட்சி காண்பதுபோல, கவர் நூற்பாவைப் பிரித்துமச் சுட்டியிருப்பது நம்மைச் சிலிர்க்கவும், சந்திக்கவும் வைக்கின்றது என்பதற்குச் சான்றாக,

தத்த மெச்சாமாடு சிவனுங் குறிப்பின்
எவ்சோ லாயினு மிண்டநிலை வரையன் (தொல். சொல். நு.722)

என்ற நூற்பாவைச் ச.வே.சு அவர்கள், என்பிரித்துக் கூறியிருப்பது “அன்னப்பறவை பாலிலுள்ள நீரைவிட்டு விட்டுப் பாலைமட்டும் அருந்துவதுபோல” விளக்கத்தை விட நூற்பாவை படிக்கவேண்டும் என்ற வேண்டுகோலைத் தூண்டுகிறது.

இப்பேரறிஞர் நூற்பா முதற்குறிப்பு அகராதி குறிப்பிட்டிப்பது இவரின் தனித்துவத்தைக் காணமுடிகிறது. ஊரைவள பதிவுகள் அனைத்தும் போற்றுவதற்குரியதாகும். இந்நூலினை முழுமையாக வாசிக்கும்போது வினையியலில் ஏதோ ஆழாதியில் பட்டதாக நம்மில் உணர்வினை உணர முடிகின்றது. இத்துடன் இலக்கணத்தின் நுணுக்கத்தினையும் அறியமுடிகிறது.

இலக்கண உலகில் பொற்சோவின் உரைவளப்பங்கும் பணியும்

கடந்த ஐம்பது ஆண்டுகளில் தமிழ்மொழி ஆராய்ச்சியில் குறிப்பிடத்தகுந்த வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இதற்கு அடிப்படைக் காரணமாக தமிழகத்தில் மொழியியல் துறையின் வளர்ச்சி அமைந்துள்ளது. தமிழ்ப்பேரறிஞர் தொ.பொ.மீனாட்சிசுந்தரனார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியனுக்கென்று ஒரு தனித்துறையை நிறுவி, பல ஆண்டுகள் அங்கு பணியாற்றி சிறந்த ஆய்வாளர்கள் பலரை உருவாக்கினார். அவரது பணியைத் தொடர்ந்து மேற்கொண்டு தமிழகத்தில் மொழியியல் நோக்கில் தமிழ் ஆராய்ச்சி சிறப்பாக வளர பேராசிரியர் அகத்தியலிங்கம் குறிப்பிடத்தக்கவர்.

தமிழ்மொழி வரலாறு – தெ.பொ.மீ அமெரிக்காவில் சிகாகோ பல்கலைக்கழகத்தில் ஆற்றிய உரை தமிழ்மொழி ஆய்வில் ஒரு சான்று என கூறலாம். அதுபோன்று பேராசிரியர் அகத்தியம் அவர்கள் உலகறிந்த மொழியியல் அறிஞர்களோடு சாம்ஸ்தி அவர்களின் மாற்றியக்கணக் கோட்பாட்டை முதன்முதலாக தமிழகச் செயலிலிருந்து தமிழ் அமைப்பின் சிறப்பை வெளிப்படுத்தினார். இப்படி தமிழ்மொழி இலக்கணத்தை, தமிழ்மொழிப் பணிகளின்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

பயணமாகவே உலகெங்கும் தமிழ்மொழியின் சிறப்பும், தமிழின் பெருமையும் இன்றையும் பேசப்பட்டு வருகிறது என்பதில் ஐயமில்லை என்பதற்கு சான்றாக அவர்களது வழியில் இரண்டு பெரும்பேராசிரியர்களின் தொ.பொ.மீயும் அகந்தியாகும். தொல்காப்பியம் உருவாக்கத்தின் பேராசிரியர் பொற்கோ அவர்கள், அவர்களின் மேற்கொண்ட பணியை இன்றுவரை தொடர்ந்து செய்து வருகிறார்.

- **தமிழ் இலக்கியம்**
- **இக்கால இலக்கணம்**
- **தமிழ் இலக்கணம்**
- **வேர்ச்சொல் ஆய்வியல்**
- **தொல்காப்பியம் அமைப்பு மொழியியல்**
- **ஹலாந்து மொழியியல்**
- **மாற்றிலக்கண மொழியியல்**

என்னும் பலதுறை அறிவுகளைத் தன்னுள் கொண்டு, சங்கத் தமிழிலிருந்து தறினும் வரை வாழ்ந்துகொண்டு வருகிறேன் என்பதில் ஐயமில்லை.

ஆய்வுலகில் பொற்கோளியின் பாதையும் பங்களிப்பும்

"ஒரு ஆய்வின் சிறந்த மொழியியல் ஆய்வாளராக விளங்க வேண்டுமென்றால், தனது தாய்மொழியின் இலக்கணத்தில் மிகச்சிறந்த திறமையை பெற்றிருக்கவேண்டும். மொழியில் கோட்பாடுகள் முறையாக, சரிவரப் புரிந்துகொள்ள இதுவே முதல் தேவை பொற்கோ அவர்கள் அமைப்பு மொழியில் மாற்றிலக்கண மொழியில் இரண்டுமே பல சிறப்பினை பங்களிப்புகளை ஆற்றியிருப்பதற்கு அடிப்படையில் அவரது தமிழ் இலக்கலை, இலக்கியம் பற்றிய ஆழமான அறிவேயாகும்.

"இக்காலத் தமிழ் இலக்கணம்" என்று நூலை அவர் மிகச்சிறப்பாக அமைக்க உதவும் மொழியியல் அறிவே மிகவும் பயன்பட்டுள்ளது. இந்நூலின் இணைப்பில் அவர் நோக்கத்தில் பகுதி என்ற ஒரு ஆய்வை இணைத்துள்ளேன். முப்பது ஆண்டுகளுக்கு முன்பாகவே அவர் "தமிழ் இலக்கணக் கோட்டுபாடுகள்" பற்றி ஒரு ஆய்வை கோவையை வெளியிட்டார்.

"தொல்காப்பியர் முதல் பவணந்தியர் உரை தமிழ் மரபிலக்கண ஆசிரியர்கள் தங்களது இலக்கண ஆய்வுகளுக்குப் பின்பற்றிய கோட்பாடுகளும், ஆய்வு முறையை காண பொற்கோ விளக்குகிறார். இவரது உரைவளம் மற்றும் தமிழ்நாட்டு அரசுப்பள்ளிகளிலும் இவரது இலக்கணமே இடம் பெற்றிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கவையாகும் உரை எழுதியவர் உ.வே.சா அவர்கள் வழியில்.

முடிவுரை

தமிழ் உலகிற்கு முதன்முதலில் உரை எழுதியவர் உ.வே.சா அவர்கள் வழியில் வளர்த்தவர் பொற்கோ, ச.வே.சு., அகத்தியலிங்கம், பேராசிரியர் செ.வை.சண்முகம் உ.வே.சா அகத்தியர்களின் எழுத்திலக்கணக் கோட்பாடுகள் சொல்லிலக்கணக் கோட்பாடுகள் என்றும் ச.வே.சா. ஆற்றிப்பணிப் பணியும், பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூல் குறிப்பிடத்தக்கது.

இலக்காலத்திற்கும்
இலக்கணம் எழுதி

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

இமையமலை அளவிற்கு
இலக்கணத்தை உயர்த்திய
பெருமையை பொற்கோ ஒருவருக்கே
என்பது மிகையாகது

என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

துணைநூற்பட்டியல்

[1] இளம்பூரணர் உரை, தொல்காப்பியம் (எழுத்து), கழக வெளியீடு, திருநெல்வேலி,

[2] நச்சினார்க்கினியர் உரை, தொல்காப்பியம் (எழுத்து), தமிழ்மண் பதிப்பகம், சென்னை,

[3] இலக்கண வரலாறு – சோ.இளவரசு. மெய்யப்பன் பதிப்பம், சிதம்பரம். 2003.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

கண்ணன். ""தொல்காப்பியம்" – உரைவளக் கோவையும் அதன் பெருமைகளும் குறித்த சிந்தனைகள்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 1, *திசம்பர்* 2020, பக். 53-57. டிஒஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.009**

Cite this Article in English (*MLA 8 Style*) as:

Kannan**. ""Tholkappiam" - Thoughts on the Descriptive Note and its Excellence."** *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020, pp. 53-57. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.009**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

உரையாசிரியர்களின் உரைநெறிகளில் "தொல்காப்பியம்" - கிளவியாக்கத்தில் தொடரியல் கோட்பாட்டுச் சிந்தனைகள்

"Tholkappiam" in the Textual Writings of Elucidative Writers- Syntactic Perspective of Kilavuyakkam

முனைவர் உ.கருப்பத்தேவன், உதவிப்பேராசிரியர் - தலைவர் (பொ), ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை - 21.
Dr.U.Karupputhevan, Assistant Professor- Head (i/c), Dept. of Comparative Literature, Tamil Department, Madurai Kamaraj University, Madurai- 21
ORCiD: https://orcid/0000-0002-3546-8506
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.010

Abstract

In the classic work "Tholkappiam" Kilaviyakkam is the first chapter. In other grammatical texts there is no Kilaviyakkam as a chapter. Many explanatory commentaries had been written to decipher and discuss on the grammatical importance of "Tholkappiam". Many secondary text writers have taken the linguistic and grammatical elements to delineate the significance of the chapter. Such a type of explanatory nature is called as the syntactic method. It explains the grammatical insights in a clear manner. Most of the reputed scholars has discussed in their texts about "Tholkappiam" in the morphological and semantic perspective. But the syntactic importance has been the vital thing to consider getting the full meaning of the text. Tholkappiar might have viewed in such syntactic perspective. Finally, it seems that linguistic excellence could be considered in the in the morphological, semantical and syntactical perspectives. Every explanatory text writers had given more importance to the over all perspective to get the full meaning.

Keywords: "Tholkappiam", Elucidative Writers, Syntactic Perspective of Kilaviyakkam

முன்னுரை

தொல்காப்பியரின் சொல்லதிகாரத்தில் 'கிளவியாக்கம்' முதல் இயலாக அமைந்திருக்கிறது. பிற மரபிலக்கண நூல்களில் கிளவியாக்கம் என்ற இயல் இல்லை. தொல்காப்பியரின் சொல்லிலக்கணக் கோட்பாட்டின் அடிப்படையை விளக்குவதற்காக 1972 வரையில் கிளவியாக்கத்தைப் பலரும் ஆய்வுப் பொருளாகக் கொண்டுள்ளனர். இதற்கு முன்னர் கிளவியாக்கம் குறித்த உரையாசிரியர்களின் கருத்துக்களும் விளக்கங்களும் பல நுட்பமான ஆய்வுச் சிந்தனைகளுக்கு இடமளிக்கின்றன. உரையாசிரியர்கள் கிளவியாக்கத்தில் விளக்கப்படும் பொருட்கூறுகள் பற்றி மூன்று முக்கியமான பகுதிகளை எடுத்துக் கூறியுள்ளனர். (அ) கிளவிகள் பொருள்மேல் ஆமாறு உணர்த்தியது. இதனைச் 'சொல்லியல் நோக்கு' எனக் கொள்ளலாம். (ஆ) வழுக்காத்தலும் வழுவமைதியை ஏற்றலும் பற்றியது. இதனை 'வழுநோக்கு'ப் பார்வையாகக் கருதலாம் (இ) தொடரியல் கோட்பாட்டை

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

விளக்குவது. இதனைத் தொல்காப்பியரின் தொடரியல் பார்வையாகக் கருதலாம். உரையாசிரியர்களில் இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகியோர் கிளவியாக்கத்தைச் சொல்லியல் கோட்பாட்டு நோக்கு, வழுநோக்குக் கோட்பாடுகளைக் கொண்டிருப்பதாகவும், தெய்வச்சிலையார் தொடரியல் நோக்குக் கோட்பாட்டினையும் வழுநோக்குக் கோட்பாட்டினையும் எடுத்துப் பேசுவதாகவும் உரையெழுதி உள்ளனர். இதனைத் தொல்காப்பியம் கிளவியாக்கத்தைப் பொதுமைப்படுத்துவதாகக் கருதலாம். தற்காலத்தில் தொல்காப்பியம் கிளவியாக்கம் தொடரியல்; தொடரியல் பார்வைக்கே முதன்மை உடையதாக ஆய்வு செய்யப்படுகின்றது. ஆயினும் தொல்காப்பியம் கிளவியாக்கம் மாறுபட்ட பல இலக்கண, மொழியியல் சிந்தனைகளுக்கும் இடமளிக்கின்றன.

கிளவியாக்கச் சிந்தனைகளில் 'சொல்லியல் கோட்பாடு'

தொல்காப்பியரின் 'கிளவியாக்கம்' என்னும் இயலுக்குத் தலைப்புப் பொருத்தம் பற்றி விளக்கம் கூற வந்த இளம்பூரணர், "கிளவிகள் பொருள் மேல் ஆமாறு உணர்த்தினமையின் 'கிளவியாக்கம்' என்னும் பெயர்த்து. என்னை? ஒருவன் மேலாமாறிது ஒருத்தி மேலாமாறிது பலர்மேலாமாறிது, ஒன்றன் மேலாமாறிது பலவற்றின் மேலாமாறிது, வழு ஆமாறிது, வழு அமைதி ஆமாறிது எனப் பொருள் கண்மேல் ஆமாறு உணர்த்தினமையின் இப்பெயர்த்து ஆயிற்று" (இளம்பூரணர் (உரை.ஆ.), தொல்காப்பியம் சொல்லதிகாரம், 'கிளவியாக்கம்', இயல் தலைப்பு விளக்கம்) என உரைவிளக்கம் தந்துள்ளார். "கிளவிகள் பொருள்மேல் ஆமாறு உணர்த்தினது" என்னும் இளம்பூரணரின் உரைவிளக்கம் சொல்வடிவம், பொருள் உணர்த்துவதைப் பற்றியதே.ஆதலால் இதனைத் தொல்காப்பியரின் சொல்லியல் கோட்பாட்டுப் பார்வையாகக் கொள்ளலாம். தொல்காப்பியம் 'கிளவியாக்கம்' என்னும் இயலுக்குத் தலைப்பு விளக்கம் கூற வந்த கல்லாடர்,

> **கிளவி என்பது சொல்; ஆக்கம் என்பது சொற்கள் பொருள்கண்**
> **மேலாமாறு உணர்த்தினமையின் கிளவியாக்கம் என்னும் பேர் பெற்றது"**
> **(கல்லாடர் (உரை.ஆ.), தொல்காப்பியம் சொல்லதிகாரம், கிளவியாக்கம், இயல்தலைப்பு விளக்கம்)**

என உரையெழுதியுள்ளார்.கல்லாடர் உரைவிளக்கம் இளம்பூரணர் உரையைத் தழுவியதாகவே உள்ளது.கல்லாடர் கிளவிகளின் வகைகளை விளக்கிவிட்டு, அந்த விளக்கத்தில் உள்ள குறையை உணர்ந்து அவரே கேள்வி கேட்டு, விடையும் தந்துள்ளார்.

> **ஏனைய ஒத்துக்களுள்ளும் பொருட்கண் மேலாமாறு அன்றோ**
> **உணர்த்தினது. பொருள் அல்லனவற்றின் மேலாமாறு உணர்த்தியது**
> **இல்லை எனின், ஏனை ஒத்துக்களுள் பொருட்கண் மேலார்**

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

நின்றவற்றின் இலக்கணம் உணர்த்தினார்; ஈண்டு அவை தம்மை ஆமாறு உணர்த்தினார்" (கல்லாடர் (உரை.ஆ.), தொல்காப்பியம் சொல்லதிகாரம், கிளவியாக்கம், இயல்தலைப்பு விளக்கம்)

என்பது கல்லாடர் தரும் விடையாகும்.

கிளவியாக்கம் ஒழிந்த பிற இயல்களிலும் "பொருட்கண் மேலாமாறு உணர்த்தினது" என்பது சொல்லதிகாரம் முழுமையும் "வடிவத்தின் பொருள் உணர்த்தியது" என்ற உண்மையை ஒத்துக்கொண்டுள்ள கல்லாடர், அதே சமயத்தில் இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டையும் எடுத்துக்காட்டியுள்ளார். கல்லாடரின் உரைச்சிறப்பு யாதெனின் கிளவியாக்கம் ஒழிந்த பிற இயல்களில் "பொருட்கண் மேலாய் நின்றவற்றின் இலக்கணம் உணர்த்தினார்" என்பதே ஆகும். கல்லாடர் இலக்கண வகைகளில் பெயர், வினை என்ற பாகுபாடு உணர்த்தினார் என்ற கருத்தையும், கிளவியாக்கத்தில் அவை தம்மை ஆமாறு உணர்த்தினார் என்பது, உருபன் நிலையில் மட்டும் விளக்கினார் என்ற கருத்துரையையும் உட்கொண்டது.

கிளவியாக்கத்தில் 'வழுவமைதி'

'வழுவமைதி' என்பதற்கு உரை எழுதிய சேனாவரையர், **"வழுக் களைந்து சொற்களை ஆக்கிக் கொண்டமையால் இவ்வோத்துக் கிளவியாக்கம் என்னும் பெயர்த்து.சொற்கள் பொருள்கள்மேல் ஆமாறு உணர்த்தினமையால் கிளவியாக்கம் ஆயிற்று" (ச.வே.சுப்பிரமணியன், தொல்காப்பியம் உரைவளக்கோவை, கிளவியாக்கம், ப.68)**என உரையெழுதியுள்ளார்.சேனாவரையரின் இந்த விளக்கம் சொல்லியலுக்கு இரண்டாம் இடத்தையே கொடுத்துள்ளது.சேனாவரையர் வழு நோக்கத்திற்கே முக்கியத்துவம் கொடுத்துள்ளார்.கிளவியாக்கத்தில் 'வழுவமைதி' குறித்த செய்திகள் பெரும்பான்மையாக விளக்கப்பட்டிருப்பதே இதற்கு முக்கியக்காரணம் ஆகும்.

இளம்பூரணர், சேனாவரையர் ஆகிய இருவரது விளக்கங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இளம்பூரணர், இயலின் சூத்திர அமைப்பு (நூற்பா வரிசை) வரிசை அடிப்படையிலும், சேனாவரையர் பெரும்பான்மை கருத்து என்னும் அடிப்படையிலும் இயல்விளக்கம் கொடுத்திருப்பதை அறியலாம்.

"வழுக் களைந்து சொற்களை அமைத்துக்கோடலின் இவ்வோத்துக் கிளவியாக்கம் என்னும் பெயர் பெற்றது. இனிச் சொற்கள் பொருள்கண் மேலாமாறு உணர்த்தினமையின் கிளவியாக்கம் என்னும் பெயர் பெற்றது என்றுமாம்" (நச்சினார்க்கினியர் (உரை.ஆ.), தொல்காப்பியம் சொல்லதிகாரம், கிளவியாக்கம், இயல்தலைப்பு விளக்கம்)என்னும் நச்சினார்க்கினியரின் உரைவிளக்கம், அவர் சேனாவரையர் உரைக்கருத்தினை அப்படியே ஏற்றுக்கொண்டார் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

கிளவியாக்கத்தில் தொடரியல் கோட்பாடு

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

தெய்வச்சிலையார் கிளவியாக்கத்திற்கு எழுதியுள்ள முன்னுரையில்,

"அது (கிளவியாக்கம் கிளவியது ஆக்கம் என விரியும்; அதற்குப் பொருள் சொல்லினது தொடர்ச்சி என்றவாறு; சொற்கள் ஒன்றோடு ஒன்று தொடர்ந்து பொருள் மேலாகும் நிலைமையைக் கிளவியாக்கம் என்றார். அது வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாகி அதனை உடைய ஓத்திற்கு ஆயிற்று" (தெய்வச்சிலையார் (உரை.ஆ), தொல்காப்பியம் - சொல்லதிகாரம், கிளவியாக்க முன்னுரை)

எனக் கிளவியாக்கம் தொடரியல் பார்வையை மட்டுமே உடையது என்பதைப் பூடகமாகத் தெளிவுபடுத்தியுள்ளார். ஆயினும் அவர் கிளவியாக்கத்தின் பதினொன்றாம் நூற்பாவில் "வழுப்படாமல் கூறுமாறு உணர்த்துதல் நுதலிற்று" எனக் குறிப்புரை எழுதிவிட்டு, கிளவியாக்கத்தின் வேறுபல நூற்பாக்களிலும் (நூற்பா. 496-501, 509, 510) 'வழு' பற்றிப் பேசப்படுவதை எடுத்துக்காட்டி விளக்கி இருப்பதால், கிளவியாக்கம் வழுப்பற்றிப் பேசுவது என்னும் கருத்து தெய்வச்சிலையாருக்கு உடன்பாடானதே என ஊகிக்கலாம். ஆயினும் தெய்வச்சிலையார் 'வழு'விற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பதை அவரது கிளவியாக்க முன்னுரை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது. ஆதலால் இந்த ஆய்வுக்கட்டுரையில் சொல்லியல் கோட்பாடு, வழுவமைதிக் கோட்பாடு, தொடரியல் கோட்பாடு, பிற இலக்கணக்கொள்கை என்னும் வரிசையில் உரையாசிரியர்களின் கருத்துக்கள் கிளவியாக்கத்தை முன்வைத்து நுட்பமாக ஈண்டு ஆராயப்படுகின்றது.

உரையாசிரியர்களின் உரைவிளக்கங்கள் - தொல்காப்பியரின் சொல்லியல் கோட்பாடு

தொல்காப்பியரின் சொல்லியல் கோட்பாட்டிற்குக் கிளவியாக்கத்தில் இடம்பெற்றுள்ள "னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்" (தொல்.சொல்.கிளவி.நூற்.488.) முதலிய ஐந்து நூற்பாக்கள் அடிப்படையாக அமைந்துள்ளன. இந்நூற்பாக்கள் 'உருபனைக் கண்டறிதல்' (Identification of Morphemes) என்னும் சொல்லியல் கோட்பாட்டு ஆய்விற்கு முதன்மை ஆதாரமாகும்.

**இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய
ஈற்றின் நின்று இசைக்கும் பதினோர் எழுத்தும்
தோற்றம் தாமே வினையொடு வருமே (சேனாவரையர் (உரை.ஆ.), தொல்காப்பியம் – சொல்லதிகாரம், கிளவியாக்கம், நூற்.493)**

என்னும் கிளவியாக்க நூற்பா உருபன்கள் வருமிடம், சொல்லின் ஈற்றில்வரும் பகிர்வு, அவை எந்த வினைச்சொல்லுக்கு உரியன என்பதை எல்லாம் எடுத்துக்காட்டி விளக்குவதால் முழு அளவில் சொல்லியல் கோட்பாடு அமைந்து விடுகின்றது. ஆதலால் கல்லாடர் உரையின்படை கூறுவதென்றால் பிற இயல்களில் கூறப்பட்டதாகக் கொள்ளப்படும்.

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

"பொருட்கண் மேலாயும் நின்றவற்றின் இலக்கணமும்" இந்தக் கிளவியாக்க நூற்பாவில் உணர்த்தப்படுவதை அறியலாம்.இது சொல்லியல் கோட்பாட்டின் இரண்டாம் நிலையான ஈற்றில் நின்று இசைக்கும் உருபன் பகிர்வும் வினை விகுதிகள் வகைப்பாடும் பற்றியதாகும்.ஆதலால் கல்லாடர் கிளவியாக்கத்திலும் பிற இயல்களிலும் உள்ளதாகக் கூறிய வேறுபாடு பொருத்தமாக இல்லை.கிளவியாக்கத்திலேயே தொல்காப்பியர் உருபனைக் கண்டறிதலையும் உருபன் பகிர்வையும் விளக்கியுள்ளார் என்பதையே இந்நூற்பா குறிப்பிடுகின்றது.

வினையின் தோன்றும் பாலறி கிளவியும்
பெயரின் தோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மரபினவே (சேனாவரையர் (உரை.ஆ.), தொல்காப்பியம் – சொல்லதிகாரம், கிளவியாக்கம், நூற்.494)

என்னும் கிளவியாக்க நூற்பா, எழுவாய் பயனிலைகளாக வருகின்ற சொற்கள் முறையே பெயர், வினைச்சொற்களின் திணை மற்றும் பால் இயல்பினைப் பேசுவதால், இது தொடரியல் கோட்பாட்டு நோக்குடையது என்பது தெளிவாகின்றது. நுட்பமாக நோக்கினால் உருபன்களைக் கண்டறியும் ஐந்து நூற்பாக்கள் கூடத் தொடரியலுக்கு உறுதுணையாகவும், கருவியாகவும் தொல்காப்பியரால் அமைக்கப்பட்டன என்பதைப் புலப்படுத்துகின்றன. இந்த விளக்கத்தின் அடிப்படையில் "கிளவிகள் பொருள் மேலாமாறு உணர்த்தினது கிளவியாக்கம்" என்னும் இளம்பூரணரின் கருத்து விளக்கத்தையும், இதனை ஒட்டிய பிற உரையாசிரியர்களின் கருத்துக்களையும் சிறப்பானதாகக் கொள்ள இயலாது. இதனால் தான் சேனாவரையரும் அவரை ஒட்டி நச்சினார்க்கினியரும் தொல்காப்பியரின் வழுக்கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர் எனக் கருதலாம்.

தொல்காப்பியம் கிளவியாக்கத்தில் 488-493 ஆகிய ஐந்து நூற்பாக்களும் சொல்லியல் கோட்பாட்டினவே.பால் வேறுபாடு ஒருமை எண்ணுக்கு உரியது எனக்கூறும் நூற்பாவும் சொல்லியல் இலக்கணம் பற்றியதே. "**ஒருமை எண்ணின் பொதுப்பிரி பால்சொல் ஒருமைக் கல்லது எண்ணுமுறை நில்லாது. (சேனாவரையர் (உரை.ஆ), தொல்காப்பியம் – சொல்லதிகாரம், கிளவியாக்கம், நூற்.527)** என்னும் கிளவியாக்க நூற்பா எண்ணுப்பெயர்களில் பால் வேறுபாடு என்பது; எண்ணுக்கு மட்டுமே உரியது என விளக்குகின்றது.தமிழில் உயர்திணைப் பன்மையில் ஆண்பால், பெண்பால் என்ற வேறுபாடு இல்லை.ஆதலால் கற்பித்தல் நோக்கத்திலேயே இந்த நூற்பா அமைக்கப்பட்டிருக்க வேண்டும் எனக்கருத இடமுள்ளது.ஆக மொத்தம் தொல்காப்பியம் - கிளவியாக்கத்தில் ஆறு நூற்பாக்கள் மட்டுமே சொல்லியல் கோட்பாடு பற்றியனவாக அமைந்துள்ளன எனலாம்.

கிளவியாக்கத்தில் 'வழுவமைதி' நெறிகள்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

தொல்காப்பியம் சொல்லதிகாரம் கிளவியாக்கத்தில், **வினையின் தோன்றும் பாலறி கிளவியும் பெயரின் தோன்றும் பாலறி கிளவியும் மயங்கல் கூடா தம்மர பினவே (சேனாவரையர் (உரை.ஆ), தொல்காப்பியம் – சொல்லதிகாரம், கிளவியாக்கம், நூற்.494)**

என்னும் நூற்பா மட்டுமே அனைத்து உரையாசிரியர்களாலும் வழு, வழு காத்தல், வழுவமைதி பற்றிய கருத்தாக்கங்களுக்கு ஆதாரமாகக் கொள்ளப்பட்டுள்ளன.இந்நூற்பாவின் இறுதி வரி மட்டுமே உரையாசிரியர்களின் வழுவமைதிச் சிந்தனைகளுக்கு ஆதாரமாக இருப்பதை அனைத்து உரையாசிரியர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்நூற்பாவிற்கு இளம்பூரணர், 'மயங்கல் கூடா' எனவே மயக்கமும் உண்டு என்று சொல்லப்பட்டதாம், மயக்கம் எனினும் வழு எனினும் ஒக்கும்'என எழுதியுள்ள உரைவிளக்கம் 'வழுக்காத்தல்' என்ற கருத்தாக்கத்திற்கு உரிய ஆதாரத்தைத் தெளிவுபடுத்துவதாக உள்ளது.

'வழு'வின் பொதுவிலக்கணம், வழுவின் வகை, இந்த நூற்பாவில் கூறப்பட்டுள்ள வழுவகைகள் ஆகியனவற்றையே உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டி விளக்கியுள்ளனர். இத்துடன் ஒவ்வொரு உரையாசிரியரும் தம் நோக்கத்திற்கேற்ப, கிளவியாக்கம் என்னும் இயலில் வேறுபல நூற்பாக்களையும் வழுக்காத்தலுக்குத் தொடர்புடையதாக எடுத்துக்காட்டியுள்ளனர். ஆதலால் கிளவியாக்கத்தில் உரையாசிரியர்களால் எடுத்துக்காட்டப்பட்ட வழுவகைகளைக் குறிப்பிட்டு, அவை திறனாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

வழுக்காத்தல் கோட்பாடு

வழுக்காத்தல் குறித்து விளக்க வந்த இளம்பூரணர் 'மயங்கல் கூடா' என்பதற்கு 'அவை விராதல் பொருந்தா' என உரையெழுதி உள்ளார்.'விராதல்' என்பதற்குக் 'கலத்தல்' என்பது பொருளாகும்.ஒன்றுக்கு உரியது அல்லாதது; கலத்தலே விராதல் ஆகும்.இதற்கு இளம்பூரணர் அவன் வந்தது, அவன் வந்தன என எடுத்துக்காட்டுத் தந்துள்ளார்.இவற்றுள் ஆண்பாலுக்கு உரியன அல்லாத வினைமுற்றுக்கள் வந்துள்ளமையால் வழுவாகும்.இளம்பூரணர் கருத்துப்படி இந்த எடுத்துக்காட்டுக்களில் இலக்கணம் மற்றும் தொடரியல் நிலையில் வழுக்காத்தல் அமைந்து உள்ளது.**"குறித்த பொருளை அதற்கு உரிய சொல்லால் சொல்லுக என்றல் வழுவற்க எனலாம். குறித்தற்பொருட்கு உரிய சொல் அன்றாயினும் ஒருவாற்றான் அப்பொருள் விளக்குதலின் அமைக என்றல் வழுவமைத்தலாம்" (சேனாவரையர் (உரை.ஆ),தொல்காப்பியம் - சொல்லதிகாரம், கிளவியாக்கம், 494ஆம் நூற்பாவிற்கான உரைவிளக்கம்)** எனச் சேனாவரையர் உரைவிளக்கம் தந்துள்ளார்.அவர் சொற்பொருண்மையியல் பார்வையில் மட்டுமே வழுவைக் கொண்டுள்ளார்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

ஆயினும் 'அவன் வந்தது, அவன் வந்தாள் - என மயங்கி வருவன எல்லாம் வழுவாம்' என்னும் அவருடைய உரைவிளக்கத்தில் தொடரியல் கோட்பாட்டு நோக்கமே முதன்மை பெறுகின்றது.எவ்வாறாயினும் இளம்பூரணர் எதிர்மறைப் பார்வையிலும், சேனாவரையர் உடன்பாட்டு அணுகுமுறையிலும் விளக்கியுள்ளனர் என்பதைத் தெளிவாக அறியலாம்.தெய்வச்சிலையார் தமது உரையில் "மயங்கல் கூடா என்றதனால் வழூஉப்படுதல் குற்றம் என்பது பெறுதும் என்று விளக்கி அவன் நெருநல் உண்டான் என்பது திணை வழுவதாயிற்று. அவன் உண்டது திணை வழூஉ" (தெய்வச்சிலையார் (உரை.ஆ), தொல்காப்பியம் - சொல்லதிகாரம், கிளவியாக்கம், 494ஆம் நூற்பாவிற்கான உரைவிளக்கம்) என்னும் எடுத்துக்காட்டுக்களைக் கொடுத்திருப்பதால் தெய்வச்சிலையாரும் இளம்பூரணரைப் போலத் தொடரியல் கோட்பாட்டு நிலையிலேயே வழுக்காத்தலைக் கொண்டிருப்பது தெளிவாகின்றது.

நிறைவுரை

தொல்காப்பியம் - சொல்லதிகாரம் கிளவியாக்கத்தில் உரையாசிரியர்களின் உரைவிளக்கங்களையும், தொல்காப்பியரின் கிளவியாக்க நூற்பாக்களையும் அடிப்படையாகக் கொண்டு தொல்காப்பியரின் தொடரியல் சிந்தனைகளை நுணுக்கமாக அணுகி ஆராயும் போது, கிளவியாக்கத்தில் மொழி அமைப்புப் பற்றிய சில பொது உண்மைகளைச் சொல்லியல், தொடரியல், வாக்கிய அமைப்பு என ஒன்றுக்கு மேற்பட்ட பார்வைகளில் விளக்குவதாகவே கொள்ள வேண்டியுள்ளது.

பயன்பட்ட நூல்கள்

[1] அகத்தியலிங்கம், ச., தமிழ்மொழி அமைப்பியல், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம், 2011.

[2] அகத்தியலிங்கம், ச., தொல்காப்பியச் சிந்தனைகள், அண்ணாமலைநகர், சிதம்பரம், 1985. அகத்தியலிங்கம், ச. (பதி.ஆ), தொல்காப்பிய மொழியியல், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், 1984.

[3] அரங்கன், கி., மாற்றிலக்கண மொழியியல், தமிழ் நூலகம், சென்னை, 1975.

[4] ஆபிரகாம் அருளப்பன் ரூ சுப்பிரமணியன், வி.ஐ., சொல்லதிகார உரைக்கோவை, பாளையங்கோட்டை, 1963.

[5] இளம்பூரணர் (உரை.ஆ), தொல்காப்பியம் சொல்லதிகார உரை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1988.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

முனைவர் உ.கருப்பத்தேவன். "உரையாசிரியர்களின் உரைநெறிகளில் "தொல்காப்பியம்" - கிளவியாக்கத்தில் தொடரியல் கோட்பாட்டுச் சிந்தனைகள்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 1, *திசம்பர்* 2020, பக். 58-65. டிஓஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.010**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Dr.U.Karupputhevan. ""Tholkappiam" in the Textual Writings of Elucidative Writers- Syntactic Perspective of Kilavuyakkam." *International Journal of Tamil Language and Literary Studies,* Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020, pp. 58-65. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.010**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

கூழங்கைத் தம்பிரானின் *நன்னூல்* எழுத்ததிகார எழுத்தியல் பதவுரை மரபு

The Glossarial Interpretation of *Nanool* by Koolngai Tambiran

முனைவர் வி.கலாவதி, தமிழ்த்துறைத் தலைவர், உதவிப்பேராசிரியர், இராஜுக்கள் கல்லூரி, இராஜபாளையம்.
Dr. V.Kalavathi , Assistant Professor & Head, Raju,s College,Rajapalayam.
ORCiD: https://orcid.org/0000-0003-2062-3072
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.011

Abstract

Any interpretations to grammar texts are bounded to time and the readers, in spite of its lexical values and rules and even the descriptive techniques to the text, but we have different interpretation to Tamil grammar texts such as tolkapiyam and nanool. On these tradition, A. Damotharan has published the 'nanool' glossary interpretation of Koolngai Tambiran, of 18th century in Germany and it was published by University of German in 1980. This research paper exposes the interpretation found in grammatical items 'eluththu', 'peyar', 'inam' in the chapter 'elutiyal'. Tambiran has taken contextual interpretation of sangara Namachivar, Ramanujar Kavirayar and Manakudavar whenever it needs. It is appreciable one in his textual interpretation. There is no doubt his book is very excellent on the tradition of grammatical interpretations to 'nanool'.

Keywords: N*nanool 'eluththu', 'peyar' 'inam' elutiyal' Tholkapiyam*

முன்னுரை

தமிழ் நூல்களை இலக்கியங்கள் இலக்கணங்கள் என்ற இருவகைப் பகுப்பின் கீழ் அடக்கலாம். அந்த வகையில் இலக்கணங்களின் பொருளைத் தெள்ளத் தெளிவாகவும், நயத்தோடும் எடுத்துரைக்கும் பாங்குடையவர்களாக உரையாசிரியர்கள் திகழ்ந்திருக்கின்றனர். நச்சினார்க்கினியர், பேராசிரியர், அடியார்க்குநல்லார், மணக்குடவர், பரிமேலழகர் போன்ற பலரும் தமிழில் இலக்கிய, இலக்கண உரையாசிரியர்களாகக் கூறுகின்றோம். இவர்கள் ஒவ்வொருவரும் அவரவர்க்கு உரிய பல வகை நெறிகளை வகுத்துக்கொண்டு அதன்படி நூல்களுக்கு உரைவகுத்துள்ளனர். இலக்கண நூல்களுக்கு உரை வகுப்போர் இலக்கணநெறி சிதறாமல் அதற்கேற்ப உத்திமுறைகளை கருத்தில் கொண்டு உரை வகுத்திருப்பதும் போற்றுதற்குரிய கருத்தாக நாம் எடுத்துக் கொண்டாலும், காலச் சூழலுக்குப் பொருத்தப்பாடுடையன. எனவே மேற்கொண்ட கருத்து வரவேற்கத் தக்கதாக அமையும்.

இலக்கண உரையாசிரியர்கள் கூழங்கைத் தம்பிரான் குறிப்பு

காஞ்சிபுரத்தில் 1699ஆம் ஆண்டு பிறந்தவர். தஞ்சைப் பகுதியில் வாழ்ந்தவர். பின்பு ஈழநாடு சென்று அங்கு ஆசிரியப் பணியாற்றியவர். இவர் *நன்னூல்* எழுத்ததிகாரத்திற்கு எழுதிய உரையே இவ்வாய்வு கட்டுரைக்கு மூலமாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

நன்னூலுக்கு உரை வகுத்தோர்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

நன்னூல் எனும் இலக்கணநூல் கி.பி.12ஆம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது கி.பி.13ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றியிருக்கலாம். தொல்காப்பியம் காலத்தால் முந்தையது எனினும், தமிழ் இலக்கணங்களுள் மிகவும் விரும்பி பயிலப்பட்ட தமிழ் இலக்கணம் நன்னூல். இந்நூலிற்கு 14ஆம் நூற்றாண்டில் மயிலைநாதர் என்பவரால் ஓர் உரையும், 17ஆம் நூற்றாண்டில் சங்கர நமச்சிவாயர் என்பவரால் ஒரு உரையும் எழுதப்பட்டது. இவை தவிர, கூழங்கைத் தம்பிரான், விசாகப்பெருமாளையர், இராமாநுசர், கவிராயர், ஆறுமுக நாவலர், சடகோப இராமாநுஜ சாரியார் முதலியோர் 19ஆம் நூற்றாண்டின் இறுதி வரையில் நன்னூலுக்குக் காண்டிகையுரைகளை இயற்றினர். 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கூழங்கைத் தம்பிரான் இயற்றிய நன்னூல் பதவுரை முழுவதும் அ.தாமோதரன் அவர்களால் கைப்பட எழுதப்பட்டதன் பிரதி ஜெர்மன் பல்கலைக்கழகத் தெற்காசிய நிறுவனம் 1980இல் முதன் முதலில் வெளியிட்டது. அதில் இடம்பெற்றுள்ள உரைநெறியை ஆராய்ந்து கூழங்கை தம்பிரானின் பதவுரைப் பணியில் எழுத்தியலைச் செவ்வனே ஆய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

பதவுரைப்பணி

உரையாசிரியர்களால் அதிக அளவில் மேற்கோளாக காட்டப்பட்ட இலக்கண நூல்கள் இரண்டு. 1.தொல்காப்பியம் 2.நன்னூல் இதில் அதிக அளவில் பதவுரை செய்யப்பட்ட நன்னூலில் ஒவ்வொரு அசைகளுக்கும் உரையுடன் இடம்பெற்ற நூல் மற்றும் பாடல் வரிகள் அனைத்தும் பொருளடைவுடன் ஒப்பு நோக்கும் பான்மையில் ஆய்வுப் பொருண்மையுடன் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

எழுத்தியல் உரைத்திறன்

கடவுள் வணக்கம் தொடங்கி அனைத்திலும் சொற்களுக்கான விளக்கங்களைக் காரண, காரியத் தொடர்புகளுக்கு உட்பட்டவையாக அணுகி உரைவகுத்திருப்பதில், தனக்கு முன்னால் உரை வகுத்தோரின் மேற்கோள்களைச் சுட்டிக்காட்டி உரை இயற்றிய போக்கு சிறப்புடையது. இதில்,

பூமலி அசோகின் புனைநிழலமர்ந்த
நான்முகற் றொழுது நன் இயம்புவ னெழுத்தே[1] (நன்னூல் ப - 32)

என்ற சூத்திரத்தில் 'பூமலி' என்ற சொல்லில் 'பூ' என்பதற்கு விளக்கம் தரும் போது நான்கு வகையான பூக்களைக் குறிப்பிடுகின்றனர். கொடிப்பூ, கோட்டுப்பூ, நீர்ப்பூ, புதர்ப்பூ என்று பூக்கள் பற்றிய வகைகளை சுட்டி இவைகள் இறைவனுக்கு படைக்கப்பட்டது என்பதாக கடவுள் வணக்கத்திலேயே பதவுரைப் பண்பினை, உரைநெறியை சுட்டிக்காட்டுகின்றார்.

எழுத்து என்பது பற்றி தொல்காப்பியம் கூறும் போது,

எழுத்தெனப் படுவ

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

அகர முதலா னகர இறுவாய்

முப்பஃதென்ப

சார்ந்து வரல் மரபின் மூன்றலங்கடையே [2] (தொல் - எழுத்து - நூ-1)

என வரிவடிவம் பற்றிக் கூறாமல் எழுத்து என்பது இலக்கணம் வகுத்தோரால் எழுத்து என்று வரையறுத்துச் சொல்லப்படுவன, அகரத்தை முதலாகக் கொண்டு னகர ஒற்றை இறுதியாகக் கொண்டு அமைக்கப்பட்டது என்ற பொருள் பட உரை வகுத்துள்ளனர்.இதே எழுத்து பற்றி நன்னூல் எழுத்தியலுக்கு உரை வகுத்த கூழங்கையார்,

எழுத்து என்றது யாது? எனில் முன்பு கட்புலன் ஆகாது மண்ணுருவாய் நிற்கும் கருத்துப் பொருளாய், பின்பு கட்புலனாகிய வடிவம் உடையவாய் வேறு வேறு வகுத்துக் கொண்டு தன்னையே உணர்த்தியும் சொற்கு இயைந்து நிற்கும் ஓசையே[3] (நன் - ப.33)

நச்சினார்க்கினியர் சுட்டிக்காட்டியதை கூழங்கையார் உரையில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறாகக் கட்புலனுக்கு ஆகும் பொருள், ஆகா பொருள் யாவற்றிற்கும் வடிவம் கொண்டு விளங்கும் எழுத்தை வடிவம் என்றும், ஓசை என்றும் பகுத்துக் கூறும் போது கடலோசை, சங்கோசை இவைகள் பொருள் உணர்த்தாது என்று கூழங்கையார் பதவுரையில் கூறியுள்ளார்.

மொழிக்கு முதல் காரணமாம் அணுத்திரளொளி[4] (நன்னூல் - நூ - 3) என்பதில் 'திரள் ஒலி' என்பதை உற்று நோக்கும் போது, கடலொலி, சங்கொலி பொருள்தராது என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு கூறியுள்ளார். இத்தகைய எழுத்தை வரிவடிவமாகவும், ஒலிவடிவமாகவும், தொல்காப்பியமும், நன்னூலும் கூறுகின்றன. எழுத்தின் வடிவத்திற்கு 'பதவுரை கூறும் போது தன் முன்னோர் மொழியைப் (உரையை) பின்பற்றி இராமாநுச கவிராயரின் உரையை கூறும் போது நமச்சிவாயர் உரையைப் பின்பற்றி,

எண் பெயர் முறை பிறப்பு உருவ மாத்திரை

முதலீறிடைபோலி யென்றா

பதம் புணர் வெனப்பன்னிரு பாற்றதுவே

இதில் 'யென்றா' என்ற சொல்லானது இலக்கணத்தை இருகூறுகளாகப் பகுக்கும்'[5] (நன்னூல்.ப.35)

இராமானுச கவிராயர் குறிப்பிட்டுள்ளதை கூழங்கையார் பதவுரையில் சுட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட கருத்தானது இராமானுச கவிராயர் குறிப்பிட்டுள்ளதை அதாவது எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை, முதல், ஈறு, இடைநிலை, போலி என்ற பதத்தினையும் அகத்திலக்கணமாகவும், பதம், புணர்ச்சி என்பதை புறத்திலக்கணமாகவும் கூறுகின்றார். இதனை,

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

எண்முதல் போலி வரையில் உள்ள பத்தும் எழுத்தின் அகத்திலக்கணம். பதமும், புணர்ச்சியும் ஆகிய இரண்டும் அதன் புறத்திலக்கணம் என்று சங்கர நமச்சிவாயர் (நன்.58) பாகுபாடு செய்வார். அப்பாகுபாடு 'என்றா' என்னும் எண்ணிடைச் சொல்லால் இந்நூற்பாவில் பிரித்துக் காட்டப்பட்டுள்ளது என்று இராமாநுச கவிராயர் (நன் - 57) கூறுவார்'[6] (நன்னூல் - ப.33) என்று கூழங்கையார் பதவுரையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

முதலும் சார்பும்

முதல் எழுத்துகள் முப்பது. சார்பெழுத்துக்கள் பத்து என்பது அறிந்ததே என்றாலும் தொல்காப்பியமும் நன்னூலும் இதில் வேற்றுமைப்படுத்தி கூறியது இங்கு நோக்கத்தக்கது. இதில்

அகர முதல் னகர இறுவாய்
முப்பஃதென்ப[7] (தொல் - எழுத்து - சூ -1)

என்று தொல்காப்பியமும்,

உயிரும் உடம்புமா முப்பது முதலே[8] (நன் - எழுத்தியல் - நூ - 4)

என்று முதலெழுத்தைக் கூறும் போது ஒப்புமை உடைய அதே தன்மையைச் சார்பெழுத்துக்கள் என்று வரும்போது தொல்காப்பியமும், நன்னூலும் வேறுபட்டு நிற்பதைக் காணமுடிகின்றது. இதனை மயிலைநாதர் உரையில் மேற்கண்ட கருத்தை கூழங்கையாற் கூறும்போது, **முதலெழுத்து எனத் தொகையான் ஒன்றும் உயிரெழுத்து, உடம்பெழுத்து என வகையான் இரண்டும் உயிர் பன்னிரண்டும் உடம்பு பதினெட்டும் என்று வகுத்துக் காட்ட விரியான் முப்பதும் ஆம் என்று விரித்துக் கூறுவார்.[9] (நன் - ப - 34)**

இன்றும் நன்னூலில் சுட்டப்படும் எழுத்தின் வகைமைகளையே, இலக்கண வல்லார் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர். சார்பெழுத்தில் தொல்காப்பியமும், நன்னூலும் வேறுபடும் இடங்களாகக் கூழங்கையார் கூறும் போது,

சார்பெழுத்துக்களின் விரி மூன்று என்று தொல்காப்பியமும் (நூ.2) முந்நூற்று அறுபத்தொன்பது என்று நன்னூலார் இருநூற்று நாற்பது என்று இலக்கண விளக்கமும் (நூ.5) கூறும்10 (நன்.ப-35). இதனை, தொல்காப்பியம்,

அவைதாம்,
குற்றிய லிகரம் குற்றிய லுகரம்
ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோரன்ன[11] (தொல் - எழுத்து - சூ-2)

என்று சார்பெழுத்தின் விரியாக இதனை எடுத்துக் கொள்ளலாம் என்பதை பின்பற்றி நன்னூலார் சார்பெழுத்தின் தொகை என்ற தலைப்பின்கீழ்

உயிர்மெய் யாய்த முயிரள பொற்றள

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

பஃகிய இஉ ஐஒள மஃகான்

தனிநிலை பத்துஞ் சார்பெழுத்தாகும்[12] (நன் - நூ - 5)

தனிநிலை என்பதை ‘ஆய்தம்’என்று எடுத்துக் கொள்ள வேண்டும் என்பார் சங்கர நமச்சிவாயர். இதனை கூழங்கையார் தம் பதவுரையில், **தனிநிலை ஆய்தம். உயிர்களோடும் மெய்களோடும் கூடியும் கூடாதும் அலிபோலத் தனி நிற்றலின் தனிலை (நன் - 60) என்று இதனை விளக்குவார்.[13]** என்று உரை வகுத்துள்ளார். (நன் - ப.34) ஆய்தம் பற்றி கூறும் அறுவகையிலக்கணம் என்னும் நூலில்,

உயிர் என்று ஆய்தம் என்று ஒற்று என்று உயிர்மெய் என்று

அலகு என்று கூட்டு என்று அறுவகை எழுத்தும்

அன்றிக் குறிப்பு என்று அவை சிலஉணவே[14] (அறுவகை இலக்கணம், நூ.2 ப - 9)

தனித்து இயங்குவதால் உயிர் முதலிலும், உயிரெழுத்து துணையின்றி இயங்காததால் ஆய்தம் அடுத்தும், உயிரின் துணையின்றி உச்சரிக்க முடியாத மெய்யெழுத்து மூன்றாவதாகவும் கூறுவர்.

தொல்காப்பியர் முதலிய அனைத்து இலக்கணிகளும் கொள்ளும் முதல், சார்பு என்னும் பிரிவை இந்நூலாசிரியர் கொள்ளவில்லை. எனினும் ஆய்தத்தை உயிருக்கும், மெய்க்கும் இடையே வைத்துக்கூறிய அதனானே இவர் வீரசோழியம், நேமிநாதம் ஆகிய இரண்டினையும் ஒட்டி முதல் எழுத்துக்கள் முப்பதொன்று என்னும் கொள்கையை உடையவர் எனலாம்.[15] (அறுவகை இலக்கணம், நூ.2 ப - 9) என்று அறுவகை இலக்கண நூலார் கூறுகின்றார்.

எழுத்தின் பெயரில் பதவுரை

நன்னூலில் இடம்பெற்றுள்ள எழுத்தின் பெயர் போல தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் பெயர் பற்றி சுட்டப்படவில்லை. ஆனால் நன்னூலில்,

அம் முதலீரா றாவி கம் முதல்

மெய்ம் மூவாறென விளம்பினர் புலவர்[16] (நன் -நூ - 8)

என்ற நூற்பாவில் இடுகுறிப்பெயர், காரணப்பெயர் என்பனவற்றுள், இடுகுறிப் பெயருக்கு, ‘ஒரு பொருளைக் குறித்தற்குக் கடவுளானும் அறிவுடையோரானும் இட்ட குறியாகிய இடுகுறிப்பெயர்’[17] (நன்-ப- 35) என்று சங்கர நமச்சிவாயர் குறிப்பிடுகின்றார்.

மூவினம்

தொல்காப்பியம், மூவினங்களும் பிறக்கும் இடங்களை அடிப்படையாகக் கொண்ட வல்லினமெய், மெல்லினமெய், இடையினமெய் என்று பகுத்துள்ளார்.

‘வல்லெழுத் தென்ப கசடதபற’[18] (தொல் - எழுத்து - சூ-19)

‘மெய்யெழுத் தென்ப ஙஞணநமன’[19] (தொல் - எழுத்து - சூ - 20)

‘இடையெழுத்தென்ப யரலவழள’[20] (தொல் - எழுத்து -சூ - 21)

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

இதனையே மொழிமுதல், இறுதி, எழுத்துக்கள் என்று பிரிக்கும் உரைக்காரர்கள் பற்றி யகர, வகர வரிசை நீங்கிய ர, ல, ழ, ள என்பவை தமிழ்ச் சொல்லில் முதலாக வருவன அல்ல. பின்னை வருவனவாம். இவற்றை முன்னை அறிதல் பயன்கருதி விளக்கப் பெற்றதுவாம். சொல்லாய்வு முறையால் ஏற்பட்ட தெளிவால் பழைய உரைகாரர்கள்,

வல்லினத்தில் க, ச, த, ப - என்னும் நான்கு எழுத்துக்களும்,

மெல்லினத்தில் ஞ, ந, ம - என்னும் மூன்று எழுத்துக்களும், இடையினத்தில் ய, ல - என்னும் இரண்டு எழுத்துக்களும் மொழி (சொல்) முதலாக வரும் என்று கூறும் நயமும் போற்றத்தக்கதாம். (தொல் -எழுத்து - ப.19) என்பார் இரா. இளங்குமரனார். இதனை நன்னூலார்,

'வல்லினங் கசடதபற ஆறே'[21] (நன் - நூ.13)

'மெல்லினம் ஙஞணநமன என ஆறே'[22] (நன் -நூ .14)

'இடையினம் யரலவழள என ஆறே'[23] (நன் -நூ .15)

என்று கூறும் முறைமையால் தொல்காப்பியமும் நன்னூலும் வேறுபாடு உடையனவே தவிர முறைமை ஒன்றே என்பது தெளிவாகின்றது.

எழுத்தியலில் சுட்டெழுத்து

சுட்டெழுத்தினை தொல்காப்பியர்,

'அ இ உ அம் மூன்றும் சுட்டு'[24] (தொல் - எழுத்து சூ - 31) என்பார்.

நன்னூலார் 'அ இ உம் முதற் நனிவரிற் சுட்டே'[25] (நன் -நூ -15)என்பார். ஆக, இரு இலக்கண நூலார் ஒத்த சுட்டெழுத்துக்குரிய கோட்பாட்டைச் சுட்டிக்காட்டினாலும், இந்த நூற்பாவிற்கு இலக்கண விளக்கம் 6ஆம் சூத்திரத்தில் வைத்திய நாத தேசிகர் தடை கூறுகின்றார்.

எழுத்துக்களின் பிறப்பு

தமிழ் மொழியின் சிறப்பே எழுத்துக்களை உச்சரிக்கும் தன்மையினால் சிறப்புடையதாக புகழோடு விளங்குகின்றது. இத்தகைய உச்சரிப்பு முறைமைகளுக்கு பெரும் பெயர் சேர்க்கும் இலக்கண நூலாம் தொல்காப்பியத்தை அடியொற்றி நன்னூலும் எழுத்துக்கள் பிறக்கும் முறைகளை விளக்குகின்றது.

'உந்தியில் எழுந்த காற்றினைக் கூறுபடுத்தி மாத்திரைக் கூட்டிக் கோடலும், மூலாதாரம் முதலாகக் காற்று எழுமாறு கூறலும் வேதத்திற்கு உளதென்று இவ்வாசிரியர் கூறி அம்மதம் பற்றி அவர் கொள்வதோர் பயன் இன்றென்றலின்' [28] (நச் - தொல் - எழுத்து சூ.102)

என்று பிறப்பியல் முறைமைகளை நச்சினார்க்கினியம் சுட்டிக்காட்டுகிறது. இதனை பொது நூற்பா ஒன்றின் மூலம் நன்னூல் கூறும் போது

நிறையுயிர் முயற்சியினுள் வளி துரப்ப

எழுமணுத் திரளுரங் கண்ட முச்சி

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

மூக்குற்றிதழ் நாப் பல்லணத் தொழிலில்

வெவ்வே றெழுத்தொலி யாய்வரல் பிறப்பே'29 (நன் - நூ - 19)

என்ற நூற்பாவிற்கு மயிலை நாதர், நச்சினார்க்கினியர், வைத்தியநாத தேசிகர், சிவஞான முனிவர் போன்றோர் எழுத்துகளில் கிடக்கை முறையை அடிப்படையாகக் கொண்டு உரை வகுத்துள்ளனர் என்பதை கூழங்கையார் பதவுரை எடுத்துரைக்கின்றது.

முடிவுரை

கூழங்கை தம்பிரான் இயற்றிய நன்னூல் பதவுரையில் எழுத்தியலில் எழுத்து, பெயர், இனம் இவை பற்றி மட்டுமே இக்கட்டுரையில் சுட்டப்பட்டுள்ளது. சொற்களுக்கு பொருள் விளக்கம் தந்துள்ளதோடு அல்லாமல் சங்கரநமச்சிவாயர், இராமாநுசக் கவிராயர், மணக்குடவர் போன்றோர் கூறியுள்ள கருத்துரைகளை இந்நூலில் தந்துள்ளதால் இவர்களின் நூலை பார்க்க வேண்டிய சூழல் ஆய்வாளர்களுக்கு ஏற்படாது. மொழிமுதலாக வரும் எழுத்துக்கள், நன்னூலில் ஒரேயொரு நூற்பாவிற்காக மறுப்புரை எழுதப்பட்ட உரையாசிரியர்கள் பற்றி கூறப்பட்ட கூழங்கைத் தம்பிரானின் நன்னூல் பதவுரை ஆய்வளார் யாவரும் பின்பற்றும் தன்மைக் கொண்டு விளங்கும் சிறந்த இலக்கணப் பதவுரையாகத் திகழ்கின்றது.

துணைநூற்பட்டியல்

[1] நன்னூல் மூலமும் கூழங்கைதம்பிரான் உரையும், அ.தாமோதரன், சுதர்சன் கிராபிக்ஸ், சென்னை - 17 முதல் பதிப்பு 2010.

[2] தொல்காப்பியம் தெளிவுரை எழுத்ததிகாரம், முதுமுனைவர் இரா.இளங்குமரனார், நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு, மதுரை -17. முதற் பதிப்பு 2017.

[3] அறுவகை இலக்கணம், பதிப்பும் உரையும் புலவர் ப.வோ.நாகராசன், தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியீடு, தஞ்சாவூர், முதற்பதிப்பு 1991.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

கலாவதி. "கூழங்கைத் தம்பிரானின் *நன்னூல்* எழுத்ததிகார எழுத்தியல் பதவுரை மரபு." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 1, *திசம்பர்* 2020, பக். 66-73. டிஒஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.011**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Kalavathi. "The Glossarial Interpretation of *Nanool* by Koolngai Tambiran." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020, pp. 66-73. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.011**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

ஆறுமுக நாவலரின் உரைசிறப்புகள்
The Explanatory Excellence of Arumuga Navalar

முனைவர் த.கலாஸ்ரீதர், உதவிப்பேராசிரியர், ஓலைச்சுவடித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
Dr.T.Kalasridhar, Assistant Professor, Department of Palmleaf Manuscripts, Tamil University, Tanjore.
ORCiD: https://orcid.org/0000-0001-6666-7455
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.012

Abstract

Arumuga navalar is noted for his literary contributions to Tamil Source Texts. Navalar says the deed of a commentator to be erudite in the classical works of the Tamil Language. He suggests that the dictionary knowledge is more vital to a commentator. In the same manner, Navalar has deep knowledge in the semantic meaning of Tamil lexicon and other sources. His explanation on "Thirukkural" is a masterpiece that polishes the inner meaning of the Kural with strong identity. Hence, this article gives a short analysis of the prose contributions and its effectiveness of Arumuga Navalar.

Keywords: Explanatory Notes, "Thirukkural", Arumuga Navalar

பழந்தமிழ் இலக்கியங்களில் உள்ளத்தைப்பறிக்கொடுத்தவராக நாவலர் திகழ்ந்து வந்ததை அவர் எழுதிய, பதிப்பித்த நூல்கள் சான்றுகளாகத் திகழ்கின்றன. உரையாசிரியர்பணியானது எவ்வாறு இருக்கவேண்டுமென்று தான் மேற்கொண்ட உரை பணியினைப்பற்றி நாவலர் கூறுவதாவது,

> "உரை எழுதும் பணி மிகவும் எளிதானது அல்ல. ஒரு நூலுக்கு உரை எழுதும் பொழுது அந்நூலை பன்முறைக் கற்றிருக்க வேண்டும். நிகண்டுகளையும் பிழையறப் பயின்றிருக்க வேண்டும். மூல நூலில் எக்கருத்துச் சொல்லப்பட்டிருக்கிறதோ, அதற்கு மட்டுமே உரை எழுத வேண்டும். மூல நூலாசிரியரின் கருத்துக்குமாறுப்பட்டக் கருத்துக்களைத் தாமே வலியப் புகுத்தி உரை எழுதக்கூடாது. அனைத்திற்கும் மேலாக எழுதப்படும் உரையானது அனைவருக்கும் மிக எளிதில் விளங்கும் முறையில் அமையவேண்டும். இத்தகைய அனைத்து முறைகளையும் கையாண்டு எழுதும் முறையே மக்களால் ஏற்றுக்கொள்ளப்படும்."[1]

முதலில் அதனடியில் பதவுரை (இதன்பொருள்), அதற்குக்கீழ் இதனது தாத்பரியம் (பொருள்), என்ற தலைப்பில் விளக்கம் என்கிற முறையில் உரைகள் அமைந்திருக்கும். திருக்குறளின் பரிமேலழகர்உரைப்பதிப்பில் உடுக்குறியிட்டு அந்தப்பக்கத்தில் அடிக்குறிப்பில் உரையாசிரியர்தரும் விளக்கம் அமைந்திருக்கும்.[2]

இலக்கியப்பணிகள்

1853 ல் நாவலர்பதிப்பித்த ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன் ஆகிய இரு நூல்களின் முகப்புப் பக்கத்தில் "ஆத்திச்சூடியும், கொன்றை வேந்தனும் யாழ்ப்பாணத்து நல்லூர்ஆறுமுகநாவலர்திருத்தப்பட்ட உரையுடன் சென்னப்பட்டணம் வித்தியாநு பாலன யந்திர சாலை ஒன்பதாம் பதிப்பு சர்வசித்து வருடம் சித்திரை மாதம்"[3] என்றுள்ளது. 108

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

சூத்திரமாக அமைந்துள்ள ஆத்திச்சூடி மூலம் என்ற நூலில் முதலில் பாடல் அடுத்துப் பதவுரை சிலவிளக்கங்கள் அமைந்துள்ளன.

சுருக்கமான உரை

தையல் சொற் கேளேல் (62)

தையல் - (உன்) மனைவியுடைய சொல்லை, கேளேல் - நீ கேட்டு நடவாதே.

சுருக்கமான விளக்க உரை

சனி நீராடு (16)

சனி – சனிக்கிழமைதோறும், நீர்ஆடு - (எண்ணெய் இட்டுக்கொண்டு) நீரிலே தலைமுழுகு. புதன் கிழமையிலும் முழுகலாம்.

பழிப்பன பகரேல் (76) பழிப்பன - (அறிவுடையவர்களாலே) பழிக்கப்படுவனாகிய இழிச்சொற்களைப் பகரேல் - நீ பேசாதே.

இழிச்சொற்களாவன பொய்,குறளை, கடுஞ்சொல், பயனில் சொல் என்கிற நான்குமாம்.

மெல்லினல்லாடோள்சேர்(93)

மெல் = மெல்லிய, இல் = (உன்)மனையாட்டியாகிய நல்லாள் பெண்ணினுடையதோள் = தோள்களையே சேர் = நீ புணர்

நீண்ட விளக்கவுரை

ஙப்போல் வளை(15)

ஙப்போல்=ஙகரம் (தான் பிரயோஜனமுள்ளதாய் இருந்து தன் வருக்கத்தைத் தழுவுதல்) போல வளை = நீ (பிரயோசனமுள்ளவனாய் இருந்து உன் இனத்தைத்) தழுவு.

ஙகரமானது அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம் என்று சொல்லுக்குக் காரணமாய் வரும். அதில் வருக்கங்களாகிய ஙா, ஙி, ஙீ, ஙு, ஙூ, ஙெ, ஙே, ஙை,ஙொ, ஙோ, ஙௌ என்கின்ற பதினொன்றும் சொல்லுக்குக் காரணமாதல் இல்லை. ஆயினும், ஙகரத்தின் பொருட்டு இவைகளையும், நெடுங்கணக்கிலே வழங்குவார்கள். அதுபோலவே, நீ கல்விச் செல்வங்களினாலே பிறருக்கு உதவி செய்வாயாயின். அவர் உன்னைத் தழுவுவதன்றி உன் பொருட்டு உன் இனத்தாரையும் தழுவுவர் என்பதாம்.

திருக்குறள்

1860-ல் தெய்வப்புலவர் திருவள்ளுவ நாயனார் செய்த தமிழ் வேதமாகிய திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் வெளியிடப்பட்டது.

"இவை இராமநாதபுர சமஸ்தானம் ம-ள-ள-ஸ்ரீ பொன்னுசாமித் தேவரவர்கள் வேண்டுகோளின்படி யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரவர்களால் பல பிரதிரூபங்களைக் கொண்டுப் பரிசோதித்து சிதம்பர சைவப் பிரகாச விததியாசாலைத் தருமபரிபாலகர் Mudlr.G. சுப்பிரமணியம் அவர்களால் சென்னபட்டணம் வித்தியாநுபாலன யந்திரசாலையில் அச்சிற் பதிப்பிக்கப்பட்டன"[4] என்ற குறிப்பு இந்நூலின் முதல் பக்கத்தில் உள்ளது. 1955ஆம் ஆண்டு வரை இந்நூல் 14 பதிப்புகளைப் பெற்றுள்ளது.

திருக்குறளுக்கு உரைகண்ட பரிமேலழகர் ஆங்காங்குப் பல்வேறு தமிழ் இலக்கியங்களிலிருந்தும் மேற்கோள் காட்டிச் செல்வார். ஆனால் அவை எந்தெந்த நூல் என்பதைக் கற்றுவல்ல பெரும்புலவர்களே நாவலர் தம் பதிப்புரையில் அடிக்குறிப்பாக

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

அத்தகைய இலக்கியங்களைப் பாடல் எண்களோடு குறித்திருப்பது இவரின் நுண்மாண் நுழைபுலத்தை வெளிப்படுத்தும்.

அறத்தான் வருவதே (குறள் 39) எனும் குறட்பா உரையில் ஆறறுருபு ஈண்டுடணி கழ்ச்சிக்கண் வந்தது. தூங்கு கையானோங்குநடைய என்புழிப் போல என்பர் பரிமேலழகர். இது **புறநானூற்றுப்பாடல் 22** என்று அடிக்கோடிட்டுக் காட்டுவார் நாவலர்.[5]

இந்நூலுக்குச் சிறப்புப் பாயிரங்கள் அளித்தவர்கள் மகாவித்துவானாகிய திரிசிபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, அவருடைய மாணாக்கரும் சிதம்பரம் செட்டியார் குமாரருமாகிய தியாகராசச் செட்டியார், மகாவித்துவான் மாணவரும் சங்கரலிங்கப் பிள்ளை குமாரருமாகிய தெய்வநாயகப் பிள்ளை மகாவித்துவான் மாணவரும் வீரச்செட்டியார் குமாரருமாகிய சோடசாவ தானம் சுப்பராயச் செட்டியார் ஆகியோராவர். இந்நூலின் அடிக்குறிப்பில் நாவலர் தம்முடைய கருத்துகளை விளக்கவுரையாகத் தந்துள்ளார். அவற்றுள் ஒரு சில வரிகள் வருமாறு

இருள்சேர் இருவினையும் (குறள் 5) என்னும் திருக்குறள் உரையின் அடிக்குறிப்பில்,

"ஈண்டு நல்வினையென்றது அழிதன் மாலையவாயதுறக்கவின் முதலிய காப்பியங்களைப் பயப்பனவாகிய வேள்வி முதலியனவற்றை இவை வீட்டுக்கு நேரே வாயிலாகிய தத்துவ ஞானத்தைப் பயவாமை மாத்திரையேயன்றித் தீவினைபோல அது நிகழ வொட்டாது தடை செய்து நிற்றலுமுடையனவாம். ஆதலால் இந்நல்வினை தீவினையிரண்டும் ஒருவனுக்கு ஞானத்தைத் தடுத்துப் பந்தமுறுத்து தற்கண் பொன்விலங்கும் இருப்பு விலங்கு போலத் தம்முளொப்பனவாமென்க. சரியை கிரியை யோகங்கள் ஞானம் வாயிலாக வீடுபயத்தலின் ஈண்டு நல்வினையென்றது அவற்றையன்றென்க"[6]. என்று பொருள் விளக்கம் தருகின்றார்.

கோளிற் பொறியில் (குறள் 9)எனத் தொடங்கும் குறளில் வருகின்ற எண்குணங்களுக்குப் பரிமேலழகர் சைவ ஆகமத்தில் கூறப்பட்டுள்ள சிவபிரானுக்குரிய குணங்களைக் கூறுவதோடு நிறுத்தி விடுகின்றார். நாவலர் இதன் அடிக்குறிப்பில்,

தன்வயத்தனாதல் சுவதந்திரத்துவம் தூயவுடம் பினாதல் விசுத்ததேகம் இயற்கையுணர்வினனாதல் நிராமயான்மாமுற்றுமுணர்தல் - சருவஞ்ஞத்துவம் இயல்பாகவே பாசங்களினீங்குதல் அனாதிபோதம் பேரருளுடைமை அலுப்தசக்தி முடிவிலாற்றலுடைமை அநந்தசக்தி வரம்பிலிம்பமுடைமை திருப்பி எட்டு வான குணத்திசனெம்மான்றனை என திருநாவுக்கரசு நாயனாரும் இரும்புயர்ந்த மூவிலையை சூலத்தினான யிறையவனை மறையவனையெண் குணத்தினானை, எனச் சுந்தரமூர்த்தி நாயனாரும், அருளிச்செய்த வாற்றானும் இறைவனுக்கு எண்குணமுண்மை சிவாகமநூற்றுணி வென்பதறிக" என்று விளக்கம் தருகின்றார்.[7] **தெய்வந்தொழாஅன் (குறள் 55)** எனும் திருக்குறளில் இடம்பெற்றுள்ள கொழுநற்றொழுதெழுவாள் என்றதன் அடிக்குறிப்பில்,

"கொழுநற் றொழுதெழுவாளென்பது எழுந்து கொழுநற் றொழுவானென முன்பின்னாகப் பொருள்படு மென்றார் பிரயோகவிவேக நூலார். அவர் கூறுமாறு – இனிக் கொழுநற்றொழு தொழுவாள் - தொழுதெழுவார் வினைவள நீறெழ என்னும் திருவள்ளுவரினும் திருக்கோவையாரினும் பரிமேலழகரும் பேராசிரியரும் தொழா நின்றெழுவாள் தொழாநின்றெழுவார் எனத்துணை வினையாயுரைப்பர். எழுதல்

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

துயிலொழிதலாதலின் எழுந்து தொழுவாள், எழுந்து தொழுவார் என முன் பின்னாகப் பொருள்படுதலன்றி, நகுபுவந்தான், ஓடிவந்தான் என்பன போலத் தொழாநின்று துயிலொழிதல் கூடாதென்க.

வைகறையா மந்துயிலெழுந்து நான் செய்யுநல் லறமுமொண் பொருளுஞ் சிந்தித்ததுவாய் வதிர்றத்தையுந் தாயுந் தொழுதெழுக (ஆசாரக்கோவை 5ம் பாட்டு) என்பது துயிலெழுந்து பின்றந்தையுந் தாயுந் தொழுது பின் காரியத்திற் செல்க வெனப்பொருள்பட்டு வருதலானும், அவருரை அசம்பாவித மென்க" (நான்காவது திங்ஙங்ப்படலம் 5ம் பாட்டுரை)[8] என்று விளக்கம் தந்துள்ளார். எந்நன்றி கொன்றார்க்கும் (திருக்குறள் 110) என்னும் திருக்குறள் உரை விளக்கத்தில், "பெரிய அறங்களைச் சிதைத்தலாவாது ஆன்முலையறுத்தலும் மகளிர் கருவினைச் சிதைத்தலும்பார் பார்த்தபுதலும் (தபுதல் – கெடுதல்) முதலிய பாதகங்களைச் செய்தல்" என்று பரிமேலழகர் எழுதுவது, புறநானூற்றுப் பாடலை அடியொற்றியது என்பதுஅறியச் செய்வதுடன் அப்பாடலையும் எடுத்துக் காட்டுகிறார். அதுவருமாறு,

ஆன்முலைஅறுத்தஅறளிலோர்க்கும்
மாணிழைமகளிர்கருச்சிதைத்தோர்க்கும்
-குரவர்த்தப்பியகொடுமையோர்க்கும்
வருவாய்மருங்கில்கழுவாயும்உளவே-
நிலம்புடைபெயர்வதாயினும்ஒருவன்
செய்திகொன்றார்க்குஉய்திஇல்லென்று
அறம்பாடிற்றேஆயிழைகணவ (புறநானூறு – 34)[9]

இதில் வருகின்ற எழுத்திலுள்ள இரண்டு அடிகளும் பார்ப்பார்த்தப்பிய கொடுமையோர்க்கும் வழுவாய் மருங்கிற் கழுவாயும் உளவென ச.வையாபுரிப்பிள்ளையின் பதிப்பிலுள்ளன. பாடவேறு பாடாகக் கூடக் காட்டப் பெறவில்லை. இதுஆய்வுக்குரியது. **தார்தாங்கிச்செல்வதுதானை (குறள் 767)** என்னும் திருக்குறள் உரை விளக்கத்தில் "படைவகுப்பாவது வியூகம். அஃது எழுவகை யுறுப்பிற்றாய் வகையானான்காய், விரியான் முப்பதாம் உறுப்பேழாவன உரமுதற் கோடியீறாயின. வகை நான்காவன தண்டம் மண்டலம் அசங்கதம், போக மெனவிவைவிரி முப்பதாவன தண்டவிரி பதினேழும்மண்டல விரி இரண்டும் அசங்கத விரியாறும், போகவிரி யைந்து மெனவிவை. இவற்றின் பெயர்களும் இலக்கணமும் ஈண்டுரைப்பிற் பெருகும். அவையெல்லாம் வடநூல்களுட்கண்டு கொள்க" என்று பரிமேலழகர் கூறி செல்கின்றார். ஆயினும் நாவலர் இவற்றுக்குரிய விளக்கங்களை அடிக்குறிப்பில்தந்து விடுகின்றார்.

நாவலர்தரும்விளக்கம்

உறுப்பேழாவன – உரம், இயற்கையிரண்டு, மத்தியம்பிரதிக்கிரகம், பிரிஷ்டம் (பிரதிக்கிரகம் – கொடைபெறுதல், சேனையின்பின்பகுதி) கோடிஎனவிவை – தண்டம், சேனையைக் குறுக்காக நிறுத்துவது மண்டலம் – பாம்பு மண்டலமிடுவது போலச் சேனையை

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

நிறுத்துவது. அசங்கதம் – சேனையை வேறு வேறாக நிறுத்துவது. போகம் – சதுரங்க சேனையை ஒன்றுக்குப்பின் ஒன்றாக நிறுத்துவது. தண்டவிரி பதினேழாவன பிரதரம்[10]. (பிரதரம் – பெரும்பாடு)

மேற்கூறப்பட்டவைகளைப் போல ஆறுமுகநாவலர் உரையெழுதும் போது படிப்பவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் தனக்கென்று தனி நடையைக் கையாண்டுள்ளார் என்பது அவரது உரையின் சிறப்பம்சமாகும். நாவலர் பதினாறு நூல்களுக்கு உரை எழுதிப்பதிப்பித்துள்ளார்.

துணைநூல்கள்

[1] மகாலட்சுமி. திமற்றும்பலர் (ப.ஆ) சுவடிச்சுடர். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. (2001). பக்கம் 176.

[2] பரமசிவம். த.கோ (ப.ஆ) சுவடிப்பதிப்புநெறிமுறைகள். கருத்தரங்ககட்டுரைகள் தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர். (1989). பக்கம் 37, 38.

[3] மாதவன். இராசுவடிப்பதிப்பியல். பாவைவெளியீட்டகம், தஞ்சாவூர். (2000). பக்கம் 184.

[4] சதாசிவம். மு (ப.ஆ) பதிப்புநெறிமுறைகள். சரசுவதிமகால்நூலகம், தஞ்சாவூர். (1991) பக்கம் 77, 78.

[5] கலாஸ்ரீதர். தசுவடியியல்வரலாறு. அகரம்மனைஎண் 1, நிர்மலாநகர், தஞ்சாவூர் – 7. பக்கம் 137, 138.

[6] விநாயகமூர்த்தி. அமூலபாடஆய்வியல். பாலமுருகன்பதிப்பகம், மதுரை. (1978), பக்கம் 101, 102.

[7] கலாஸ்ரீதர். தசுவடியியல்வரலாறு. அகரம்மனைஎண் 1, நிர்மலாநகர், தஞ்சாவூர் – 7. பக்கம் 137, 138.

[8] கலாஸ்ரீதர். தசுவடியியல்வரலாறு. அகரம்மனைஎண் 1, நிர்மலாநகர், தஞ்சாவூர் – 7. பக்கம் 137, 138

[9] டாக்டர்உ.வே. சாமிநாதையார். புறநானூறுமூலமும்உரையும். உ.வே. சாநூல்நிலையம், எண் 2, அருண்டேல்கடற்கரைச்சாலை, பெசன்ட்நகர், சென்னை 600 090.

[10] கலாஸ்ரீதர். த சுவடிப் பதிப்பாசிரியர்களின் வரலாறும் பதிப்புப்பணியும், Tissl Publication (2017)பக்கம் 82, 83.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

கலாஸ்ரீதர். “ஆறுமுக நாவலரின் உரைசிறப்புகள்.” *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* தொகுதி 3, *சிற.இதழ்* 2, தொகுதி 1, *திசம்பர்* 2020, பக். 74-79. டிஒஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.012**

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Kalasridhar. "The Explanatory Excellence of Arumuga Navalar." *International Journal of Tamil Language and Literary Studies,* Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020, pp. 74-79. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.012**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் உரைத்திறன்
The Textual Excellence of Pinnathur Narayana Swami Iyyer

முனைவர் இரா.கவிதா, உதவிப்பேராசிரியர், மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி,, மதுரை – 4
Dr.R.Kavitha, Assistant Professor, Mannar Thirumalai Naicker College, Madurai -4
ORCiD: https://orcid.org/0000-0001-7672-7773
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.013

Abstract

"Ettuthokai" and "Pattuppattu" are notable Sangam literary sources that portray the life and tradition of the Sangam people. In every century remarkable literary sources and textual denotations are widely written by Tamil scholars. There are many secondary sources written for the Sangam original sources."Ettuthokai" and "Pattuppattu" have enormous textual writings for secondary study. Pinnathur Narayana Swami Iyyer had written a textual denotation in the 20th Century. He has employed sublime skills to decipher the original texts with the same verve of meaning. He gives apt meanings foe words in regard to the 20th Century vocabulary, metaphorical language and other grammatical elements to "Nattrinai". So, the article elicits a brief study on the textual excellence of the renowned Tamil scholar Pinnathur Narayana Swami Iyyer.

Keywords: Textual Excellence, "Nattrinai", Pinnathur Narayana Swami Iyyer

முன்னுரை

உலகச் செம்மொழிகளுள் தலைசிறந்து விளங்கும் தமிழ் மொழிக்கு வளம் சேர்க்கும் விதமாக காலந்தோறும் இலக்கியங்கள் தோன்றிய வண்ணம் உள்ளன. செழுமையும் வளமையும் கொண்ட பழமையான தமிழ் இலக்கியங்களை அறிந்து கொள்வதற்கு அதற்கென எழுதப்பட்ட உரைகள் துணைபுரிகின்றன. தமிழ் இலக்கியங்களுள் மிகவும் பழமையானது சங்க இலக்கியங்களாகிய எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகும்.

எட்டுத்தொகை நூல்கள்

பாட்டும் தொகையுமாக உள்ள சங்க இலக்கியங்கள் பதினெண் மேற்கணக்கு நூல்கள் என வழங்கப்படுகின்றன. அவற்றுள் எட்டுத்தொகை பல்வேறு புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பாகும்.

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம் புறம் என்று
இத்திறத்த எட்டுத்தொகை

என்ற பாடல் எட்டுத்தொகை நூல்களை வரிசைபடுத்திக் கூறுகிறது. அவ்வகையில் எட்டுத்தொகையில் முதலாவதாக இடம் பெற்றிருப்பது நற்றிணை ஆகும். நற்றிணை என்பது நல் + திணை . திணை என்றால் ஒழுக்கம். தமிழர்களின் தலைசிறந்த வாழ்வியல் விழுமியங்களை , ஒழுக்கத்தை எடுத்துக்கூறுவதால் இது நற்றிணை எனப் பெயர் பெற்றது. நற்றிணைக்கு பழைய உரை இல்லை. இருபதாம் நூற்றாண்டு உரையாசிரியர்களுள் ஒருவரான பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் அவர்களே முதன் முதலில் நற்றிணைக்கு உரை எழுதியுள்ளார்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டத்தில் உள்ள பின்னத்தூர் என்னும் ஊரில் பிறந்தவர். இவர் சிறந்த தமிழறிஞரும் நினைவாற்றல் கலைஞரும் ஆவார். நீலகண்டேசுவரக்கோவை, இடும்பாவனப்புராணம் முதலிய பதினெட்டு நூல்களை தமிழ்கூறு நல்லுலகத்திற்குப் படைத்தளித்தவர். நற்றிணைக்கு இவர் எழுதிய உரையை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பெரும்பாலான நூல்களில் உரையாசிரியர்களின் உரைகளை தொகுத்து நோக்கும்பொழுது அவர்களின் நடைச்சிறப்பு, பிற உரைகளை மறுத்துக்கூறுதல், நாடகப்பாங்கு, இயைபு சுட்டல், உவமை கூறுதல், சொற்பொருள் விளக்கம் சுட்டல், மேற்கோள் காட்டல் போன்ற பல பொதுவான உரை மரபுகளை கடைபிடித்துள்ளமையைக் காண முடிகிறது.

இவ்வகையான உரைமரபுகள் பலவற்றையும் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் அவர்களும் தன் உரையில் பின்பற்றியுள்ளதைக் காண முடிகிறது.

உரையாசிரியர் கூறும் உத்திகள்

அருஞ்சொற்பொருள் விளக்கம் தருதல்
திணைப்பாகுபாடு கூறுதல்
உவமை சுட்டல்
மெய்ப்பாடுகளை குறிப்பிடுதல்
மேற்கோள் தருதல்
இலக்கண குறிப்புரைத்தல்
உள்ளுறை உவமம் கூறுதல்
இறைச்சியை எடுத்துரைத்தல்
விழுமியங்களை எடுத்துக் கூறுதல்

அருஞ்சொற்பொருள் விளக்கம் தருதல்

உரையாசிரியர்கள் பொருள் புரிந்துகொள்ள இயலாத புதிய சொற்களுக்கு பொருள் கூறுவர். அவ்வகையில் ஐயர் அவர்களும் தன்னுடைய உரையில் பல சொற்களுக்கு பொருள் கூறியுள்ளார். நற்றிணையில் முதல் பாடலில் பசத்தல் என்ற சொல்லிற்கு பசலை பாய்தல் என்று பொருள் கூறியுள்ளார். இச்சொல்லின் விளக்கமாவது கண்ணாடி மேல் வாயினால் ஊதிய ஆவிபட்டால் அக்கண்ணாடி மழுக்கமடையும். அதுபோல தலைவனின் பிரிவால் தலைவியின் ஒளிபொருந்திய நெற்றி மழுங்கித் தோன்றும். மேலும் குழுசி-தாழி, வெளில்-தயிர்கடைவதற்கு நட்ட தூண் என்று பொருள் கூறியுள்ளார். " வைகுபுலர் விடியல் மெய்கரந்து" என்ற தொடருக்கு பகல் பொழுதில் வெண்ணையை கடைந்தால் அது உருகும் என்பதால் வைகறையில் கடைதல் என்று குறிப்பிட்டுள்ளார். நற்றிணை 261-வது பாடலில் மாசுணம் என்றால் பாம்பு என்று பொருள் கூறியுள்ளார். மேலும் காழ், ஆரம்,சாந்து முதலிய சொற்களுக்கு சந்தன மரம் என பொருள் கூறியுள்ளார். இவ்வாறு ஒரு பொருளுக்கு பல சொற்களைப் பெற்று இருக்கும் தமிழ்மொழியின் சொல்வளத்தை இவர் உரையின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

திணைப்பாகுபாடு கூறுதல்

தமிழர்கள் தங்கள் வாழ்வியலை அகம், புறம் என இருவகையாக பிரித்தனர். அகம் என்பது காதல் வாழ்வையும் புறம் என்பது அவர்களது வீரத்தையும் சுட்டுவதாகும். அகவாழ்வைக் குறிக்கும் ஐந்திணைகளை அன்பின் ஐந்திணை என பகுத்தனர். அதற்கு அடிப்படையான நிலங்களை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகையாக

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

பிரித்தனர். அதை அடியொற்றி ஐயர் அவர்களும் ஒவ்வொரு பாடலுக்கும் திணையைக் குறிப்பிட்டுள்ளார். பாடலை விளக்கும் விதமாக கூற்று விளக்கம், உரை, உரைவிளக்கம் என்ற முறையில் அவருடைய உரைத்திறன் அமைந்துள்ளது.

உவமை சுட்டல்

உயர்ந்த பொருள்களை உவமையாக சுட்டுவது மரபு. அவ்வகையில் தலைவி தலைவனோடு கொண்ட நட்பிற்கு உவமையாக மலர்களில் சிறந்த தாமரையிலிருந்து எடுக்கப்பட்ட தேன்துளிகள் மலை உச்சியிலுள்ள உயர்ந்த சந்தன மரத்தில் வைத்த இனிய தேன்கூட்டிற்கு உவமையாக சொல்லப்பட்டுள்ளது.

தாமரைத் தண்டாதூதி மீமிசைச்
சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை (நற்: 1)

என்றவாறு தாமரைத்தாது தலைவன் உள்ளத்திற்கும் சந்தனத்தாது தலைவி உள்ளத்திற்கும் உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

பழையன் வேல் வாய்த்தன்ன நின்
பிழையா நன்மொழி (நற்:10)

என்ற வரிகளில் தலைவனின் சொல்லுக்கு வேல்படை உவமையாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு சிறப்பான பல உவமைகளை ஐயர் அவர்கள் தன்னுடைய உரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மெய்ப்பாடுகளைக் குறிப்பிடுதல்

தொல்காப்பியர் எண்வகையான மெய்ப்பாடுகளை விளக்கிக் கூறுகிறார்.

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டாம் மெய்ப்பாடுஎன்ப (தொல்:மெய்: 247)

ஐயர் அவர்களும் நற்றிணைப் பாடல்களில் இருக்கக் கூடிய மெய்ப்பாடுகளை குறிப்பிடுகிறார். முதல் பாடல் தலைவன் தலைவியின் உயர்ந்த நட்பை வெளிப்படுத்துவதால் அதை உவகை எனக் குறிபிட்டுள்ளார். இரண்டாவது பாடல் உடன்போக்குச் சென்ற தலைவியின் நிலையை கண்டோர் வருந்திக் கூறுவதாக அமைந்துள்ளது. ஆகவே அதை அழுகை என்னும் மெய்ப்பாடாக கூறியுள்ளார். இவ்வாறு ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் அது உணர்த்தக்கூடிய மெய்ப்பாட்டைக் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கோள் தருதல்:

நற்றிணை உரையில் ஐயர் அவர்கள் உரை விளக்கத்திற்காக பல நூல்களில் இருந்து ஐம்பத்து ஆறு இடங்களில் மேற்கோள் காட்டியுள்ளார்.

நீரின்றமையா உலகம் போல (நற்: 1: 6)

என்ற நற்றிணைப் பாடல் வரிக்கு மேற்கோளாக திருக்குறளைக் கூறி விளக்கம் தருகிறார்.

நீரின்றி அமையாது உலகினில் யார்யார்க்கும்
வானின்று அமையாது ஒழுக்கு (குறள்: 20)

எப்படி நீர் இல்லாமல் இந்த உலகத்தில் உயிர்கள் வாழாதோ அதுபோல் தலைவன் இல்லாமல் தலைவி உயிர் வாழமாட்டாள் என்பதைக் கூறுகிறாள்.

பாட்டம் பொய்யாது பரதவர் பகிர (நற்: 38)

என்ற பாடல் வரிக்கு வெண்பாட்டம் வெள்ளநதரும் என்ற பழமொழியையும்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

நெடுங்கடலுந் தண்ணீர்மை குன்றந் தடிந்தொழிலி
தானல்கா தாகி விடின் (குறள்: 17)

என்ற குறளையும் மேற்கோள்காட்டி விளக்குகிறார். இதன்மூலம் கடல் பொருளுக்கும் மழை இன்றியமையாதது என்பதை உணர்த்துகிறார்.

இலக்கணக் குறிப்புரைத்தல்

நாராயணசாமி ஐயர் அவர்கள் நற்றிணை உரையில் பல்வேறு இலக்கணக் குறிப்புகள் தந்து விளக்கியுள்ளார். நற்றிணை 16-வது பாடலில் கனங்குழை என்பதை அன்மொழி எனவும் கனங்குழைக்கு என்பதை உருபு மயக்கம் எனவும் குறிப்பிட்டுள்ளார். 21-வது பாடலாகிய மருத நிலப் பாடலில் நெய்பால் விதிர்த்தல் என்பதை திணைக்கேற்ற உவமை என குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு 144 இடங்களில் இலக்கண குறிப்புகளின் வாயிலாக உரை விளக்கம் தந்துள்ளார்,

உள்ளுறை உவமம் கூறுதல்

உள்ளுறை உவமை என்பது உள்ளுறுத்துச் சொல்லபடுகின்ற உவமையாகும்

பிறிதொடுபெடாது பிறப்பொடு நோக்கி
முன்ன மரபிற் கூறுங்காலைத்
துணிவொடு உரூஉந் துணிவினோர் கொளினே (தொல்: 294)

என்றவாறு தொல்காப்பியர் உள்ளுறை உவமையைக் குறிப்பிடுகிறார்.

பொருஇல் ஆயோடு அருவி ஆடி (நற்: 44)

என்ற குறிஞ்சித்திணைப்பாடலில் குறவர் மின்மினியை விளக்காகக் கொண்டு மலையின் இயக்கத்தை அறிவது போல தலைவனும் தோழி கூற்றால் தலைவியின் இயக்கத்தை அறிய முயலுகின்றான் என்ற உள்ளுறை உவமையை எடுத்துக் கூறுகிறார் இது போல ஐயர் அவர்கள் தன்னுடைய உரையில் 113 இடங்களில் உள்ள உள்ளுறை உவமைகளைச் சுட்டுகிறார்

இறைச்சியை எடுத்துரைத்தல்

இறைச்சி என்பது கருப்பொருட்களின் அடிப்படையாக வைத்துக் கூறப்படுவது.

இறைச்சிதானே உரிப் புறத்ததுவே (தொல்:14)

என தொல்காப்பிய நூற்பா இறைச்சி பற்றிக் கூறுகிறது.

இருப்பைப் பூவின் அன்ன (நற்:111)

எனத் தொடங்கும் பாடலில் சிறுவர்கள் கடல் பரப்பிற்குச் சென்று பிடித்துக் கொண்டுவந்த மீன்களை மணலின்கண் பரப்பி வைத்துள்ளார்கள். அது தலைவன் வேற்று நாட்டிற்குச் சென்று தேடிக் கொண்டு வந்த பொருட்கள் இல்லம் முழுவதும் பரப்பி நின்றதை இறைச்சியாக கூறப்பட்டுள்ளது. இதுபோல் 110 பாடல்களில் இறைச்சி சுட்டப்பட்டுள்ளது.

விழுமியங்களை எடுத்துக் கூறுதல்

சங்க இலக்கியங்கள் அக்கால மக்களின் பழக்க வழக்கங்களை மற்றும் பண்பாட்டு மரபுகளை விளக்கி கூறுகிறது . அது போல் ஐயர் அவர்களும் நற்றிணையில் இடம்பெற்றுள்ள பல்வேறு பண்பாட்டுச் சிந்தனைகளைக் கூறுகிறது. பக்தி இலக்கிய காலத்தில் பாவை நோன்பை மேற்கொண்டு மார்கழி நீராடலை மேற்கொண்டனர். அதுபோல சங்க காலத்தில் தை மாதம் நீராடக் கூடிய வழக்கம் இருந்தது என்பதை ,

வான்பெயல் நனைந்த புறத்த நோன்பிய

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

தையூ ணிருக்கையில் தோன்று நாடன் (நற்: 22)

என்ற பாடல் வாயிலாகவும் அறிந்து கொள்ள முடிகிறது.

இவ்வாறு பல வாழ்வியல் நெறிகளை நாராயண சாமி ஐயர் உரை வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது .

அறிவியல் செய்திகள்

பழந்தமிழர்கள் பண்டையக்காலம் தொட்டே அறிவியல் சிந்தனைகள் பலவற்றைக் கொண்டிருந்தனர்

பல்திர் மண்டிலம் பகல்செய் தாற்றிச் (நற்: 69)

பல கதிர்களை உடையசூரிய மண்டலம் என கூறுவதன் வாயிலாக சூரிய மண்டலத்தைப் பற்றிய அறிவு அக்கால மக்களுக்கு இருந்ததை அறிய முடிகிறது.

தொகுப்புரை

எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக வைத்துப் போற்றப்படும் நற்றிணைக்கு முதன் முதலாக 20 ஆம் நூற்றாண்டில் உரை எழுதியவர் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் ஆவார். நற்றிணைக்கு இவர் எழுதிய உரையில் சிறப்பான பல உத்திமுறைகளைப் பயன்படுத்தியுள்ளார். அருஞ்சொற்களுக்கு ஏற்ற பொருளை சுருக்கமாகவும் சில இடங்களில் விரிவாகவும் கூறியுள்ளார். திணைபாகுபாடு, கூற்று,கூற்று விளக்கம், உரை, உரை விளக்கம் என்ற வகையில் நாராயணசாமி அவர்களின் உரை அமைந்துள்ளது. உவமை, உள்ளுறை, இறைச்சி போன்றவற்றை தெளிவாக எடுத்துக்கூறி உரை விளக்கம் தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடலிலும் பொதிந்துள்ள மெய்ப்பாடுகளை பாடலின் இறுதியில் கூறப்பட்டுள்ளது. உரை விளக்கம் செய்வதற்கு பிற நூல்களிலிருந்து மேற்கோள்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. சில பாடல்களில் உள்ள அறிவியல் செய்தியும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. சங்ககால மக்களின் வாழ்வியல் விழுமியங்களையும் இவ்வுரை வாயிலாக அறிய முடிகிறது. இவ்வாறு சொற்பொருள் விளக்கம், திணைபாகுபாடு, உவமை, உள்ளுறை, இறைச்சி, மெய்ப்பாடு, விழுமியங்கள் போன்ற பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தி சிறப்பான முறையில் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் நற்றிணைக்கு உரை வகுத்துள்ளமையைக் காணமுடிகிறது.

துணைநூற்பட்டியல்

[1] மு.வை.அரவிந்தன், உரையாசிரியர்கள், மணிவாசகர் நூலகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை,சென்னை – 600108, எட்டாம் பதிப்பு – சனவரி 2018.

[2] முனைவர் ந.கடிகாசலம், (பதிப்பாசிரியர்), சங்கப் புலவரின் பல்துறை அறிவு, மெய்யப்பன் பதிப்பகம், 53, புதுத்தெரு, சிதம்பரம்- 608001.

[3] திருக்குறள் பரிமேலழகர் உரை, கௌரா ஏஜென்ஸீஸ், 10,14தோப்புவெங்கடாசலம் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

[4] இளம்பூரணர் உரை, தொல்காப்பியம் (எழுத்து,சொல்,பொருள்), சாரதா பதிப்பகம், 3- ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, ராயபேட்டை, சென்னை – 600014,

[5] மகாவித்துவான் ரா.ராகவையங்கார், நல்லிசைப் புலமை மெல்லியலாளர்கள், நாம் தமிழர் பதிப்பகம், சென்னை – 600 004, முதற்பதிப்பு – ஜூலை 2009.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

[6] கு.வே. பாலசுப்ரமணியம் (உரையாசிரியர்), நற்றிணை, நியூ செஞ்சூரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி, அம்பத்தூர், சென்னை – 600 098, முதல் பதிப்பு – ஏப்ரல் – 2004.

[7] பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் உரை, நற்றிண, கழக வெளியீடு, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிக்கழகம், சென்னை – 600018, மறுபதிப்பு – 2007.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

கவிதா. "பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் உரைத்திறன்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 1, *திசம்பர்* 2020, பக். 80-85. டிஒஐ: **DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.013**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Kavitha. "Mandothari of "The Textual Excellence of Pinnathur Narayana Swami Iyyer." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020, pp. 80-85. DOI: **DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.013**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /NIL

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இல்லை /NIL

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

வை.மு.கோ பார்வையில் கம்பராமாயணத்துள் மண்டோதரி

Mandothari of "Kambaramayanam" in the View of Vai.Mu.Ko

முனைவர் ப. கவிதா, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, சி. கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி, கடலூர்.
Dr. P. Kavitha, Assistant Professor, Department of Tamil, C. Kandaswami Naidu College for Women, Cuddalore.
ORCiD: https://orcid.org/0000-0002-0388-111X
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.014

Abstract

In Tamil literature, the work of "Kambaramayanam" scores its highest place in the line of epics of Tamil Language. Kambaramayanam is the vital one in use to bring down human relations in the ancient age. Most of the Tamil epics are naturally embedded with such rhetoric elements. Therefore, the aim of the research article fosters to decipher the epic features embedded with the perfect Tamil prosody. In particular, the character Madothari of Kambaramayana is presented throughout M. V. Gopala Krishanmachari's point of view, with meaning in Tamil for better understanding among readers.

Keywords: Epic, Kambharamayam, Mandothari, Explanatory Writer, Vai. Mu. Ko

முன்னுரை

கம்பராமாயணம் தமிழ் காப்பியங்களில் மிகச் சிறந்த படைப்பாக கருதப்படுகிறது. கம்பராமாயணத்திற்கு உரை வகுத்தோர் பலர் என்றாலும் சிறப்பான உரைவகுத்தோர் சிலர் அதில் குறிப்பிடத்தக்கவர் வை. மு. கோபால கிருஷ்ணமாச்சாரியார் ஆவார். கம்பராமாயணம் என்னும் நூல் முழுமைக்கும் சிறந்த உரைவகுத்தவர் வை.மு.கோ. இருபதாம் நூற்றாண்டில் தமிழில் அதிகமான நூலுக்கு உரையெழுதிய பெருமை அவரையே சாரும். இவருடைய உரையில் கருத்துரை நயம் தொடர்களுக்கு உரை இலக்கணக்குறிப்பு ஆகியன செம்மையாக அமைந்தாலும் பல புராணக்கதைகளுக்கு ஒப்புமைக் காணும் திறம் இவருடைய எழுத்து நடையில் உண்டு. மேலும், இவருடைய நூலில் ஆழ்ந்தகன்ற புலமையையும் கம்பஇராமாயணத்தில் உள்ள ஈடுபாட்டையும் வை.மு.கோவின் உரைவளம் உணர்த்துகிறது. உதாரணமாக, இக்கட்டுரை மண்டோதரியின் என்னும் பெருந்தகையாளின் பண்புநலன்களையும் செயல்பாடுகளையும் வை.மு.கோ ஆய்வு செய்து, சுருக்கமாக முன் வைக்கிறது.

தமிழ் உரைநூல் ஆசிரியர்களின் முக்கியத்துவம்

தமிழ் உரைநூல் ஆசிரியர்கள் (அ) உரை வகுத்தோர் பல ஆண்டுகளுக்கு முன் பாடல் அல்லது செய்யுள் வடிவில் இயற்றப்பட்ட தமிழ் நூல்களின் பொருளை உணர்ந்து ஆராய்ந்து உரைவடிவில் எல்லோரும் எளிதில் புரிந்துக்கொள்ளும் படி எழுதியவர்கள் ஆவார்கள். உலக மொழிகள் அனைத்தும் காலப்போக்கில் மாற்றம் அடைகின்றன. மாற்றம் என்பது

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

அனைத்திலும் அவசியமானதாகவும் தவிர்க்;க முடியாததாகவும் கருதப்படுகிறது. பழைய சொற்கள் வழக்கிழப்பதும் புதிய சொற்கள் தோன்றுவதும் கூடுதலாக இலக்கண மாற்றங்கள் ஏற்படுவது இயல்பு என்றும் அறிஞர்கள் தெரிவிக்கின்றனர். இக்காரணத்தினால் பழங்காலத்தில் இயற்பட்ட நூல்கள் பல நூற்றாண்டுகளுக்குப் பின் முறையான சொல்லின் பொருள் புரிந்துக்கொள்ள முடியாமல் போகின்றது. மேலும் பழைய இலக்கிய வடிவமும் எளிதில் புரிந்துக்கொள்ள இயலாத சூழலுக்கு தள்ளப்படுகிறது. இதன் அடிப்படையில் மிகப்பழமை வாய்ந்த இலக்கியமான தமிழ் இலக்கியமும் இதற்கு விதி விலக்கு அல்ல. தமிழ்மொழியில் ஏற்பட்ட மாறுதல் காரணமாக சங்ககாலத்திலும், பின்னர் சங்கம் மருவிய காலத்திலும் எழுதப்பட்ட நூல்களை புரிந்துக்கொள்ளாமல் போனதும் "பா" வடிவில் சுருக்கமாக கூறிய விஷயங்களை விரிவாக விளக்க வேண்டிய தேவை ஏற்பட்டதாலும் பிற்காலங்களில் பல நூல்களுக்கு பல உரையாசிரியர்கள் தோன்றினர். இதனால், காலமாற்றத்திற்கு ஏற்ப நூல்களுக்கு மக்கள் புரிந்துக்கொள்ளும் வகையில் வெவ்வேறு உரைகள் எழுதப்படுவதும் மேலும் காலம் செல்ல அந்த உரைகளை புரிந்துக்கொள்ளாமல் போவதும் புதிய உரைகள் எழுதப்படுவதும் வழக்கமான நிகழ்வு என்று சான்றோர்கள் கூறுகின்றனர்.

கி.பி 9 முதல் கி.பி 13 வரை உரைகள் மேலோங்கிய காலம் என்றும் கி.பி 12 முதல் – கி.பி 18 வரை உரையாசிரியர்கள் காலம் எனலாம். உலகின் மிக சில மொழிகளிலே தமிழ்மொழியில் இருப்பது போன்ற செவ்விலக்கிய வளம் உள்ளது. நமது பழந்தமிழ் இலக்கியம் மட்டும் அல்லாது உரைவளமும் அதன் மரபும் வளமிக்கது, செறிவானது எனவும் கூறுவர். கி.பி பத்தாம் நூற்றாண்டிலேயே தமிழில் உரை மரபு தொடங்கி விட்டதாக ஆய்வின் அடிப்படையில் பல ஆய்வாளர்கள் கருதுகின்றனர். உதாரணமாக, இலக்கண நூலான தொல்காப்பியம் நீதி நூலான திருக்குறள் மற்றும் பக்தி இலக்கியமான நாலாயிர திவ்விய பிரபந்தம் உள்ளிட்ட நூல்களுக்கும் உரைகள் வெளிவந்தன. கி.பி 19 முதல் – கி.பி 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் பல பழந்தமிழ் இலக்கியங்கள் காலக்கறையானிடமிருந்து மீட்கப்பட்டு உரைகள் எழுதப்பட்டன. பிற்பகுதியில் பெரிதும் தொய்வடைந்ததற்கு சமூகவியல் சார்ந்த காரயங்களும் உண்டு.

உரையாசிரியர்களின் பணி என்பது ஒரு வகையில் எதையும் எதிர் பாராத பணி. மூலநூல் வெளிவந்து வெகுகாலம் ஆகிவிட்டபடியால் அதனை சார்ந்த சமூக, இயற்கை பிண்ணனியும் சொற்களும் சமகால வாசகர்களுக்கு புரியாமல் போகிவிடக்கூடும் என்ற நல்ல எண்ணத்தினால் உரையாசிரியர்கள் தமிழ் இலக்கியங்களை அடுத்த தலைமுறைக்கு சென்று சேர்த்த பெருமை அவர்களையே சாரும். பழம்மரபில் மணக்குடவர், இளம்பூரணர், நச்சினார்கினியர், அடியாருக்கு நல்லார், பரிமேலழகர், பெரியவாச்சான் பிள்ளை என்ற

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

உரையாசிரியர்களும் நவீன மரபில் உ.வே.சா, வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார், தி.வே.கோபாலய்யர், ஔவை துரைசாமிப்பிள்ளை, என்று மேலும், பலரும் சிறப்பான பங்களிப்பை தந்திருக்கிறார்கள். குறிப்பாக வை.மு.கோ என்ற உரையாசிரியர் கம்பராமாயணத்திற்கு சிறப்பான உரைவிளக்கம் கொடுத்துள்ளார். பழந்தமிழ் இலக்கியத்திற்கும் தற்காலச் சமூகத்திற்கும் பாலங்கள் அவசியம். செம்மொழி ஆன தமிழ்மொழி குறித்த பெருமைக்கு இந்த இலக்கியங்களே மூலக்காரணம்.ஆகவே புதிய சமூகநிலைகள் மாறிவரும் மொழியின் தன்மை இவற்றுக்கேற்ப பழந்தமிழ் இலக்கியங்களுக்கு உரைகளும் அறிமுகங்களும் செய்யப்படுவது அவசியம்.[1]

கம்பராமாயணத்துள் கற்புக்கினிய மண்டோதரி [7]

காப்பியத்தில் இராவணனின் மூத்த மனைவி கற்புக்கடம் பூண்டவள். இராவணனுக்கு மனைவியர் பலர் காணப்பட்டாலும் எந்த ஒரு கலக்கமும் மனதில் கொள்ளாதவள். இவளை முதலில் சுந்தர காண்ட ஊர்தேடு படலத்தில் காணமுடிகிறது[2,4]. அனுமன் இவளைப் பள்ளியறையிலே காணுகின்றான். இவளை சீதை என்றே நினைக்கின்றான். கம்பர் மண்டோதரியைக் காட்டுமிடத்து,

> **அன்னள் ஆகிய சானகி இவளென**
> **அயிர்த்து அகத்தெழு வெந்தீத்**
> **துன்னுமஆர் உயிர் உடலொடும் சுடுவது ஓர்" (வை.மு.கோ. சுந்தரகாண்டம், ஊர்தேர் படலம், பா. 199)**

என பாடல் சுட்டுகிறது. இப்பாடலில் "மண்டோதரியைச் சீதை என நினைத்து அனுமன் சினங்கொண்டதாக" **வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார்**[3] இதற்கு உரைவிளக்கம் தருகிறார். சீதையின் அழகும் பொறுமையும் இவள் பொருந்தப் பெற்றதால் அனுமனுக்கு சீதையாகவும் தென்பட்டாள் என்றே கூற வேண்டும். இவளின் பொறுமையானது இராவணன் சீதை மீது காதலுற்று அவளை அசோகவனத்தில் கடத்திக் கொண்டு வைத்தான் என்று தெரிந்தும் பொறுமையோடு இருந்த உயர்வினை எடுத்துக்காட்டுகிறது.

மேலும் வால்மீகியில் மண்டோதரி சிவனிடம் ஒரு வரம் கேட்டதாகக் குறிப்பிடுகின்றது. ஐயனே! என் கணவனுக்குச் சீதை இசையாமல் இருக்க வேண்டும் என்றும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் என் கணவனுக்குச் சீதை கிடைக்கக்கூடாது என்றும் வேண்டியதாகத் தெரிகிறது. இவளின் வேண்டுதல் கம்பனிலும், வால்மீகியிலும் இவள் பெற்ற வரத்தை மறந்து வேண்டியதாகத் தெரிகிறது. இராவணன் கற்புக்கரசியை வலுக்கட்டாயமாகக் கற்பழித்தான் எனில் அவன் தலை சுக்குநூறாய் வெடித்து விடும் என்பதை மறந்தே வேண்டியிருக்கிறாள் என்பது புலனாகிறது.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

காப்பியத்துள் மண்டோதரி சோகத்தின் விளிம்பாகவே நமக்குக் காட்சியக்கின்றாள். இராவணன் சீதையின் மையலில் வாடுகின்றான். காப்பியத்துள் மண்டோதரி சோகத்தின் விளிம்பாகவே நமக்குக் காட்சியளிக்கின்றாள். இராவணன் சீதையின் மையலில் வாடுகின்றான். மைந்தனும் இராவணனின் எண்ணத்திற்குத் துணையாக நிற்கின்றனர். இதில் கணவனையும் இழந்து மகனையும் இழந்து தனிமரமாகக் காப்பியத்தின் இறுதியில் மரணவாயிலை அடைகிறாள் மண்டோதரி. இங்கே இந்திரசித்தனை இளமையிலேயே பறிகொடுத்து விட்டாள் மண்டோதரி என்பார் வி.சா.பாலசுப்பிரமணியன்[5]. கம்பன் படைத்த பெண்மையுள் இவளையே பாவப்பட்ட பெண்ணாக வடித்திருக்கின்றான். இவளைக் காப்பித்துள் நான்கு இடங்களில் மட்டுமே காணமுடிகிறது. இதில் இரண்டு இடங்கள் பேசாமலும் இரண்டு இடங்களில் இரண்டு இடங்களில் பேசியும் அழுதும் புலம்பும் பாத்திரமாகத் தென்படுகிறாள். இவளின் மனவுளைச்சல் காப்பித்துள் நம்மையும் உருக்குலைய வைப்பதாக இருக்கின்றன. அவற்றுள் இலக்குவனனால் இந்திரசித் வீரமரணம் அடைகிறான். இவனின் மரணம் மண்டோதரியைப் பதறவைக்கிறது. கம்பர் இதனை அவற்றுள் இலக்குவனனால் இந்திரசித் வீரமரணம் அடைகிறான். இவனின் மரணம் மண்டோதரியைப் பதறவைக்கிறது. இதனை,

பஞ்செரி உற்ற தென்ன
அரக்கர்தம் பரவை எல்லாம்
வெஞ்சின மனிதர் கொல்ல
விளைந்ததே மீண்ட தில்லை
அஞ்சினேன் அஞ்சினேன் இச்
சீதையென்று அமிழ்தில் தோய்த்த
நஞ்சினால் இலங்கை வேந்தன்
நாளைஇத் தகையன் அன்றோ (வை.மு.கோ. யுத்தகாண்டம் – 2, இராவணன் சோகப்படலம், பா. 53)

என்றே கம்பரின் பாடல் சுட்டுகிறது. இப்பாடலில் "போருக்குச் சென்ற வீரர்கள் போரில் தீப்பற்றி எழும் பஞ்சுபோல் அழிந்தல்லவோ இருக்கின்றனர். அமிழ்தால் செய்யப்பட்ட நஞ்சல்லவோ இராமனின் சீதை கற்புத்தெய்வம்! மறம் எனும் இடத்தை அறம் என்னும் சிரஞ்சீவி அழிக்காமல் விடுமோ? நாளை உன் தந்தையின் நிலைமையும் இப்படித்தான் இருக்கும் என்று மண்டோதரி புலம்புவதாக" **வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார்**[3] இதற்கு உரைவிளக்கம் தருகிறார். யுத்தகளத்தில் இறுதிநாள் இராவணன் களம் புகுகின்றான். வானும் வையகமும் அச்சமும் அதிசயமும் கொள்கிறது. கொடும்போரில் இராவணன் மாண்டு போகிறான். இதை அறிந்த மண்டோதரி போர்க்களம் நோக்கி ஓடி வருகிறாள். இராவணன்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

உடல்மீது விழுந்து துடிக்கின்றாள். இராவணனின உடலில் இராமபாணம் துளையிட்டதைக் கண்டு அவள் கூறும் இரங்கல் செய்தியானது நெஞ்சைத் துளையிடும் நிகழ்வாய் அமைகிறது. இதனைக் கம்பர் [2] **வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த**

திருமேனி மேலும் கீழும்

எள்ளிருக்கம் இடமின்றி உயிர் இருக்கும்

இடம்நாடி இழைத்த வாறோ!

கள்ளிருக்கும மலர்க்கூந்தல் சானகியை

மனச்சிறையில் கரந்த காதல்

உள்ளிருக்கும் எனக்கருதி உடல்புகுந்து

தடவியதோ ஒருவன் வாளி!"

(வை.மு. கோ, யுத்தகாண்டம் – 2, இராவணன் வதைப் படலம், பா. 239)

இப்பாடலின் வாயிலாய் இராவணனின் உடலில் எள்ளளவும் துளையின்றி இராமபாணம் பொருந்தியிருப்பால் சீதை மீது கொண்ட காதல் உன் திருமேனியில் எங்கு உளதென தேடித்திரிந்து சோதித்ததோ அந்த அம்பு என்று பொருமுகின்றாள் என்று **வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார்**[3] இதற்கு உரைவிளக்கம் தருகிறார். மேலும், இராவணனின் இந்த நிலைக்குக் காரணம் உணர்ந்தவள் மேலும் உரைக்கின்றாள்.

காந்தையருக்கு அணியனைய சானகியார்

பேரழகு மவர்தங் கற்பும்

ஏந்துபுயத் திராவணனார் காதலுமச்

சூர்ப்பணகை இழந்த மூக்கும்

வேந்தர்பிரான் தயரதனார் பணிதன்னால்

வேங்கானில் விரதம் பூண்டு

போந்ததுவுங் கடைமுறையே புரந்தரனார்

பெருந்தவம்ஆய்ப் போயிற் றம்மா" (வை.மு. கோ, யுத்தகாண்டம் – 2, இராவணன் வதைப்

படலம், பா. 241)

என்று தன் வேதனையை வெளிப்படுத்தும் மண்டோதரி இராவணனின் இத்தகைய நிலை கற்பின் அணியாகக் கொண்ட சானகியின் அழகாலும் கற்பினாலும் சூர்ப்பணகையின் மூக்கு அறுபட்டதனாலும் இராமன் தாய்சொல்லை மதித்து வனம் புகுந்ததாலும் இந்திரன் செய்த பெருந்தவத்தை மேம்படுத்தி விட்டதே என்றும் புலம்புவதாக **வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார்**[3] இதற்கு உரைவிளக்கம் தருகிறார். மூலநூல் வால்மீகி ராமாயணத்தை தமிழுக்கு தகுந்தாற்போல் ஒரு சில இடங்களில் மாற்றி கம்பராமாயணம்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

காவியத்தை இயற்றி இருப்பார் கம்பர். [7] வால்மீகி ராமாயணத்திற்கும் கம்பராமாயணத்திற்கும் இடையிலான முக்கிய வேறுபாடுகளை சுருக்கமாக முன் வைக்கிறது. [8]

முடிவுரை

கம்பராமாயணம் தமிழ் காப்பியங்களில் மிகச் சிறந்த படைப்பாக கருதப்படுகிறது. கம்பராமாயணத்திற்கு உரை வகுத்தோர் பலர் என்றாலும் சிறப்பான உரைவகுத்தோர் சிலர் அதில் குறிப்பிடத்தக்கவர் வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார் ஆவார். கம்பராமாயணம் என்னும் நூல் முழுமைக்கும் சிறந்த உரைவகுத்தவர் வை.மு.கோ. இருபதாம் நூற்றாண்டில் தமிழில் அதிகமான நூலுக்கு உரையெழுதிய பெருமை அவரையே சாரும். இவருடைய உரையில் கருத்துரை நயம் தொடர்களுக்கு உரை இலக்கணக்குறிப்பு ஆகியன செம்மையாக அமைந்தாலும் பல புராணக்கதைகளுக்கு ஒப்புமைக் காணும் திறம் இவருடைய எழுத்து நடையில் உண்டு. மேலும் இவருடைய நூலில் ஆழ்ந்தகன்ற புலமையையும் கம்பஇராமாயணத்தில் உள்ள ஈடுபாட்டையும் வை.மு.கோவின் உரைவளம் உணர்த்துகிறது. உதாரணமாக, இக்கட்டுரை மண்டோதரியின் என்னும் பெருந்தகையாளின் பண்பு நலன்களையும் செயல்பாடுகளையும் ஆய்வு செய்து சுருக்கமாக முன் வைக்கிறது.

குறிப்பு

[1] https://www.hindutamil.in/news//vellore/178845-.html. பழந்தமிழ் இலக்கியத்துக்குப் பாலங்கள் தேவை.

[2] **கம்பர் ,"கம்பராமாயணம்" -** தமிழாய்வு.

[3] **வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியார், கம்பராமாயணம் (முழுவதும்),** உமா பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு ஏப்பிரல், 2006.

[4] **உ.வே.சாமிநாதையர் மற்றும் ஸ்ரீநிவாசய்யங்கார், ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் (இரண்டு பாகங்கள்),** தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, சி.ஐ.டி. நகர், சென்னை. நான்காம் பதிப்பு 1963.

[5] **வி.சா.பாலசுப்பிரமணியன், இளவரசன் இந்திரசித்,** வேங்கட சுப்பிரமணி நகர், வளசரவாக்கம், சென்னை. மு.ப. 1993.

[6] **ப.கவிதா, "பெண்ணின் பெருந்தகையாள் மண்டோதரி"**, *தமிழ் மாருதம்,* மாத இதழ்-23, Vol. 23, Iss. 4, pp. 31-35, 2013.

[7] **ப. கவிதா,** "*கம்பராமாயணத்தில் கதைமாந்தர்கள்*", முனைவர் பட்ட ஆராய்ச்சியாளர், (பி.எச்.டி), ஏப்ரல்-2014, தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 010, தமிழ்நாடு,

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

[8] **ப.கவிதா மற்றும் சு.செந்தில்குமார், *“வால்மீகியும், கம்பனும் - காப்பிய வேறுபாடு”*,** *தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல், பன்னாட்டு கருத்தரங்கம்*, கிருஷ்ணசாமி மகளிர் அறிவியல் கலை மற்றும் மேலாண்மையியல் கல்லூரி, கடலூர், தமிழ்நாடு, இந்தியா, Vol. 2, pp.51-55, 2020, Date: 23.01.2020.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

கவிதா. “வை.மு.கோ பார்வையில் கம்பராமாயணத்துள் மண்டோதரி.” *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 1, *திசம்பர்* 2020, பக். 86-92. டிஓஐ: **DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.014**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Kavitha. “Mandothari of “Kambaramayanam” in the View of Vai.Mu.Ko.” *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020, pp. 86-92. **DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.014**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இக்கட்டுரையின் ஆசிரியராகிய நான் “தி இந்து” பத்திரிக்கைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்./I the author of this research paper, thank “**The Hindu”**, Newspaper, Tamil Nadu, India for providing sources related to Text writers.

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இந்த அறிவார்ந்த படைப்பின் உள்ளடக்கம் மற்றும் படைப்புரிமை ஆகியவற்றில் போட்டியிடும் ஆர்வம் இல்லை என்று ஆசிரியர் அறிவிக்கிறார்./We declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

தமிழர் மரபை உணர்த்தும் இளம்பூரணர் உரைப்பணி

Inculcation of Tamil Tradition in the Writings of Ilambooranar

முனைவர் மு.கவிதா, உதவிப்பேராசிரியர் – தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்-43
Dr.M.Kavitha, Assistant Professor in Tamil, Avinashilingam University, Coimbatore-43
ORCiD: https://orcid.org/0000-0003-0484-9311
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.015

Abstract

The ancient grammatical texts of interpreters have contributed for the up liftment and antiquity of Tamil language and literature. The text of interpretations is a vital source of understanding classic Tamil literature. Literature texts are precious to Tamil society. "Tholkappiyam" is a great example for the pride of Tamil society and is considered as the pinnacle of Tamil grammar. It is a masterpiece which portrays linguistic order, life thoughts, traditions and principles of the Tamil Community. Ilambooranar is the first interpreter to write a secondary source for the entire book "Tholkappiyam". The major objective of the research paper is to evince about the tradition of Tamil language through the explanatory text of Ilambooranar.

Keywords: Inculcation, Tamil Tradition, Writings of Ilambooranar**, "**Tholkappiyam",

முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் உரைகளுக்கு மிக உயர்ந்த இடமுண்டு. தமிழ்மொழி வளர்ச்சிக்கும், இலக்கண இலக்கியப் பயிற்சிக்கும் உரையாசிரியர்களின் உரைகள் பேருதவி புரிந்திருக்கின்றன. உரைகள் தோன்றியதென்பது தமிழரின் நற்பேறாகும். தமிழ்மொழியும் இலக்கியமும் உரையாசிரியர்கள் இயற்றிய உரைகளால் செழித்து வளர்ந்து வந்துள்ளன. தற்கால ஆராய்ச்சியாளர்களுக்கு உரைகள் பெரிதும் துணை செய்து வருகின்றன. பழைய இலக்கிய இலக்கணங்கள், இன்றைய மக்கள் புரிந்து கொள்ளும் எல்லைக்கு அப்பாற்பட்டவை மொழியை உணர்ந்து கொண்டாலும், மொழியில் அடங்கிய நோக்கங்களையும், மரபுகளையும், குறிப்புகளையும் உணர்ந்து கொள்வது மிகக் கடினம். இக்கடினமான நிலையை மாற்றி, பண்டைய நூல்களை எளிதாக உணர்ந்து கொள்ளவழி அமைத்தவர்கள் பண்டைய உரையாசிரியர்கள். இலக்கண உரையாசிரியர்களின் இளம்பூரணரின் உரைபணி மூலமாக தமிழர் மரபினை வெளிக்காட்டுவதாய் இக்கட்டுரை அமைகின்றது.

தொல்காப்பிய உரையாசிரியர்கள்

தொல்காப்பியம் என்னும் பழம்பெரும் இலக்கண நூல் தமிழ்மொழியின் தொன்மைக்கும் சிறப்பிற்கும் சான்றாய் விளங்குகிறது. வளமாக வாழ்ந்த தமிழினத்தின் கொள்கைகளையும், எண்ணங்களையும், மரபுகளையும் உலகிற்கு உணர்த்துகின்ற விழுமிய நூலாய் ஒளிர்கின்றது. தொல்காப்பியம் தனக்குப்பின் தோன்றிய பல இலக்கண இலக்கியங்களுக்கு எல்லாம் தலைமையாக வழி காட்டி நடத்திச் செல்கின்றது.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

தொல்காப்பியத்தின் கருத்தை உணர்த்தவும் உணரவும் புலவர் பெருமக்கள் காலந்தோறும் முயன்று வந்தனர். அம்முயற்சியின் விளைவாய் பல உரைகள் பெருகின. உரைவளம் பெற்ற பெரும் நூலாய் தொல்காப்பியம் திகழ்கின்றது.

தொல்காப்பியம் முழுமைக்கும் முதன் முதலாய் உரை இயற்றியதால் இளம்பூரணர்க்கு உரையாசிரியர் என்ற பெயர் ஏற்பட்டது. இவருக்குப் பின் வந்த தொல்காப்பிய உரையாசிரியர்கள் அனைவரும் இவர் உரையைக் கற்றுத் தெளிந்த பின்னரே தம் கருத்தை விளக்கிப் புதிய உரை கண்டனர். இளம்பூரணர்க்குப் பின்னர் தோன்றிய சேனாவரையர் சொல்லதிகாரத்திற்கு மட்டும் சிறந்ததோர் உரை இயற்றினார். நச்சினார்க்கினியர், தொல்காப்பியம் முழுமைக்கும் விரிவான உரை எழுதினார். இவருக்குப் பின், தெய்வச்சிலையார், கல்லாடர் ஆகிய இருவரும் சொல்லதிகாரத்திற்கு மட்டும் உரை இயற்றினர். பழங்காலத்தில் இவ்வுரைகளே தோன்றியுள்ளன.

இளம்பூரணர்

பழம்பெரும் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் முழுமைக்கும் முதன்முதலில் உரைகண்டு அதனைத் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு நன்கு அறிமுகப்படுத்திய பெருமை இளம்பூரணரைச் சாரும். உரையாசிரியர்களில் காலத்தால் முந்தியவர் இளம்பூரணர். இவரை **உரையாசிரியர்** என்ற பெயரிலும் அழைப்பர். மேலும் இளம்பூரணரும் மணக்குடவரும் ஒருவரே என்ற தி.வை.சதாசிவ பண்டாரத்தார் கூறுவார். மு.அருணாசலம் அவர்கள் இளம்பூரணர் காலம் கி.பி.1070 முதல் கி.பி.1095 வரை இருக்கலாம் என்பர். இளம்பூரணர் பொதுவாக ஒரு நெறியை உரை முழுவதும் மேற்கொண்டுள்ளார். அதிகார விளக்கம், இயல் பற்றிய சுருக்கம், நூற்பா நுதலும் பொருள், தெளிவுரை, சொல்தொடர் விளக்கம், மேற்கோள் விளக்கம் என்ற பொது அமைப்பு அவரது உரையில் காணப்படும்.

உரையின் இயல்பு

இளம்பூரணர் உரை, ஆழமான தெளிந்த நீரோடை போன்றது. பற்றற்ற துறவி தூய்மையான வாழ்வு நடத்தி மூத்து முதிர்ந்து காவி உடையுடன் அருள் பழுத்த நெஞ்சத்துடன், முகமலர்ந்து நம்மிடம் இன்சொல் பேசுவது போன்ற இன்ப உணர்வை இவர் உரை உண்டாக்குகிறது. ஆராவாரமும் பகட்டும் இவர் உரையில் காணப்படுவதில்லை. மிகச் சுருக்கமாக தெளிந்த கருத்தினைக் கூறி விளங்க வைக்கின்றார். தமது கருத்துதான் சிறந்தது, தாம் கருதியதே சிறந்தது என்று எண்ணும் வகையில் இவர் எவ்விடத்திலும் எழுதவில்லை. பிறர் கருத்தை மதித்தலும், புலமை முதிர்ச்சியும், நடுவுநிலைமையும் உரை முழுவதும் வெளிப்படகின்றன. இளம்பூரணர் பிற மொழிப் பயிற்சி மிகுதியாக இல்லாதவர். தமிழ்க் கடலுள் பல காலம் மூழ்கித் திளைத்தவர். தமிழ் மரபு நன்கு அறிந்த சான்றோர். இவரது தமிழ் நெஞ்சம் பல இடங்களில் வெளிப்படுகின்றது. இவரை சிவஞான முனிவர், **'தமிழ் நூல் ஒன்றே வல்ல உரையாசிரியர்'** என்று தொல்காப்பியச் சூத்திர விருத்தியில் குறிப்பிடுகின்றார்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

அளவு நிறைப் பெயர்களின் மொழிமுதல் எழுத்துக்கள்

அளவிற்கும் நிறையிற்கும் மொழிமுத வாகி
உளவெனப் பட்ட ஒன்பதிற் றெழுத்தே;
அவைதாம்,
க,ச,த,ப என்றா ந,ம,வ என்றா,
அகர உகரமோடு அவை என மொழிப. (தொல். எழுத்து நூ.170)

முகத்தலளவைப் பெயர்கட்கும், நிறுத்தலளவைப் பெயர்களுக்கும் மொழி முதலில் வரும் எழுத்துக்கள் ஒன்பது ஆகும். அவை க,ச,த,ப,ந,ம,வ,அ,உ என்பன. இச்சூத்திரம் இளம்பூரணர் உரை இன்றேல் விளங்காது. இவ் எழுத்துக்களை முதலில் கொண்ட அளவுப் பெயர்களாகப் பின் வருவனவற்றை இளம்பூரணர் காட்டுகின்றார்.

கலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டில், அகல், உழக்கு, கழஞ்சு, சீரகம், தொடி, பலம், நிறை, மா, வரை,அந்தை.

எண்ணுப்பெயர்கள்

ஐஅம் பல்என வரூஉம் இறுதி
அல்பெயர் எண்ணினும் ஆயியல் திரியாது. (தொல். எழுத்து நூ.394)

என்ற சூத்திரத்திற்கு இளம்பூரணர் உரையின்றேல் பொருள் விளங்கி இராது. பொருட்பெயர் அல்லாத எண்ணுப் பெயராகிய தாமரை, வெள்ளம், ஆம்பல் என்பன என்று இளம்பூரணர் தருகின்ற விளக்கத்தால் சூத்திரத்தின் பொருள் தெளிவாகின்றது. தாமரை, வெள்ளம், ஆம்பல் என்னும் பேரெண்கள் ஏழ் என்னும் எண்ணுப்பெயருக்கு முன்வரின் இயல்பாக நிற்கும்.

ஏழ்தாமரை மேற்கோள் விளக்கம்

கடி என்னும் உரிச்சொல் முன்தோன்றும் பொருளில் வந்தமைக்கு,

அன்னை அறியினும் அறிக; அலர்வாய்
அம் மென் சேரி கேம்பினும் கேட்க
பிறிது ஒன்று இன்மை அறியக் கூறி
கொடுஞ் சுழி புகாஅர்த் தெய்வம் நோக்கி,
கடுஞ் சூழ் தருகுவன் நினக்கே. (அகம் -110)

என்ற அகநானூற்றுப் பாடலில் **'கடுஞ் சூள் தருகுவன்'** என்று வருவதை மேற்கோளாகக் காட்டியுள்ளார். தமிழ் இலக்கியத்தில், வேறு எங்கும் இச்சொல் இப்பொருளில் வந்துள்ளதாகத் தெரியவில்லை. இளம்பூரணர் காட்டிய இவ்வரிய மேற்கோளையே பின் வந்த உரையாசிரியர்கள் அனைவரும் தம் உரைகளில் காட்டுகின்றனர். இளம்பூரணர் தந்த மேற்கோளையும் கூறிய விளக்கத்தையும் பின் வந்த உரையாசிரியர்கள் அப்படியே மேற்கொண்டனர். இளம்பூரணர் முயன்று அமைத்த பாதையினைப் பின் வந்தோர் அகலப்படுத்தினர் என்று கூறும் அளவிற்கு இளம்பூரணர் உரைத்திறன் அமைந்துள்ளது.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

உவமைகள்

இளம்பூரணர் தம் உரையில் மிகச் சில உவமைகளையே எடுத்தாண்டுள்ளார். அவ்வுவமைகள் கூறக்கருதிய பொருளை மிகச் சிறப்பாக விளக்குகின்றன. எழுத்ததிகாரத்தில் சந்தனக்கோல் குறுகினவிடத்தும் பிரபங்கோல் ஆகாது. அதுபோல, இகர உகரங்கள் குறுகினவிடத்தும் அவை உயிர் ஆகற் பாலன என்று தக்க உவமை கூறி விளக்குகின்றார்.

அவைதாம்

குற்று இயல் இகரம், குற்று இயல் உகரம்

ஆய்தம் என்ற

முப்பால் புள்ளியும், எழுத்து ஓர் அன்ன. (தொல்.- எழுத்து நூ.2)

சார்பெழுத்துக்கள் குறுகிய ஓசையை உடைய இகரம் குறுகிய ஓசையை உடைய உகரம். ஆய்தம் என்ற மூன்று புள்ளிகளை உடையவை. இவை எழுத்தை ஒத்து அமைவன.

துள்ளல் ஓசை கலியென மொழிப. (தொல்.பொருள். செய்யு - நூ.79)

என்ற செய்யுளியல் நூற்பாவில் துள்ளலோசை கலிப்பாவிற்கு உரியதாகும். துள்ளுதலாவது ஒழுகு நடைத்தன்றி இடையிடை உயர்ந்து வருதல் என்றும் கன்று துள்ளிற்று என்பது போல கொள்க என்றும் இனிய உவமையைப் புகுத்தியுள்ளார்.

சூத்திரத்தின் வேறுபாடு

இளம்பூரணர் தொல்காப்பியத்தின் முதல் உரையாசிரியர் ஆதலின், இவர் கொண்ட சில பாடங்கள் மிகவும் பழமையானவை. அப்பாடங்களே சிறந்தவை. சில சொற்களில் இரண்டொரு எழுத்துக்கள் மாறிவிடுவதால், சூத்திரங்களின் பொருளே பெரிதும் வேறுபட்டு வருகின்றது. எனவே பாட வேறுபாடுகளில் கருத்து செலுத்தி உண்மையான பாடத்தை அறியும் கடமை நமக்கு ஏற்பட்டுள்ளது. பாடவேறுபாடுகள், பொருளதிகாரத்தில் மிகுதியாகப் பொருளை வேறுபடுத்திவிடுகின்றன.

புறத்திணையில் இளம்பூரணரின், **மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே. (தொல்.பொருள். புறத் - நூ.4)** என்ற நூற்பாவினை நச்சினார்க்கினியர் **மறங்கடைக் கூட்டிய துடிநிலை** என்று வேறுபாடம் கொள்ளுகின்றார். குடிநிலை என்ற பழைய பாடமே சிறந்தது என்பதற்குச் சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரி சான்றாக உள்ளது. அதில், வெட்சித் திணையில் மறக்குடியினது நிலைமையும், கொற்றவையின் நிலைமையும் கூறப்படுகின்றது.பொருளியலுள் நச்சினார்க்கினியர், **இறைச்சி தானே பொருட்புறத் ததுவே (தொல்.பொருள். பொருளி- நூ.79)** என்ற நூற்பாவில் '**பொருட் புறத்ததுவே'** என்று பாடம் கொடுத்துள்ளார். இதுவே இன்று பொருள்வழக்காய் அமைந்துள்ளது. இளம்பூரணர் **'உரிப்புறத்ததுவே'** என்று பாடம் கொடுத்துள்ளார்.

இளம்பூரணரின் கருத்துக்கள்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

இளம்பூரணர் உரையில் கூறியுள்ள கருத்துக்கள் பலவற்றை அவருக்குப் பின் தோன்றிய இலக்கண ஆசிரியர்கள் மேற்கொண்டு நூற்பாக்களை அமைத்துள்ளனர். உரையாசிரியரின் கருத்துக் கொடை நூலாசிரியர்களை உருவாக்க முடியும் என்பதற்கு இளம்பூரணர் சிறந்த சான்றாவார். இளம்பூரணர் கருத்துக்களை நேமிநாதம், நன்னூல், நம்பியகப் பொருள் ஆகிய நூல்களில் இடம்பெற்றுள்ளன.

பூப்பின் பறப்பாடு ஈராறு நாளும்

நீத்தகன் றுறையார் என்மனார் புலவர்

பரத்தையிற் பிரிந்த காலையான.(தொல்.பொருள். கற் - நூ.47)

என்று தொல்காப்பியர் கற்பியலில் குறிப்பிட்டுள்ள நூற்பாவிற்கு இளம்பூரணர், இதனாற் பயன் என்னை எனின் அது கருத்தொன்றும் காலம் என்று கருத்துரைக்கின்றார். இளம்பூரணர் கூறிய கருத்தை மேற்கொண்டு நம்பியகப்பொருள் ஆசிரியர்,

பூத்த காலைப் புனையிழை மனைவியை

நீராடிய பின் ஈராறு நாளும்

கருவயிற்று உறூஉம் காலம் ஆதலின்

பிரியப் பெறாஅன் பரத்தையிற் பிரிவோன். (நம்பி -91)

என்று கூறியுள்ளார். இச்சூத்திரத்தில் இளம்பூரணர் கருத்து இடம்பெற்றிருப்பதனைக் காணமுடிகின்றது.

முடிவுரை

இளம்பூரணர் உரை கற்றவர் போற்றும் சிறப்பு மிக்கது. தொல்காப்பியத்தின் பல்வேறு உரைகளை ஒப்பிட்டு நோக்கி ஆராய்பவரும், உண்மை உரைகண்டு தெளியும் ஆர்வம் உடையவரும், தமிழ் மொழிக்குத் தமிழ் மரபினை அறிந்து எழுதிய உரையே சிறந்தது என்று எண்ணுபவரும் இளம்பூரணர் உரையை போற்றிக் கற்று வருகின்றனர். இளம்பூரணர் உரையிலிருந்து அக்காலத்து தமிழ்நாட்டு நாகரிகமும் பண்பாடும் புலப்படுகிறது.

துணைநூற்பட்டியல்

[1] **க.தமிழ்செல்வன், நம்பியகப்பொருள்**, சாரதா பதிப்பகம், சென்னை.2000.

[2] **மு.வை.அரந்தன்: உரையாசிரியர்கள்,** மணிவாசகர் பதிப்பகம்,சென்னை . 1995.

[3] **பாலசுப்பிரமணியன் கு.வெ: அகநானூறு.** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட் 41-பிசிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட் , அம்பத்தூர், சென்னை . 2004.

[4] **மு.அருணாச்சலம் : தமிழ் இலக்கிய வரலாறு,** சாரதா பதிப்பகம், சென்னை.2005.

[5] **புலியூர்க்கேசிகன் : தொல்காப்பியம் (உரை)** பாரி நிலையம், 164, பிராட்வே, சென்னை – 8 பன்னிரண்டாம் பதிப்பு – 2003.

[6] **தொல்காப்பியம் (எழுத்து, சொல், பொருள்) மூலமும் உரையும்** உரையாசிரியர்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

இளம்பூரணர், சாரதா பதிப்பகம், சென்னை.2005.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

கவிதா. "தமிழர் மரபை உணர்த்தும் இளம்பூரணர் உரைப்பணி." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 1, *திசம்பர்* 2020, பக். 93-98. டிஓஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.015**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Kavitha. "Inculcation of Tamil Tradition in the Writings of Ilambooranar ." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020, pp. 93-98. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.015**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

சங்கரநமச்சிவாயரின் நன்னூல் உரைத்திறன்

The Efficiency of Sangara Namachivayar's "Viruththiyurai"

முனைவர் கா.காமாட்சி, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, சீதாலெட்சுமி இராமசாமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி.
Dr K.Kamatchi, Assistant Professor, Department of Tamil, Seethalakshmi Ramaswami College, Tiruchirappalli.
ORCiD: https://orcid.org/0000 0002-4704-2094
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.016

Abstract

Among "Nannool" commentators, Sankara Namachivayar is considered as one of the best commentators. The commentary he had written for "Nannool" is called 'Viruththiyurai'. Though he followed Mayilainathar, much rare information and in depth meanings are found in his commentary. The "Thirukkural", he quoted shows his interest towards "Thirukkural" the quotes he had chosen shows how well-versed he was in Tamil grammar and Tamil Literature. The handling of Similes to explain meaning exhibits his interest towards Saiva Siddhantham. He had used the ideologies of Saiva Siddhantha all throughout his commentaries. The speciality of his commentary is not only explaining the formula for the meanings but also his remarkable versatility. Therefore, the paper scrutinizes the efficiency of the descriptive notes written by Sankara Namachivayar on "Nanool'.

Keywords: Descriptive Notes, Saiva Siddhantha, Sankara Namachivayar, "Nanool'.

நோக்குக் களம்

இலக்கண இலக்கிய நூல்களின் வளம் நிறைந்த தமிழில் உரை நூல்களும் அதிகமாகத் தோன்றியுள்ளன. தமிழ் இலக்கிய வரலாற்றில் தனித்ததொரு இடத்தைப் பெறும் உரைகள், இடைக்காலத்தில் தமிழ்ப் புலவர் செய்த ஆராய்ச்சியின் விளைவாகும். தமிழ் இலக்கண இலக்கியங்களின் உரைகளை ஆராய்வது தமிழ்மொழிப் பயிற்சிக்கும், இலக்கிய வளர்ச்சிக்கும் பெருமளவில் பயன்படத்தக்கதாகும். ஓல்காப் புகழுடைய தொல்காப்பியத்திற்கு பின் பன்னிரண்டு நூற்றாண்டுகள் கழித்துத் தோன்றி இன்றளவும் தனிச்சிறப்புடன் வாழ்வது நன்னூல். பெயருக்கு ஒப்ப தமிழ் இலக்கணத்தை நலம்படவும், நயம்படவும் இயம்பும் இந்நூலிற்கு உரைவிளக்கம் கண்டோர் பலராவர். அவருள் சங்கரநமச்சிவாயரின் *நன்னூல்* உரைத்திறன் குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

உரை

உரை என்பதற்கு பல்வேறு விளக்கங்கள் எழுந்துள்ளன. உரை என்னும் சொல் பல்வேறு பொருள்களைக் கொண்டு விளங்குகின்றது. பொதுவாக உரை என்பது பொருளின் தன்மையை உள்ளவாறு உரைப்பதாகும். "உரை- உரைத்தான் என்பதற்குச் சொன்னான் என்பது பொருள். ஆகையால் உரை என்பதற்குச் சொல் என்ற பொருள் கொள்ளலாம். அது ஆகுபெயராய்ச் சொல்லின் பொருளைக் குறித்து வழங்குகின்றது. புலமை மிக்கவர் இயற்றும் நூலைப் பொதுமக்களும் உணர்தல் வேண்டின் அதற்கு விளக்கம் வேண்டியுள்ளது. அவ்விளக்கம் உரை எனப்படும்" எனத் தமிழ்க் கலைக் களஞ்சியம் கூறுகின்றது.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

சங்கரநமச்சிவாயர்

நன்னூலுக்கு எழுந்த உரைகளுள் சிறப்பாகக் குறிப்படத்தகுந்த உரைகளுள் ஒன்று சங்கரநமச்சிவாயர் உரையாகும். இவர் சைவமும், தமிழும் ஒருங்கே இனிதே தழைத்த இடமான திருநெல்வேலியில் உள்ள தடிவீரையன் தெருவில் வசித்தவர். வேளாளர் குலத்தில் பிறந்த இவர் தூய சைவர். இவர் காலத்தில் இலக்கண விளக்கம் என்ற நூலை இயற்றிய வைத்தியநாத தேசிகர் வாழ்ந்தார். இலக்கணக்கொத்து ஆசிரியரான சுவாமிநாத தேசிகர், இந்நகரில் உள்ள ஈசான மடத்தில் தங்கியிருந்தார். இவ்விருவரும் தமிழ் இலக்கண இலக்கியங்களையும், சைவ சாத்திரங்களையும் கற்றுத் துறைபோகிய பெரு நாவலர்கள். தேசிகரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்கள், தொல்காப்பிய உரைகள், சைவ சாத்திரங்கள், பக்தி இலக்கியங்கள் ஆகியவற்றை நன்கு பயிலும் அரிய வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. தேசிகர் தம் மாணாக்கரின் கல்வித் திறத்தை நன்கு கண்டு ஒரு பெரும் பணியை ஒப்படைக்க எண்ணி, தொல்காப்பியருக்குப் பின் எழுந்த நூல்களுள் நன்னூல் தனிச் சிறப்பு வாய்ந்தது என்று நம்பி, இவரிடம் நன்னூலுக்கு புத்துரை எழுத பணித்ததன் விளைவாக இவர் விருத்தியுரையை எழுதினார்.

விருத்தியுரை

சங்கர நமச்சிவாயர் நன்னூலுக்கு இயற்றியது விருத்தியுரை. “நன்னூற்கு விரித்துரை செய்தான்” என்னும் தொடர் இதனைக் குறிப்பாக உணர்த்துகிறது. விருத்தியுரை என்னும் பெயர் பெரும்பாலும் இலக்கண உரைகளுக்கே வழங்கி வருகிறது. பொதுவாக இலக்கிய உரைகளை இப்பெயரால் வழங்குவதில்லை. இந்த உரைவகை தமிழில் மிகமிகக் குறைவு. யாப்பருங்கல விருத்தி, தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குக் கல்லாடர் எழுதிய விருத்தியுரை, நன்னூல் விருத்தியுரை, தொல்காப்பியச் சூத்திர விருத்தி என்ற நான்கே இவ்வகையில் அமைந்தவை. இவற்றுள் கல்லாடர் விருத்தியுரை நமக்கு முழுமையாக கிடைக்கவில்லை. தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்துக்கும் முதற் சூத்திரத்துக்கும் சிவஞான முனிவர் எழுதிய விருத்தியுரை விரிவானது: ஆயினும் அதுவும் ஒரு வகையில் குறையுரையே. இவை தவிர தக்கயாகப் பரணி உரையில்‘வயிரமேக விருத்தி’ என்று ஒரு இலக்கண நூல் குறிக்கப்பட்டுள்ளது. நூலின் பெயர் மட்டுமே தெரிகிறது. அந்த விருத்தியுரை பற்றிய வேறு எந்த விவரமும் நமக்குக் கிடைக்கவில்லை. இறையனார் களவியலுக்கு நக்கீரர் இயற்றிய உரையும் தொல்காப்பியச் சொல்லதிகாரத்துக்குச் சேனாவரையர், தெய்வச்சிலையார் இயற்றிய உரை களம் விரிவானவை. யாப்பருங்கல விருத்தியுரை, நன்னூல் விருத்தியுரை என்ற இரண்டே நமக்கு முழுமையாக கிடைத்துள்ள விருத்தியுரைகள் ஆகும். இவை இரண்டிற்கும் இடையே உள்ள கால இடைவெளி ஐநூறு ஆண்டுகளுக்கும் மேற்பட்டது.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

நமச்சிவாயர் இயற்றிய விருத்தியுரை கருத்துரை, பொழிப்புரை, உதாரணவுரை, அகல உரை என்று நான்கு பகுதிகளாக அமைகிறது.

மேற்கோள் ஆளுமை

யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர், இளம்பூரணர், அடியார்க்கு நல்லார், பேராசிரியர், மயிலைநாதர், நச்சினார்க்கினியர் போன்ற பழம்பெரும் உரையாசிரியர்களின் உரைகளைப் படிக்கும்போது அவர்களுடைய இலக்கியப்புலமை எல்லோரையும் மலைக்கவைப்பது போல சங்கரநமச்சிவாயர் உரை அமைந்துள்ளது. அவர் எடுத்தாண்டுள்ள மேற்கோள்களை ஆழ்ந்து கற்றுணரும்போது “நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று நீரினும் ஆரள வின்றே” என்னும் குறுந்தொகை பாடல்வரிகள் போல நயமிக்க இலக்கிய பாடல்கள் இலக்கணப் பாடத்தின் செறிவை நெகிழ்த்தி உரை நூல்களைக் கற்போருக்கு ஊக்கத்தை உண்டாக்குகிறது. ‘ஆகுபெயர்’ (நன்னூல்-290), பண்புத் தொகை (நன்-365) இரட்டைக்கிளவி (நன்-396), ‘ஒரு பொருட்பன்மொழி (நன்-398) போன்ற இலக்கணக் கருத்துக்களை உணர்ந்த போது ‘தாமரை புரையும் காமர் சேவடி’ (குறுந்தொகை கடள் வாழ்த்து), ‘அகர முதல்’ (குறள்- 1) ‘குறுகுறு நடந்தும் சிறுகை நீட்டியும்’ (புறம்-188:3) ‘உயர்ந்தோங்கும் பெருவரை’ (மலைபடு -41) என்னும் இலக்கிய மேற்கோள்களை மனதில் எண்ணும் வண்ணம் இவர் உரை கூறுகின்றார். “இலக்கிய மேற்கோள்கள் நினைவில் தோன்றி மனப்பாடக் கல்வியின் முழுப்பயனை வழங்கும் என்பதனைக் கருத்தில் கோண்டே உரையாசிரியர்கள் ஆயிரக்கணக்கான இலக்கிய மேற்கோள்களைத் தம் உரைகளில் எடுத்தாண்டுள்ளனர்” என அ.தாமோதரன் கூறுவதற்கேற்ப சங்கரநமச்சிவாயர் உரை அமைந்துள்ளது. இடப் பொருள் உருபுகள் பற்றி விளக்கும்

கண்கால் கடையிடை தலைவாய் திசைவயின்
முன்சார் வலமிட மேல்கீழ் புடைமுதல்
பின்பா டளைதே முழைவழி யுழியுளி
உள்ளகம் புறமில் லிடப்பொரு ளுருபே (நன்-302)

எனும் நூற்பாவுரையில் இருபத்தெட்டு உருபிற்கும் பல்வேறு இலக்கிய இலக்கணங்களிலிருந்து மேற்கோள்கள் தந்துள்ளமையைக் காணமுடிகிறது. “கண் ணாதி யாகும்”(நன்-301), “ஊர்க்கா னிவந்த பொதும்பருள”; (கலி 56:1) “வேலின் கடைமணிபோற் றிண்ணியான்”; (திரி 33:2-3) “நல்லா ரிடைப்புக்கு” (நாலடி 314:3), “கற்றார்முற்றோன்றா கழிவிரக்கம்” (நாண்மனி 8:1), “காட்டுச் சாரோடுமங் குறுமுயால்” தொல். விளி.34 இளம்) , “காழ்வரை நில்லாக் களிறன்னான் கைவலத் தியாழ்வரை நின்றது” (நன் 301 மயிலை), “இல்லிடப் பரத்தை” (நன் 301 மயிலை) “தன்மேற் கடுவரை நீரிற் கடுத்துவரக் கண்டும்” (பு.வெ. 11:2 -3), “பிண்டிக்கண் ணார்நிழற்கீழ் எந்த மடிகள்” (யா. கா. பாயி) “கடைப்புடை கொள்ளியநீர்” (நன் 301 மயிலை), “சுரன்முதல் வந்த வுரன்மாய் மாலை” (நற் 3:6), “காதலி

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

பின்சென்ற தம்ம" (நாலடி 395:1-2) "நம்பா டணையாத நாள்" (நன் மயிலை 301), "கல்லளைச் சுனைநீர் கையில் உண்மையான்" (நன் 301 மயிலை) "தோழிக் குரியவை கோடாய் தேத்து" (இறை 14), "அவனுழை வந்தான்", "நின்றதோர் நறவேங்கை நிழல்வழி யசைந்தன்ன (நன் 301 மயிலை) உறைப்புழி யோலை போல (புறம் 290:7) "குயில்சேர் குளிர்கா வுளிசேர் புறையும"; (நன் 301 மயிலை), "முல்லையங் குவட்டுள் வாழும்" , (சீவக 1232:4) "பயன்சாராப் பண்பில்சொற் பல்லா ரகத்து" (குறள் 194), "செல்லுமென் னுயிர்ப்புறத் திறுத்தந்த மருண்மாலை" (கலி 148:7) ஊரில் இருந்தார் (குறள் 194) என இவை பல திறத்தன போலுமேனும் இவை ஆகாது ஒரு திறத்தனவாயக் கண்ணுருபின் பரியாய உருபாய் வருதல் காண்க என கூறும் மேற்கோள்களிலிருந்து இவரது பன்னூல் புலமை புலப்புடுகிறது.

திருக்குறள் ஆளுமை

சங்கர நமச்சிவாயர் திருக்குறள், தொல்காப்பியம், திருக்கோவையார் ஆகிய மூன்று நூல்களையும் போற்றுகின்றார். தொல்காப்பியர் கொள்கையிலிருந்து நன்னூலார் மாறுபடும் இடங்களை தெளிவாக சுட்டுகின்றார். தொல்காப்பிய உரைகளை ஆழ்ந்து பயின்று பொருந்தாத உரைகளை மறுத்துரைக்கிறார். தொல்காப்பிய சூத்திரங்களை மேற்கோளாகத் தருகின்றார். திருக்குறளிலிருந்தும் பல மேற்கோள்கள் தருகின்றார். 'பல்வகை தாதுவின் உயிருக்கு உடல் போல'; என்னும் சூத்திரத்திற்கு மேற்கோளாக 'வரும் குன்றம் அனையான்' என்ற திருக்கோவையார் பாடல்களைச் சான்று காட்டுகிறார். எச்சங்களை விளக்கும் சூத்திர உரையில் இணர் எரி தோய்வன்ன (குறள் 308) என்ற குறளின் விளக்கம் படித்து மகிழ்தற்கு உரியதாக அமைந்துள்ளன. நடவாமடி சீ என்ற நூற்பா (137) நன்னூலாரின் இலக்கண புலமையை உணர்த்த வல்ல சிறந்த நூற்பா என்பதை அறிந்த நமச்சிவாயர் 'கையறியா மாக்கட்கு அன்றி நூல் இயற்றும் அறவினை உடைய மக்கட்கு பல்கலைக் குரிசில் பவணந்தி என்னும் புலவர் பெருமான் புகழ் போல் விளங்கி நிற்றலான் உலகம் மலையாமை பத்து அழகோடும் பிறந்து நின்றது இச்சூத்திரம் என்று உணர்க' என வியந்துப்போற்றுகின்றார். இவர் தம் உரை சிறப்பு பாயிரத்தில் "முப்பால் பகுத்த திருவள்ளுவரே முதல் ஞான நூல்கள் எல்லாம் பகல் செய்வான் போல, இகத்திலுரை செயவல சங்கரநமச்சிவாயன் என்னும் இயற்பெயர் பெற்ற தகைப்புலவன்" என குறிப்பிடுவதன் மூலம் திருவள்ளுவர் மீதும் திருக்குறள் மீதும் இவருக்குள்ள பெருமதிப்பை அறிய முடிகிறது.

இவர் நன்னூலிலுள்ள பல இலக்கணங்களுக்குத் திருக்குறளிலிருந்து நாற்பதுக்கும் மேற்ப்பட்ட இடங்களில் மேற்கோள் காட்டியுள்ளார்; எழுத்தியல் கடவுள் வணக்கத்தில், "பூமலி அசோகின் புனைநிழ லமர்ந்த" (நன்-56) எனும் நூற்பாவில், படைப்பு முதலிய ஐந்து தொழிற்குமுரிய எல்லா கடவுளாகியும் நின்றானொருவனே என்பார் அருகனை நான்முகன் என்று கூறினாh.; இவ்வாறு வள்ளுவ நாயனாரும் "மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடுவாழ்வார் -என வலையாது கூறுதல் காண்க" என்று கூறுகிறார். உயிரீற்று

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

சிறப்புப் புணர்ச்சியில், 'இருமையென்பது ஒருமைச் செயலாற்றும் பேதையெழுமையும,; தான் புக்கழுந்தும் அளறு' என்று கூறுவது போலக் குணியைக் குணமாகக் கூறுவது ஒரு மரபு வழுவமைதி என்கிறார்.

உவமைகள் கையாளும் விதம்

இவர் இனிய பல உவமைகளை எடுத்துக்காட்டி இலக்கண கருத்துக்களை இனிது விளக்குகின்றார். இவர் கையாளும் உவமைகள் எளிமையும் சிறியனவாயும் கற்போர் உள்ளத்தில் நன்கு பதியுமாறு அமைக்கப்பெற்றுள்ளன. தொகை, வகை, வரி என்பவை ஒன்றோடொன்று தொடர்புடையவை என்பதற்கு "மரத்தினது பராரையினின்றும் கவடு கோடு கொம்பு வளார் பலவாய் ஒன்றோடொன்று தொடர்பட்டு எழுந்து நிற்றல்போல்" என்ற உவமையை கூறுகின்றார். மேலும் மா, பலா முதலியன பராரை முதலிய சினையொடு நின்றன எனக் கண்டது கூறுவார் போல(141) இவை மட்டுமின்றி முதல் நூல், வழி நூல், சார்பு நூல் என்பவற்றிற்கு தந்தை, மகன், மருமான் என்பவர்களை உவமை கூறுகின்றார்.

சைவ சமயப்பற்று

இவர் சைவ சித்தாந்தங்களையும், திருமுறைகளையும் நன்கு கற்றறிந்தவர். இவரது உரையில் கையாளும் மேற்கோள்களும், உதாரணங்களும் சைவ சமயச் சார்புடையனவாக அமைகின்றன. 'சைவ சிகாமணி' என்று பாராட்டப்படுவதற்கேற்பத் தேவாரம் , திருவாசகம், திருக்கோவையார் போன்ற நூல்களிலிருந்து மேற்கோள் காட்டுகின்றார். 'இடைப்போலி', 'வினையெச்சங்களுக்கு முடிபு' கூறும் நூற்பாக்களில் தேவாரப்பாடலை எடுத்துக்காட்டுகிறார். "செய்ஞ்ஞின்ற நீல மலர்கின்ற தில்லைச் சிற்றம்பலவன்" (தே.கோயில் திருவிருத்தம் 5), என்றும் '...கடிக்கமல முகங்காட்ட ...கருநெய்தல் கண்காட்டும்' (தே.மேகராக்குறிஞ்சி1:3-4) என்றும் குறிப்பிடுகிறார். தனிக்குறிலைச்சாராத லகர ளகர ஈறுகள் நூற்பாவுரை 'கால் குதித்தோடி கடல் புக மண்டி (திரு .2:135) எனவும் ஐந்தாம் வேற்றுமை குறித்த இலக்கணம் கூறும் நூற்பாவிற்கு உரையில் மேற்கோளாக "நாயிற் கடைப்பட்ட நம்மை" (திரு. 277:1) என்றும் இடப்பொருள் உருபுகள் உணர்த்தும் நூற்பாவில் மேற்கோளாக (வலைத்தலை மானன்ன நோக்கியர்" (திரு.144:1), வியங்கோள் வினைமுற்றுக் குறித்து உரை கூறுகையில் போற்றி யருளுக நின்னாதியாம் பாதமலர்" (திரு.174:1) எனவும் பெயரெச்சம் பற்றிய உரையில் "பொன்னூசல் ஆடாமோ" (திரு.327:6) எனத் தேவாரத்திலிருந்;தும், திருவாசகத்திலிருந்தும் மேற்கோள் காட்டுகின்றார். முருகன் விநாயகர் சிவபெருமான் பற்றிய புராணச் செய்திகளை 62, 159, 232, 257, 275, 340, 393 ஆகிய நன்னூல் நூற்பா உரையில் கூறியுள்ள மேற்கோள்கள் மூலம் அறியமுடிகிறது. உம்மைத்தொகைக்கு உதாரணம் கூறுமிடத்து அறுபத்துமூவர் என்பதனை அறுபதும் மூன்றும் ஆகியவர் என்னாது அறுபதின்மரும் மூவரும் என விரித்துரைப்பதனால் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் அறுபது நாயன்மார்களையும் மூன்று சமயாச்சாரியார்களையும் நினைந்து குறிப்படுவதனை உணரமுடிகின்றது.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

இவ்வகையில் சங்கரநமச்சிவாயரின் நன்னூல் உரை வாயிலாக பல்வேறு திறன்களை அறியமுடிகிறது.

துணை நூற் பட்டியல்

[1] மு.வை.அரவிந்தன். *உரையாசிரியர்கள்*, மணிவாசகர் பதிப்பகம், சென்னை. முதற் பதிப்பு-

[2] ஆ. தாமோதரன். *சங்கரநமச்சிவாயர்*, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2003.

[3] பேராசிரியர் இரா.மோகன் & நெல்லை ந.சொக்கலிங்கம் - *உரைமரபுகள்,* மெய்யப்பன் பதிப்பகம், முதற் பதிப்பு- 2011.

[4] ஆ. தாமோதரன். *பவணந்திமுனிவர் இயற்றிய நன்னூல் மூலமும் சற்கரநமச்சிவாயர் செய்து சிவஞானமுனிவரால் திருத்தப்பட்ட புத்தம் புத்துரை என்னும் விருத்தியுரையும்,* உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, முதற் பதிப்பு. 1999.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

காமாட்சி. "சங்கரநமச்சிவாயரின் நன்னூல் உரைத்திறன்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 1, *திசம்பர்* 2020, பக். 99-104. டிஒஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.016**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Kamatchi. "The Efficiency of Sangara Namachivayar's "Viruththiyurai"." *International Journal of Tamil Language and Literary Studies,* Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020, pp. 99-104. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.016**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /NIL

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இல்லை /NIL

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

தொல்காப்பிய உரைகாரர்கள் வழி அமையும் குறியிடமும் குறிகளும்

Signs and Symbols of the Tolkappiya Derivative Authors

முனைவர் சீ.காயத்ரிதேவி, தமிழ்த்துறைத்தலைவர், தமிழ்உயராய்வு மையம், மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, பசுமலை, மதுரை – 625 004
Dr.S.Gayathri Devi, Head, Department in Tamil, Tamil Research Center, Mannar Thirumalai Naicker College, Pasumalai, Madurai – 625 004.
ORCiD: https://orcid.org/0000-0003-0545-9876
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.017

Abstract

"Tolkappiyam" is a complete grammar treatise of Tamil language in ancient times. Tolkappiyam has laid down grammar to delineate human life. Such a grammatical epic is an encyclopedia of ideas of linguistic features and also for life. Although a few elements are inconsistent today, the biological theory and ethics that Tolkappiah structured reveal the cultural evolution of the people of that time. In fact, in kalaviya, the leader-leader encounter takes place through signs and symbols. Hence, the article scrutinizes the signs and symbols that give an archetypal touch in the minor notes of the derivative writers.

Keywords: "Tolkappiyam", Signs and Symbols, Leader-Leader

முன்னுரை

தமிழ் இலக்கண இலக்கியங்களில் மிக போற்றத்தக்க ஒன்றாக இன்றளவும் பொருளாதிகாரம் அமைகின்றது. பண்டைய காலத்திலே தொல்காப்பியம் முழுமையான மொழிசார்ந்த இலக்கணத்தைத் தமிழ்ச்சமூகத்திற்கு வழங்கியதோடு வாழ்வியலுக்கான இலக்கணத்தையும் வகுத்து தந்துள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்க ஒன்று ஆகும். அத்தகைய தொல்காப்பிய பொருளதிகாரம் குறிப்பிடும் களவு கற்பு நெறிகள் வாழ்வியலுக்கான சிந்தனைகள் அடங்கிய கலைக்களஞ்சியம் எனலாம். இன்றைய காலக்கட்டத்தில் ஒருசிலக் கூறுகள் ஒவ்வாத தன்மையைப் பெற்றிருப்பினும் தொல்காப்பியம் கட்டமைத்துள்ள களவு, கற்பு சார்ந்த வாழ்வியல் கோட்பாடும் நெறிமுறையும் அக்கால மக்களின் பண்பாட்டு படிமலர்ச்சியை வெளிப்படுத்துகின்றது. அத்தன்மையில் களவியலில் தலைவன் தலைவி சந்திப்பு என்பது குறியிடமும் மற்றும் குறிகளின் வழியே நிகழ்கின்றது. அவற்றின் தன்மைகளை உரையாசிரியர்களின் கருத்துகளின் வழியே விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

பகற்குறி இரவுக்குறிகள்

கூடிப்பிரிந்த தலைவன் தலைவிபால் வேட்கைமீதூர மற்றை நாட்களினும் வந்து தோழிக்குத்தன் குறிப்புணர்த்தி முன் கூடியதுபோற் கூடவும் பெறுவான். இவ்வாறு நிகழுங் கூட்டம், பகற்குறி இரவுக்குறி என இருபகுதிப்படும் (தொல்.களவு.40). அவை தலைவியாலும் தோழியாலும் முன்போலக் காட்டப்பெற்ற குறியிடத்தைத் தலைவன் அடைந்து பகலிலும்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

இரவிலும் தலைவியைச் சார்தலாம். இக்குறியிடங்கட்குத் தேர் யானை குதிரைகளை ஊர்தியாகக் கொண்டும், அவன் வருவதுண்டு. இவற்றுட் பகற்குறியிடம், தலைவியின் மனையாகது அம்மனைமதிற்குப் புறம்பாமெனவும், இரவுக் குறியிடம் அம்மதிற்கும் மனைக்கும இடையிலுள்ள இல்வரைப்பாமெனவும் கூறுவர் (தொல்.களவு.41, 42). இல்வரைப்பாவன: 'அட்டில், கொட்டகாரம், பண்டசாலை, கூட காரம், பள்ளியம்பலம், உரியயிடம், கூத்தப்பள்ளி" முதலாயின என்பர் (இறை.களவு.19, 21). 'புணர்ச்சிவேண்டினும்" என்ற தோழி கூற்றுக் கூறுமிடத்து (தொல்.களவு.நூ 24). இவ்விரு குறியினும் நிகழும் பகுதிகளை மேற்கோள்களுடன் காணலாம்.

இவற்றுள், இரவுக்குறியிலே, தலைமகன் வருமிடத்துப் பற்பல அடையாளங்கள் தலைவனால் நிகழ்த்தப்பட்டு. அவை புனலொலிப் படுத்தல், புள்ளெழுப்புபுதல் முதலியன. இங்ஙனம் தலைவன் தன் வரவுணர்த்தற்குச் செய்தற்குரிய குறிகள் அவன் செய்கையாலன்றிக் காய்கனிகள் காற்றால் விழுந்த நீரில் ஒலியெழும்பல், வேற்றுப்புட்கள் வந்த அச்சத்தால் பறவைகள் கலைதல் முதலிய இயற்கைகளாலும் நிகழுமிடத்து அக்குறிகளைத் தலைவன் வரவு குறிப்பனவாகக் கொண்ட தோழி தலைவியை 'அல்ல குறிப்படுத்தித் தவறிப்போதலும் (தொல்.களவு.43) உண்டாம்". 'அல்லகுறிப்படுதலும" என்ற சூத்திரத்துக் 'குறியினொப்புமை மருடற் கண்ணும்" (தொல்.களவு.21) என்னுங் கூற்றினும் உரைகாரர் காட்டிய உதாரணச் செய்யுள்களால் இதனை அறியலாம். இங்ஙன் அல்ல குறிப்பட்ட மறுநாள் கலையில் தலைவியுந் தோழியும் குறியிடம் வந்து நோக்க, தலைவன் குறித்த குறியிடத்தே தான் வந்து சென்றதற்கு அடையாளமாகக் கோட்டினுங் கொடியினும் இட்டுவைத்தே மோதிர மாலை முத்தம் முதலியவற்றைக்கண்டு மயங்கி அவர் வருந்துவர்@ தலைவனும், அவிட்ட குறிபிழைத்தமைக்கு இரங்கிச் செல்வனென்க. இங்ஙனம் இரவுக்குறியிற் பலகாலுந் தலைவன் வருமிடத்து, வேறு சில இடையூறுகளாலும் தலைவி குறியிடஞ் சேறற்கியலாமல் நேர்தலுண்டு@ அவ்விடையூறுகள் தாய்துஞ்சாமை. நாய்துஞ்சாமை, ஊர்துஞ்சாமை, காவலர்கடுகுதல், நிலவு வெளிப்படுதல் போல்வனவாம் (தொல்.அகம்.122). 'களவினுட் விரிச்சி காப்புமிகி னுரித்தே" என்றார் இறையனாரும் (இறை.சூத்.46) இவ்வாறு குறியிடநோக்கி இரவில் வருதற்கண்ணே 'ஆறின தரமையுமழிவு மச்சமுமூறும்" (தொல்.களவு.46) தலைவனுக்கு உண்டாகா என்றும், இக்களவொழுக்கத்தே தியராசிகளையும் நாள்களையும் நீக்கியொழுகுதல் இலலையென்றுங் (தொல்.களவு.45) கூறுவர்.

பகற்குறித் துறைகள்

'இறைவனைப் பாங்கி குறிவரல் விலக்கல்", 'வெளிப்பட உரைத்தல்", 'மன்னனைக் குறிவரல் விலக்கல்", 'பகல்வரல் விலக்கல்", 'அவளைச் சகி குறியின் விலக்கல்" ஆகிய துறைகள், தலைவனைப் பாங்கி குறிவரல் விலக்கல் என்னும் பொருளிலும், 'பாங்கி ஆடிடம் விடுத்துக்கொண்டு அகறல்", 'சிறைப்புறக் கிளவி", 'ஆடிடம் விடுத்துக் கொண்டு அகறல்",

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

'மயிலொடு கூறல்", 'அகறல்" ஆகிய துறைகள், விளையாடும் இடங்களை விட்டுத் தலைவியை நீக்கிக்கொண்டு, பாங்கி வீட்டிற்குச் செல்லுதல் என்னும் பொருளிலும், 'பின்னர் நெடுந்தகை குறிவயின் நீடு சென்று இரங்கல்", 'புனங்கண்டு அழிதல்;", 'பின்னாள் நீடு நினைந்து இரங்கல்", 'வறும் புனங்காண்டல்", 'குறிக்கண் இறை சென்று இரங்கல்" ஆகிய துறைகள், மறுநாள் தலைவன் குறியிடத்து வந்து நீண்டநேரம் தங்கியும் தலைவியைக் காணும் வாய்ப்பினை இழந்தமைக்கு மனம் இரங்குதல் என்னும் பொருளிலும், தமிழ்நெறிவிளக்கம் தவிர்த்த ஆறு நூல்களிலும் ஒன்றி வருகின்றன.

'குறியிடங் கூறல்", 'குறிக்கண் செயல்" ஆகிய துறைகள், பாங்கி தலைவனுக்குக் குறியிடம் கூறுதல் என்னும் பொருளிலும், 'குறியிடத்து உய்த்து நீங்கல்", 'இடத்துய்த்து நீங்கல்", 'குறி உய்த்து அகறல்" ஆகிய துறைகள், பாங்கி தலைவியைக் குறியிடத்து விட்டுவிட்டு நீங்கிச் செல்லுதல் என்னும் பொருளிலும், 'இறையோன் இடத்து எதிர்ப்படுதல்", 'இறை எதிர்ப்படுதல்", 'உவந்து கூறல்", 'இறை வரல்" ஆகிய துறைகள், தலைவி தலைவனிடத்து எதிர்ப்படுதல் என்னும் பொருளிலும், 'இயைதல்", 'புணர்தல்", 'உண் மகிழ்தல்" ஆகிய துறைகள், இருவரும் புணர்ச்சியின் மகிழ்தல் என்னும் பொருளிலும், 'விடுத்தல்", 'புனைந்துற விடுத்தல்", 'ஆயத்துய்த்தல்" ஆகிய துறைகள், தலைவன் தலைவியைத் தோழியோடு செல்லுமாறு விடுத்தல் என்னும் பொருளிலும், 'பாங்கி மெல்லியல் சார்ந்து கையுறை காட்டல்", 'பாங்கி மெல்லியலைச் சார்ந்து கையுறை காட்டல்", 'தோழி வந்து கூடல்", 'சகி கையுறை காட்டுதல்" ஆகிய துறைகள், தோழி தலைவியைச் சார்ந்து, தான் பறித்து வந்த பூக்களைக் காட்டுதல் என்னும் பொருளிலும், 'மையுறைக் கண்ணியைப் பாங்கிற்குக் கூட்டல்", 'பாங்கியிற் கூட்டல்", 'கண்ணியைப் பாங்கியிற் கூட்டல்", 'ஆடிடம் புகுதல்;" ஆகிய துறைகள், தோழி தலைவியை ஆய வெள்ளத்திடைச் சேர்த்தல் என்னும் பொருளிலும், 'நீங்கித் தலைவற்கு ஓம்படை சாற்றல்", 'பை அரவு அல்குலை நீக்கி, பார்த்திபர்க்கு ஓம்படை சாற்றல்", 'ஓம்படை சாற்றல்", 'பருவங்கூறி வரவு விலக்கல்", 'தலைவற்கு ஓம்படை சாற்றுதல்" ஆகிய துறைகள், தோழி தலைவனிடம் தலைவியை எப்பொழுதும் பாதுகாக்க வேண்டும் எனக் கூறுதல் என்னும் பொருளிலும், 'உலகியல் மேம்பட விருந்து விலக்கல்", 'உலகியலாம்படி விருந்து விலக்கல்", 'விருந்து விலக்கல்", 'தனி கண்டு உரைத்தல்", 'விருந்தால் விலக்கல்" ஆகிய துறைகள், ஊர்த்திரும்ப இருந்த தலைவனிடம், விருந்து உண்டு செல்க என்று கூறிப் பாங்கி செலவு விலக்குதல் என்னும் பொருளிலும், தமிழ்நெறிவிளக்கம் மற்றும் களவியல்காரிகை தவிர்த்த ஏனைய ஐந்து நூல்களிலும் ஒன்றி வருகின்றன.

இதேபோல, 'குறியிடத்து இறைவியைக் கொண்டு சேறல்", 'கொண்டு சேறல்", 'குறிக்கண் கொண்டேகல்" ஆகிய துறைகள், தோழி தலைவியைக் குறியிடத்துக் கொண்டு சேர்தல் என்னும் பொருளில் நான்கு நூல்களில் ஒன்றி வருகின்றன. இத்துறைகளுக்குரிய பொருளில் முத்துவீரியத்தில் இடம்பெறும் 'ஆடிடம் படர்தல்", 'குறியிடைச் சேறல்" ஆகிய இரு

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

துறைகளும் வருகின்றன. 'கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம் பொழுது கண்டு இரங்கல்", 'பொழுதினுக்கு இரங்கல்;", 'பூங்கொடி மாலையம் பொழுது கண்டு இரங்கல்", 'இரங்கல்" ஆகிய துறைகள், தலைவி அந்திப்பொழுது கண்டு ஆற்றாது வருந்துதல் என்னும் பொருளில் தமிழ்நெறிவிளக்கம், முத்துவீரியம் தவிர ஏனைய ஐந்து நூல்களில் வருகின்றன. 'இறைமகள் ஆடிட நோக்கி அழிதல்", ஆடிடம் நோக்கி ஆயிழை அயர்தல்", 'பிரிவருமை கூறல்", 'இடம் பார்த்து அழிதல்" ஆகிய துறைகள், தலைவி தலைவனோடு விளையாடும் இடங்களைப் பார்த்து மனம் இரங்குதல் என்னும் பொருளிலும், 'குறுந்தொடி வாழும் ஊர்நோக்கி மதிமயங்கல்", 'ஒள் நுதல் வாழும் ஊரினை நோக்கி மதி மயங்கல்", 'பதி நோக்கிப் பதிமிக வாடல்", 'குறிச்சி எண்ணி மதிமயங்கல்;" ஆகிய துறைகள், தலைவி வாழும் ஊரினை நோக்கித் தலைவன் மதிமயங்கிக் கூறுதல் என்னும் பொருளிலும், தமிழ்நெறிவிளக்கம், களவியல்காரிகைத் தவிர்த்த ஐந்து நூல்களில் ஒன்றி வருகின்றன.

'புகழ்தல்" என்னும் துறை, தலைவன் தலைவியைப் புகழ்ந்து உரைத்தல் என்னும் பொருளிலும், 'பாங்கி புலம்பல்", 'சகி புலம்பல்", ஆகிய துறைகள், தலைவியின் செயலால் களவு வெளிப்படுமோ எனப் பாங்கி வருந்துதல் என்னும் பொருளிலும், 'தலைவியைப் பாங்கி கழறல்", 'பாங்கி கழறல்", 'சகி கழறல்" ஆகிய துறைகள், தலைவியைத் தோழி இடித்துரைத்தல் என்னும் பொருளிலும், 'தலைவி முன்னிலைப் புறமொழி மொழிதல்", 'மெய்குழல் முன்னிலைப்புறமொழி மொழிதல்", 'இறைவன் முன்னிலைப்புறசொல் மொழிதல்" ஆகிய துறைகள், தலைவி பாங்கியை நோக்கிக் கூறமால் அவளுக்குப் புறமாக மொழிந்து அறிவுறுத்தல் என்னும் பொருளிலும், 'இன்னுயிர் பாங்கியொடு பகர்தல்", 'பை அரவு அல்குல் பாங்கியொடு பகர்தல்", 'பாங்கியொடு பகர்தல்", 'சகிக்கு உரைத்தல்" ஆகிய துறைகள், தலைவி பாங்கியிடம் நேரடியாக உரையாடுதல் என்னும் பொருளிலும், 'பாங்கி அச்சுறுத்தல்", 'நெறி சகி அச்சுறுத்தல்" ஆகிய துறைகள், தலைவியை நோக்கித் தோழி களவு வெளிப்படும் என அச்சமுறச் செய்தல் என்னும் பொருளிலும், நம்பியகப்பொருள், மாறனகப்பொருள், இலக்கணவிளக்கம், சுவாமிநாதம் ஆகிய நான்கு நூல்களிலும் வருகின்றன. இதேபோல், 'தலைவன் நீடத் தலைவி வருந்தல்", 'பார்த்திபன் நீடக்காரிகை வருந்தல்" ஆகிய துறைகள், தலைவன்வரக் காலம் தாழ்த்தியதால் தலைவி வருந்துதல் என்னும் பொருளில் மூன்று நூல்களில் ஒன்றுகின்றன.

இத்துறைகளுக்குரிய பொருளில் சுவாமிநாதத்தில் இடம்பெறும், 'இறைவன் நீடல்", 'இறைவி வருந்தல்" ஆகிய இரு துறைகளுக்குரிய பொருள் ஒன்றி வருகின்றன. மேற்குறிப்பிட்ட குறிகளின் குறியிடங்கள் அனைத்தும் தோழி மற்றும் தலைவி தங்கள் புழங்கிய தங்களின் புழக்கத்தில் இருந்த இடங்களாவே அமைகின்றது. தலைவியோ, தோழியோ தங்களுக்குப் பழக்கமில்லாத இடங்களை தலைவனுடன் ஏற்படும் சந்திப்பிற்கு தேர்ந்தெடுத்தே இல்லை. பகற்குறியின் போது குறியிடம் அதாவது சந்திப்பு நிகழும்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

இடங்களைத் தலைவியோ, தோழியோ தேர்வு செய்வாள். தலைவன் ஒருபோதும் குறியிடம் தேர்வு செய்யமாட்டான்.

இரவுக்குறித் துறைகள்

பகற்குறியில் சந்தித்த தலைவன், தோழியின் துணையுடன் இரவில் குறித்த ஓர் இடத்தி;ல் தலைவியைச் சந்திக்கும் நிகழ்வுகளை இரவுக்குறியின் கீழ்க் குறிப்பர். 'நேர்தல்", 'அவற்குத் தன்நாட்டு அணியியல் பாங்கி சாற்றல்", 'இரவிடங் காட்டல்", 'பாங்கி தன்னாட்டு அணியியல் பகர்தல்", 'குறியிடம் கூறல்", 'அவற்குச் சகி கூறல்" ஆகிய துறைகள், தன்நாட்டிலுள்ளோர் அணிகளையும் இயல்பையும் பற்றித் தோழி தலைவனிடம் குறிப்பிடுதல் என்னும் பொருளிலும், 'அவன் வரவு உணர்த்தல்", 'குறியிடை நிறீஇத் தாய் துயிலறிதல்", 'தாய் துயிலறிதல்", 'தான் குறியிடை நிறீஇத் தாய் துயிலறிதல்", 'குறிவயின் நிறீஇத் தாய் துயில் ஓர்தல்" ஆகிய துறைகள், தலைவனைக் குறியிடத்து நிறுத்தித் தோழி தாயினது துயிலுதலைச் சோதித்து அறிதல் என்னும் பொருளிலும், 'நயப்ப மொழிதல்", 'இறைவிக்கு இறைவன் வரவு அறிவுறுத்தல்", 'வரவு உணர்ந்து உரைத்தல்", 'மான் தனக்கு இறைவன் வரவு அறிவுறுத்தல்", 'ஓர்ந்து இறைவிக்கு இறை வரவு சொல்" ஆகிய துறைகள், 'தலைவிக்குத் தலைவன் வந்துள்ள செய்தியைத் தோழி தெரிவித்தல்" என்னும் பொருளிலும், 'குறித்துழி உய்த்தல்", 'அவள் கொண்டு சேறல்", 'இரவுக்குறி உய்த்தல்", 'கொண்டு இடம் சேறல்", 'தலைவி துயிலெடுத்தல்", 'அவள் கொண்டு ஏகல்" ஆகிய துறைகள், தோழி தலைவியைக் குறியிடத்துக் கொண்டு சேர்த்தல் என்னும் பொருளிலும், 'பெயர்ச்சி", 'குறி உய்த்து அகறல்", 'நீங்குதல் உரைத்தல்", 'இடத்து உய்த்து நீங்கல்", 'உடன் குறி உய்த்து அகறல்" ஆகிய துறைகள், தலைவியைக் குறியிடத்து நிறுத்தித் தோழி நீங்குதல் என்னும் பொருளிலும் எல்லா நூல்களிலும் வருகின்றன.

'அல்குறிச் சிறைப்புறமாகச் செப்பல்", 'இறைவிக்கு இகுளை இறை வரவுணர்த்தல்", 'அன்னத்தொலி உணர்தல்", 'மான் விழிக்கு மன் வரவு உணர்த்தல்", 'வேற்றுக்குறி கூறல்", 'இகுளை இறை வரவு உணர்த்தல்" ஆகிய துறைகள், தோழி தலைவிக்குத் தலைவன் குறியில் வந்துள்ள செய்தியை உணர்த்துதல் என்னும் பொருளில் வருகின்றன. இதே துறைக்குரிய பொருளில் இலக்கணவிளக்கத்தில் இடம்பெறும் 'இறைவிக்கு இகுளை இறை வரவு உணர்த்துழித் தான் குறிமருண்டமை தலைவி அவட்குணர்த்தல்" என்னும் துறை வருகிறது. இத்துறையின் பகுதியாக அமையும் 'குறிமருண்டமை தலைவி அவட்குணர்த்தல்" என்பதோடு, நம்பியகப்பொருளில் இடம்பெறும் 'தான் குறிமருண்டமை தலைவி அவளுக்குணர்த்தல்", 'மாறனகப்பொருளில் இடம்பெறும் 'தான்குறிமருண்டமை தலைவி அவட்குணர்த்தல்", சுவாமிநாதத்தில் இடம்பெறும் 'இறைவி தான்குறியின் மருள்வது சாற்றல்" ஆகிய துறைகளுக்குரிய ஒன்றி வருகின்றன.

'நோதல்", 'புலந்தவன் போதல்", 'இரவுக்குறி கழிதல்", 'ஊடி இறைவன் ஒழிதல்", 'நின்று நெஞ்சுடைதல்". 'மனன் புலந்து ஏகுதல்" ஆகிய துறைகள், தலைவன் இரவுக்குறியில்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

தலைவியைக் காணாது மனம் வருந்தி மீண்டு போதல் என்னும் பொருளில் ஏழு நூல்களிலும் பொருந்தி வருகின்றன. ‘இருள் வர வேண்டல்”, ‘இறையோன் இருட்குறி வேண்டல்”, ‘வேந்தன் இருட்குறி வேண்டல்”, ‘இரவுக்குறி வேண்டல்”, ‘மகிழ்நன் இருட்குறி வேண்டல்” ஆகிய துறைகள், தலைவன் தோழியிடம் இரவுக்குறி வேண்டுதல் என்னும் பொருளிலும், ‘மறுத்தல்”, ‘பாங்கி நெறியினது அருமை கூறல்”, ‘சேடி ஆய்ந்து வழியினது அருமை கூறல்”, ‘ஆற்று அருமை கூறல்”, ‘பாங்கி நெறி அருமை வகுத்தல்” ஆகிய துறைகள், தோழி தலைவன் வரும் வழி மிகவும் அரியதாய் இருத்தலைக் குறிப்பிடுதல் என்னும் பொருளிலும், ‘குறியிடம் வகுத்தல்”, ‘இறைவிக்கு இறையோன் குறையறிவுறுத்தல்”, ‘கொற்றொடிக்கு இறைவன் குறை அறிவுறுத்தல்”, ‘இரவு வரவு உரைத்தல்”, ‘இறை குறிப்பு ஏந்திழைக்கு இயம்பல்” ஆகிய துறைகள், தோழி தலைவிக்கு தலைவன் இரவுக்குறி விரும்பும் குறிப்பை அறிவித்தல் என்னும் பொருளிலும், களவியல் காரிகை தவிர ஆறு நூல்களில் வருகின்றன. ‘வண்டுறை தாரோன் வந்து எதிர்ப்படுதல்”, ‘குறி எதிர்ப்படுதல்”, ‘மண்டமர் கடந்தோன் வந்து எதிர்ப்படுதல்”, ‘தாரோன் வந்து எதிர்ப்படுதல்”, ‘தளர்வு அகன்று உரைத்தல்”, ‘அவன் எதிர்ப்படல்” ஆகிய துறைகள், தலைவன் தலைவியை எதிர்ப்படுதல் என்னும் பொருளில் தமிழ்நெறிவிளக்கம் தவிர்த்த ஏனைய ஆறு நூல்களிலும் வருகின்றன.

முடிவுரை

தலைவன் தலைவி களவுகாலத்தில் உள்ளம் கலந்து சந்திக்கும் சந்திப்பு பகற்குறி, இரவுக்குறி என்று பாகுபடுத்தி விளக்கியுள்ளனர். ஒருசார் பகற்புறியின் வகைகளாக இரங்கல், இரங்குதல், வன்;புறை, இற்செறிப்பு உணர்தல், செறிப்பு உணர்த்தல் , இல் தேவி செறி உணர்த்தல் ஆகிய மூன்று பிரிவுகளும், பகற்குறி இடையீட்டின் வகைகளாக விலக்கல் , தறுக்கல், சேறல், செல்லல், கலக்கம் ஆகிய மூன்று பிரிவுகளும் அமைந்துள்ளன.

இரவுக்குறியின் வகைகளாக வேண்டல், மறுத்தல், உடன்படல், கூட்டல், கூடல், பாராட்டல், பாராட்டுதல், உயங்கல், நீங்கல், நீங்குதல் ஆகிய எட்டுப் பிரிவுகள் நான்கு நூல்களிலும் அமைந்துள்ளன. இதோடு, இரவுக்குறியின் வகைகளில் பாங்கியிற் கூட்டல், பாங்கிற் கூட்டல் என்னும் பிரிவு நம்பியகப்பொருள், மாறனகப்பொருள் , இலக்கணவிளக்ம் ஆகிய மூன்று நூல்களில் மட்டும் காணப்படுகின்றது.

துணைநூற்பட்டியல்

[1] தொல்காப்பியம் -பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி - 1972.

[2] தொல்காப்பியம் - பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி -1972

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

[3] சுப்பிரமணியன், ச.வே., தமிழ் இலக்கண நூல்கள், மெய்யப்பன் பதிப்பகம், சென்னை - 2009

[4] இறையனார் (நக்கீரர், உரை) இறையனாரகப்பொருள் திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை – 1964.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

காயத்ரிதேவி. "தொல்காப்பிய உரைகாரர்கள் வழி அமையும் குறியிடமும் குறிகளும்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 1 *திசம்பர்* 2020, பக். 105-111.

டிஓஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.017**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Gayathri Devi. "Signs and Symbols of the Tolkappiya Derivative Authors"." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020, pp. 105-111. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.017**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /NIL

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இல்லை /NIL

E-ISSN: 2581-7140
UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020
Available at: www.ijtlls.com

திருப்பாணாழ்வார் பாசுரத்தில் உரை வேறுபாடுகள்

Text Differences in the Pasuras (Hymns) of Thirupanalwar

முனைவர் க.கிரிவாசன், உதவிப்பேராசிரியர். தமிழ்த்துறை, துவாரகதாஸ் கோவர்தன்தாஸ், வைணவக் கல்லூரி, அரும்பாக்கம், சென்னை – 600106.

Dr.K.Girivasan, Assistant Professor, Tamil Department, Dwarakadas Gowarthan Vaishnava College, Arumpakkam, Chennai – 600106

ORCiD: https://orcid.org/0000-0002-7340-0836
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.018

Abstract

In the classic Tamil society Panars are well known scops and bards. The eminent scholar Sivathambi affirms that Panars are one of the aboriginal Tamil people. In the middle ages the life and the service of the Panars are spoken in a little manner. Scholars like Yalpanar, Panapathirar, and Thirupanalwar are famous poets in Sangam poetry. Many of the verses of the poets are missing due to the ravages of time but the songs of Thirupanalwar are existing and many notes are available for the songs. An extended study is needed for the recovery of the ancient aesthetic songs to let it know for the future generations to imbibe the life style and aesthetic sense of the Sangam People. Hence, this article delves deep to identify the related concepts and ideas through scholarly outlook.

Keywords: Text Differences, Pasuras (Hymns), Thirupanalwar

முன்னுரை

தமிழின் தொல்குடிச் சமூகமான பாணர்கள், சங்ககால கட்டத்தில் நன்கு அறியப்பட்டனர். அதற்குச் சங்கப்பாடல்களே சான்றாக அமைந்துள்ளன. புலவர்களுக்கும் முந்தைய வாய்மொழிப் பாட்டுக்காரர்களாகப் பாணர்களைக் பண்டைய தமிழ்ச்சமூகமாக கார்திகேசு சிவத்தம்பி அடையாளப்படுத்துவார். தமிழின் தொன்மையை அறிய பாணர்கள் பற்றிய ஆய்வு தேவைப்படுகிறது. சங்க காலகட்டத்தைத் தாண்டி இடைக்காலத்தில் பாணர் சமூகம் பற்றிய பதிவு அறிகிப்போனது. அவ்வாறான அறிதான சூழலில் திருநீலகண்ட யாழ்ப்பாணர், பாணபத்திரர், திருப்பாணாழ்வார் போன்ற பாண் வழிவந்த புலவர்கள் காட்டப்படுகின்றனர். இவர்களில் திருப்பாணாழ்வார் பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளது. அப்படிக்கிடைத்த திருப்பாணாழ்வார் பாடல்களில் தமிழின் தொன்மையையும் பக்தியின் உண்மையையும் அறிய வேண்டியது அவசியமாகிறது.அப்படியாயின் திருப்பாணாழ்வார் இயற்றிய பாடல்களுக்கு எழுந்த உரைகளை ஆராய்வது இங்கு நோக்கமாகக் கொள்ளப்படுகிறது.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

திருப்பாணாழ்வார்

திருமால் பக்தியில் ஆழ்ந்து இருப்பாவர்கள் ஆழ்வார்கள், பன்னிரு ஆழ்வார்களுள் பத்து பாசுரங்கள் மட்டுமே பாடியவர் திருப்பாணாழ்வார். அவை அமலனாதிபிரான் என்று அழைக்கப்படுகிறது. இவர் உறையூரில் நெல்வயலில் பாணர் ஒருவரால் கண்டெடுக்கப்பட்டதாகவும் அதன் பொருட்டு இவர் திருப்பாணாழ்வார் எனப் பெயர் பெற்றதாகவும் குருபரப்பரைப் பிரவாகம் குறிப்பிடுகிறது. திருப்பாணாழ்வாரை லோகச்சாரங்கன் தன் முதுகில் ஏற்றி அரங்கனின் அவயவங்களைக் காட்டியாதால் இவருக்கு முனிவாகனன், யோகிவாகனன் என்ற பெயர் உண்டு. இதனை அடியோற்றியே வேதாந்த தேசிகர் முனிவாகன போகம் என்ற உரைநூல் இயற்றினார்.

அமலனாதிப்பிரான்

திருப்பாணாழ்வார் இவற்றிய பத்து பாசுரங்களுக்கும் அமலனாதிப்பிரான் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. திருப்பாணாழ்வாரின் பாசுரங்கள் முதல் அடியையே நூல் தலைப்பாக அமைக்கும் முறைப்படி அமைந்துள்ளது. அமலனாதிபிரானுக்கு பெரிய நம்பிகள் இயற்றிய வடமொழித் தனியன் திருப்பாணாழ்வாரின் பெருமையைப் புலப்படுத்துகிறது. மேலும் பெரிய திருமலை நம்பிகள் இயற்றி

காட்டவே கண்ட பாத கமலம் நல்லாடை உந்தி
தேட்டரும் உத்தர பந்தம் திருமார்பு கண்டம் செவ்வாய்
வாட்டமில் கண்கள் மேனி முனியேறித் தனி புகுந்து
பாட்டினால் கண்டு வாழும் பாணர் தாள் பரவினோமே

என்ற தமிழ் தனியன் மூலம் அமலனாதிபிரானின் பெருமை அறியப்படுகிறது. அமலனாதிபிரானில் பாதாதி கேசம் என்னும் திருவடி முதல் திருமுடிவரை திருவரங்களை ஆழ்வார் அனுபவிக்கிறார். பாதம் முதல் கண்கள் வரை ஆழ்வார் கண்ட காட்சியை ஆசிரியத்துறையில் ஒன்பது பாடல்களாலும், கலிவிருத்தத்தில் ஒரு பாடலாலும் பாடுகிறார்.

அமலனாதிப்பிரான் உரைகள்

திருப்பாணாழ்வாரின் அமலனாதிப்பிரானுக்கு **வேதாந்த தேசிகரின் முனிவான போகம்** என்று தனி உரைநூல் எழுதியுள்ளார். நாலாயிர திவ்யப்பிரபந்தம் முழுமைக்கும் உரை வகுத்தவர் **பெரியவாச்சான் பிள்ளை** அதன் காரணமாகவே இவருடைய உரைகள் அருளிச் செயல்கள் எனப்பட்டன என்று மணவாள மாமுனிகள் தன் உபதேச ரத்தின மாலையில் குறிப்பிடுகிறார்(பாடல் எண் 39). மேலும் **அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்** அமலனாதிப்பிரானுக்கு எனத் தனித்து உரை வகுத்துள்ளார். பிற்காலத்தில் காஞ்சி பிரதிவாதி பயங்கரம் **அண்ணங்கராசாரியாரும்** விளக்க உரை அளித்துள்ளார். அமலனாதிப்பிரான் தனியன்களுக்கு **பிள்ளை லோக ஜீயர்** முதற்கொண்டு ஜீயர்கள் பலரும் இதற்கு தனியன் உரை வழங்கியுள்ளனர்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

தற்காலத்திலும் நாலாயிர திவ்யப் பிரந்தத்திற்குப் பல்வேறு உரைகள் வந்திருப்பினும் அமலனாதிப்பிரான் பாசுரங்களுக்கு வேதாந்த தேசிகர், பெரியவாச்சான் பிள்ளை, அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் ஆகிய மூவரின் உரைகளே பெரிதும் அடியோற்றியுள்ளன.

அவதாரிக்கை என்னும் தோற்றுவாய்

அமலனாதிபிரானுக்கு உரை வகுத்ததில் அவதாரிகை என்னும் தோற்றுவாய் சிறப்பான இடத்தைப் பிடிக்கிறது. அவதாரிகை என்பது முன்னுரை போல அமையும். பாட்டின் பெருமையோ, பாடப்பட்டோர் பெருமையோ கூறுவதற்கு அவதாரிகை என்று பெயர்.

பெரியவாச்சான் பிள்ளை உரையின் முற்பகுதியில் அவதாரிகை என்னும் தோற்றுவாயைக் கூறுகிறார் பின்பு ஒவ்வொரு பாடலுக்கும் உரை வகுக்கிறார். ஆனால் நாயனார் ஒவ்வொரு பாடலின் தொடக்கத்திலும் உரையைக் கூறும் முன்பு அவதரிகையக் கூறி அப்பாடலின் உரையைக் கூறத் தொடங்குகிறார். இது இவ்விரு உரையாசிரியருக்கும் உள்ள வேறுபட்ட உரைத்திறனைக் காட்டுகிறது.

உரைக்கு உரை

"விரைபொழில் வேங்கடவன்" என்ற இடத்திற்கு பெரியவாச்சான் பிள்ளை ஆற்றிலே யழுந்துவார் ஆழங்காலிலே இளைப்பாற என்னுமாப்போலே என்கிறார்.

நாயனாரோ – ஆற்றிலே அமிழ்ந்துகிறவன் ஒருகாலைத் தரையிலே ஊன்றினால் பிழைக்கலாமோ என்று காலல்தாழ்க்குமாப்போலே என்கிறார் இவ்விருவர் சொன்ன கூற்றுக்கும் ஒன்றே போன்றது.

இக்கருத்து எழுதற்கு பிள்ளை திருநறையூர் அரையரிடம் சிலர் கேட்ட கேள்விக்கு அவர் அளித்த பதிலையே உரையின் பின் பகுதியில் உரையாசிரியகள் காட்டுகின்றனர். திருப்பாணாழ்வார் திருவரங்கனைப் பாடும் போது திருவேங்கடன் பக்கல் சென்ற காரணம் என்ன? என்ற கேள்விக்கு ஆழ்வார் திருவைகுண்டத்தில் நின்றும் திருமலையில் தங்கியும் திருவரங்கம் என்னும் கோயிலை வந்தடைந்தார் என்று கூறுவதாக அமைந்த கருத்து உரையாசிரியர்களுடன் ஒன்றிணைவதையும் காணமுடிகிறது.

பாடலோடு ஒப்புமை

உரையாசிரியர்கள் அனைவருமே அமலனாதிபிரானுக்கு உரை வகுக்கும் போது நாலயிர திவ்யப்பிரபந்தத்தில் மற்ற ஆழ்வார்கள் பாடிய பாடல்களை ஒப்புமை காட்டுகின்றனர். அவை உரையாசிரியர்கள் கண் ஒன்றியும் வருகின்றன, வேறுபட்டும் வருகின்றன.

திருப்பாணாழ்வாரின் முதல் பாடலுக்கு உரை வகுக்கும் போது அமலன் என்ற சொல்லுக்குப் பொருள் கூறும் போது பெரிய வாச்சான் பிள்ளை, நாயனார் இருவருமே உயர்வற உயர் நலம் (திருவாய் மொழி 1-1-1) என்ற நம்மாழ்வார் பாடலை ஒப்புமைக் காட்டுவதைக் காணமுடிகிறது. அமலன் என்ற சொல்லுக்கு வேதாந்த தேசிகர் வேதாந்த

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

பொருளிலே பரத்துவம் என்ற பொருளினைத் தருகிறார். தேசிகர் தம் உரையில் வேதத்தின் பொருளை இணைந்துக் கூறியுள்ளமையும் இங்கு உய்துணர முடிகிறது.

ஒரு சொல்லுக்குப் பலர் பல பொருள் காட்டல்

காகுத்தன் என்ற ஒரு சொல்லுக்குப் பெரியவாச்சான் பிள்ளை உரை வகுக்கும் போது திருமால் குடி பிறப்பாலே தரம் பாராதவன் என்று கூறுகிறார். நாயானரோ காகுஸ்த குடியில் பிறந்தவன் என்றும் (காயுங் கடுஞ்சிலையென் காகுத்தன் வாரானால் – திருவாய்மொழி 5-4-3) என்று ஆழ்வார்பாடல்களை எடுத்துக்காட்டிவிளக்கம் கூறுகிறார். இவ்வாறு இவர்கள் வேறுபட்டு காட்டுகின்றனர். வேதாந்த தேசிகர் காகுத்தன் என்பதற்கு மாயவியான அசுரர்களும் விரும்பும்படி இருப்பவன், என்றும் தேவர்களும் முனிவர்களுக்கும் ஒண்ணாத படி இருப்பவன் என்றும் உரை கூறுகிறார். இவ்வாறு ஒரு சொல்லுக்கு மூவரும் மூன்று பொருளைத் தருகிறன்றனர்.

இச்சொல்லுக்கு ந.சுப்புரெட்டியார் தம் வைணவ உரைவளத்தில் காகுத்தன் என்பதற்கு காகுத்தன் என்ற புகழ் பெற்ற அரசன் இந்திரன் முகப்பில் ஏறி போர் செய்ததால் அவனுக்கு அப்பெயர் வந்தது அந்தக் காகுத்தன் வம்சத்தில் வந்த இராமனை ஆழ்வார் கூறுகிறார் என்று பொருள் கூறுகிறார்.

இதிகாச புராணக் கதைகள் கூறல்

உலகம் அளந்து அண்டம்உற (2) என்ற திருப்பாணாழ்வார் பாசுரத்திற்கு வாமன அவதார புராணக் கதையைப் பெரியவாசன் பிள்ளை கூறுகிறார்.

சதுர மாமதிள் சூழ், இலங்கைக்கு இறைவன்தலை பத்து (3) என்ற இடத்தும் இராமாயணக் கதை கூறப்படுகிறது.

மேலும் துண்ட வெண்பிறையான்(6) என்ற இடத்தில் சிவன் பிரம்பன் தலை வாங்கிய பிரம்பகத்தி தோஷம் பற்று திருமாலிடம் சாப விமோட்சனம் பெற்ற வரலாறு வைணவ உரை வளங்களில் சுட்டப்பட்டுள்ளன இதனை ந.சுப்புரெட்டியார் தன் வைணவ உரைவளத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆலமா மரத்தின் இலைமேல் ஒரு பாலகனாய் (9) என்ற பாசுரத்திற்கு அழகிய மணவாள நாயனார் கண்ணனின் பாலாலிலை காட்டுகிறார். இவ்வாறு உரையாசிரியர்கள் தம் உரைகளில் இதிகாச, புராணக் கதைகளைக் கூறுகின்றனர்.

உரையாசிரியர்களின் தனித் தன்மை

அமலனாதிபிரானுக்கு உரை வகுத்த உரையாசிரியர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்தன்மையும் உள்ளது.

வேதாந்த தேசிகர்

வேதாந்த தேசிகர் அமலனாதிபிரானுக்கு என்று தனித்து முனிவாகன போகம் என்ற நூல் கொடுத்துள்ளமை அவரின் தனித்தன்மையைக் காட்டுகிறது. மேலும் ஒவ்வொரு பாடலுக்கும் வேதத்தில் இருந்து பொருள் எடுத்துக் காட்டியுள்ள பாங்கு சிறப்புடையது.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

பாரமாய பழ வினை என்ற திருப்பாணாழ்வார் பாசுரத்திற்கு நாராயண சப்தார்த்தம் கொடுத்துள்ள பாங்கு அவரின் வடமொழிப் புலமையையும் காட்டுவதாக உள்ளது.

நாராயண சப்தார்த்தம்

1. பழ வினை பற்று அறுத்து – அஷ்ட நிவர்த்தகம்
2. வாரமாக்கி வைத்தான் – இஷ்ட ப்ராபகத்வம்
3. வாரமாக்கி வைத்தான் – பஹிர் வ்யாப்தி
4. என்னுள் புகுந்தான் – அந்தர் வ்யாப்தி
5. கோர மாதவம் – நித்ய கிருபை
6. செய்தனன் – ஸுலப்யம்
7. அரங்கத்தம்மான் – ஸ்வாமித்வம்
8. திரு – ஸ்ரீ யபதித்தவம்
9. ஆர மார்பு – திவ்ய மங்கள விக்ரஹ யோகம்
10. அடியேனை – தாஸ பூத ஸ்வரூபம்
11. ஆட்கொண்டதே – தாஸ்ய பல கைங்கர்யம்

மேலும் வேதாந்த தேசிகர் கீதை ஸ்லோகங்கள் மற்றும் ஸ்ரீ ஸூக்தம் சதுர் வேதம் முதலான வடமொழி நூல்களையும் எடுத்துக்கட்டிய விதத்தில் மற்ற அமலனாதிபிரான் உரையாசிரியர்களுடன் வேறுபடுகிறார். த்வையம், சரமஸ்லோகம் போன்ற வேதந்த கருத்துகள் நிறைந்ததாக தேசிகர் முனிவாகன போகம் உள்ளது.

அழகியமணவாளப் பெருமாள் நாயனார்

அமலனாதிபிரானுக்கு மற்ற உரையாசிரியர்களை விட அதிகமாக நாலாயிர திவ்யப் பிரபந்தங்களை மேற்கோள் காட்டியுள்ளார். முன் பாடலோடு தொடர்புபடுத்திக் கூறுல், பின் பாடலோடு வருமுன் காட்டல் போன்ற உரை உத்திகளைக் கையாண்டுள்ளார். இவர் மேற்கோள் காட்டியப் பாடல்களில் பெரும்பான்மை நம்மாழ்வார் இயற்றிய திருவாய்மொழியில் இருந்து இடம் பெற்றுள்ளது மற்றோர் சிறப்பு. நாயனார் பெரும்பான்மை பெரியவாச்சான் பிள்ளை உரையுடன் ஒன்றுபட்டுவதைக் காணமுடிகிறது.

பெரியவாச்சான் பிள்ளை

பெரியவாச்சான் பிள்ளை உரைத் திறனில் சொல்லுக்குச் சொல் உரை வகுத்த பாங்கினைக் காண முடிகிறது. திருப்பாணாழ்வார் பாசுரத்தை வடமொழி ஸ்லோகங்களுடன் ஒப்பிட்டுக் காட்டல், இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களோடு ஒப்புமைப்படுத்திக் கூறுல், நிகழ்வுகளின் மூலம் பாசுரத்தை உவமித்தல் தன் கற்பனையை ஏற்றிக் கூறல் போன்ற தன்மைகளில் மற்ற உரையாசிரியர்களிடம் இருந்து வேறுபட்டுள்ளார். பெரியவாச்சான்பிள்ளை உரையில் பாடவேறுபாடும் காணப்படுகிறது. தந்த நத்தின் என்பது தன்திறத்தில் என்றும், பனங்குலை உதிர்த்தாப்போலே- பனங்குலை உதிர்ந்தாப் போலே

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

என்றும், முடிசூட்டுமாப்போலே என்பது முடிசூட்டுவாரைப் போல என்றும் இவ்வாறான பாட பேதங்களும் உண்டு

நிறைவாக

புலவர்களுக்கு முன்தைய சமூகமான பாணர் குலத்தில் இருந்த வெளிப்பட்ட திருப்பாணாழ்வார் பக்தி காலத்தில் தன் திறந்தை வெளிப்படுத்திய பாங்கு அதற்கு எழுந்த உரைகள் மூலம் வெளிப்படுகிறது. அமலனாதிபிரானுக்கு உரையாசிரியரியர்கள் உவமித்துக் கூறல், கற்பனை நயம் என சில இடங்களில் வேறுபட்டாலும் பக்தி உணர்வில் ஒன்றுபடுவதைக் காணமுடிகிறது. பாடலில் இடம் பெற்றுள்ள புராண, இதிகாசக் கதைகள் உரையாசிரியர்கள் மூலமே அறியப்படுகின்றன. தமிழ்ப் பிரபந்தங்களுக்கு உரையாசிரியர்களுக்குள் வடமொழிச் சொற்கள் நிறைந்த மணிப்பிரவாள முறையில் உரை வகுத்தமையை பல இடங்களில் உய்துணரலாம். இவ்வாறான உரைச் சிக்கல்களுக்கு தீர்வு காணம் நோக்கிலே தற்காலத்தில் எளிய உரைகள் எழுந்துள்ளன. ஆனால் அவற்றில் பாடல் பொருள் மட்டுமே உள்ளது, மேற்கோள் பாடல்கள், ஒப்புமை என பழைய உரையாசிரியர்களின் தனித்தன்மை இல்லை என்பது ஆய்ந்தறியப்பட்ட வேண்டியுள்ளது.

ஆய்வுக்குத்துணை நின்ற நூல்கள்

[1] வைணவக் கலைச்சொல் அகராதி, டாக்டர் தெ.ஞானசுந்தரம், சந்தியா பதிப்பகம்கம், சென்னை. ஆண்டு 2017.

[2] வைணவ உரைவளம் தே.ஞானசுந்தரம், தாயம்மை பதிப்பகம், 149 அண்ணாநகர் மேற்கு, சென்னை. ஆண்டு 1989.

[3] உபதேச ரத்தின மாலை, பிள்ளை லோகஞ்சீயர், வியாக்கியானமும் பதவுரையும், யுனைடட் அச்சகம், காஞ்சிபுரம். ஆண்டு 1957.

[4] வைணவ உரை வளம் ந.சுப்புரெட்டியார்.தமிழ் இணையக் கல்விக் கழகம் சென்னை.

[5] பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம், கார்த்திகேசு சிவத்தம்பி, குமரன் புத்தக இல்லம்,சென்னை. ஆண்டு- 2004

[6] அமலனாதிபிரான் வ்யாக்யானங்கள், பதிப்பாசிரியர் ரகுராமன், 24/71, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-620017 ஆண்டு 2008.

[7] காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகள் ந.சுப்புரெட்டியார், அவ்வை வெளியீடு சென்னை-600083. ஆண்டு 2004.

[8] நாலாயிரத் திவ்யப்பிரபந்தம், எளிய உரை முனைவர் த.கோவேந்தன், சாரதா பதிப்பகம், சென்னை-600014, ஆண்டு -2015.

E-ISSN: 2581-7140 **UGC CARE Listed Journal**
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 **Available at:** www.ijtlls.com

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

கிரிவாசன். "திருப்பாணாழ்வார் பாசுரத்தில் உரை வேறுபாடுகள்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 1, *திசம்பர்* 2020, பக். 112-118. டிஒஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.018**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Girivasan. "Text Differences in the Pasuras (Hymns) of Thirupanalwar." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020, pp. 112-118. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.018**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /NIL

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இல்லை /NIL

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

பன்னிருதிருமுறை உரைகள்

The Prose Works of Twelwe Holy Works

பூ.கிருஷ்ணம்மாள், முனைவர் பட்டஆய்வாளர், தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி, பாளையங்கோட்டை.
B.Krishnammal, Research Scholar, St. Xaviers College, Palayamkottai
ORCiD: https://orcid.org/0000-0003-1830-388
முனைவர் ஆ.முருகன், உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை, தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி, பாளையங்கோட்டை.
DR. A.Murugan, Assistant Professor Department of Tamil, Palayamkottai.
ORCiD: https://orcid.org/0000-0002-6329-4048
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.019

Abstract

Panniruthirumurai is a collection of poetry with more songs in devotional literature. Since Panniruthirumurai is in the form of poetry, many texts have been written from 1853 to 2019 to explain it in a vivid manner. The texts convey clear meaning to Tamil enthusiasts and researchers in a simple way with quotes and comparisons. It is a divine pleasure to read the verses of the holy hymns but when the prose writers had extended their ideas and intellect in their writings; it added too much elegance and lucidity to delve deep into the spiritual union. Hence, this article focuses to cull down the concepts related to it.

Keywords: Prose Works**,** Twelve Holy Books Devotional Literature, Quotes and Comparisons

முன்னுரை

உலகின் தொன்மையான மொழி ,பல இலக்கண, இலக்கியநூல்கள் தோன்றியுள்ள மொழி எனப்பல பெருமைகளைக் கொண்டு தற்போதும் பேச்சு மற்றும் எழுத்து வழக்கில் புதுமைகளைப் புகுத்தி வருவது நமது தமிழ்மொழி.தமிழ்மொழியில் சங்க இலக்கியங்கள் , பக்தி இலக்கியங்கள் பல இயற்றப்பட்டு மொழிக்குப் பெருமையையும், வளர்ச்சியையும் அடையச் செய்த இலக்கியங்கள். அனைத்தும் வரலாற்றை கூறுவதற்கு மட்டுமல்லாமல் மக்களிடையே மாற்றத்தை ஏற்பத்தி உள்ளன. பக்தி இலக்கியங்கள் இறைவனை பாடுவது மட்டுமல்லாமல் சமயக் கருத்துக்களை கொண்டு மக்களிடையே மாற்றத்தை உரையின் வழியாக தெரிந்து கொள்ளமுடிகிறது. இவ்வாய்வில் பக்திஇலக்கியத்தில் சைவசமயநூல்களின் தொகுப்பான பன்னிருதிருமுறை உரைகள் பற்றியும் உரைஆசிரியர்கள், , காலம் மற்றும் பதிப்பகங்கள் பற்றியும் காண்போம்.

பன்னிருதிருமுறை

கி.பி ஆறாம் நூற்றாண்டுகாரைக்கால்அம்மையார் முதல் பதினோராம் நூற்றாண்டு சேக்கிழார் வரை சைவசமயத்தை எழுச்சிபெற செய்ய நாயன்மார்கள் 27பேர் பாடிய பல இசைபாடல்களின் தொகுப்பு பன்னிருதிருமுறை.

பன்னிருதிருமுறை தொகுப்பு

“பதினோராம் நூற்றாண்டில் சிறப்பான இடம் பெறும் சைவ ஆசிரியர் நம்பியாண்டார்நம்பி, இராசராச மன்னனின் வேண்டுகோளுக்கு இணங்க

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

சைவதிருமுறைகளைத் தேடிப்பெற்றும், அவற்றைத் திருமுறைகளாக வகுத்ததும் அவற்றுக்குப் பண்ணடைவு செய்வித்ததும், சைவசமய சரித்திரத்தில் மறக்கமுடியாத பெரு நிகழ்ச்சிகள்". தமிழ் இலக்கிய வரலாறு, பதினோராம் நூற்றாண்டு, மு.அருணாசலம், (180) இவ்வாறு நம்பியாண்டநம்பி அவர்களால் தொகுக்கப்பட்ட பன்னிருதிருமுறைகள் "பதினோராம் நூற்றாண்டிற்குப் பிறகும் சைவ இலக்கியம் எல்லாத் துறைகளிலும் வளர்ந்து கொண்டு சிறந்து செல்ல வழிவகுத்தது". தமிழ் இலக்கிய வரலாறு, பதினோராம் நூற்றாண்டு, மு.அருணாசலம், (199)

பன்னிருதிருமுறை உரை – வடிவங்கள்

உரை என்பதற்கு அகராதி, புகழ், முழக்கம், செபம், உரைக்க, சொல், வியாக்கியாணம் எனபல பொருள் தருகிறதும் இவ்வாய்வில் பன்னிருதிருமுறைஉரைகள் என்பதில் வியாக்கியாணம், பொருள் என்பது பொருந்தும். பன்னிருதிருமுறை உரைகள் பொழிப்புரை, குறிப்புரை, விளக்ககுறிப்புரை, தெளிவுரை, விரிவான விளக்கங்களுடன் உரை, சுருக்கமானஉரை எனப்பல வடிவங்களில் காணப்படுகிறது.

பன்னிருதிருமுறை உரைகளின் காலமும் பதிப்பாசிரியர்களும்

இலக்கியங்கள் செய்யுள் வடிவில் தேன்றின. காலப்போக்கில் மொழியில் ஏற்பட்டமாற்றங்களில் அவை எளிதில் புரிந்து கொள்ளமுடியாத நிலைஏற்பட்டது. அப்போது அவைகளைப் படிப்போர் விளங்கிக் கொள்வதற்காக உரை எழுதப்பட்டன. உரைநடையின் வளர்ச்சி இப்போது தொடங்கியது. பன்னிருதிருமுறை பாடல்களும் செய்யுள்வடிவில் அமைந்துள்ள காரணத்தால் உரைகள் எழுதப்பட்டுள்ளன. ஒருசெய்யுளின் உரையைபடிக்கும் போது பொருள் தெளிவாக உணரமுடிகிறது. பன்னிருதிருமுறைகளுக்கு பலஆசிரியர்களால் உரை எழுதப்பட்டு பதிப்பகங்கள் மூலம் வெளியிடப்பட்டுள்ளன. 1853 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை எழுதப்பட்ட பன்னிருதிருமுறை உரைகளில் சில பதிப்பகங்கள் முழுமையான பன்னிருதிருமுறை பாடல்களுக்கும் பலபதிப்பகங்கள் குறிப்பிட்ட சிலதிருமுறைகளுக்கும் உரை வெளியிட்டுள்ளனர். முதல்முதலில் 1853 ஆம் ஆண்டு திருமுருகாற்றுப்படை மூலமும் ஆறுமுகநாவலர் புத்துரையும் என்ற நூல் நச்சினார்கினியர் உரையை தழுவி வெளியிடப்பட்டுள்ளது.

பன்னிருதிருமுறைஉரைகள்

பன்னிருதிருமுறை பாடல்கள் முழுமையாக உரைவெளியிட்ட பதிப்பகங்கள் மற்றும் உரை ஆசிரியர்கள். "வர்த்திமானனன்பதிப்பகத்தார், சுருக்கமான உரையுடன் மூலத்தை எழுபதிப்பகங்களாக, பலதொகுதிகளாக 12 திருமுறைகளையும், அருட்செல்வர் மகாலிங்கம் அருட்கொடையுடன் வெளியிட்டுத் திருமுறைகளுக்குச் சிறப்புச் செய்துள்ளனர். முதற்பதிப்பு 2001.

இதுவரை வெளிவந்த உரைகளிலேயே மிகவிரிவானது, விளக்கமானது 1953 முதல் 1997 ஆண்டுகளில் குருமகாதேசிகர்,தண்டபாணிதேசிகர்போன்ற உரையாசிரியர்களைக் கொண்டு தருமை ஆதீனம்வெளியிட்டருளினார்கள். அவற்றின் மறுப்பதிப்பு காந்தாளம்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

அச்சகத்தின் மூலம் வெளியிட்டுள்ளார்கள்." முதல் திருமுறை,டாக்டர், இராச. வசந்தகுமார் , (21)

கற்பகம் பல்கலைக்கழகத்தின் பன்னிரு திருமுறை ஆய்வு மையம், டாக்டர். இரா. வசந்தகுமார், வேந்தர், பதிப்பாசிரியர் கொண்டு பன்னிரு திருமுறைகளையும் தனித்தனியாக நூலாக்கி முதற்பதிப்பு 2015 முதல் 2019 வரை வெளியிட்டுள்ளார்கள்.

குறிப்பிட்ட சில திருமுறைகளின் உரைகள்

- பல பதிப்பகங்கள் தனித்தனியே திருமுறைகளுக்கு உரை வெளியிட்டுள்ளார்கள்.
- சதுரா பதிப்பகம், ஜி. முரளி ,தொகுப்பாசிரியர் உரையில் பன்னிரு திருமுறை என்ற நூலை முதல் ஆறு திருமுறைகளும் மட்டும் மூலமும் உரையும் வெளியிட்டுள்ளனர். முதற் பதிப்பு 2007.
- எட்டாம் திருமுறைக்கு பல பதிப்பாசிரியர்கள் தொகுப்பாசிரியர்களைக் கொண்டு பல உரைகள் எழுதப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட நூல்கள் உரை நூல்கள் வெளியிடப்பட்டுள்ளது.
- ஆங்கிலம், வடமொழியிலும் மொழிபெயர்த்து உரையுடன் பதிப்பகங்கள் வெளியிட்டுள்ளன. திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஜி.யு. போப் அவர்கள், தனது கல்லறையில்' தமிழ் மாணவன்' என பதிக்கும்படி கூறியுள்ளார் என்பது திருவாசகத்தின் தமிழ் சிறப்பை எடுத்துரைக்கிறது. இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட நூல்கள் உரை நூல்கள் வெளியிடப்பட்டுள்ளது.
- பத்தாம் திருமுறை மற்றும் பன்னிரண்டாம் திருமுறை பல தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு சிறப்பான விளக்கங்களுடன் திருவாடுதுறை ஆதினம் மற்றும் பழனியப்பா பிரதர்ஸ் பதிப்பகங்கள் வெளியிடப்பட்டுள்ளது.
- மூவர் தேவார சொல்லகராதி என்ற நூல் ராமநாத அடிகளார் அறக்கட்டளை தொகுத்து, பகுப்பு, டாக்டர் .புலவர். மணியன் அவர்களால் 8250 பாடல்களின் சொற்களுக்கும் அகராதியின் இரண்டு தொகுதிகள் மிகவும் பயனுள்ள நூலாக வெளியிடப்பட்டுள்ளது.
- தேவார திருப்பதிகங்கள் என்ற நூல் சமூக சமய சங்கம் திருநெல்வேலி, பதிப்பு, டாக்டர். வீ. ஆறுமுகம் தமிழிலும், ஆங்கிலத்திலும், உரைநடையிலும், விரிவான விளக்கங்களுடன் தொகுத்து 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளது.

உரை திறனாய்வு

பன்னிரு திருமுறை பாடலுக்கு பலஆசிரியர்களால் பல உரை இயற்றப்பட்டுள்ளது. இவற்றில் சதுரா. முரளி அவர்களின் தொகுப்பில் வெளிவந்த முதல் ஆறு திருமுறை பாடல்கள் உரையில் , பொழிப்புரை சிறப்பாக அமைந்துள்ளது. முனைவர். இராசவசந்தகுமார் அவர்களின் தொகுப்பில் பதிப்பாசிரியராக வெளியிட்ட பன்னிருதிருமுறை நூலில் ஆசிரியரின் வரலாறு அற்புத பதிகங்கள், இசை செய்திகள் தெளிவாக வெளியிடப்பட்டுள்ளது .பொழிப்புரையை செய்யுள் வடிவில் உள்ள குறிப்புகளுக்கு அதற்கேற்ற விரிவான கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மற்ற நாயன்மார் பாடல்களையும், சங்க இலக்கியத்திலும் கூறப்படும் கருத்துக்களை ஒப்பிட்டு கூறியுள்ளார்கள். புராணக்கதைகள் மற்றும் சைவ

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

சித்தாந்த கொள்கைகள் தொடர்புடைய செய்யுள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன .இவ்வுரை மூலமாக செய்யுள் கருத்துக்கள் முழுமையாக அறிய முடிகிறது ,சிறப்பான உரை நூல்.

ஆய்வு முடிவுரை

பன்னிரு திருமுறை உரைகள் பற்றி இவ்வாய்வில் 1853 முதல் 2019 வரை பல ஆசிரியர்களால் உரை எழுதி பதிப்பாசிரியர்கள் வெளியிடப்பட்டுள்ளது என்பதை அறிகிறோம். ஆய்வு மேற்கொள்பவர்களுக்கு தமிழ் ஆர்வாலர்களுக்கும் உரைகள் தெளிவான பொருளையே எளிமையான முறையில் மேற்கோள்கள் மற்றும் ஒப்பீட்டுகளுடன் எடுத்துரைக்கிறது.

துணைநூல் பட்டியல்

[1] தமிழ் இலக்கிய வரலாறு, பதினோராம் நூற்றாண்டு, மு.அருணாசலம், பதிப்பு: தி பார்க்கர், 293 ,அகமது வணிக வளாகம், இரண்டாம் தளம் இராயப்பேட்டை நெடுஞ்சாலை இராயப்பேட்டை, சென்னை-14.

[2] முதல் திருமுறை,டாக்டர், இராச. வசந்தகுமார் , பன்னிரு திருமுறை ஆய்வு மையம்,கற்பகம் பல்கலைக்கழகம், ஈச்சனேரி கோவை, பதிப்பு.2015.

[3] பன்னிரு திருமுறை வரலாறு, ஆக்கியோர் வித்வான்.வெள்ளைவாரணர் துணைப் பேராசிரியர், அண்ணாமலை பல்கலைக்கழகம் வெளியீடு, ஆண்டு1972.

[4] பக்தி இலக்கியத்தில் சமுதாயப் பார்வை, நூலாசிரியர், முனைவர் .தா ஈஸ்வரன் பிள்ளை, தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 613005 ஆண்டு1972.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

கிருஷ்ணம்மாள் & ஆ.முருகன். "பன்னிருதிருமுறை உரைகள்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* தொகுதி 3, *சிற*.இதழ் 2, தொகுதி 1, *திசம்பர்* 2020, பக். 119-123. டிஓஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.019**

Cite this Article in English (*MLA 8 Style*) as:

Krishnammal & Murugan. "The Prose Works of Twelwe Holy Works." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020, pp. . 119-123. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.019**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

"குறுந்தொகை" மூவர் உரை மரபுகள்

"Kuruntokai" Textual Tradition of the Trio

முனைவர் இரா.குணசீலன், பி.எஸ்.ஜி கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்
Dr.R.Gunaseelan, Assistant Professor of Tamil, P.S.G. College of Arts & Science, Coimbatore-641 014
ORCiD: https://orcid.org/0000-0002-8304-1072
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.020

Abstract

Sangam literature is a classical document that provides deep insight into the love and heroic life of the ancient Tamil people. In Sangam literature, Kuruntokai best describes the love life. We call this a good Kuruntokai. Many explanatory texts have been written over time for this book. Among them, this article was written by DS Aranganar, Dr. UV Saminathaiyar and B.V. Somasundaranar highlights the comparison of the three texts and their textual features. The present article focuses on the textual traditions of the chosen commentators of Kuruntokai.

Keywords: "Kuruntokai", Textual Tradition, Trio

முன்னுரை

பழந்தமிழரின் அகவாழ்வையும் புறவாழ்வையும் அறிந்துகொள்ளத்தக்க ஆவணமாக சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. சங்க இலக்கிய நூல்களுள் குறுந்தொகை அகவாழ்வியலை எடுத்தியம்பும் நல்லதொரு இலக்கியம் என்பதால் இதனை நல்ல குறுந்தொகை என்றே அழைத்து வருகிறோம். இந்நூலுக்குப் பல உரைகள் காலந்தோறும் எழுதப்பட்டன. அவற்றுள் தி.சௌ.அரங்கனார், டாக்டர் உ.வே.சாமிநாதையர், பொ.வே.சோமசுந்தரனார் ஆகிய மூவர் உரைகளை ஒப்புநோக்கி அவர்களின் உரைச் சிறப்புகளை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

தி.சௌ.அரங்கனார்

தி.சௌ.அரங்கனார் குறுந்தொகையின் முதல் பதிப்பாசிரியரும், உரையாசிரியரும் ஆவார். "குறுந்தொகை மூலமும் திருக்கண்ணபுரத் தலத்தான் திருமாளிகை சௌரிப் பெருமாளரங்கன் புத்துரையும்" என்ற பெயரில் இவரது உரை 1915 ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. முதல் உரை போலன்றி பல்வேறு உரைகளுக்குப் பின் வெளியான உரைபோன்றே உள்ளது. அந்த அளவுக்கு பல்வேறு நெறிமுறைகளை அரங்கனார் பின்பற்றியுள்ளார்.

1. தி.சௌ.அரங்கனார் உரை நெறிகள்

திணை வகுத்துரைத்தல், துறை சுட்டுதல், துறை விளக்கம் வழங்கல், புலவர் பெயர், குறுந்தொகை மூலபாடம், பொழிப்புரை, என பொதுவாக அமைகிறது. மூலபாடத்திற்குப் பிறகு (இ.-ள்) இதன் பொருள் என்று பொழிப்புரையே விளக்கவுரையாக அமைந்துள்ளது.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

விளக்கவுரையில், அப்பாடலில், இடம்பெறும் சொற்களுடன் தொடர்புடைய இலக்கியச் செய்திகள், இலக்கணச் செய்திகள், உள்ளுறை, இறைச்சி, மெய்பாடும் அதன் பயனும் சுட்டுதல், உவமை விளக்கம், ஒப்புமை காட்டுதல், சான்று காட்டுதல் ஆகியன சிறப்பான கூறுகளாக இடம்பெறுகின்றன.

சான்று – குறுந்தொகை பாடல் எண் – 18

1. **திணை -** குறிஞ்சித் திணை, 2. **துறை –** இது, இரவுக்குறி வந்து நீங்குந் தலைமகனைத் தோழி எதிர்பட்டு வரைவு கடாயது, 3. **துறை விளக்கம் -** (எ-து) – இரவுக்குறியிடத்து வந்து கூடி நீங்குந் தலைமகனைத் தோழி எதிர்ப்பட்டு, நாட! செவ்வியையாதலை மேற்கொள், சிறிய கோட்டிடத்துப் பெரியபழம் தொங்கினாற்போலத் தலைவியின் சிறிய உயிர் பெரிய காமத்தைத் தாங்கலாற்றாது. யார் அறிந்தார் அவள் துயர் மிகுதியாலாம் கேட்டை? என இரவு வருதலை விலக்கி வரைவு கடவா நிற்றல். 4. **புலவர் பெயர் –** கபிலர் பாடியது 5. **குறுந்தொகை மூலபாடல்** அமைகிறது. 6. **பொழிப்புரை –** (இ-ள்) மூங்கிலான வேலியினையும் வேரின் கண்ணே (பழம் பழுத்தலைக்) கொள்ளும் பலா மரத்தினையுமுடைய (மலைச்) சாரலையுடைய நாட! செம்மையுடைய வனாதலைக் கைக்கொள். எவர் எதனை அறிந்தார்? சாரற் கண்ணே சிறிய கோட்டிடத்துப் பெரிய பழம் தொங்குவதே போன்று, இவளுயிர் மிகச்சிறியதாயிருக்கின்றது. (இவளுற்ற) காமமோ பெரியதாயிருக்கின்றது. (ஆதலின் நூற்றுக்கணக்கான ஊற்றினைக் கொண்ட ஆற்றிடத்து இரவு வருதலை இனி விட்டு வரைந்துகொள்) – எ-று என்று பாடலின் முதல் விளக்கம் முடிகிறது.

இப்பாடலில், மதி – முன்னிலையிடத்து அசைநிலை. மதிப்பாய் என்றும் உரைக்கலாம் அஃது என்றது, துயர் தாங்காது தலைவி இறந்துவிடுவானாதலை கூறற்குங் கூடாக் கொடுமையுடைமையின் அஃது என்று சுட்டினான்.

நீ உணர்ந்திலை என்பான் யாரஃதறிந்திசினோர் என்றான். ஈற்றிரண்டடிகளில் முரண் நயம் காண்க.

இறைச்சி – அணுகுதற்காகாத மூங்கில் வேலி சூழ்ந்த சாரலிடத்து எளிதிற் கொள்ளவியலாத வேரிற் பழுக்கும் இனிய பழத்தையுடைய பலா நிறைந்த நாடன் என்றதனானே, ஏதம் பலவுந்தரும் ஆற்றிடத்த ஊறுகளை அஞ்சானாய் அரிய காவலையுடையதனால் எளிதிற் கிடைத்தற்கு அரியளான தலைவியின் இனிய இன்பத்தை களவிற் பெற விரும்புகிறான் என்பதாம்.

மெய்ப்பாடு – அணங்கு பற்றிய அச்சம், பயன் – வரைவு கடாவுதல்

என்றவாறு இப்பாடலுக்கான விளக்கம் முடிகிறது. இப்பாடலைப் போலவே ஒவ்வொரு பாடலிலும் பொதுவான மரபுகள் பின்பற்றப்படுகின்றன.

- உரைகளுக்குப் பிற்பகுதியில் இடம்பெறும் அரும்பத அகராதி, குறுந்தொகைச்செய்யுண் முதற்குறிப்பகராதி இடம்பெறுகின்றன.உரை நூலின் தொடக்கத்தில் இடம்பெறும்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

உதவியுரைத்தல் என்ற பகுதி இவரின் நன்றியுணர்வையும், தமிழ்ப்பற்றையும், ஆசிரியர் மீது இவர் கொண்ட மதிப்பையும் உணர்த்துவதாக உள்ளது.

- குறுந்தொகைக் குறுந்துணையாக அருந்தொகையுதவிய பெருந்தகைச் செல்வர்கள் பெயரும், உதவிய தொகையும் என்ற பகுதியானது இவரது நேர்மையை வெளிப்படுத்துவதாகவும் பலருக்கும் முன்மாதிரியான செயலாகவும் அமைகிறது.
- தொல்காப்பியம் பொருளதிகாரம், இறையனார் அகப்பொருள், கலித்தொகை, திருக்குறள், புறநானூறு ஆகிய நூல்களின் மேற்கோளாட்சி விளக்கப் பட்டியல் இடம்பெறுகிறது. அருங்குறிப்புகள் குறித்த அகரவரிசை இடம்பெறுகிறது.
- எஞ்சியவையும் பிறவும் என்ற பகுதியில் பழைய பாடம், மாற்றிக்கொண்ட பாடம், பாட்டெண், வரி குறித்த பட்டியல் இடம்பெறுகிறது.
- பாடினார் பெயரும் பிறவும் என்ற பகுதியில் பாடல்பாடிய புலவர்களின் பெயர்களும் அவர்களைப் பற்றிய சிறு குறிப்பும் இடம்பெறுகிறது.தொடரால் பெயர்பெற்ற புலவர்கள் பற்றிய குறிப்பும் அதில் இடம்பெறுகிறது.
- தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், திருமுருகாற்றுப்படை, மலைபடுகடாம், நெடுநல்வாடை, ஐங்குறுநூறு, கலித்தொகை, புறநானூறு, அகநானூறு, பரிபாடல், நற்றிணை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, திருக்குறள், நாலடியார், திணைமாலை 150, பழமொழி, நான்மணிக்கடிகை, சிந்தாமணி எனப் பல்வேறு இலக்கணம் மற்றும் இலக்கிய நூல்களிலிருந்து இவர் வழங்கியுள்ள விளக்கமானது இவரின் தமிழ்ப்புலமைக்கும் தேடலுக்கும் தக்க சான்றுகளாகத் திகழ்கின்றன.

2. டாக்டர் உ.வே.சாமிநாதையர்

"குறுந்தொகை – மகாமகோபாத்தியாய தாக்ஷிய கலாநிதி டாக்டர் உ.வே.சாமிநாதையரால் பல பிரதிகளைக் கொண்டு ஆராய்ந்து தாம் எழுதிய உரை, ஆராய்ச்சி முதலியவற்றுடன் " 1937 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

உ.வே.சா உரை நெறிகள்

கூற்று, கூற்று விளக்கம், குறுந்தொகைப்பாடல், துறை, துறைவிளக்கம், புலவர் பெயர், பாடவேறுபாடு, பதவுரை, முடிபு, கருத்து, விசேடவுரை, மேற்கோளாட்சி, வரலாறு, ஒப்புமைப் பகுதி, என இவரது உரை அமைந்துள்ளது. குறுந்தொகைக்கு வெளியிடப்பட்ட உரைகளுள் மிக விரிவான உரையாக இவ்வுரை விளங்குகிறது.

சான்று - குறுந்தொகை – 157

1. **கூற்று –** தலைவி கூற்று, 2. **கூற்று விளக்கம் -** பூப்பு எய்திய தலைமகள் அதனை மறைத்துக் கூறுவாளாய் "வைகறைவந்தது இனிதி தலைவனைப் பிரியநேருமென்று அஞ்சகின்றேன்" என்று சொல்லியது. 3. **குறுந்தொகை மூலபாடல்** இடம்பெறுகிறது. 4. **புலவர் பெயர் –** அள்ளூர் நன்முல்லையார், 5. **பாடவேறுபாடு –** அள்ளூர் நன்மூலன், 6. **பதவுரை –** கோழி –

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

குக்கூ என்றது – குக்கூவென்று கூவியது. அதன் எதிர் – அதற்கு நேரே, தோள் தோய் காதலர் பிரிக்கும் எனது தோளை மணந்த தலைவரைப் பிரியச் செய்யும், வாள் போல் – வாளைப்போல, வைகறை வந்தன்று என- விடியற் பொழுது, 7. **முடிபு** – கோழி குக்கூவென்றது, நெஞ்சம் துட்கென்றது.

8. **கருத்து** – தலைவனை இனிப் பிரிந்திருத்தல் வேண்டுமென்று அஞ்சுகின்றேன்.

9. **விசேடவுரை -** அவையல்கிளவி மறைத்தனர் கிளத்தல் என்பது விதியாதலின் தலைவி தான் பூப்பெய்தியதை வெளிப்படையாக கூறாதொழிந்தாள். துட்கென்றன்று – துட்கென்றது. துட்கு – அச்சம். தலைவனோடு ஒன்றுபட்டுப் பிறிதொரு நினைவின்றி யமைந்ததாதலின் தூய நெஞ்சாயிற்று.

பூப்புக் காலமாகிய மூன்று நாளும் தலைவியினது சொற்கேட்கும் அணிமையிலிருத்தலன்றி அளவளாவுதல் அறநெறியன்றாதலின் பூப்பு, தலைவனைத் தோற் தோயமற் பிரிப்பதாயிற்று.

முந்நாளும் கூடி உறையப்படுங் குற்றமென்னோவெனின் பூப்புப் புறப்பட்டஞான்று நின்ற கரு வயிற்றில் அழியும். இரண்டாம் நாள் நின்ற கரு வயிற்றிலே சாம், மூன்றாம் நாள் நின்ற கரு குறு வாழ்க்கைத்தாம். வாழினுந் திருவின்றாம். அதனாற் கூடப்படாதென்பது.

பூப்புமுதன் முந்நாட் புணரார் புணரின்
யாப்புறு மரபி னையவரு மமரரும்
யாத்த கரண மழியு மென்ப

எனப் பிறரும் ஓதினாராகலான் அமையாதென்பது (இறை 48, உரை) என்பதனால் பூப்புநாட்களிற் கூட்டமின்மை உணரப்படும்

ஆல் , ஏ அசைநிலைகள். 10. **மேற்கோளாட்சி** – முந்நாட் பிரிவாகிய பூப்பிடைப் பிரிவு வந்துழித் தலைவி கூறியது (தொல் – களவு 81)

பூப்புப் புறப்பட்ட ஞான்றும் மற்றை நாளும் கருத்தங்கின் அது வயிற்றில் அழிதலும், மூன்றாம் நாள் தங்கின் அது சில்வாழ்க்கைத்தாதலும் பற்றி முந்நாளும் கூட்டமின்றென்றார்…

குக்கூ என்பதனைக் காட்டுவாருமுளர் (கற்பு – 46), 11. **ஒப்புமைப் பகுதி** – 3. தோள் தோய் காதலர் – 323-6, 4. வாள் போல் வைகறை – குறள் – 334

என்றவாறு இப்பாடலின் விளக்கம் அமைகிறது. இப்பாடலைப் போலவே ஒவ்வொரு பாடலிலும் பொதுவான மரபுகள் பின்பற்றப்படுகின்றன.

- ➢ நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி எடுத்தாளப்பட்ட நூல்களின் பட்டியலாக அகர வரிசையில் இடம்பெறுகிறது.
- ➢ உரைகளுக்குப் பிற்பகுதியில் செய்யுள் முதல் குறிப்பகராதி இடம்பெறுகிறது. பாடல்களைத் தேட இது உதவியாக உள்ளது. அதைத் தொடர்ந்து அரும்பத முதலியவற்றின் அகராதி இடம்பெறுகிறது. தொல்காப்பியம், இலக்கண விளக்கம்,

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

யாப்பருங்கலம், இரையனார் அகப்பொருள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, சிற்றிலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், நச்சினார்க்கினியர் உரை, சேனாவரையர் உரை, சிலப்பதிகாரம் என பல்வேறு சான்றுகளால் இவரது புலமை வெளிப்படுகிறது.

- பிழையும் திருத்தமும் என்ற பகுதி பிழைகளையும் அதற்கான திருத்தங்களையும் வழங்குகிறது. முகவுரையில் உ.வே.சா அவர்கள் குறுந்தொகை பற்றியும் அதற்கு உரை எழுதிய அனுபவத்தையும், நன்றி கூறத்தக்கவர்களையும் நினைவுகொள்கிறார்.
- மேற்கோளாட்சி, இவரின் ஆழ்ந்த தமிழறிவையும், பரந்த இலக்கண இலக்கிய வாசிப்பையும் காட்டுவதாக அமைகிறது. ஒப்புமைப் பகுதியானது பாடலின் பொருளை நுட்பமாகப் புரிந்துகொள்ள உதவியாக உள்ளது. புலவர்களின் பெயர் குறித்த பாடவேறுபாடுகளை பெயர்களின் அருகிலேயே குறியிட்டுச் செல்கிறார். (சான்று குடவாயிற் கீரக்கன் – கீரத்த, ஔவையார் – அவ்வையார்)

3. பொ.வே.சோமசுந்தரனார்

குறுந்தொகை நூலுக்கு பெருமழைப் புலவர், திரு.பொ.வே.சோமசுந்தரனார் எழுதிய உரையானது 1955 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரின் பதிப்புரையுடன் இந்நூல் வெளியானது.

பொ.வேசோமசுந்தரனார் உரைநெறிகள்

கூற்று, துறையும் துறை விளக்கமும், திரண்ட பொருள், மூலபாடல், புலவர் பெயர், பதவுரை, விளக்கவுரை என்ற அடிப்படையில் இவரது உரை அமைந்துள்ளது.

சான்று – குறுந்தொகை – 3

1. கூற்று – பாட்டு 3 – தலைவி கூற்று, **2. துறையும் துறை விளக்கமும்** – தலைமகன் சிறைப்புறமாக அவன் வரைந்துகொள்வது வேண்டித் தோழி இயற்பழித்தவழித் தலைமகள் இயற்பட மொழிந்தது. அஃதாவது, களவின்பத்தையே விரும்பித் தலைவன் வரைந்துகோடல் கருதானாய்த் திரிதல் தங்கட்கு இன்னாதாதலின் , அவன் தம்மனைப் படப்பையருகே வந்து நிற்றல் கண்ட தோழி, அவன் வருகையைறியாதாள் போன்று அவனைப் பழித்துரைக்கக் கேட்ட தலைவி, அதுபொறாது அவனைப் பாராட்டியது.

இதன்கண், தலைவி, யான் தலைவனோடு கொண்டுள்ள நட்புரிமை நிலத்தினும் பெரிது. வானினும் உயர்ந்தது. கடலினும் ஆழமானது என்று பாராட்டித் தோழிக்குக் கூறுகிறாள். 3. **குறுந்தொகை மூலபாடல்,** 4. **புலவர்பெயர்** – தேவகுலத்தார், 5. **பதவுரை** – (இ.ள்) சாரல் கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பு – மலைச் சாரலின் கண் உள்ள கரிய கொம்புகளையுடைய குறிஞ்சியினது பூவிற் றேனைக் கவர்ந்துகொண்டு வந்து வண்டுகள் பெரிய தேனிறாலைக் கட்டா நிற்கும் நாட்டையுடைய தலைவனோடு எனக்குளதாகிய நட்பு நிலத்தினும் பெரிது – அகலத்தால் நிலவுலகத்தினுங்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

காட்டிற் பெரிதாம், வானினும் உயர்ந்தன்று – கருதுங்கால் விசும்பினுங் காட்டில் ஒக்கதாதல் உயர்ந்ததாம், நீரினும் ஆர அளவின்று – அதன்கண் ஆழ்ந்து காணுங்கால் கடலினுங் காட்டில் அளத்தற்கரிய ஆழமுடையதாம். 6. **விளக்கவுரை** – சாரல் – மலைப்பக்கம், குறிஞ்சி மரத்தின் கொம்பு கரிய நிறமுடைமையின் கருங்கோற் குறிஞ்சி எனப்பட்டது. கோல் – கொம்பு. பூக்கொண்டென்புழிப் பூவிற்றேனைக் கவர்ந்து கொண்டு வந்து என்க. தேன் ஆகுபெயராய் இறாலுக்கு ஆயிற்று. இழைத்தல் செய்தல். இழைத்தற்றொழிற்கு வினைமுதல் வருவித்துக் கூறப்பட்டது. வண்டுகள் குறிஞ்சிப் பூவிற் றேனைக் கவர்ந்துகொணர்ந்து பெரிய தேனடையை இழைக்கும் என்றது, பால்வரைத் தெய்வம் யாங்கள் பண்டு பற்பல பிறப்புகளிலே பயின்றடிப்பட்ட அன்புரிமையை ஈட்டி இப்பெரிய நட்பினை இழைத்தது என்னும் உள்ளுறை உவமை என்க இங்ஙனமாகலின் தலைவர் என்னை மறப்பாரல்லர். அவர் அன்பு பெரிது என இயற்பட மொழிந்தபடியாம்.

எவ்வாற்றானும் அளத்தற்கரிதென்பாள் அகலம், உயரம், ஆழம் ஆகிய மூன்றற்கும் தனித்தனிச் சிறந்த உவமை எடுத்தோதினாள். பெருமைப் பண்பிற்கு ஆசிரியர் திருவள்ளுவனாலும், இவற்றையே சிறந்தனவாகக் கொண்டு தந்திருக்கும் " ஞாலத்தின் மாணப் பெரிது (குறள் – 102) வானுயர் தோற்றம் (குறள் 272) இனிதின் ஓதல் உணர்க
இத்தகைய பேரன்பினன் ஆகலின் அவன் என்னை அருளாதிரான் என, அவன் சால்புடைமையை உணர்த்தோதியவாறு. என இவரது விளக்கம் அமைகிறது.

மூவர் உரை மதிப்பீடு

குறுந்தொகைக்கு 20க்கும் மேற்பட்ட உரைகள் எழுதுப்பட்டிருந்தாலும் தி.சௌ.அரங்கனார், டாக்டர் உ.வே.சாமிநாதையர், பொ.வே.சோமசுந்தரனார் ஆகியோர் உரைகள் தனிச்சிறப்புயனவாகத் திகழ்கின்றன. மூவரும் தமக்கென தனித்தனியான உரை மரபுகளைக் கொண்டிருந்தனர். இவர்களின் இலக்கண, இலக்கிய வாசிப்பு அவர் உரைகளில் வெளிப்படுகிறது.

நிறைவுரை

- தி.சௌ.அரங்கனாரின் உரையானது, திணை வகுத்துரைத்தல், துறை சுட்டுதல், துறை விளக்கம் வழங்கல், புலவர் பெயர், குறுந்தொகை மூலபாடம், பொழிப்புரை, என பொதுவாக அமைகிறது
- உ.வே.சாமிநாதையரின் உரையானது, கூற்று, கூற்று விளக்கம், குறுந்தொகைப்பாடல், துறை, துறைவிளக்கம், புலவர் பெயர், பாடவேறுபாடு, பதவுரை, முடிபு, கருத்து, விசேடவுரை, மேற்கோளாட்சி, வரலாறு, ஒப்புமைப் பகுதி, என இவரது உரை மிக விரிவான உரையாக அமைந்துள்ளது.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

- பொ.வேசோமசுந்தரனாரின் உரையானது கூற்று, துறையும் துறை விளக்கமும், திரண்ட பொருள், மூலபாடல், புலவர் பெயர், பதவுரை, விளக்கவுரை என்ற அடிப்படையில் அமைந்துள்ளது.
- மூவரின் உரைகளையும் ஒப்பு நோக்கிப் பார்க்கும்போது திணை, துறை, புலவர் பெயர்கள் குறித்த தெளிவு கிடைக்கிறது. பாடபேதங்கள் குறித்த இவர்தம் கருத்துகள் பயனுள்ளவையாக அமைகின்றன. இவர்தம் அடிக்குறிப்புகள், மேற்கோள்கள், உவமை, ஒப்புமை ஆகியன குறுந்தொகையை ஆழமாக உணர்ந்துகொள்ளப் பேருதவியாக அமைகின்றன.

துணைநூற் பட்டியல்

[1] "குறுந்தொகை மூலமும் திருக்கண்ணபுரத் தலத்தான் திருமாளிகை சௌரிப் பெருமாளரங்கன் புத்துரையும்", வேலூர், வித்யாரத்னா அச்சுக்கூடத்தில் பதிப்பித்து வெளியிடப்பட்டன, 1915.

[2] "குறுந்தொகை – மகாமகோபாத்தியாய தாக்ஷிய கலாநிதி டாக்டர் உ.வே.சாமிநாதையரால் பல பிரதிகளைக் கொண்டு ஆராய்ந்து தாம் எழுதிய உரை ஆராய்ச்சி – சென்னை, கேஸரி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றது, 1937.

[3] குறுந்தொகை - பெருமழைப் புலவர், திரு.பொ.வே.சோமசுந்தரனார் எழுதிய உரை – திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிட்டெட், சென்னை, 1955.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

குணசீலன். ". "குறுந்தொகை" மூவர் உரை மரபுகள்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 1, *திசம்பர்* 2020, பக். 124-130. டிஒஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.020**

Cite this Article in English (*MLA 8 Style*) as:

Gunaseelan. ""Kuṟuntokai" Textual Tradition of the Trio." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020, pp. 124-130. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.020**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /NIL

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இல்லை /NIL

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

தொல்காப்பிய களவுக் கோட்பாட்டு உருவாக்கமும் உரை மரபும்

Love (Kalavu) Theoretical Development in "Tholkapiam" and Textual Convention

முனைவர் க.குமரகுருபரன், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, பசுமலை, மதுரை.
Dr.K.Kumarakurubaran, Assistant Professor, Department of Tamil, Mannar Thirumalai Naicker College, Pasumalai, Madurai.
ORCiD: https://orcid.org/0000-0003-1949-6168
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.021

Abstract

The semantics identity available to Tamil language is considered by scholars to be a special gift that is not found in other languages of the world. 'Kalaviyal' (love life) is the center of its semantic nature. The theoretical heritage of the Tamil community has been continuously recorded through many grammatical texts. One of the greatest writers, Kapilar has explained about 'Kalaviyal' in his persuasive book 'Kurinjipattu' to realize the pride of Tamil. Tamil has gone through many stages of development because of the textual conventions employed by several writers and commentators on the original texts. This article is a serene study of the creation of Love (Kalavu) conjecture in "Tholkapiam" and textual convention utilized by Kapilar in his 'Kurinjipattu'.

Keywords: Love Presumption, "Tholkapiam", Textual Convention, Kapilar, "Kurinjipattu"

முன்னுரை

உலகின் பிறமொழிகளுக்கில்லாத சிறப்புப் பேறாகத் தமிழுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பொருளிலக்கணம் அறிஞர் பெருமக்களால் கருதப்படுகிறது. அதன் மையமாக களவியலை குறிப்பிடுவர். தமிழ்ச் சமூகத்தின் களவியல் கோட்பாட்டு மரபு இலக்கணப் பிரதிகள் ஊடாக தம் காலச் சூழல்சார் பின்னணியில் முன்மொழிந்து பதிவு செய்து வந்துள்ளன. தமிழின் பெருமையை உணர்த்த குறிஞ்சிப்பாட்டு பாடிய கபிலர் களவியலை மட்டுமே விளக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழரின் களவியல் கோட்பாடாக மாற்றம் பெற பல வளர்ச்சி படிநிலைகளைக் கடந்து வந்துள்ளது. தமிழரின் களவு உறவினை அனைத்து இலக்கணநூல்களும் பதிவு செய்துள்ளன. தொல்காப்பியத்திற்கு உரைகண்ட உரைகாரர்கள் இறையனார் அகப்பொருள் உரையின் அடிப்படையில் களவியலை விளக்கியுள்ளனர். தொல்காப்பியத்திற்கு அடுத்து மிக விரிவான நிலையை களவியலை விளக்கும் இறையனார் அகப்பொருளே தொல்காப்பிய களவியல் கோட்பாட்டினை புரிதலுக்கு உட்படுத்துகின்றது. அத்தன்மையில் தொல்காப்பிய களவியல் கோட்பாட்டினை விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

தொல்காப்பியம் தொடங்கி அனைத்து இலக்கணநூல்களும் உரைகாரர்களும் களவியல் நான்கு நிலைகளை உடையதாக குறிப்பிடுகின்றனர். இயற்கைப்புணர்ச்சி,

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

இடந்தலைப்பாடு, பாங்கன் கூட்டம், பாங்கியற் கூட்டம். இவற்றின் நிகழ்வுகளில் சிற்சில மாற்றங்களை பிற்கால இலக்கண நூல்களும் உரைகாரர்களும் பதிவுசெய்துள்ளனர். இயற்கைப்புணர்ச்சி இருவர் குறிப்பும் ஒத்து நிற்றலை உள்ளப்புணர்ச்சி என்றும், வழிநிலைக்காட்சி என்பதோடு மட்டும் நிறைவுறுவதில்லை. இவ்வுள்ளப் புணர்ச்சியே மெய்யுறு புணர்ச்சிக்கு நிமித்தமாகும். வேட்கைமீதூர்ந்த நிலையில் தத்தம் பண்புகளை நெகிழவிடுதல் கூடாமையின், தாம் எதிர்ப்பட்ட முதற்காட்சியிலேயே மெய்யுறு புணர்ச்சிக்கு உடன்பாடாது உள்ளப்புணர்ச்சியளவே ஒழுகி, அமைவர், பின்னர் மெய்யுறு புணர்ச்சி நிகழும். மெய்யுறு புணர்ச்சியை தூண்டும் உணர்வுகளாக தலைவன், தலைவியிடத்து தோன்றும் நிலைகளை ஆசிரியர் குறிப்பிடுகிறார். அவை

வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்
ஆக்கஞ் செப்பல் நாணுவரை இறத்தல்
நோக்குவ எல்லாம் அவையே போறல்
மறத்தல்; மயக்கம் சாக்காடு என்றிச்
சிறப்புடை மரபினவை களவென மொழிப (தொ. பொ. களவு, நூ:100)

எனும் வரிகளில் வேட்கை என்பது, ஒருவரையொருவர் பெறல்வேண்டும் என்னும் உள்ள நிகழ்ச்சி. ஒருதலையுள்ளுதலாவது, இடைவிடாது நினைத்தல். மெலிதலாவது, உண்ணாமையால் உண்டாகும் உடல் மெலிவு. ஆக்கஞ்செப்பலாவது யாதானும் ஓர் இடையூறு கேட்ட வழி அதனை ஆக்கமாக நெஞ்சிற்குக் கூறிக்கொள்ளுதல், நாணுவரை இறத்தலாவது, ஆற்றுந்துணையும் நாணி அல்லாத வழி அதன் வரையிறத்தல. நோக்குவ எல்லாம் அவையே போறலாவது, பிறர் தம்மை நோக்கிய நோக்கொல்லாம் தம் மனத்துக் கரந்து ஒழுகுகின்றவற்றை அறிந்து நோக்குகின்றாரெனத் திரியக் கோடல். மறத்தலாவது, விளையாட்டு முதலியவற்றை மறத்தல். முயக்கமாவது, செய்திறன் அறியாது கையற்றுப் புள், மா முதலியவற்றோடு கூறல். சாக்காடாவது, மடலேறுதலும் வரை பாய்தலும் போல்வன கூறல். இந்த ஒன்பது நிலைகளும், முன்னர்க் கூறிய காட்சி, ஐயம், துணிவு என்ற மூன்றும் சேர்ந்த இப்பன்னிரண்டும் அன்புற்றார் இருவர் துணையாகக் கூடுவதற்குரிய நிமித்தங்கள் எனக் கூறுவார் தொல்காப்பியர். இவை நிகழ்ந்த பின்னரே மெய்யுறு புணர்ச்சி நிகழும் என்பர்.

மெய்யுறு புணர்ச்சி நிகழ்வதிலும் ஒரு வரையறை உண்டு. தலைவி தன் வெட்கையைத் தலைவனிடம் முன்னதாகச் சொல்லுதல் வழக்கம் இல்லை. எனினும், அவள் வேட்கையை ஆராயின் அது புதுக் கலத்தின்கட் பெய்த நீர் புறத்துப் பொசிந்து காட்டுமாறு போலும் உணர்வினையுடைத்து என்று கூறுவர், தொல்காப்பியர்,

தன்னுறு வேட்கை கிழவன்முற் கிறத்தல்
எண்ணுங் காலைக் கிழத்திக்கு இல்லைப்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

பிறநீர் மாக்களின் அறிய ஆயிடைப்

பெய்ந்நீர் போலும் உணர்விற் றென்ப (தொல், பொருள், களவு, நூ:118)

என்பது அவர் கூறும் விதி. மேலும், இக்களவு கூட்டி வைப்பார் பிறரின்றித் தனிமையாகவும் பொலியும். ஆதலின், தலைவன் தலைவி இருவரும், தத்தம் உள்ளக் கருத்தைத் தாமே புலப்படுத்தம் தூதுவராக நின்று கூடுதலும் உண்டு என்பது பெறப்படும். எனவே, பாங்கற்கூட்டம், தோழியிற்கூட்டம், ஆகியவை யாவர்மாட்டும் நிகழ வேண்டும் என்ற வரையறை இல்லை என்பதை அறியமுடிகின்றது.

இங்கு தலைமகளைத் தனிமையில் எதிர்ப்பட்ட தமைகன், தனது பெருமையும் அறிவும் நீங்க வேட்கைமீதூர்தலால், மெய்யுறு புணர்ச்சியை விரும்பினானாயினும் தலைமகள் மாட்டு நிற்கும் அச்சமும் நாணும் மடனும் அதற்குத்தடையாக நிற்கும். அவை நீங்குதற்பொருட்டுத் தலைவன் தலைமகளை முன்னிலைப்படுத்திச் சில கூறுதல் உண்டு. தொல்காப்பியர்

முன்னிலை யாக்கல் சொல்வழிப் படுத்தல்

நன்னயாம் உரைத்தல் நகைநனி உறாஅ

அந்நிலை யறிதல் மெலிவுவிளக் குறுத்தல்

தன்னிலை யுரைத்தல் தெளிவகப் படுத்தலென்று

இன்னவை நிகழும் என்மனார் புலவர் (தொல், பொரு. நூ:101)

என்று தொகுத்துக் கூறுவர். இவற்றுள் முன்னிலையாக்கல் என்பது, முன்னிலையாகாத வண்டு, நெஞ்சு முதலியவற்றை முன்னிலையாக்கிக் கோடல். சொல்வழிப்படுத்தலாவது, தான் சொல்லுகின்ற சொல்லின் வழி அவள் நிற்குமாறு படுத்துக் கூறுதல். நன்னயம் உரைத்தலாவது, மேற்கூறிய வண்டு முதலியன சொல்லுவனவாக அவற்றிற்குத் தன் கழிபெருங்காதல் கூறுவானாய்த் தன்னயப்பு உணர்த்துல். நகை நனி உறாஅது அந்நிலை அறிதலாவது, தலைமகன் தன் நன்னயம் உரைத்தலைக் கேட்ட தலைவிக்கு இயல்பாக அமைத்து உளவாகும் மகிழ்வால் புறந்தோன்றும் முறுவற்குறிப்பு மிக்குத் தோன்றா: அந்நிலையினைத் தலைவன் அறிதல், மெலிவு விளக்குறுத்தலாவது, தலைவன் அகத்துறும் நோயால் புறத்து நிகழும் தளர்வினைக் குறிப்பான் எடுத்துக் கூறல். தன்னிலையுரைத்தலாவது, தன்னுள்ளத்து வேட்கைமீதூர்தலை நிலைப்படச் சொல்லுதல். தெளிவு அகப்படுதலாவது, தலைமகள் உள்ளப்பண்பினைத் தான் அறிந்த தெளிவினைத் தன் மனத்தகத்தே தேர்ந்து வெளிப்படுத்தல். இவை ஏழும் இயற்கைப்புணர்ச்சிக்கு முன்னர் நிகழும் உரையாடல் வகைகளாம் என்பது ஆசிரியர் கருத்தாகும்.

இதற்கு அடுத்தநிலையில் இயற்கைப்புணாச்சியில் மெய்யுறு புணர்ச்சி நிகழத் தொடங்குவதற்குகான நிழ்ச்சிகள் நிகழும். அவற்றை ஆசிரியர்,

மெய்தொட்டுப் பயிறல் பொய்பா ராட்டல்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

இடம்பெற்றுத் தழாஅல் இடையூறு கிளத்தல்

நீடுநினைந் திரங்கல் கூடுத லுறுதல் (தொல், பொருள், களவு, நூ:102)

என்று தொகுத்துக் கூறுவர். மெய்தொட்டுப் பயிறலாவது, தலைவியின் மெய்யைத் தீண்டிப் பழகுதல். நச்சினார்க்கினியர் புலையன் தீம்பால் போல் மனம் கொள்ளுதலும் கொள்ளாமையுமாகித் தலைவி நிற்கின்ற காலத்தே தொட்டான் என்பர். மெய் என்பது ஈண்டுத் தோள். புறக்காலத்தார் இக்கிளவியை 'வண்டோச்சி மருங்கணைதல்" என்பர். அஃதாவது, தலைமகளைச் சார எண்ணியத் தலைவன், அவள் குழலை நோக்கி வந்த வண்டையோட்டுவது போல நெருங்கி, ஓட்டுமிடத்துத் தன் கை பட்டது போலத் தொடுதலாகும் இது. பொய் பாராட்டலாவது, அங்ஙனம் தீண்டி நின்றுழித் தலைவியின் குறிப்பறிந்து அவளை ஓதியும் நுதலும் நீவிப் பொய்யாக ஒரு காரணம் படைத்து உரைத்துப் பாராட்டல். இடம் பெற்றுத் தழாஅல் ஆவது, பொய் பாராட்டல் காரணமாகத் தலைவிமாட்டு அணிமையிடம் பெற்றுத் தழுவக் கூறல். இடையூறு கிளத்தலாவது, அவள் பெருநாணினளாதலின் இங்ஙனம் கூறக் கேட்டுக் கூட்டத்திற்கு இடையூறாகக் கண் புதைத்தல். கொம்பர்களிலும் கொடிகளிலும் மறைந்து நிற்றல் போன்றவற்றைத் தலைவி நிகழ்த்தியவற்றைத் தலைவன் கூறுதல். நீடு நினைந்திரங்கலாவது, தலைவியை மெய்யுறுதற்கியலும் காலம் வாய்க்காமையை எண்ணி வருந்துதல். கூடுதலுறுதலாவது, புணர்ச்சி எய்துதல், இங்ஙனம் மெய்யுறு புணர்ச்சி நடைபெறும் என்பது ஆசிரியர் கருத்தாகும்.

இயற்கைப்புணர்ச்சியின் பின்னர் தலைவனது சொல்லின் எல்லையைக் கடத்தல் தலைவிக்கு இல்லை. இனி, தாம் சந்திக்கும் இடத்தைத் தலைவியே சுட்டியுரைத்தல் வேண்டும். காரணம், அவள் செல்லும் இடங்களை அவள்தான் அறிவாள். 'களஞ்சுட்டுக் கிளவி கிழவிய தாகும்" (தொல்,பொரு,நூ:122,ப:520) என்று கூறுவர். தோழியால் அறிவிக்கப்பெற்று அந்த இடங்களில் சந்தித்தலும் உண்டு. களவுப்புணர்ச்சி தோழியின் துணையின்றி மூன்று நாள்களுக்குமேல் நிகழ்தல் இல்லை. அம்மூன்று நாளைக்குள்ளும் தோழியின் துணை விலக்கப்பெறுதல் இல்லை. இதனை,

முந்நாள் அல்லது துணையின்று கழியாது

அந்நாள் அகத்தும் அதுவரை வின்றே

என்று தொல்காப்பியம் கூறுகின்றது. எனவே, இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம் என்னும் மூன்று நாள் எல்லையளவும் தலைவன் தோழியின் துணையின்றி அவளறியாது தலைவியைக் கண்டு அளவளாவுதல் கூடும் என்பது பெறப்படும். இம்மூன்று நாள்களுக்கு மேலாயின் தோழியின் துணையின்றித் தலைவியைச் சந்தித்தல் அரிது: அதற்குள்ளேயே தோழியின் உடன்பாட்டைப் பெறுதல் வேண்டும். தன்னிடம் அடிக்கடி வர விரும்பும் தலைவன், தான் வதியும் சூழ்நிலையை நன்கு அறிய வேண்டுமாதலானும்,

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

களவொழுக்கம், புறத்தார் அறியாது நிலைபெற்று நிகழ்தல் வேண்டுமாதலானும், தன் தோழியை இன்னாளெனத் தலைவனுக்கு அறிவித்தல் தலைவியினுடையது. 'துணைசுட்டுக் கிளவி கிழவியதாகும்" (தொல்.களவு.123) என்று குறிப்பிடுவர்.

மெய்யுறு புணர்ச்சிக்குப் பின்னர்த் தலைவன் தன் அன்பு புலப்பட தலைவியைப் புகழ்ந்து கூறி, 'இனி இவளுடன் காலம் நீட்டிப்பின் ஏதமாம்" என்று கருதி, அவளை விட்டுப் பிரிய நினைப்பான். அவ்வாறு நினைப்பவன், வண்டு, நெஞ்சு முதலியவற்றை முன்னிலையாக்கி, அவற்றிற்குத் தன் கழிபெருங்காதலைக் கூறுவான். எடுத்துக்காட்டாக,

மணிவண்டு! இம்மாதர் கோதை
மதுவுண வந்த போழ்துஅங்கு
இணைவண்டிங் கிறந்து பாடின்
றிருக்குமே இரங்க லின்றாய்த்
துணைவண்டு துஞ்சின் நீயும்
துஞ்சுவை யென்று நின்கண்
பணிகொண்ட தின்மை யாற்றான்
பரிவொடும்இருக்குமன்றே

என்ற பாடலை இதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். கேமசரியை மணந்த சீவகன், இரண்டு திங்கள் அவளுடன் இன்பத் துறையில் எளியனாய் இனிதிருந்து, அவளை விட்டு நீங்கிச் செல்லக் கருதியவன், அவளிடம் வெளிப்படக் கூறாது, வண்டிற்குக் கூறுவான் போலத் தன் பிரிவுக் குறிப்பை உணர்த்துவதைப் பாடலில் வழி அறியமுடிகின்றது.

தலைவி பிரிதற்குறிப்பை அறிந்து கலுழ்வாள். உடனே, தலைவன் 'நின்னொடு பட்ட தொடர்ச்சி எழுமையும் வருகின்ற தொன்றாதலின், நின்னைப் பிரியேன்: பிரியின் ஆற்றேன்: அன்றி, அறனல்லது செய்தேனுமாவேன்" என்று கூறித் தேற்றுவான். எனினும், தலைவி பிரிவிற்குக் கலங்கி, 'கார் மருங்கின் மின்னுப் போலவும், நீர் மருங்கிற் கொடி போலவும், தளிரும் முறியுந் ததைந்து, குளிரும் நளிரும் கவினி எழாநின்றதோர் கவின்பெறு காரிகை, கண்ணாடி மண்டிலத்து ஊது ஆவி போலக் காண ஒளி மழுங்கிக் கனல் முன் இட்;ட மெழுகுப்பாவைபோல் மனம் உருகிப் பசந்து காட்டுவாள்" (இறை.க.2 உரை ப:53-54). காட்டவே, மற்றும் அவளை வற்புறுத்த எண்ணி, தன் ஊர் மிகவும் அணித்து என்று வற்புறுத்திக் கூறித் தான் அடுத்தடுத்து இவண் போதருதல் எளிது என்பதைக் குறிப்பித்தும் தலைவியை ஆற்றுவித்தும் பிரிவான். தலைவன் பிரிவதை இறையனார் களவியலுரையாசிரியர், தலைவியின், 'கருங்குழற்கற்றை மருங்குற் இருத்தி, அளகமும் நுதலும் தகை பெற நீவி, ஆகமுந்தோளும் அணிபெறத் தைவந்து, குளிப்பக் கூறித் தளிர்ப்ப முயங்கிப்"

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

(இறை.க.2 உரை ப.52) பிரிவான் என்று நயம்படக் கூறுவர். அகப்பொருள் நூலார் பிரிதலைப் பிரிவச்சம் என்றும், வற்புறுத்தலை வன்புறை என்றும் வழங்குவர்.

மேற்கூறியவாறு தலைவியைத் தேற்றிப் பிரியும் தலைவன், அவளைத் தனியளாக நிறுத்தி நீங்கான். தலைவியை நோக்கி, 'நீ நின் ஆயத்தோடு சேர்ந்துகொள்: யான் இவ்வழியாகச் சென்று வருவல்" என்று கூறி, அவளை விளையாடுந் தோழியரிடத்து உய்த்து அகல்வான். அவ்வாறு அகன்றவன், தன்னை அவள் காணாமல் தான் அவளைக் காண்பதோர் அணிமைக்கண், மழைக்கொண்டலுள் மின்னுப் புக்கு ஒளிந்தாற்போல, ஒரு தழைப் பொதும்பரில் மறைந்து நின்று, தலைவியின் ஆயக்கூட்டத்தையும் அவ்விடந்தன்னையும் நோக்கி, 'இவளை யான் எய்தினன் என்பது மாயமோ! இனி இவள் நமக்கு எய்தற்கரிய போலும்" என்று ஆற்றாநின்று, பின் ஒருவாறு ஆற்றி, அவளது அருமையறிந்து வருந்தி, அவ்விடத்தினின்றும் நீங்குவான். இவ்விடத்தில், தலைவியுடன் இணைபிரியாது செல்லும் அவள் காதல் தோழியைத் தலைமகன் குறிப்பால் அறிந்து கொள்ளுதலைப் பின்னூல்கள் கூறும். ஆனால், தொல்காப்பியத்தில், 'பெட்டவாயில் பெற்றிரவு வலியுறுப்பினும்" (தொல்.களவு.11) என்று தோழியிற் கூட்டம் நிகழுமிடத்தே வைத்துக் கூறப்பெற்றுள்ளது. இவ்வாறே வேறு சில துறைகள் கிளவிகளும் அமைகின்றன. இவ்வியற்கைப் புணர்ச்சி தெய்வப்புணர்ச்சி என்றும், முன்னுறு புணர்ச்சி என்றும் உரைக்கப்படும்.

இறையனார் களவியல் இதனைக் 'காமப்புணர்ச்சி" என்று கூறும். தொல்காப்பியமும் முதல் நூற்பாவில் காமக்கூட்டம் என்று சுட்டியதும், காமப்புணர்ச்சி என்று சுட்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இதற்கு உரையாசிரியர் கூறும் விளக்கம்: 'இனித் தெய்வப் புணர்ச்சி, முன்னுறு புணர்ச்சி, இயற்கைப் புணர்ச்சி, என்பனவற்றுள் ஒன்று சொல்லாது, காமப்புணர்ச்சியென்றே கூறிய காரணம் என்னையெனின், இவற்றுள் ஒன்றே சொல்லும் ஒக்கும்: அல்லது, அவை எல்லாம் அன்பினானே நிகழுமாகலின் காமப்புணர்ச்சியென்றார் என்பது: பல காரணத்தினாய் பொருளை ஒரு காரணத்திற்சொல்லுவது சிறப்புடைமை நோக்கி, என்னை? நிலனும் நீரும் காலமும் வித்தும் என இவற்றினது கூட்டத்தினாய முளையை நெல் முளை முதலாவுடையனவற்றிற்குங் காரணமாகலான், அது போல, ஈண்டும் தெய்வமும் இயற்கையும் முன்னுறவும் பொதுக்காரணம், காமம் சிறப்புக் காரணம் ஆகலான், காமப்புணர்ச்சி எனப்பட்டது" (இறை.க.2 பக்.37-38). இதனை அடுத்து நிகழும் இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், தோழியிற்கூட்டம் ஆகும். இயற்கைப் புணர்ச்சியி;ன் பிற இலக்கண நூல்கள் விவரிக்கும் துறைகள் வழி விளக்கங்களைப் பார்ப்போம்.

முடிவுரை

அன்பின் ஐந்திணையொழுகலாற்றின் சிறப்பியல்பாகிய களவியல் என்பது ஒத்தார் இருவர் தாமே கூடும் கூட்டம் ஆகும். இதன் நிலைகளை தொல்காப்பியம் செய்யுளியல்

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பிடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

குறிப்பிட்டுள்ளது. அவை காமப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், தோழியிற் கூட்டம் என்ற முறையில் களவு நடைபெறும் என்று கூறுகின்றது. இடந்தலைப்பாடு விதித்துணைபற்றியே நிகழாதாயினும் பாங்கற் கூட்டத்தால் நிகழ்ந்திடுமென்று கருதி, அதனைக் காமப்புணர்ச்சிக்கு அடுத்து நிகழ்வாக வைத்தார். அதன் பின்னர், இன்னும் தன் குறைகளையொல்லாம் முடிக்த்துக்கொள்ளுதற் பொருட்டுத் தோழியைத் துணையாகக் கொள்வான் என்று கொண்டு தோழியிற் கூட்டத்தை அதற்கடுத்து வைத்தார். ஆசிரியர் இறையனார் காமப்புணர்ச்சி புணர்ந்த தலைமகனுக்கு அதனையடுத்து நிகழ வேண்டுவதான இடந்தலைப்பாடு பெரும்பாலும் உலகில் பாங்கன் துணைப்பற்றியே நிகழ்தலன்றி விதித்துணையேபற்றி நிகழ்தல் அரிதாகிச் சிறுபாண்மையாய் முடிதலின், அப்பெரும்பான்மை சிறுபான்மை வேற்றுமை தெரிதற்பொருட்டுப் பாங்கற்கூட்டத்தைக் காமப்புணர்ச்சிக்கு அடுத்ததாக நிறுத்தி, அது நிகழாதாயின் விதித்துணையேபற்றிய இடந்தலைப்பாடேனும் நிகழும் என்ற கருத்துடன் அவரின் நூற்பா ஆக்கத்திறன் வெளிப்படுகின்றது. எனவே காமப்புணர்ச்சியின் பின் இடந்தலைப்பாட்டினை நிறுத்திய தொல்காப்பியர் கருத்துப் படி அக்காமப்புணர்ச்சியை அடுத்து இடந்தலைப்பாடே நிகழ்வதாம் என்பதும், காமப்புணர்ச்சியின் பின் பாங்கற்கூட்டத்தை நிறுத்தி அதன் பின்னர் இடந்தலைப் பாட்டினை எடுத்துக் கூறிய இறையனார் கருத்துப்படி காமப் புணர்ச்சியை அடுத்து நிழும் இடந்தலைப்பாடு பெரும்பான்மையும் பாங்கற்கூட்டத்தினாலேயே நிகழ்வதாம் என்பதும் புலப்படுகின்றன. இவற்றை அடியொட்டியே அடுத்தடுத்து வரும் இலக்கண நூல்கள் தம் பகுப்புகளை அமைத்துக்கொண்டுள்ளன.

துணைநூற்பட்டியல்

[1] தொல்காப்பியம் -பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி - 1972.

[2] தொல்காப்பியம் - பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி -1972

[3] சுப்பிரமணியன், ச.வே., தமிழ் இலக்கண நூல்கள், மெய்யப்பன் பதிப்பகம், சென்னை – 2009

[4] இறையனார் (நக்கீரர், உரை) இறையனாரகப்பொருள் திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை - 1964

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

குமரகுருபரன். "தொல்காப்பிய களவுக் கோட்பாட்டு உருவாக்கமும் உரை மரபும்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 1, *திசம்பர்* 2020, பக். 131-138. டிஓஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.021**

E-ISSN: 2581-7140
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Kumarakurubaran. "Love (Kalavu) Theoretical Development in "Tholkapiam" and Textual Convention." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020, pp. 131-138. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.021**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /NIL

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இல்லை /NIL

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

இளம்பூரணரின் தொல்காப்பிய உரைத்திறன்

The Textual Excellency of Ilampuranar's *Tholkappiam*

முனைவர் சொ.கோதை ஈசுவரி, உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை, மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை-04.
Dr. S. Kothai Eswari, Assistant Professor in Tamil, Mannar Thirumalai Naicker College, Madurai-04
ORCiD: https://orcid.org/0000-0001-8613-6424
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.022

Abstract

The work "Tholkappiyam" is the first work about Grammar and its structure in Tamil language. That is how it is making honour to our Tamil language. For "Tholkappiyam", the explanatory notes were written by Ilampooranar. It is very simple and guidance to fresh research works. His notes give great description about existing proverbs found in Tamil Nadu. The notes of Ilampooranar is an academic treasure to the work "Tholkappiam". Hence, this article previews the authentic sources and decodes the values from it.

Keywords: Grammar, Structure, Explanatory Notes, Tholkappiyam. Ilampooranar

முன்னுரை

தமிழ்மொழிக்கு எழுத்து, சொல், பொருள் என்று மூவிலக்கணம் தந்து சிறப்பித்தவர் தொல்காப்பியர். தொல்காப்பியம் நமக்கு கிடைக்கவில்லையென்றால் தமிழ்மொழியின் சிறப்பை நம்மால் அறிந்திருக்க முடியாது. உரை இயற்றுவது பரவலாக்கப்படாத காலத்திலும் அறிஞர்கள் பலர் தொல்காப்பியத்திற்கு உரை பல இயற்றி தொண்டு செய்துள்ளனர். உரையாசிரியர்கள் இல்லையென்றால் பல இலக்கண இலக்கியங்களின் சிறப்புகள் வெளிப்படாது போயிருக்கும். தொல்காப்பியத்திற்கு உரையாசிரியர்கள் பலர் உரை இயற்றியிருந்தாலும் இளம்பூரணர் உரையே தொல்காப்பியத்திற்கு சிறந்த உரையாகவும் தொன்மையான உரையாகவும் விளங்குகின்றது. தொல்காப்பியத்திற்கு உரை இயற்றியதன் மூலம் இளம் பூரணரின் அறிவுத்திறன், தமிழ்மொழியில் இருந்த மரபுச் சொல்லாடல்கள், மரபுவழிச் செய்திகள், வழக்கிழந்த சொற்கள், தமிழரின் விளையாட்டுகள், வாழ்க்கைக்குறிப்புகள், செய்யுள் ஓசைகள், நகைக்குறிப்புகள், மெய்ப்பாடுகள், தமிழகத்தின் எல்லைகள், இலக்கிய வழக்குகள், தமிழ்மொழி பேசப்பட்டு வந்த நிலங்கள், தமிழில் பிறமொழிச்சொற்கள் கலந்து வந்தால் அவற்றை தமிழில் பயன்படுத்தும் விதிகள், புதிய இலக்கிய வகைகளைப் பட்டியலிட்டு புதுமைக்கு வித்திடல் என்று இளம்பூரணர் உரையானது தமிழ் மொழியின் சிறப்பை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

இளம்பூரணரின் உரைத்திறத்தை பானைச்சோற்றுக்கு ஒரு சோறு பதமாக இக்கட்டுரையில் தந்திருந்தாலும் இளம்பூரணரின் தொல்காப்பிய உரை இலக்கிய ஆய்விற்கும்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

மொழி ஆய்விற்கும் ஓர் ஆய்வுக்களமாக விளங்கி தமிழ்மொழியின் பரிமாணங்களைத் தரும் என்பதில் ஐயமில்லை.

இளம்பூரணரின் சிறப்பும் உரை இயல்பும்

தமிழரின் பெருமையை எடுத்துரைக்கும் சொல்லும் இலக்கணமாகிய தொல்காப்பியத்தின் வாயிலாகத் தமிழரின் வாழ்வியலைச் சொன்னவர் தொல்காப்பியர். அத்தொல்காப்பியத்தின் சிறப்பை தன் உரைமூலம் உலகிற்குச் சொன்னவர் இளம்பூரணர். இவர் உரையாசிரியர்களில் காலத்தால் முற்பட்டவர். உரையாசிரியர் என்ற சிறப்புப்பெயரால் அழைக்கப்பட்டவர். தொல்காப்பியத்திற்கு எழுதிய உரையானது தமிழ் இலக்கண இலக்கிய உரை மரபுகளை ஒட்டியே அமைந்துள்ளது. தம் காலத்திலும் தம் காலத்திற்கு முன்பும் வழங்கப்பட்ட வழக்காறுகளைக் குறிப்பிட்டுள்ளார். எளிமையாகவும் தெளிவாகவும் இலக்கணத்தை விளக்கி எடுத்துரைப்பது இவர் உரையின் இயல்பு. இலக்கணத்தை சில இடங்களில் ஐயத்தோடு குறிப்பிடுகின்றார். சில இடங்களில் இது முன்னோர் காட்டிய வழி என்றும் சுட்டிச்செல்கிறார். ஆசிரியருக்கு அடங்கியிருக்கும் மாணவரைப்போன்று தொல்காப்பியம் முழுமைக்கும் உரை கூறியுள்ளார்.

தொல்காப்பிய உரைகளில் எழுத்ததிகாரத்திற்கு இளம்பூரணர் உரையும், சொல்லதிகாரத்திற்கு சேனாவரையர் உரையும் பொருளதிகாரத்திற்கு நச்சினார்க்கினியர் உரையும் சிறந்தது என தமிழ் அறிஞர் கூறுவர். தமிழ் மொழி மரபு ஒன்றையே காரணமாகக் கொண்டு எளிமையாகவும் இலக்கண ஆசிரியரின் கருத்திற்கு ஏற்றவாறு உரை கூறும் போக்கினாலும் **“எழுத்துக்கு இளம்பூரணம்“** என்று இவரது உரை பெருமைப்படுத்தப்பட்டது.

புதிய நூல் ஒன்றை எழுதி வெளியிடும் நூலாசிரியன் அந்நூலைப்பற்றி அறிமுகம் ஒன்றைத்தர வேண்டும். அவ்வற்றின்மூலம் நூலைப்படிப்போருக்கு அந்நூல் சொல்லவரும் கருத்துக்கள் சுருக்கமாக விளங்கும். இளம்பூரணரின் எண்ணமும் அதுதான். தொல்காப்பிய பொதுப்பாயிரத்திற்கு விளக்கம் கூறவந்த இளம்பூரணர் “**பாயிரம்மென்பது புறவுரை.அது நூற்குப் புறவுரையேல் அது கேட்டு என்னை பயனெனின், கற்றுவல்ல கணவற்குக் கற்புடையாள் போல இன்றியமையாச் சிறப்பிற்றாயும், திருவமைந்த மாநகரத்திற்கு உருவமைந்த வாயின் மாடம் போல அலங்காரமாதற் சிறப்பிற்றாயும் வருதலானும், பாயிரம் கேளாதே நூல் கேட்குமேயெனின் குறிச்சி புக்க மான்போல மாணாக்கன் இடர்ப்படுமாகலானும், பாயிரம் கேட்டல் பயனுடைத்தாயிற்று**”[1] (தொல்.சிற.பாயி.பக்01) பாயிரமானது நல்ல கணவனின் கற்புடைய மனைவி போன்றும், அழகான மாநகரத்தின் உள்ளே நுழையும் நுழைவாயில் போன்று அமைந்தது என்றும் மாணவர்கள், பாயிரத்தின் கருத்தை தெரிந்துகொள்ளாது நூலைப்படித்தால் மலையுச்சிக்குத் தனியாகச்சென்ற மான்போன்று துன்பப்படுவர் என்றும் பாயிரத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறார்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

தொல்காப்பியர் பாயிரத்தை பொதுப்பாயிரம் சிறப்புப்பாயிரம் என இரண்டுவகைப்படும் என்கிறார். எல்லா நூல்களிலும் முதலில் கூறப்படுவதால் இது பொதுப்பாயிரம். சிறப்புப் பாயிரம் என்பது அந்நூலின் பொருட் பயனைக் குறிப்பிடுவதாகும். பெண்கள் பலவிதமான அணிகலன்கள் அணிந்திருந்தாலும் அவர்களுக்கு சிறப்பளிப்பது ஆடையே.அதுபோல ஒரு நூலுக்கு சிறப்புப் பாயிரமே என்று பொதுப்பாயிரத்திற்கும் சிறப்புப்பாயிரத்திற்கும் உதாரணம் கூறுயுள்ளார் உரையாசிரியர். ஒரு நூலுக்கு உரை எழுதும் உரையாசிரியர் பன்முகத்தன்மை கொண்டவராக இருக்கவேண்டும் என்பதற்கு இளம்பூரணர் தரும் உரை உதாரணமாகும். இயற்சொல்லுக்கு இலக்கணம் கூறும்பொழுது **"நாயை ஞமலி என்ப பூழி நாட்டார், என்றக்கால் அச்சொல் எல்லா நாட்டாரும் பட்டாங்குணரார், நாய் என்பதனை யாயின் எவ்வெத் திசைநாட்டாரும் உணர்ப"**[2] (தொல்.சொல்.392) என்பதில் அனைவரும் அறிந்த பொருளை பொதுவான சொல்லால் குறிக்க வேண்டும் என்று கூறுகிறார்.

எழுத்ததிகாரத்தில் நூன்மரபில் எழுத்துக்களின் இலக்கணத்தைக் கூறவரும் இளம்பூரணர் **"இதனுட் கூறுகின்ற இலக்கணம் மொழியிடை நின்ற எழுத்திற்கன்றித் தனிநின்ற எழுத்திற்கென உணர்க"** [3] (எழு.நூ.மரபு.பக்.07) என்று எழுத்திலக்கணம் தனி எழுத்தைக்குறிக்க வந்தது என்று குறிப்பிடுகின்றார் உரையாசிரியர். இளம்பூரணர் வாழ்ந்த காலத்து வழக்கில் இருந்த பல சொற்கள் தொல்காப்பியர் காலத்தில் இல்லை. அதனால் தொல்காப்பியர் காலத்தில் வழங்கிவந்த சொற்களுக்கு இலக்கணம் தந்துள்ளார். **"ஆவோடல்லது யகர முதலாது"**[4] (தொல்.எழு.65) எனும் நூற்பாவில் ஆகாரத்தோடு யகரமானது சேர்ந்து மொழிக்கு முதலில் வராது என்கிறார் தொல்காப்பியர். அந்நூற்பாவிற்கு பொருள் தரும் இளம்பூரணர் **"யவனர் என்றார் போல்வன விலக்கினவும் வருமாலெனின் அவை ஆரியச் சிதைவென்று மறுக்க"**[5](தொல்.எழு.65) என்று தக்க காரணம் கூறி விளக்குகிறார்.

அளவுப்பெயர், எண்ணுப்பெயர்கள், நிறைப்பெயர்கள் பற்றிய தொல்காப்பிய நூற்பாவிற்கு விளக்கம் கூறும்பொழுது **"ஆழாக்கு,உழக்கு,பதக்கு என்னும் அளவுப் பெயர்களையும், கஃசு, ஐயவி என்னும் நிறைப்பெயர்களையும், முந்திரி, காணி என்னும் எண்ணுப் பெயர்களையும், ஏ என்னும் சாரியைப் பெறாத குறுணி, நானாழி என்னும் சொற்களும் அளவுகளைக் குறிக்கும் என்கிறார்"**[6]. (தொல்.எழு.65) இந்நூற்பாவிற்கு விளக்கம் கூறும்பொழுது, அவரது காலத்தில் இருந்த அளவுப்பெயர்களைத் தெரிந்து கொள்ளமுடிகிறது. ஆக்கத்தைச் சொல்லுமிடத்து அதாவது ஒன்றன் தொழிலைச் சொல்லும் பொழுது அதனால் விழையும் காரியத்தையும் சொல்ல வேண்டும் என்பதைக் கூறவந்த உரையாசிரியர் **'கடுவும் கைபிழி யெண்ணையும் பெற்றமையான் மயிர் நல்ல ஆயின"**[7] (தொல்.சொல்.21) என்ற

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

உதாரணத்தில் கையால் பிழிந்த எண்ணையைத் தேய்த்ததால் மயிர் நன்றாக வளர்ந்தது என்று உதாரணம் கூறுகிறார்.

கடு என்றால் கடுக்காய். கடுக்காயையும் கையால் பிழிந்த எண்ணையையும் தேய்த்தால் தலைமயிர் நன்றாக வளரும் என்ற நம்பிக்கை இருந்திருக்கிறது. அந்த மரபுக்குறிப்பினை இளம்பூரணர் தமது உரையில் பயன்படுத்தியிருப்பது அவரின் எளிய உரைக்கு இலக்கணமாகும். இளம்பூரணர் தம் காலத்தில் வழக்கற்றுப்போன சொற்களையும் குறிப்பிடுகிறார். சொல்லதிகாரத்தில் **'செய்ம்மன'**[8] (தொல்.சொல்-217) என்ற சொல்லையும், வினையெச்சக் கிளவிகளுக்கு எடுத்துக்காட்டுத்தரும் பொழுது" **'உழுது வந்தான்' ' உண்ணுா வந்தான், நகுபு வந்தான்** "[9](தொல்.சொல்-225) ஆகிய சொற்களில் உண்ணுா வந்தான் என்னும் சொல் இப்பொழுது வழக்கினுள் மாறி உண்ணா வந்தான் என அவர் காலத்தில் வழங்கி வந்ததைக் குறிப்பிடுகிறார். தமிழ்நாட்டில் சாதவாகனர் கோயில் இருந்ததைத் தம் உரையில் குறிப்பிடுட்டுள்ளார் இளம்பூரணர். **"பவளக்கோட்டு நீல யானை சாதவாகனன் கோயிலுள்ளும் இல்லை"**[10] (தொல்.சொல்.34) என்று உரையில் கூறப்படும் சாதவாகனர் பற்றியச் செய்திகளைச் சிலப்பதிகாரத்தில் காணமுடிகிறது. சிலம்பில் கோவலனை சாவகநோன்பி என்றே கண்ணகிக் குறிப்பிடுகிறாள். இளம்பூரணர் குறிப்பிடும் இவ்வுரையில் இருந்து அவரது காலத்தில் சாதவாகனர் கோயில்கள் இருந்ததை அறிந்து கொள்ளமுடிகிறது.

"இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா" [11] **(தொல்.வினை.197)** என்ற நூற்பாவில் மூன்று காலங்கள் குறிப்பிடப்படுகின்றன. இதற்கு உரை கூறவந்த தொல்காப்பியர் **"இறப்பாவது தொழிலது கழிவு, நிகழ்வாவது தொழில் தொடங்கப்பட்டு முற்றுப் பெறாத நிலைமை, எதிர்வாவது தொழில் பிறவாமை"**[12] (தொல்.வினை.197) தொழில் முடிந்தது இறந்தகாலம், தொழில் ஆரபித்து முடிக்காமல் நடந்து கொண்டிருப்பது, தொழிலை இன்னும் தொடங்காமல் இருப்பது என்று மூன்று காலங்களுக்கும் சுருக்கமாகவும் விளக்கமாகவும் உரை கூறுகிறார். காலவழுவுடன் கூறப்படும் சொற்களுக்கும் விளக்கம் தரும் பொழுது **"அறஞ்செய்தான் சுவர்க்கம் புகும் தாயைக் கொன்றான் நிரயம் புகும்"**[13] (தொல்.பொருள்.237) என்ற எடுத்துக்காட்டைக்கூறி "**அறம் என்பது மிக்கதொன்று அதனையாக்கினான் அவ்வுழிச் சேறல் ஒருதலையாகலாற் புகுகின்றானைக் கண்டான்போலப் 'புகும்' என்று நிகழுங்காலத்தாற் சொல்ல அமையும் என்பது"**[14] (தொல்.பொருள்.237) என்று உரை எழுதுகிறார். அதாவது அறம் இளம்பூரணர் உரைக்கு ஏற்றவாறு சில இடங்களில் பழமொழிகளைப் பயன்படுத்துகிறார்.

"எறும்பு முட்டை கொண்டு தெற்றியேறின் மழை பெய்தது"[15] (தொல்.சொல்.240) **"பாவஞ்செய்தான் நிரையம் புகும்"**[16] (தொல்.பொரு.655). **"தவஞ்செய்வா சுவர்க்கம் புகும்"**[17] (தொல்.பொரு.655). போன்ற பழமொழிகளையும் எடுத்தாளுகின்றார். தொல்காப்பியத்தின் களவியலுக்கு இவர் தரும் உரை நம்மை சிந்திக்கவைக்கிறது. களவியலுக்கு பொருள்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

கூறும்பொழுது **"களவாவது, பிறர்க்குரிய பொருள் மறையிற் கோடல், இன்னதன்றி, ஒத்தார்க்கும் மிக்கார்க்கும் பொதுவாகிய கன்னியரைத் தமர் கொடுப்பக் கொள்ளாது, கன்னியர் தம் இச்சையினால் தமரை மறைத்துப் புணர்ந்து பின்னும் அறநிலை வழாமல் நிற்றலால் இஃது அறமெனப்படும்"**[18] (தொல்.கள.பக்.548)என்று களவொழுக்கத்தை கற்பு ஒழுக்கமாக மாற்றுவதே வாழ்க்கை என்பதை வழியுறுத்துகின்றார் இளம்பூரணர்.

தொகுப்புரை

- தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர் இயற்றிய உரை எளிமையாகவும் விளக்கமாகவும் இருந்ததால் புதிய உரைகளின் தோற்றத்திற்கு வித்தாக அமைந்தது.
- இளம்பூரணர் தொல்காப்பியத்திற்கு உரை இயற்றியதன் மூலம் புதிய உரை மரபினைத் தோற்றிவித்துள்ளார்.
- இளம்பூரணரின் உரை புதிய ஆய்வுகளுக்கு வழிகாட்டியாக உள்ளது.
- தமிழ்ச்சமுதாயத்தின் தொன்மங்களைத் தெரிந்துகொள்ள உதவியாக உள்ளது.
- தமிழகத்தில் வழங்கிவந்த பழமொழிகளை இவரது உரை விளக்குகிறது.
- தொல்காப்பிய இலக்கணத்தின் சிறப்புகளை விளக்கும் கருவூலமாக இளம்பூரணரின் உரை விளங்குகிறது.

துணைநூற்பட்டியல்

[1] தொல்காப்பியம் ,தொல்காப்பியர், இளம்பூரணர் உரையாசிரியர், சாரதாபதிப்பகம், சென்னை-14, 5ம் பதிப்பு -2017.

[2] மு.இராகவையங்கார். தொல்காப்பிப் பொருளதிகார ஆராய்ச்சி, மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை, பதிப்பு – 1922.

[3] இலக்கணச் சிந்தனைகள், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், சிதம்பரம், பதிப்பு – 1979

[4] பிரமஸ்ரீ.வே.துரைசாமி ஐயர் , தொல்காப்பியப் பொருளதிகாரம், இரண்டாம் பாகம்(பேராசிரியம்), இராயப்பேட்டை, சென்னை. பதிப்பு - 1935.

[5] டாக்டர் பொற்கோ. இலக்கண உலகில் புதிய பார்வை, மீனாட்சி புத்தக நிலையம், 60,மேலக்கோபுரவீதி, மதுரை – 625 001.முதற்பதிப்பு -1963.

[6] டாக்டர் வ.சுப.மாணிக்கம். தொல்காப்பியப் புதுமை. செல்வி பதிப்பகம், காரைக்குடி. இரண்டாம் பதிப்பு – 1962.

[7] அண்ணாமலைப் பல்கலைக் கழகம். நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை, பதிப்பு – 1981.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

[8] தமிழ்த்துறை ஆசிரியர்கள். தொல்காப்பியச் சிந்தனைகள். பாரி அச்சகம் 27, தெற்கு வீதி, சிதம்பரம். பதிப்பு – 1978.

[9] பேராசிரியர் க.வெள்ளைவாரணன், தொல்காப்பியம்உரைவளம். மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.21.பதிப்பு – 1983.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

கோதை ஈசுவரி. "இளம்பூரணரின் தொல்காப்பிய உரைத்திறன்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 1, *திசம்பர்* 2020, பக். 139-144. டிஓஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.022**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Kothai Eswari. "The Textual Excellency of Ilampuranar's *Tholkappiam*." *International Journal of Tamil Language and Literary Studies,* Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020, pp. 139-144. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.022**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

E-ISSN: 2581-7140 **UGC CARE Listed Journal**
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 **Available at:** www.ijtlls.com

தமிழ் உரை வரலாற்றில் சித்தர் இலக்கிய உரைகள்

Siddhar Literary Prose Works in the History of Tamil Prose

மா. கோமதி, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம்,, சேலம்.
M.Gomathi, Ph.D. Research Scholar, Dept. of Tamil, Periyar University, Salem.
ORCiD: https://orcid.org/0000-0002-7958-2036
முனைவர் இரா.வசந்தமாலை, இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம்.
Dr.R.Vasanthamalai, Associate Professor, Dept. of Tamil, Periyar University, Salem.
ORCiD: https://orcid.org/0000-0002-5867-3780
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.023

Abstract

Prose has not been appeared for the songs that appeared in the ancient times of Tamil culture. Prose became customary only after the eighth century. The source text can be considered as the Iraiyanar Kalaviyal Urai. People who lived in antiquity did not need prose works to understand it. Later the teacher who taught the song was the explanation for the songs. The Prose that appeared in the beginning was the introductory Prose. The practice of writing full text for songs changed the level at which the explanation was said only for important words. Siddhar songs were not published as explanatory prose. Versions featuring introductory notes on Siddhars were largely found. Single songs and songs of total Siddhars were later published with texts. Various techniques are followed and written in the Prose for the spititual and philosophical interpretation.

Keywords : Prose, Iraiyanar Kalaviyal urai, Arumpatha Urai, Siddhars songs, Kurippurai,

முன்னுரை

தமிழின் பழைமையான நூல்களான தொல்காப்பியம், சங்க இலக்கியம் போன்ற மரபிலக்கியங்களுக்கு உரைகள் தோன்றும் முன்னர் அவற்றை வாய்வழியாகக் கூறி விளங்க வைத்தனர். பாடல்களைக் கற்கும் முறையே உரை கூறுவதாக அமைந்திருந்தது. சுருங்க எழுதுவது மட்டுமே சாத்தியமான அன்றைய காலச் சூழலில் உரைகள் தோன்றாதது இயல்பேயாகும். பாடல்களைக் கற்றுக் கொடுத்தவர்களே உரையாளர்களாக இருந்தனர். உரை என்பது விளங்க வைத்தல் என்னும் பொருளை உடையது. தொடக்க காலத்தில் பாடல்களுக்கு விரிவான உரை எழுதப்பெறவில்லை. அருஞ்சொற்பொருள் விளக்கம் மட்டுமே இடம்பெற்ற வந்தது.

பிற்காலத்தில்தான் உரைகள் விளக்கமுற அமைந்தன. உரையாசிரியர்கள் பாரம்பரியம் உருவான பின்னரே பாடல்களுக்கு விளக்கம் கூறுவதில் பல்வேறு முறைகளும் தோன்றின. விளக்குதல், சான்று காட்டுதல், மேற்கோள் கொண்டு விளக்குதல், தொகுத்துரைத்தல் என்பன போன்ற உரை மரபுகள் உருவாகி வளர்ந்தன. அச்சுப் பொறிகள் கண்டடைந்த பின்னர்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

உரைகள் எழுத்துவடிவம் பெறுவது எளிதாயிற்று. ஒரே பாடலுக்கு பல்வேற உரையாசிரியர்கள் தோன்றினர். சித்தர் இலக்கியங்களுக்கு உரைகள் மிகுதியாகத் தோன்றியுள்ளன. சிவவாக்கியர் பாடல்களுக்கு பலர் எழுதிய உரைகள் காணப்படுகின்றன. உரைசார்ந்து இயங்கும் படைப்பாளர்கள் பாடல்களை விளக்குவதில் பல்வேறு முறைகளைக் கடைபிடிக்கின்றனர். இக்கட்டுரை உரையின் தோற்றம் சிவவாக்கியர் பாடல்களுக்கு தோன்றிய பல்வேறு உரைகள் குறித்தும் விளக்குவதாக அமைகிறது.

உரை இல்லாதக் காலம்

இக்காலத்தைச் செய்யுட்கள் மட்டுமே ஆட்சி செய்தக் காலம் எனலாம். உரைக்கு அங்கே இடம் இல்லை உரைகள் தோன்றாமைக்குக் காரணம் அன்றைய சூழலில் பயன்படுத்தப்பட்ட எழுது கருவிகளே ஆகும். அறிவியல் வளர்ச்சியுறாத நிலை இருந்ததும் ஒரு காரணம் ஆகும். பனை ஓலைகளில் ஆனி கொண்டு எழுதுவது மிகவும் கடினமான செயல் ஆகும். குறுகிய அளவு இடப்பரப்புள்ள பனையோலைகளில் செய்யுள் எழுதுவதே கடினமாக இருந்தபொழுது உரை எப்படி இயற்ற முடியும் பழங்காலத்தில் வாழ்ந்த மக்களும் செய்யுளை அப்படியே மனனம் செய்தனர். உரையைத் தேடவில்லை. இதனையே மு.வை. அரவிந்தன் "அக்காலத்து எழுது கருவிகளும், எழுதும்கலை விரைவில் வளரத் தடையாய் இருந்தன. பனையோலைகளில் எழுத்தாணி கொண்டு ஒரு நூலைப் பல நாட்கள் எழுதிச் சேர்த்து, சுவடியாக்கிப் போற்றிக்காக்க வேண்டிய நிலை இருந்து வந்தது. ஒரே சுவடியைப் பலர் கூடிக் கற்றனர். ஒருவர் படிக்க மற்றவர்கள் காதால் கேட்டு அறிந்தனர். மிகுதியாக எழுதி விளக்க வேண்டியவற்றை எழுதாமல், வாயால் கூறியே விளக்கி வந்தனர்.

'விரிப்பின் பெருகும் விரிவஞ்சி விடுத்தாம், வல்லார் வாய்க் கேட்டுணர்க வந்தவழிக் காண்க' என்று உரையாசிரியர்கள் இடையிடையே எழுதிச் செல்லும் வழக்கம், அவர்கள் காலத்தில் எழுதுவதில் இருந்த இடர்பாடுகளை உணர்த்தும், நூல்களுக்கு உரை எழுதாமல், வாயால் விளக்கிச் செவியால் அறிந்து கல்வி கற்றுப் புலமை பெறும் வழக்கம் அக்காலத்தில் நாடெங்கும் பரவியிருந்தது" (மு.வை.அரவிந்தன், உரையாசிரியர்கள், ப.62) என்று கூறுகிறார் மேலும், நாலடியாரில் (அவையறிதல் என்ற அதிகாரத்தில்) உள்ள பாடல்களில் உள்ள

"நாப்பாடம் சொல்ல நயம் உணர்வார்" (எல்.கௌமாரீஸ்வரி (உ.ஆ), சமண முனிவர்கள், நாலடியார், பா.312)

பாடமே ஓதிப் பயன் தெரிதல் தேற்றாத
மூடர் முனிதக்க சொல்லுங்கால்- கேடருஞ்சீரிச் (மேலது.316)
கற்றதூஉ மின்றிக் கணக்காயர் பாடத்தால்
பெற்றதாம் பேதையார் சூத்திரம்- மற்றதனை (மேலது, பா.314)

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

என்ற வரிகளும் உரையில்லாமல் கல்வி கற்ற முறைமைக் குறித்து விளக்குகிறது. மேலும், நன்னூல் பாயிரம் பாடல் சொல்லும் முறைக் குறித்தும், பாடல் கேட்கும் முறைக் குறித்தும் பேசுகிறது.

உரையின் தோற்றம்

செய்யுட் காலத்தில் உரை என்பது எழுத்து வடிவம் பெறவில்லை. வாய்மொழி மரபாக இருந்தது. ஆசிரியர்தான் அன்றைய உரையாசிரியர் எனலாம். கடினமான ஆழமானச் சொற்களுக்கு பொருள் கூறினர். பாடல்களுக்கு இடையிலும் உரைநடை இடம் பெற்றது. ஆக ஆரம்பத்தில் தோன்றியது அரும்பதவுரையாகவே இருந்தது. முதன் முதலாக உரைத் தோன்றியது குறித்து இரா.மோகன் “இறையனார் களவியல் உரை நக்கீரனார் காலம் தொடங்கி நீலகண்டனார் காலம் வரையில் கர்ண பரம்பரையாக வழங்கி வந்தது. இவ்வாறு ஒன்பது தலைமுறைகள் வாய்மொழியாக வழங்கி வந்த இவ்வுரையானது கி.பி.8- ஆம் நூற்றாண்டளவில் ஏட்டு வடிவில் அமையலாயிற்று" (இரா.மோகன், உரைமரபுகள், ப.11) என்கிறார். மேலும், அ.மு. பரமசிவானந்தம் "நூலுக்கு உரை எழுதும் பழக்கம் சங்க காலத்தில் இல்லை. சங்க கால இலக்கியங்களாகிய பத்துப்பாட்டு போன்றவற்றுக்கும், தொல்காப்பியத்திற்கும், சிலப்பதிகாரத்திற்கும் மிகவும் பிற்காலத்திலேயே பல அறிஞர்கள் உரை எழுதியுள்ளார்கள்.

பாட்டுக்கு உரை என்ற வகையில் முதலில் தோன்றிய உரை இறையனார் களவியல் உரையே எனக் கொள்ள வாய்ப்பு இருக்கின்றது" (அ.மு.பரமசிவானந்தம், தமிழ் உரைநடை, ப.79) என்கிறார். இவ்வாறு உரையின் தோற்றம் குறித்து இரு ஆசிரியர்களும் கூறுகின்றன. ஆரம்பத்தில் தோன்றிய உரைகள் அனைத்தும் பழைய மரபான ஆசிரியர் மாணவர் உரையாடுவதல் போல் வினா- விடை மரபாகவே இருந்தது.

உரையின் பொது இலக்கணம்

ஒரு உரையில் என்னென்ன இடம் பெற்று இருக்க வேண்டும் என்று விதிமுறை உள்ளது. அவற்றையெல்லாம் ஓர் உரை பெற்று இருக்குமானால் அவ்வுரை சிறப்பாக இருக்கும் என்று நன்னூல் கூறுகிறது

பாடம் கருத்தே சொல்வகை சொற்பொருள்
தொகுத்துரை உதாரணம் வினாவிடை விசேடம்
விரிவு அதிகாரம் துணிவு பயனோடு
ஆசிரிய வசனம் என்று ஈர்ஏழ் உரையே (ச.திருஞானசம்பந்தம், (உ.ஆ)., நன்னூல், எழுத்ததிகாரம், ப.19)

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

பாடம் எடுத்துரைத்தல் முதலாகிய பதினான்கும் உரையின்பொது இலக்கணமாகும் மூலபாடத்தை எடுத்துரைத்தல், கருத்துரை கூறுதல் சொல்வகை கூறுதல், சொல்லுக்குப் பொருள் உரைத்தல், கருத்தைத் தொகுத்துக் கூறுதல், மேற்கோள்களைக் காட்டுதல், ஐயங்களைத் தானே தோற்றுவித்தல், அதற்குரிய விடையைக் கூறுதல், நூல் கூறும் பொருளன்றி இடத்திற்கேற்ற சிறப்புப் பொருளை எடுத்துரைத்தல், விரித்துக் கூறவேண்டிய இடத்து விளக்கமுறக் கூறதல், சொல்லும் பொருளை அதிகாரத்துடன் பொருத்தமுறக் காட்டுதல், ஐயம் ஏற்படும் இடங்களில் இதற்கு இதுவே பொருள் எனத் துணிந்து கூறுதல் இவ்வாறு துணிவுறக் காட்டுவதால் ஏற்படும் பயனை எடுத்துரைத்தல், உரையிடத்துக் தொன்னூல் ஆசிரியர்களின் பாடங்களை இயைத்துக் காட்டுதல் என்பன ஆகும்[8]

உரையின் வளர்ச்சி

சொற்களுக்குப் பொருள் தரும் நிலையில் தோன்றிய உரை பிற்காலத்தில் அறிவியல் வளர்ச்சியின் காரணமாகப் பன்முகத் தன்மைப் பெற்றது. உரையின் வளர்ச்சி நிலைக் குறித்து கூறும் .மு.வை. அரவிந்தன், "வழி வழியாக நூல்களுக்கு உரைகேட்டுப் பழகியவர்களும் தொடக்கத்தில் விரிவான உரையோ விளக்கமோ எழுதவில்லை முதன்முதலில் அருஞ்சொற்களுக்கும் பொருளும், சொற்களைக் கொண்டு கூட்டி முடிக்கும் வகையும் சில வரலாற்றைக் குறிப்பும் மிகச் சுருக்கமாய் எழுதி வந்தனர். சிலப்பதிகாரத்திற்கு முதலில் அரும்பதவுரை தோன்றியது. ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்துப் போன்ற பழந்தமிழ் நூல்களுக்கு முற்காலத்தில் தோன்றியப் பழைய உரைகள் மிகச் சுருக்கமாகக் குறிப்புரையாக உள்ளன. புறநானூற்றின் பழையவுரை பொழிப்புரையாக உள்ளது. பரிபாடலுக்குப் பரிமேலழகர் எழுதிய உரை, சுருக்கமாகவே உள்ளது. அகநானூற்றிற்குப் பழையவுரை (90 பாடல்களுக்கு மட்டும்) குறிப்பு உரையாகவே உள்ளது" (மு.வை.அரவிந்தன், உரையாசிரியர்கள், ப.67-68) என்கிறார். முதலில் செய்யுள் வடிவ உரைகள், உரைக்கு உரை, மறுப்புரை, நூலாசிரியரே எழுதும் உரைகள், உரைகள் பற்றிய ஆய்வுகள் என்று உரை வளர்ச்சியடைந்து கொண்டே வருகின்றது. அறிஞர் வ.சுப. மாணிக்கம் தம் 'சிந்தனைக் களங்கள்' என்ற நூலில், "இடைக்காலம் என்பது உரைக்காலம் அன்று; தொன்னூல்களை உரை என்னும் கயிற்றால் பிணித்த உயிர்க்காலம்" என்று உரையாசிரியர்களின் காலத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்கி பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கம் வரையுள்ள காலத்தை உரையாசிரியர்கள் காலம் என்று அழைக்கின்றனர்.

சித்தர் இலக்கிய உரைகள்

சித்தர் இலக்கியங்கள் தோன்றி சில நூற்றாண்டுகள் சென்ற பின்னரே அதற்கான உரைத் தோன்றியது. கோயில், சிலை, வழிபாடு சார்ந்த சில கொள்கைகளுக்கு எதிர்பபாக

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

சித்தர் இலக்கியம் இருந்ததால் சமயச் சான்றோர்களால் இவ்விலக்கியம் மறுக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் வந்தது. பல தடைகளைக் கடந்து சித்தர் இலக்கியம் தேடி தொகுக்கப்பட்டது. மறைபொருள் தன்னை காரணமாக உரை இயற்ற யாரும் முன் வராதக் காரணத்தால் உரைப் பெறுவதில் காலதாமதம் ஆனது. தற்பொழுது ஏராளமாக உரைகள் சித்தர் இலக்கியத்திற்குத் தோன்றிய வண்ணம் உள்ளது.

- குறிப்புரை (பதிப்பு நிலையில்)
- தனிசித்தர் பாடல்களுக்கான உரை
- தொகுப்பு நிலையில் அமைந்த சித்தர் பாடல்களுக்கான உரை
- பொருண்மை சார்ந்த உரை
- உரைக்கு உரை

குறிப்புரை

ஆரம்பத்தில் சித்தர் பாடல்களைத் தேடி கண்டெடுத்தவர்கள் அப்பாடல்களை அப்படியே பதிவுச் செய்தனர். மீண்டும் அந்நூல்களை பதிபிக்கும் ஆசிரியர்கள் அந்நூலின் தொடக்கத்தில் சித்தர்கள் குறித்தப் பொது அறிமுக உரை அல்லது வரலாற்றுக் குறிப்பு அல்லது அந்நூலின் பொருண்மை சார்ந்த சிறு குறிப்புகளுடன் அந்நூல்கள் பதிபிக்கப்பட்டது. 'உதாரணமாக ஞானக் கோவை என்கிற சித்தர் பாடல்கள்' என்ற நூலில் பத்தொன்பது சித்தர்களின் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு சித்தர்களின் பாடல் தொடங்கும் முன் அவர்களை பற்றிய 'வரலாற்றுக் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

'பொருண்மைச்' சார்ந்து தொகுக்கப்பட்டு பதிபித்த நூல்களில் சித்தர்களின் அறிமுகவுரையுடன் பதிபிக்கப்பட்டுள்ளது. 'சித்தர்களின் கற்ப சூத்திரம்' என்ற நூல் எட்டு சித்தர்களின் பாடல்களில் இருந்து கற்ப சூத்திரம் என்ற பொருண்மை மட்டும் எடுத்து கையாளப்பட்டுள்ளது. மு.வை. அரவிந்தன் குறிப்புரை பற்றி கூறுகையில், "சொற்களை கொண்டு கூட்டி முடிக்கும் வகையும், சில வரலாற்று குறிப்பும் மிகச் சுருக்கமாய் எழுதி வைத்தனர். ஐங்குறுநூறு பதிற்றுப் பத்துப் போன்ற பழந்தமிழ் நூல்களுக்கு முற்காலத்தில் தோன்றியப் பழைய உரைகள் மிகச் சுருக்கமாகக் குறிப்புரையாக உள்ளன. அகநானூற்றிற்கும் பழையவுரை குறிப்புரையாகவே உள்ளது" (மேலது, ப.67) பின்னாளில் குறிப்புரையுடன் மேற்கோள், சான்றோர் சொல்லி வந்த விளக்கம், உவமை ஆகிய அனைத்தும் சேர்ந்து விளக்கவுரையாக வளர்ந்தது என்கிறார். இது போல் தான் பதினெட்டாம் பதிப்பாகப் பிப்ரவரி 2017- இல் வந்த ஞானக்கோவை என வழங்கும் சித்தர் பாடல்கள் விளக்க குறிப்புகளுடன் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

தனி சித்தர் பாடல்களுக்கான உரை

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

ஒரு சித்தர் பாடல் பதிப்பு மட்டும் கிடைத்த போது அதற்கு மட்டும் உரை எழுதி வெளிவந்த நூல்கள் இவ்வகையில் அடங்கும் உதாரணமாக, 'போகர் பாடல்கள் விளக்க உரையுடன்' இரண்டு தொகுதிகள் வெளிவந்துள்ளன. உரையாசிரியர் டி.எ.ன.கணபதி முதல் பதிப்பு-2000 'இடைக்காட்டுச் சித்தர் பாடல்கள்', பாக்கம்பாடி ஆ, அங்கமுத்து முதல் பதிப்பு -2009, 'சித்தர் பத்திரகிரியாரின் ஞானப்புலம்பல்' விளக்க உரை தமிழ்ப்பிரியன் முதல் பதிப்பு-2010. 'சிவவாக்கியர் பாடல் மூலமும் உரையும்'மா.வடிவேலு முதலியார் முதல் பதிப்பு -1953 இது போன்ற இன்னும் பல நூல்கள் உள்ளன.

தொகுப்பு நிலையில் அமைந்த சித்தர் பாடல்களுக்கான உரை

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்ற தொகுப்பாக வெளிவந்த சித்தர் பாடல்களுக்கு உரையும் அப்படியே தொகுப்பாக வந்தது. உதாரணமாக, 'சித்தர் பாடல் மூலமும் உரையும்' உரையாசிரியர் இரா. தமிழ்ப்பிரியன் பதினெண் சித்தர் பாடல்களுக்குத் தொகுப்பாக உரை இயற்றியுள்ளார். 'சித்தர் பாடல்கள் மூலமும் உரையும்' உரையாசிரியர் கருப்பூர் மு.அண்ணாமலை, இரண்டு தொகுதிகள், பதினாறு சித்தர்கள் பாடல்களுக்கு தொகுப்பாக உரை இயற்றியுள்ளார். 'சித்தர் பாடல்கள் மூலமும் முனைவர் அ.அறிவொளி அவர்களின் உரையும்' இரண்டு தொகுதிகள் வெளிவந்துள்ளன. முப்பத்தாறு சித்தர்களின் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. முதற்பதிப்பு -2006 'சித்தர் பாடல்கள் உரை விளக்கம்' ஐந்து பகுதிகள் உரையாசிரியர் புலவர் அடியன்மணிவாசகன் போன்ற தொகுப்பு நூல்கள் வெளிவந்துள்ளன.

உரைக்கு உரை

ஒரே சித்தர் பாடல்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட உரைகள் வந்துள்ளன. தொகுப்பு நூலில் உள்ள ஒரு சில சித்தர்கள் எல்லா தொகுப்பு நூலிலும் உள்ளனர். உதாரணமாகப் பட்டினத்தர் பாடல்களுக்கு 'பட்டினத்தார் பாடல்கள் (பத்திரகிரியார் பாடல்கள் உள்படட) விருத்தியுரை' திரு.வி.க. டிசம்பர்-2001. 'பட்டினத்தார் பாடல்கள்' (உரையுடன்) கொ.பெ.நாராணயசாமி- முதல் பதிப்பு- டிசம்பர்-2000 'பட்டினத்தார் பாடல்கள் மூலமும் உரையும்' அ. மாணிக்கம் முதல் பதிப்பு-1995

இது போன்று சிவவாக்கியர், பாம்பாட்டிச் சித்தர், கடுவெளிச் சித்தர், திருமூலர் போன்றோர் பாடல்களுக்கும் பல உரைகள் வந்துள்ளன. இவ்வாறு உரைக்கு உரை எழுதும் போது உரை செம்மையுற பாடலின் பொருண்மை முழுமையாக வெளிப்பட வாய்ப்பு உண்டாகிறது.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

முடிவுரை

- தொடக்க காலத்தில் உரை எப்படி இருந்தது. காலமாற்றத்திற்கு ஏற்ப உரை எப்படி வளர்ச்சி பெற்றது. உரை வளர்ச்சிக்கு உரிய காரணம் மற்றும் உரைக்கான பொது இலக்கணம் ஆகியவை பற்றி தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது.
- சித்தர் இலக்கியம் பதிப்பிலும், உரையிலும் பின்தங்கி இருக்க காரணம் என்ன என்பதையும் அதன் பிறகு சித்தர் இலக்கியம் பெற்ற உரை வளர்ச்சியையும் புரிந்து கொள்ள முடிகிறது.
- சித்தர் இலக்கியம் பதிப்புடன் அறிமுகவுரை, குறிப்புரை, வரலாற்று உரையும் இணைத்து வெளிவந்தது இதுவே சித்தர் இலக்கிய உரையின் தொடக்கம் எனலாம். பின்பு தனி சித்தர் பாடல்கள் மற்றும் அதற்கான உரையும் வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து 19, 21, 36 என்ற தொகுப்பு நிலையில் உள்ள சித்தர் பாடல்களுக்கு உரையும் அவ்வாறே தொகுப்பு நிலையில் வந்தது. உரையே இல்லாத சித்தர் பாடல்கள் இன்று ஒன்றுக்கு மேற்பட்ட உரைகளைப் பெற்று வருகிறது. சித்தர் சிவவாக்கியரின் சிவவாக்கியம் 5 க்கும் மேற்பட்ட உரைகளைப் பெற்றுள்ளதை கண்டுணர முடிகிறது.

துணை நூற்பட்டியல்

[1] அரவிந்தன், மு.வை, உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2010.
[2] எல்.கௌமாரீஸ்வரி (தொ.ஆ) சமண முனிவர்கள், நாலடியார், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, 2009.
[3] மோகன், இரா, உரை மரபுகள், மெய்யப்பன் பதிப்பகம், 53, புதுத்தெரு, சிதம்பரம், 2003.
[4] பரமசிவானந்தம், அ.மு., தமிழ் உரைநடை, சென்னை, தமிழ்க் கலைப் பதிப்பகம், 1916.
[5] திருஞானசம்பந்தம், ச., (உ.ஆ), பவணந்தி முனிவரின் நன்னூல், எழுத்ததிகாரம், கதிர் பதிப்பகம், திருவையாறு, 2009.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

கோமதி & வசந்தமாலை. "தமிழ் உரை வரலாற்றில் சித்தர் இலக்கிய உரைகள்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 1, *திசம்பர்* 2020, பக். 145-152. டிஒஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.023**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Gomathi & Vasanthamalai. "Siddhar Literary Prose Works in the History of Tamil Prose." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020, pp. 145-152. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.023**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /NIL

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இல்லை /NIL

E-ISSN: 2581-7140
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020

UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

திருவருட்பாவின் இலக்கணக் குறிப்பும் ஔவை சு.துரைசாமிப்பிள்ளை உரைப்பதிப்பும்

Grammatical Scrutiny of "Tiruvarutpa" and the Edition of Auvai Su. Duraisamy Pillai's Commentary

வீ.கௌசல்யா, முனைவர் பட்ட ஆய்வாளர், அரியகையெழுத்துச் சுவடித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

V.Gowsalya, Ph.D Scholar, Department of Rare Manuscripts, Tamil University, Tanjore.
https://orcid.org/0000-0002-3881-9711

முனைவர் த.கண்ணன், துறைத்தலைவர் & பேராசிரியர், அரியகையெழுத்துச் சுவடித் துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

Dr.T.Kannan, Head & Professor, Department of Rare Manuscripts, Tamil University, Tanjore.
https://orcid.org/0000-0002-5984-7201
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.024

Abstract

The Sixth Thirumurai (AARUTHIRUMURAIGAL in Tamil) was written by Thiruarutprakasa VALLALAR. A commentary text on "Tiruvarutpa" was written and published by Auvai, Su. Duraisamy Pillai to decode the inner meaning and insights of the source text. In 1979, Annamalai University released the first volume of "THLRUVARUTPA MOOLAMUM URAITUM" written by Uraivendar Auvai during its golden jubilee. The second and third volumes were released in 1934. It published the fourth volumes in 1984. The fifth volume was published in 1985. Then with the financial assistance of the Government of Tamil Nadu, it released the 2, 3, 4, 5th volumes. The sixth volume was published in 1986 over time. Then the seventh volume was published in 1987 and the eighth volume in 1988. The ninth and tenth volumes were released in 1989 at the reputed University's Diamond jubilee celebrations. Then it was republished by Suddha Sanmarga Nilaiyam in 2000 and 2006. Again it was reprinted by Varthamanan Pathipagam in 2010 and 2013. This edition is not only proud of the text, but the service of the university for Tamil Studies. Moreover, it evinces about the linguistic and grammatical perspectives of the six editions of Thirumuraigal. Hence, this article gives such details about the commentaries of Auvai, Su. Duraisamy Pillai

.

Keywords: "Tiruvarutpa", Avuai Su. Duraisamy Pillai**,** Commentary**,** Grammar

முன்னுரை

திருஅருட்பிரகாச வள்ளலார் இயற்றி அருளிய ஆறுதிருமுறைகளையும் உரைப் பதிப்பாக பதிப்பித்தவர் ஔவை சு. துரைசாமிபிள்ளை ஆவார். 1979 இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அதன் பொன்விழாவின்போது உரைவேந்தர் ஔவை எழுதிய "திருவருட்பா மூலமும் உரையும்" என்னும் பதிப்பின் முதல் தொகுதியை வெளியிட்டது. 1983இல் இரண்டாம் தொகுதியும், மூன்றாம் தொகுதியும் வெளியீடாக வெளிவந்தன. 1984இல் நான்காம் தொகுதியை வெளியிட்டது. 1985இல் ஐந்தாம் தொகுதியை வெளியிடப்பெற்றது. பின்பு தமிழக அரசின் நிதி உதவியை மேலும் பெற்று அடுத்த நிலையில் 2,3,4,5 ஆம் தொகுதிகளை வெளியிட்டது. 1986 இல் காலம் போக்கில் ஆறாம் தொகுதியை வெளியிடப்பெற்றது. பின்பு,

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

1987இல் ஏழாம் தொகுதியும், 1988 இல் எட்டாம் தொகுதியும் வெளிவந்தன. 1989 இல் ஒன்பதாம் தொகுதியும் பத்தாம் தொகுதியும் இப்பல்கலைக்கழகத்தல் வைரவிழாவின் வெளியீடாக வெளிவந்துள்ளன.

1983 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் முதல் பதிப்பாக வெளியீடாக வந்த பதிப்பே வர்த்தமானன் பதிப்பகமும் அதே ஆண்டில் வெளியிடப்பெற்றன. 2000 , 2006 இல் இதனை, மறுபதிப்பாக சுத்த சன்மார்க்க நிலைய வெளியீட்டன. 2010, 2013 இல் வர்த்தமானன் பதிப்பகம் மறுபதிப்பாக வெளியிடப்பெற்றன. ஆறு திருமுறைகள் அடங்கிய இப்பதிப்பு 379 திருப்பதிகங்களைக் கொண்டது. 5818 அருட்பாக்களைக் கொண்டது. சிவஞான போதத்திற்குச் சிற்றுரைப் பதிப்புக் கண்ட உரைச்செம்மல் ஔவை, திருவருட்பாவிற்குப் பெருமைமிக்க பேருரை கண்டார். இந்தப் பதிப்பு, உரைப்பதிப்பிற்குக் கிடைத்த பெருமை மட்டுமன்று, பல்கலைக்கழகத்திற்கும் பெருமை சேர்ப்பதாக உள்ளது.

மூலப்பதிப்பின் அமைப்புத் தழுவலும் உரைப்போக்குகளும்

வள்ளற்பெருமானின் திருவருட்பா மூலப்பதிப்புகளில் சிறந்த பதிப்பு 1867 ஆம் ஆண்டு தொழுதூர் வேலாயுத முதலியார் முதல் நான்கு திருமுறைகளை வெளியீட்டப் பதிப்பாகும். 1880 இல் ஐந்தாம் திருமுறையைத் தொழுதூர் வேலாயுத முதலியார் பதிப்பித்து வெளியிட்டார். 1885 இல் ஆறாம் திருமுறையை வேலூர் பத்மநாபன் முதலியார் பதிப்பித்து வெளியிட்டார். இப்பதிப்பை பின்பற்றி பொன்னேரிசுந்தரம் பிள்ளை, ச.மு.கந்தசாமிப்பிள்ளளை, ஆ.பாலகிருஷ்ணப்பிள்ளை, ஊரன் அடிகள் என்னும் பல பதிப்புகள் வெளியிடப்பெற்றுள்ளன. இவற்றிள், செவ்விய பதிப்பாக ஊரனடிகளின் பதிப்பு ஆகும். இப்பதிப்பின் பாட்டமைப்பு, பதிக அமைப்பு, யாப்பு அமைப்பு ஆகியவற்றை ஔவை அப்படியே தழுவித் தமது உரையை வரைந்துள்ளார். அவர் பகுத்துக்கொண்ட அகப்பொருள் பதிகங்கள், பாடல்கள், இசைப்பாடல்கள் என்னும் பகுப்புப் பாங்கைத் தழுவி உரை வரைகின்றார் ஔவை.துரைசாமிப்பிள்ளை.

அகப்பொருள் பதிகம் 54, பாடல்கள் 933.

இசைப்பாடல் பதிகம் 51, இசைப்பாடல்கள் 1011.

இப்பாடல்கள் நீங்க ஏனையவை யாப்பு அமைப்புக்கேற்ப வடிவம் பெறுகின்றன. 29 யாப்பு வகைகளில் 5818 பாடல்கள் அமைந்துள்ளன. குறள் வெண்பா, குறள்வெண் செந்துறை, குறட்டாழிசை, வெண்துறை, ஆசிரியத்துறை, வஞ்சித்துறை முதலிய யாப்பு வடிவங்களில் அமைந்து பாடல்களுக்கு அளவான உரைகள் அமைந்துள்ளன. கீர்த்தைப் பகுதிகளுக்கு (சிந்து, கும்மி, கலித்தாழிசை பத்தாம் தொகுதி பாடல் எண் 4895 முதல் 5294வரை) உரை வரைந்துள்ளார், ஔவை. விருத்தப்பா அமைப்பில் வள்ளற்பெருமான் விதவிதமாகப் பாடியவர். அறுசீர் ஆசிரிய விருத்தம்முதல் நூற்றுத்தொண்ணூற்றிரண்டு சீர் ஆசிரிய

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

விருத்தங்கள் வரை வகைமைகளை உருவாக்கிப் பாடியவர். பல்வேறு திருமுறைகளில் பல்வேறு தலைப்புகளை உடைய பதிகங்களாக இப்பாடல்கள் அமைந்துள்ளன.

இலக்கணக் குறிப்புகள்

திருஅருட்பிரகாச வள்ளலார் இயற்றிய திருஅருட்பாவில் பல நூல்கள் இலக்கணக் குறிப்புகளைப் பெற்றுள்ளன என்பதை, ஔவை சு.துரைசாமிப்பிள்ளையாவர் உரைப் பதிப்புகளில் மிக அழகாகவும், எளிமையாகவும், தெளிவாகவும் எடுத்துக் கூறுகின்றார். இவற்றிள், வழக்குச் சொற்கள், அசைநிலை, போலி, விகாரங்கள், சாரியை, யாப்பு நோக்கில் கும்மி இலக்கணம், அணி இலக்கணக் கூறு போன்றவைகளை எடுத்துக் கூறும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளன. இவற்றுள், சொற்பொருள், இலக்கணப்பொருள் இரண்டையும் உடையது, சொல். சொல்லின், இருவேறு பொருண்மையும் இணைந்தே சொல்லின் பொருள் பரிமாணத்தை முழுமை ஆக்குகின்றன. சொல்லின் புறமாக ஒரு சொற்பொருள் அறிவிக்கும் உரையாளர், அதன் மறு புறமாக இலக்கணச்சொல்லையும் வெளிப்படுத்துதல் வேண்டும். இதனால், இலக்கணப் பொருளை உரைப்பதும் ஓர் உரைநெறியாகத் தமிழ் உரை மரபில் இடம்பெற்றுள்ளது.

இதனை, “சிறந்த உரைப்பதிப்பு அது கொண்டிருக்கும் உரையில் ஆழ, அகல நுட்பங்களைப் பொறுத்தது. உரையாழம் காட்டுவனவற்றில், இலக்கணக் குறிப்புகள் இணைந்த உரைப்பகுதிகள் முக்கியப் பங்காற்றும் மூல இலக்கியத்துக்கான உரைகள், உரை இலக்கியத் தம்மைபெற்று அமைவதென்றால், இலக்கண இலக்கிய மரபுகளை அது உள்வாங்கி எழுதப்பட்டதாக அமைந்து, மூல இலக்கியத்துக்குச் சார்பு இலக்கியமாக மாறுதல் வேண்டும்.” (திருவருட்பா ப.163-164)

ஔவை. துரைச்சாமிப்பிள்ளை இருபதாம் நூற்றாண்டின் மிகச்சிறந்த உரையாசான் என்பதனால் திருவருட்பாவுக்கான அவரது உரை விளக்கப் பகுதிகளில் இலக்கணக் குறிப்புகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. இலக்கிய இலக்கண மரபுகளைத் திரியாத வகையில் காப்பாற்றும் கடமை ஓர் உரையாசிரியனுக்கு உள்ளது. வாழையடி வாழையென வளரும், பின் இலக்கியங்களுக்கும், பின் இலக்கணங்களுக்கும் மரபுகளே உயிர்களாகின்றன. இந்த வகையில் ஔவையின் ஆழங்கால்பட்ட தமிழறிவு, அவரது இலக்கணக் குறிப்புகளில் வெளிப்பட்டுள்ளது. வள்ளற்பெருமானின் அருட்பா இலக்கியத்தை உள்ளவாறு புரிந்துகொள்ள, அவர் தரும் இலக்கணக் குறிப்புகள் உரை விளக்குகளாக இருந்து பெரிதும் உதவுகின்றன. அருட்பாக் கடலில் நீந்தி மகிழ்வதற்கான உரைத்தோணியாக அவை அமைந்துள்ளன.

வழக்குச் சொற்கள்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

உலகியல் வழக்கையும் இலக்கிய வழக்குகளையும் சுட்டிச் சொல்லும் ஔவையின் இலக்கணக் குறிப்புகள் அருட்பாப் பாடல்களைப் புரிந்துகொள்ள உதவுவதுடன், மட்டும் அல்லாம அவற்றைச் சுவைப்பதற்கும் உதவுகின்றன.

மைகண்ட கண்டமும் மான்கண்ட வாமமும் வைத்தருளில்

கைகண்ட நீ எங்கும் கண்கண்ட தெய்வம் கருதில் (பா.2264).

இந்தப் பாட்டுக்கு அமைந்த ஔவையின் உரையால்தான், இந்தப் பாட்டை முழுவதும் புரிந்துக் கொள்ளவும், சுவைக்கவும் முடிகின்றன. அவர் உரை பின்வருமாறு,

“மைகண்ட கண்டம் – நீலகண்டம், கண்டம் – கழுத்து, மான் – உவமையால் உமாதேவியை நினைப்பிக்கிறது. வாமம் இடப்பாகம், செயல் வல்லாரைக் கை கண்டவர் என்றும், உள்ளதன் உண்மையைக் கண்கண்டதென்றும் கூறுவது உலகியல் வழக்கு. இலக்கிய ஆக்கத்துக்கு வழக்கும் செய்யுளும் முதல் என்பார் பனம்பாரனார்.” (துரைசாமிப்பிள்ளை சு.ஔவை ப.292) இவை அருட்பாவைப் புரிந்துகொள்ள உதவும உரை விளக்கமாக இடம்பெற்றுள்ளன.

அசைநிலை

நான் ஏழை இங்கு மனம் நொந்து நொந்து

நலிகின்ற செய்கை நலமே (பா.282).

இதில், “நலிகின்ற செய்கை நலமே என்பதில் வரும் ஏகாரம் எதிரிமறைப் பொருளைத் தந்துள்ளது என ஔவை குறிப்பெழுதி, “மனம் மெலிந்து செய்யும் செயல்கள் மேலும் மேலும் மனநோய்க்கு ஏதுவாதல் உண்மையின் ஏகாரம் எதிர்மறை.” (துரைசாமிப்பிள்ளை சு.ஔவை ப.419) என விளக்குகிறார். வெறும் அசைநிலைக்குக் கவிஞனின் உளம் அறிந்து உரை எழுதும்போது, இத்தகைய குறிப்புகள் அமைந்து அதன் பொருள்ளுடைய ஆழத்தை வியக்க வைக்கிறது. என்பதை, உணரமுடிகிறது.

இதேபோல் பாடல் 351இல் வந்துள்ள ஓகாரங்களை வெறும் அசைநிலைகளாகப் பார்க்காமல் ‘**மன்னோ**’ என்பதில் ஓகாரம் அசைநிலை எனவும், முறையேயோ? என்பதில் ஓகாரம் எதிர்மறை எனவும் இலக்கணக் குறிப்புகளை எழுதியிருப்பதனால், ஔவையின் உரை சிறப்புறுவதுடன் அசைகளுக்குப் பொருள்களால் கற்பிக்கும் மூலத்தின் சுவையும் கூடுகிறது.

போலி

கண்ணார் நுதலார் விடமார் களனார்

கரமார் மழுவார் (பா.406).

இந்தப் பாட்டு வரிக்கான உரையில், ஔவை. “களம் – கழுத்து. களன் என வந்தது போலி. அறம் – அறன் என வழங்குதல் போல” (துரைசாமிப்பிள்ளை சு.ஔவை ப.45) என ஔவை உரை எழுதுவார். இத்தகு குறிப்பு இல்லை என்றால், ஓர் உரை மெச்சத்தகும் சிறப்பை

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

இழந்துவிடும். போலிதான் என்றாலும் அதனைக் சொல்லும் முறையில் சொன்னால் அதன் பொருள் சிறக்கிறது.

விகாரங்கள்

மொழி மாறுபாடுகள் விகாரங்கள் ஆகும். இவை பற்றிய உரைக் குறிப்புகள் ஒரு பேருரையில் இடம்பெறும்போது, இந்த உரையாசிரியனின் ஆழ்ந்த புலமையை அவை வெளிப்படுத்துவதனோடு மொரி மரபையும் சுட்டிக் காட்டுகின்றன.

மடுக்கும் நீர்உடைப் பாழ்ங்கிணறு அதனுள்
வழுக்கி வீழந்தவன் வருந்துறா வண்ணம்
எடுக்கின் றோர்என இடையிற் கைவிடுதல்
இரக்கம் உள்ளவர்க்கு இயல்பன்று கண்டீர் (பா – 1171)

இந்தப் பாட்டுக்கு ஔவையின் உரை அவர் தரும் விகார இலக்கணம் பற்றிய குறிப்பு, பாடலுக்குச் சிறப்பைச் சேர்க்கிறது. "பாழ்க்கிணறு எனற்பாலது, பாழ்ங்கிணறு என மெலிந்தது. "பாழ் என் கிளவி மெல்லெழுத்து உறழ்வே" என்பது தொல்காப்பியம். பாழ்த்த கிணறு சிறிது இடிபடினும் உள் வீழ்ந்தவனுக்கு ஊறு செய்யும்" (திருவருட்பா ப.167)

வாடிய பயிருக்கு வாடிய வள்ளற்பெருமான் இங்கு இடிபடும் கிணற்றுக்கும் நைகிறார், உள்ளே வீழ்ந்து கிடப்பவனுக்காகவும் வாடுகிறார். ஒரு மெலித்தல் விகார குறிப்பு வள்ளற்பெருமான் நெஞ்சினை உரைவழி புலப்படுத்துகிறது. ஆண்டவர் இடையில் கைவிடக்கூடாது என்னும் கருத்தைப் புலப்படுத்துகிறது. மொத்தத்தில் பாட்டை உரைக்குறிப்பு மேம்படுத்துகிறது. ஔவையின் இத்தகைய உரைத்திறன்கள் பத்துத் தொகுதியுள்ளும் காணப்படுகின்றன.

சாரியை

இதில், மடத்துப் பையன், மடப்பையன் என்னும் இரண்டும் பொருள் வேறுபாடு உடையவை. இங்கு அத்துச் சாரியை மடம் என்பதன் பொருளை மதம்சார் மடம் என நிலை நிறுத்தியுள்ளது. இவ்வாறு சாரியை சொல்லின் பொருளை வேறுபடுத்துகிறது. சாரியைகளுக்கும் மொழிச் செயல்பாட்டில் முக்கிய இடம் உண்டு. இந்த முக்கியத்துவத்தை வெளிப்படுத்த வேண்டியதும் உரை நெறியே.

வெள்ளம் குளிரும் சடை முடியோன்
…தெள்ளம் குளிர் இன் அமுதே (பா – 1419)

இப்பாட்டுக்கு ஔவையின் உரை. "தெள்ளம், அம், அல்வழிக்கண் வந்த சாரியை. தெள்ளம் புனல். (கோவை 379). அமுதம் அளிக்கும் செவ்வாய் என இயையும்" என உரை கூறுகிறார். திருக்கோவையாரில் வந்த மேற்கோளைக் காட்டுவதுடன், வேற்றுமை அல்லாத வழியில் '**தெள்ளம்**' என்பதில் '**அம்**' சாரியையாய் இயைந்துள்ளது என்தனைத் தமது ஆழ்ந்து இலக்கிய இலக்கணப் புலமையால் சுட்டி எழுதியுள்ளார். '**ஒப்புரை**' என்னும் அளவில் கோவையாரிலும்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

அருட்பாவிலும் தெள்ளம் என்னும் சொல் பயின்று வந்துள்ளதனை அவர் எடுத்துக் காட்டும் திறம் அறிவதற்குரியது" (துரைசாமிப்பிள்ளை சு.ஔவை ப.99)

"பாடல் 1595இல் கொன்றையம் தார் என்னும் தொடரில் உள்ள அம்முச் சாரியையும் பாடல் 948இல் தனிய மெய்ப்போத என்னும் தொடரில் எதுகை நோக்கித் தனி – அ என அகரச் சாரியை பெற்று வந்துள்ளதனையும் குறிப்பிட்டுள்ளார்" (துரைசாமிப்பிள்ளை சு.ஔவை ப.188)

பல்வேறு நிலைகளில் பல்வேறு இலக்கணக் குறிப்புகள்

ஔவை. துரைசாமிபிள்ளை தமது பழுத்த பலமைத் திறத்தால் விதவிதமான நிலைகளில் பல்வேறு இலக்கணக் குறிப்புகளைத் தம் உரை முழுவதும் விரவி வருமாறு எழுதியுள்ளார். பாடல் எண் 15 "**சற்றையகல்**" சென்னை, சற்று – சிறிது, ஐ யீறு பெற்றுச் சற்றை என வந்தது. "சிறிது எனக் கூற முடியாத சென்னை என்னும் பொருளில்" (துரைசாமிப்பிள்ளை சு.ஔவை ப.205) பாடல் எண் 16 தடமேவு சென்னை – "**பெருமை பொருந்திய சென்னை**" தட – பெருமை (உரிச்சொல் நோக்கில் உரை அமைந்தது)" (துரைசாமிப்பிள்ளை சு.ஔவை ப.714) பாடல் எண் 101 "**அண்ணாவே, நின்னடியே**", அண்ணா, முறைப்பெயர் அன்று, தலைவன் என்று பொருள்படும்" (திருவருட்பா ப.170)

யாப்பு நோக்கில், 'கும்மி' இலக்கணக் கூறு

சண்முகர் கொம்மி என்பது திருவருட்பாவில் ஒரு பதிகம், இசைத்தமிழ்ப் பதிகம் ஆகும். சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லார் இதனைக் '**கும்மை**' என்பார். பின் இக்கும்மை, கொம்மை கும்மி, கொம்மி – என ஆனது என்கிறார் ஔவை. துரைசாமிப்பிள்ளை. வரிப்பாட்டு வகையுள் ஒன்றான இதற்கு இயற்றமிழ்ச் செய்யுள் இலக்கணம் கொண்டு முறை செய்ததற்கு இடமில்லை. எழுசீர்க் கழிநெடில இரண்டு கொண்டு, மூன்றாம் சீர்க்கும் நான்காம் சீர்க்கும் இடையே ஓரசையும் ஈரசையும் பெற்ற தனிச்சீர் பெய்து அடிதோறும் ஈற்றுச்சீர் ஒன்றிவரத் தொடுப்பது இதற்கு இயல்பு போல அமையும். எனக் '**கும்மிக்கும்**' இலக்கணம் கூறுகிறார் ஔவை, சு.துரைசாமிப்பிள்ளை.

குறவர் குடிசை நுழைத்தாண்டி அந்தக்
கோமாட்டி எச்சில் விழைந்தாண்டி!
துறவர் வணங்கும் புகழாண்டி – அவன்
தோற்றத்தைப் பாடி அடியுங்கடி (பா.523)

தமிழிலக்கிய உலகில் '**கும்மி**' பற்றிய அனைத்துச் செய்திகளையும் விளக்கி, இசைத்திழ்க் கும்மிப்பாட்டுக்கும், இயற்றமிழ் நோக்கில் ஒருவகையான இலக்கணம் கூறியுள்ள ஔவையின் உரைத்திறன் ஆழமானது, என்று நம்மால் அவர் உரையின் மூலம் நன்கு அறியலாம்.

"வள்ளற்பெருமான் பாடிய இந்த இசைத்தமிழ்க் கும்மிக்கு இயற்றமிழ் நோக்கில் எழுசீர் கொண்ட இரண்டு கழிநெடிலடி என யாப்புக் குறிப்புத் தந்துள்ளார் ஔவை. இவற்றில்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

மூன்றாம் சீர்க்கும் நான்காம் சீர்க்கும் இடையே '**அந்தக்**' , '**அவன்**'என்னும் ஈரசை, ஓரசைச் சொற்களைப் பெற்று உள்ளமையை" (துரைசாமிப்பிள்ளை சு.ஔவை ப.60) நம்மால் காணமுடிகிறது.

அணி இலக்கணம் கூறு

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணத்தையும் மரபாய்ப் பாட்டெழுதுகின்றவரும் அறிந்து பாடுவர். அதற்கு உரை எழுதுகின்றவரும் அறிந்து எழுதுவர். தாம் எழுதிய திருவருட்பா உரையில் தமது சாத்திர அறிவுத்திறத்தையே பெரிதும் காட்டி உரை வரைந்த ஔவை சில இடங்களில் மட்டும் பாட்டுக்கான அணிக்குறிப்பையும் தந்து செல்கின்றார். என்பதை, அறியலாம்.

பன்னிருகண் மலர்ந்த கடலே! ஞானப்
பரம்சுடரே! ஆறுமுகம் படைத்த கோவே! (பா.459)

என்னும் திருவருட்பாப் பாடல் உரையில், "கடலில் மலர்கள் மலர்வதில்லை, ஆதலால், மலர் மலர்ந்த கடலே! என்பது அபுதவணி" (துரைசாமிப்பிள்ளை சு.ஔவை ப.60-61) என்பார், என்று உரையில் கூறுகிறார்.

அக்கரச் சுதகம் என்னும் அணி இலக்கணம்

வயலார் சோலை எழுல்ஒற்றி
வாண ராகும் இவர்தமைநான்
செயலார் அடியார்க் கருள் வீர்நும்
சிரத்தும் உரத்தும் திகழ்கரத்தும்
வியலாய்க் கொண்டது என்னென்றேன்
விளங்கும் பிநாகம் அவை மூன்றும்
இயலாற் காண்டி என்கின்றார்
இதுதான் சேடி என்னேடி (பா.1814)

இங்கிதமாலையில் வரும் இந்தப் பாட்டுக்கு அரிய அணியிலக்கண விளக்கம் தந்து உரை எழுதியுள்ளார் ஔவை. இத்தகைய அணி இலக்கண விளக்க உரை மட்டும் இல்லை என்றால், இந்தப் பாடலைப் புரிந்துகொள்ள கடினமாக இருந்துருக்கும். அவற்றை, மிக எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் ஒரு அணி இலக்கணத்தையும் வகுத்துக் கொடுத்துருக்கார் என்பதை, நம்மால் காணப்படுகிறது. "அடியவர்க்கு அருள்புரியும் இறைவனிடம், "உம்முடைய சிரத்திலும், மார்பிலும், கையிலும் பெருமையாகக் கொண்டது யாது", எனத் தலைவி வினவினாளாம், 'மூன்றிலும் பிநாகம் அமைந்து விளக்கும், அதனைப் பிநாகம் என்னும் சொல் நின்ற இயல் வகையிற் காண்க'எனச் சொல்லுகின்றார். இதன் பொருள்தான் என்னேடி? சேடி! எனக் கேட்பதாக அமைந்துள்ள இந்தப் பாட்டில் '**அக்கரச் சுதகம்**' என்னும் அணி அமைந்துள்ளது" (துரைசாமிப்பிள்ளை சு.ஔவை ப.60-61) இதையே ஔவை உரையில்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

எவ்வாறு குறிப்பிட்டுள்ளார் என்பதை, பின்வருமாறு காணலாம். “சிரம் – தலை, உரம் – மார்பு, கரம் – கை, மூன்றனிடத்தும் பிநாகம்... இது கரத்தில் பிநாகம், “உரத்தில் நாகம்”, சிரத்தில் “கம்” என ஒரு சொல்லின் எழுத்தைக் குறைந்து வேறுபொருள் படப்பாடும் அக்கரம் சுதகம் என்னும் இலக்கணம் அமைந்த சித்திர கவி. அதனாற்றான், ‘இயலார் காண்டி’ எனச் சொல்லுகின்றார். இயல் – இலக்கணம். கையில் பிநாகம் என்னும் வில், மார்பில் பாம்பாகி நாகம், சிரத்தில், கம் எனப்படும் தலை, பிரமகபாலம். இஃது அக்கரம் சுதகம்” (துரைசாமிப்பிள்ளை சு.ஔவை ப.60 - 61) இதனை, மாறனலங்காரம் எவ்வாறு குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். இந்த அக்கரம் சுதகம் என்பதை,

ஒரு பொருள் பயந்த ஒருதொடர் மொழியாய்
வருவதை ஓரெழுத்தாய்க் குறை வகுப்பின்
சுருங்குபு பலபொருள் தோன்று வதாய
அருங்கவி அக்கரச் சுதக மாகும் (மாறனலங்காரம், சொல்அணி 26).

என விரிவான, “மாறனலங்கார மேற்கோளைக் காட்டி வரைந்துள்ள உரைப்பகுதி, அணி இலக்கண விளக்கப் பகுதியாய் அமைந்து, சான்றையும் இலக்கண உரையையும், பாங்குறப் பொருத்திக் காட்டிப் படிப்பவருக்கு இலக்கணத் தெளிவை ஏற்படுத்துவதாய் உள்ளது. வள்ளற்பெருமானின் அக்கரச் சுதக அணி இலக்கண அறிவு, அகப்பொருள் துறைசார்ந்த இந்தப் பாடலுக்குள் விளங்குவதனை ஔவை தமது மாறனலங்கார அணி இலக்கண அறிவை உறழ்ந்து காட்டிப் பொருள் தந்திருப்பது உரைநெறி காட்டும் பதிப்புநெறியாக விளங்குகிறது” (துரைசாமிப்பிள்ளை சு.ஔவை ப.60-61)

முடிவுரை

திருஅருட்பாவின் ஆறு திருமுறைகளும் வெளிவந்துள்ள பதிப்புகளும், பதிப்பு ஆசிரியர்களையும் பார்த்தோம். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியீட்ட ஆறு திருமுறைகளையும் உரைப் பதிப்பாக முதல் முதலில் வெளியிட்டவர் ஔவை சு.துரைசமிப்பிள்ளை என்பதையும், இவர் ஊரன் அடிகள் பதிப்பை தழுவி உரை வரைந்துள்ளார் என்பதையும் தெளிவாக எடுத்துரைப்பதை அறிந்தோம். பின்பு, ஆறுதிருமுறையின் உள்ள சில பாடல்களில் அமைந்த வழக்குச் சொற்கள், அசைநிலை, போலி, சாரியை, அணி, யாப்பு போன்ற இலக்கணக் குறிப்புகளை அவர் உரைப் பதிப்பில் மூலம் எளிதில் புரிந்துக் கொள்ளும் வகையில் எடுத்துரைப்பதையும், நம்மால் இவ்வாய்வுகட்டுரை மூலம் நன்கு ஆராய்ந்து அறியமுடிகிறது.

துணைநூற்பட்டியல்

[1] துரைசாமிப்பிள்ளை சு.ஔவை., அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு., வர்த்தமானன்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

பதிப்பகம், 21 இராமகிருஷ்ணா தெரு, தியாகராய நகர், சென்னை 600017. ஆண்டு 2013,

[2] பாண்டுரங்கன் இராம., திருவருட்பா பதிப்புச் சோலை, ஐந்திண வெளியீட்டகம், மந்தக்கரை, விழுப்புரம் – 605602. ஆண்டு 2017.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

கௌசல்யா & கண்ணன். “திருவருட்பாவின் இலக்கணக் குறிப்பும் ஔவை சு.துரைசாமிப்பிள்ளை உரைப்பதிப்பும்.” *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 1, *திசம்பர்* 2020, பக். 153-161. டிஒஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.024**

Cite this Article in English (*MLA 8 Style*) as:

Gowsalya & T.Kannan. “Grammatical Scrutiny of “Tiruvarutpa” and the Edition of Auvai Su. Duraisamy Pillai’s Commentary.” *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020, pp. 153-161. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.024**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /NIL

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இல்லை /NIL

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

கல்லாடரின் உரைத்திறன்

The Textual Expertise of Kalladar

முனைவர். தெ.சந்திரா, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, வ.உ.சிதம்பரம் கல்லூரி, தூத்துக்குடி.
Dr.T.Chandra, Assistant Professor, Department of Tamil, V.O.Chidambaram College, Tuticorin – 8
ORCiD: https://orcid.org/0000-0002-7863-2791
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.025

Abstract

In the arena of Tamil textual commentaries, Kalladar's commentary is vital in Tamil academic studies. The textual explanation composed by Kalladar for "Tolkāppiyam" is in a peculiar perspective. It contains poetry, explanation of poetry, paraphrase, "ilesu vilakam", examples and the uses of poetry to understand and inculcate "Tolkāppiyam". His book also stands out to excellent merit by allotting examples even for grammar (ilesu). He also gives extra preference to logic and the formula (suthirathar) which can be seen in the text in an exemplanary manner. Hence, this article delineates the textual expertise of Kalladar.

Keywords: Textual Expertise, Kalladar, "Tolkāppiyam", "ilesu vilakam",

முன்னுரை

ஒல்காப் புகழ் தொல்காப்பியத்திற்கும், திருக்குறளுக்கும் மட்டுமே உரை கண்டுள்ளார். இவர் காலத்தால் பிற்பட்டவர் என்பதால் பிற உரையாசிரியர்களிடமிருந்து மேற்கோள்களைச் சுட்டிக் காட்டுகிறார். மறுத்துரைத்தலும் இவரது உரையில் ஒரு சில இடங்களில் உள்ளது. அக்கல்லாடரின் உரைத்திறனை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

உரைத்திறன் போக்கு வகைப்படுத்திக் கூறுதல் இலக்கண உரையாசிரியர்களுக்கு இன்றியமையாததொன்று. இந்நெறியால் இலக்கணம் எளிமையும் தெளிவும் பெறும். இத்தகைய முறை கல்லாரிடம் நிரம்பவும் காணப்படுகிறது. "வழு அமையும் வழு, அமையா வழு (நூற் 13) என்றும் வழவமைதியை கூறும் வழுவமைதி (நூஇ12 உரை) என்றும் மரூஉ வழக்கைச் சொல் சிதைய வருவன, பாடுபொருள் சிதைய வருவன (நூ.17 உரை) என்றும், ஐயத்தைக் கண்ட வழி ஐயம், காணாவழி ஐயம் என்றும் காணப்படுகிற வகைபாடுகள் இலக்கணத்தை எளிமைப்படுத்த வல்லனவாய் உள்ளன. வேற்றுமை மயக்கத்தை இருபது வகைகளாக்கிக் (நூற்.86 உரை) கூறுவதனாலேயே கல்லாடரது உரைத்திறன் போற்றுதலுக்குரியதாக அமைகிறது"(அரவிந்தன்.மு.வை, உரையாசிரியர்கள், ப.178)

சொல் விளக்கம் தருதல்

முந்தைய உரையாசிரியர்கள் கூறிய சொல் விளக்கங்களை எளிமைப்படுத்துவதும் அரிய சொற்களுக்கு விளக்கம் கூறுவதும் இவரிடம் சிறப்பாகக் காணப்படுகின்றன.

சான்றாக,

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

செயப்படு பொருளாவது வினை முதற்

றொழிற் பயனுறுவது **(தொல். சொல் - நூ.71)**

கூறுவர். அதனைச் செயல்படு பொருளாவது,

ஒருவன் செய்யும் தொழிலினைத்

தானுறுவது **(தொல். சொல். 73)**

பிறரிடம் இல்லாத உரைத்தெளிவு இவரிடம் காணப்படுகிறது. பிறர் பொருள் கூறாது விடுத்துச் சொற்களுக்குப் பொருள் கூறி விளக்கம் தருகின்றார். சான்றாக, 'மா நோக்கம்' என்று முன் உரைகாரர் கூறிய சொல்லுக்கு 'இவர் கொற்கை சூழ்ந்த நாடு' என்று விளக்கம் தருகின்றார்.

வழக்குச் சொற்களை எடுத்தாளுதல்

கல்லாடர் தம் உரையில் அக்காலத்து மக்கள் பேசிய முறையைப் பல இடங்களில் குறிப்பிடுகின்றார்.

பசுப் போல்வானைப் பசு என்ப (தொல். வேற். வகை. 120)

அவர்க்குச் செல்லுறு காணட் அவர்க்குக்

கொடுக்குகாணம் (தொல். கிளவி. 30)

அவருண்ணும் சோறு (தொல். வினை. 237)

கண்போலச் சிறந்தாரைக் கண்கணன்றலும் (தொல். கிளவி. 57)

இவ்வாறு நீர் ஒழுகும், இவ்வயல் நெல்விளையும் (தொல்.வேற்.67)

வாய்க்காலைச் சாடும்

சோற்றைக் குழைத்தான்

அரிசியை அளக்கும்

பொன்னை நிறுக்கும் (தொல். சொல். வேற். 72, 73)

ஊரில் தீர்த்தாள்

ஊர்க்குத் தீர்த்தான் (தொல். சொல். வேற். 112)

மகன் - மகனே

மருமகன் – மருமகனே (தொல். சொல். விளி.139)

காலபூகி வீழ்ந்தான் (தொல். சொல். வினை. 233)

நம்பிக்கைகள்

இவரது உரையில் அக்கால மக்களிடம் காணப்படும் நம்பிக்கைகளைக் குறித்த பல செய்திகள் இடம் பெறுகின்றன.

இறைவன் அருளால் எம் உயிர் காக்கும்

இறைவன் அருளலின் யாம் உயிர் வாழ்தும் (தொல்.சொல்.வேற்.67)

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

பார்ப்பான் கள்ளுண்ணான; (தொல். பெய. 164)

மழை பெய்யிய மாதவர் அருளினார்

மழை பெய்யியர் மாதவர் அருளினால்

மழை பெயிற்கு மாதவர் அருளினார்" [(2)] (கல்லாடர் (உ.ஆ.,) தொல்.வினை.நுற்பா. 234)

'எறும்பு முட்டை கொண்டு தெற்றியேறின் மழை பெய்தல் நூலாற்றெளிந்தான், அவை முட்டை கொண்டு தெற்றியேறிய வழி, மழை பெய்யா முன்னும், மழை பெய்தது, மழை பெய்யும் (தொல். சொல். வினை. 247) என்றும் தம் காலத்து மக்களின் நம்பிக்கைகளை எடுத்தாளுகின்றார்.

பழமொழிகள்

இவரது உரையில் அக்கால மக்களின் பேச்சு வழக்குகளில் காணப்படும் பழமொழிகள் இடம் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக,

உண்பவை நாழி உடுப்பவை இரண்டு (தொல். சொல். வேற். 71)

நூலோடு நார் இயைந்தது போலும், முத்தொடு

பவலும் கோத்தது போலும் (தொல். சொல், வேற். 74, 75)

இளமையும் தருவதோ இறந்த பின்னே (தொல். சொல். வினை. 231)

தவஞ்செய்தான் சுவர்க்கம் புகும்,

தாயைக் கொன்றான் நிரயம் புகும்; (தொல். சொல். வினை)

போன்ற பழமொழிகள் குறிப்பிடப்படுகின்றன.

உரை பண்புகள்

'தெரியாதனவற்றைத் தெரியாது' என்று கூறுவதாகிய சிறந்த பண்பு கல்லாடரிடம் பெரிதும் காணப்படுகின்றது. 'பிரிது காரணம் உண்டாயினும் அறிந்திலம்' (தொல். சொல். நூற். 222)

ஒகலி வீற்று விரவுப் பெயர் கண்டதில்லை

ரகார iகார ஈறாய் வரும் விரவுப்பெயர்

கண்டதில்லை.(தொல். சொல். 153)

போன்ற உரைகளால் அறியலாம்.

இவர் இரண்டு வகையாக இலக்கணம் கூறி, இரண்டனுள் நல்லது தெரிந்துரைக்க (தொல். சொல். நூற். 210) என்பதும், ஒரு காரணத்தைக் கூறி "பிறிது காரணம் உண்டாயினும் அறிந்திலம்" (தொல். சொல். நூற். 222) என்பதும் ஐயமுற்ற இடங்களில் 'வராது போலும்' எனப் போலும் வாய்ப்பாட்டால் கூறுவதும் இவரின் சால்பினை பறை சாற்றுவதாக அமைகின்றன.

உரை வகைமைகள்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

கல்லாடரின் வகைமைப்பாடுகள் தெளிவு உடையதாக அமைந்துள்ளன. நூற்பா, நூற்பா விளக்கம், பொழிப்புரை, இலேசு விளக்கம், எடுத்துக்காட்டி நூற்பாபாடல் என்ற வகையில் இவ்வுரை அமைந்துள்ளன.

1. இலேசால் பெறப்டுகின்ற விளக்கத்திற்கும் உரிய எடுத்துக்காட்டுகளைத் தருதல் இவரிடத்தில் காணப்படுகிறது. இலேசு என்றச் சொல்லிற்கு இதுவரை எந்த இலக்கண உரையாசிரியர்களும் தம் இலக்கண உரையில் கூறவில்லை. 'இலேசு என்பது யந்து கூறுதல் குறிப்பில் வெளிப்படுகிறது. (தொல். நூற்.231) என்பது உரையின் வடிவமாக காணப்படுகிறது"[3]

2. வகைமைப்படுத்திக் கூறுதல் இலக்கண உரையாசிரியரின் தனிச்சிறப்புக்களுள் ஒன்றாகும். இச்சிறப்பால் இலக்கணம் இயம்புவதில் எளிமையையம் தெளிவினையும் அடையலாம். இத்தகைய முறை கல்லாரிடம் மிகவும் காணப்படுகின்றது. மரூஉ வழக்குச் சொல்லை சிதைய வருவன, படுபொருள் சிதைய வருவன (தொல். நூற்பா.12) ஐயத்தை கண்ட வழி ஐயம், காணாவழி ஐயம் என்றும் வகைமைப்படுத்திக் கூறும் போக்கு இலக்கணம் கற்பித்தலை எளிமையாக்குகின்றன.

3. முந்தைய உரையாசிரியர்களிடமிருந்து கூறிய சொல் விளக்கங்களை எளிமைப்படுத்திக் கூறுவதும் அரியச் சொற்களுக்கு விளக்கம் கூறுவதும் இவரிடம் சிறப்பாகக் காணப்படுகின்றன.

எ.கா: 'செய்யப்படுபொருளாவது வினை முதற்தொழில் பயனுறுவது' என்று சேனாவரையர் (தொல். நூற்பா. 71) கூறியிருக்கும் உரையினை இவர் செய்யப்படும் பொருளாவது 'கருவன் செய்யும் தொழிலினை கானுறுவது' (தொல். நூற்.73) என்று எளிமைப்படுத்திக் கூறியுள்ளார்.

4. பிற உரையாசிரியர்களிடம் இல்லாத உரைத் தெளிவு இவரிடம் காணப்படுகிறது. அதாவது பிறர் பொருள் கூறாது விடுத்த சொற்களுக்குப் பொருள் விளக்கம் தருதலைக் கொண்டு உணர முடிகிறது.

எ.கா. "மா றோக்கம்" என்று முன் உரையாசிரியர் கூறியச் சொல்லுக்குச் "கொற்கை சூழ்ந்த நாடு" (தொல். நூற். 167) என்று விளக்கம் தருகிறார். அச் சொல் மாறோகம் என்றும் அழைக்கப்படுகிறது. பாண்டிய நாட்டில் கொற்கையைச் சூழ்ந்த பகுதி என்று பொருள்படும்.

5. ஒரு உரையாசிரியரின் உரைத்திறன் சொல்லாராய்ச்சியோடு பொருளாராய்ச்சியும் செய்வது தான். இக்கருத்தைக் கல்லாடரில் "பொருளாராய்சியும் இச்சொல்வாராய்சிக்குப் பயன்படும் நிலைமைத் தக்கலாறும் அமையும்' (தொல். நூற். 191) என்று உரை விளக்கத்தின் மூலம் தெளிவுபடுத்துகின்றார்.

6. "உரையிற் கோடல்" என்று கல்லாடர் தரும் விளக்கம் நவீனத்துடன் காணப்படுகின்றது. காலம் - சாத்தனது கலம் - கலம் என்பதனை ஒன்றிக் கலத்தின் மேற்கொள்க. பிறகலத்தின்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

மேற்கொள்ளாமைக் காரணம் என்னை எனின் இஃதொடு பொருள் இவர்க்குடையாக நிற்கும் வேறுபட்ட தாகலின் என்க' என்று கூறுகிறார்" (இளங்குமரன்.இரா,இலக்கண வரலாறு, ப.180) 7. காடன் நாடன் என்பவற்றுக் "கநொடி" எனப் பெண்பால் கூறுவதும் (நூற். 177) உரை 'உழுது கிழது' (தொல். நூற்பா. 235) என்றும் நன்னூலார் இயம்பும் 'இடைப்பிறவரலை' இடைக்கிடப்பு என்று கூறியிருப்பதும் புதுமையானதாகும்.

கல்லாடரின் தனித்துவம்

இவரது உரை இளம் பூரணர், நச்சினார்கினியர் உரைகளைத் தழுவிச் செல்வது ஆதலின் நடையம் அவர்தம் நடையையே ஓட்டிக் செல்கின்றது. அவர்கள் உரையை பல்வெறு இடங்களில் தழுவிச் செல்லினும் அவ்விருவர் தம் உரையிலும், சேனாவரையர் உரையிலும் காணப்படாத பல புதிய ஆய்வுரைகளும் விளக்கங்களும் இவர் உரையில் உள்ளன. எடுத்துக்காட்டாக, "செய்யும் வினாவும் விழா அல் ஒம்பல்" (தொல்.சொல்.கிளவி.13) என்னும் நூற்பாவில் விழா அல் என்பதன் சொல் முடிவினை விளக்கும் போல 'விழா அல்' என்பது வழவியென்னுஞ் செய்தென் எச்சத்து எதிர்மறையாகிய வழாமல் என்னுஞ் செயல் ,குறைக்கும் வழிக்குறைத்தல் என்பதனால் இடைநின்ற மகரம் குறைந்து நின்றதென உணர்க என்றும் ,இந்நூற்பாவில் 'உற்றுரைத்தல் உறுவது கூறல்" என்று மட்டும் பிறர் கூற அதுவும் உற்றுரைத்தலுள் அடங்கும் என்கிறார்.

முடிவுரை

உரையாசிரியர்களால் மூலநூல்களை எளிதாக அறிந்து கொள்ளமுடிகிறது. கல்லாடரின் உரைத்திறனில் வகைப்படுத்துதல் என்னும் புதுவகையான உத்தியை பயன்படுத்தியுள்ளார். இவரது உரைபண்புகளில் 'பின்வருவழி அறிக' என்று கூறுகிறார். இவரது காலத்தில் வாழ்ந்த மக்களிடையே பின்பற்றப்பட்ட பழமொழிகள், அக்காலத்து மக்களிடம் காணப்பட்ட நம்பிக்கை, பண்பாடு சார்ந்த கூறுகளை உரையில் காணலாம். மேலும் 'வகைப்படுத்திக் கூறுதல்'புதிய ஆய்வுக்கு முயற்சியாக அமைந்துள்ளது.

துணைநூற்பட்டியல்

[1] அழகேசன்.சு. *தொல்காப்பியம்.* சுதாபதிப்பகம், தூத்துக்குடி, 2008.
[2] இளங்குமரன்.இரா. *இலக்கண வரலாறு*, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2009.
[3] இளம்பூரணர் (உ.ஆ.,). *தொல்காப்பியம்*, சொல்லதிகாரம், கழகப் பதிப்பு, சென்னை, 1998.
[4] கல்லாடர் (உ.ஆ.,). *தொல்காப்பியம்,* சோல்லாதிகாரம், கழகப் பதிப்பு, சென்னை, 1964.
[5] அரவிந்தன் .மு.வை. *உரையாசிரியர்க்ள்*, மணிவாசகர் பதிப்பகம், சென்னை,1995.
[6] மோகன்.இரா. *உரை மரபுகள்.* மணிவாசகர் பதிப்பகம், சென்னை,1985.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

சந்திரா. "கல்லாடரின் உரைத்திறன்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 1, *திசம்பர்* 2020, பக். 162-167. டிஒஐ:**10.38067/ijtlls.2020.spl.v03i02v1.025**

Cite this Article in English (*MLA 8 Style*) as:

Chandra,. "The Textual Expertise of Kalladar." *International Journal of Tamil Language and Literary Studies,* Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020, pp. 162-167. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.025**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /NIL

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இல்லை /NIL

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

ந.மு.வேங்கடசாமி நாட்டாரின் சிலப்பதிகார உரைத்திறன்

The Textual Explanatory Skill of Venkataswami Nattar's "Silapathigaram"

முனைவர் து.சிவசித்ரா, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி , மதுரை.
Dr.D.Sivachitra. Assistant Professor, Tamil department, Mannar, thirumalai Naicker College, Madurai.
ORCiD: https://orcid.org/0000-0002-8343-524X
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.026

Abstract

Naduk Carvery Muthu Swami Venkataswami Nattar lived in the early period of 19th centurie. He was a great Tamil orator and Research Scholar. It is claimed that Mr.Bharathiyar in 1912 visited his house and cleared his doubts in the Tamil classical work "Silapathikaram" and "Tholkappiyam". Through his spell we shall find many rare Information regarding multi-features of Ancient Tamil community. "Silapathikaram", one of the famous of three epics and the explanatory notes of Venkataswami Nattar are considered very rare with rich literary elements for its valuable facts. His Notes contain native Tamil vocabularies by rejecting imported words that did not exist in native language through his descriptions; he adds contemporary phrases, traditional words, and spoken Terms of Tamil language. So, the article decodes the supreme explanatory skills of Venkataswami Nattar's about "Silapathigaram"

Keywords: Textual Explanatory Skill, Venkataswami Nattar, "Silapathigaram"

முன்னுரை

தமிழ்த்தாய்க்கு சிலம்பு பூட்டி அழகு பார்த்தவர் இளங்கோவடிகள். அவர் இயற்றிய சிலம்புக்கு உரை என்னும் அலங்காரம் செய்து அழகு பார்த்தார்கள் பலர். இளங்கோவடிகள் செய்த காப்பியமே உரைநடைக்காப்பியம் தான். அக்காப்பியத்திற்கு உரையளித்தவர்களில் இருந்து வேறுபடுகிறார் ந.மு.வேங்கிடசாமி நாட்டார் அவர்கள். சிலப்பதிகாரத்திற்கு இவர் இயற்றிய உரையில் தேவையான இடங்களில் திருக்குறள், சங்க இலக்கியங்கள், நிகண்டுகள் ஆகியவற்றில் இருந்து மேற்கோள்கள் காட்டுகின்றார். இதன் மூலம் இலக்கியப்புலமை உடையவர் என்பதனை அறியமுடிகிறது. உரைகள் உரை உரை சொல்லும் போக்கில் ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்திறன் உண்டு. அந்தவகையில் இக்கட்டுரையில் உரையாசிரியர் ந.மு.வேங்கிடசாமி நாட்டாரின் சிலப்பதிகார உரைச்சிறப்புகளை இக்கட்டுரையில் காணலாம் காணலாம்.

ந.மு.வேங்கிடசாமி நாட்டார்

இவரது காலம் 1884 முதல் 1944 வரை. தமிழ்நூல்கள் பலவற்றிற்கு உரை தந்து உரையாசிரியர்களின் பெயர் வரிசையில் சிறப்பிக்கப் படுகின்றார். நா.மு.வேங்கிடசாமி நாட்டார்அவர்கள் 1942 ஆம் ஆண்டு சிலப்பதிகாரத்திற்கு உரை இயற்றி வெளியிட்டார். இவ்வரிய பணிச் சிறக்க இவருக்கு உதவியவர் தமிழ்ப்பற்றுடையாளர்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

வெ.பெரி.பழ.மு.காசிவிசுவநாதன் செட்டியாரவர்கள். சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லாரும், அரும்பத உரைகாரரும் உரை இயற்றியிருந்தாலும் வேங்கிடசாமி நாட்டாரின் உரையும் மிகச்சிறந்த உரையாகத் திகழ்கிறது. சிலப்பதிகாரத்திற்கான இவரது உரையில் சொல் விளக்கம், பொருள் விளக்கம் ,இலக்கண விளக்கம்,மரபுச்சொல், வழக்குச்சொல்,பிற இலக்கியங்களில் இருந்து எடுத்துக்காட்டுகள், புதிய சொல் விளக்கங்கள், பிற உரையாசிரியர்களின் உரை விளக்கங்கள் ஆகியவற்றைத் தந்து சிலம்பின் சிறப்புகளை வெளிப்படுத்துகிறது.

சிலப்பதிகார உரைச்சிறப்பு

உரையாசிரியர்களிடம் உள்ள சிறப்பு எல்லோருக்கும் இலக்கியத்தின் அல்லது படைப்பின் நோக்கம் போய்ச்சேர வேண்டும் என்பதுதான்.அந்த நோக்கத்திலேயே வேங்கிடசாமி நாட்டாரின் உரை இருக்கின்றது. சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்குநல்லாரின் உரை சிறப்புடையது என்பதனை அனைவரும் அறிவர். அடியார்க்கு நல்லாரின் உரை எவ்வாறு போற்றப்பட்டதோ அதுபோல தமிழறிஞர்கள் மத்தியிலும் ந.மு.வேங்கிடசாமி நாட்டாரின் உரை சிறப்பிக்கப்படுகிறது.

சிலப்பதிகார மங்கல வாழ்த்துக்காதையில் மங்கலம் என்பதற்கு **'கலியாணம்'**[1] (சில.பக்.34) எனக் கூறுகிறார். விவாகம் அல்லது திருமணத்தைக் கல்லாமாந்தரின் பேச்சில் கலியாணம் என்றுக் குறிப்பிடுகிறார். **'உயிர் மருந்து'**[2] (சில.பக்.66) என்பதனை மிருதசஞ்சீவி என்று குறிப்பிடுகிறார். மறையோர் என்போர் நன்கு கற்றுத் தேர்ந்தவர்கள். மறையோர்களை **'பஞ்சக்கிராமிகள்'**[3] (சில.பக்.34) என்று பழையவுரை குறிப்பிடுவதை எடுத்துக்காட்டுகிறார் ந.மு.வேங்கிடசாமிநாட்டார் **'உலவாக்கட்டுரை பல பாராட்டி என்னும் செய்யுள்வரிக்கு தொலையாத கட்டுரை பலவற்றால் நலம் பாராட்டி" யாணம்'**[4] (சில.பக்.67)

ந.மு.வேங்கிடசாமி நாட்டார் சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லார் கூறும் உரைகளில் சில இடங்களில் மறுத்துத் தன் கருத்தை முன் வைக்கிறார். உதாரணமாக **'பாட்டுடைச்செய்யுள்'**[5] (சில.பதி.87) என்னும் செய்யுளடிக்கு உரைப்பாட்டையும் இசைப்பாட்டையுமுடைய என்று பொருள் கூறுகிறார்.இதனை அடியார்க்கு நல்லார் மறுக்கிறார். **"பாட்டுடைச் செய்யுள் என்பது இசைப்பாட்டுகளை இடையே உடைய தொடர்நிலைச் செய்யுள் என்க. உரைப் பாட்டையும் இசைப் பாட்டையுமுடைய என ஈண்டு அடியார்க்கு நல்லார் கூறியது மிகை"** [6] (சில.பக்.34) என்று மறுத்துக் கூறுகிறார்.

இளங்கோவடிகள் காதை என்று பெயர் வைத்ததற்கு காரணம் என்னவாக இருக்கும் என்று பல விதங்களில் ஆய்வுகளையும் கருத்துக்களையும் மேற்கொண்ட தமிழறிஞர்கள் தங்கள் கருத்துக்களைப் பதிவிட்டுள்ளனர். அடியார்க்கு நல்லாரும் வாழ்த்துக்காதையின் பெயர் பொருத்தத்தைக் கூறுகிறார். **"ஆசிரியப்பாவில் வராமல் கொச்சகக் கலியால் வருவதால்,கதையையுடையது காதையா மாதலானும் அவ்வாறு இதிற் கதை நிகழ்ச்சியின்மையானும் வாழ்த்தும் உரையும் பாடலுமாய் வருதலானும் இங்ஙனம் பெயர்**

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

கொடுத்தார் என்று உணர்க என்று கூறுகிறார் அடியார்க்க நல்லார்"[7] (சில.பக்.35) அடியார்க்கு நல்லாரின் இந்த உரையினை வேங்கிடசாமி நாட்டார் மறுக்கின்றார். ஆசிரியப்பாவகையால் வராதது காதை இல்லை என்றால் வாழ்த்துக்காதை என்பது பொருந்தாதது. அதனால் கதை என்பதே காதையாகும் என்கிறார் சிலப்பதிகார உரையாசிரியர்.தொல்காப்பியம் கூறும் எண்வகை மணங்களில் ஒன்று பிரசாபத்தியம்." **பிரசாபதி என்பவன் பிரமன். பிரசாபத்தியம் என்பது தமிழில் ஒப்பு என்று கூறப்படுகிறது. ஒப்பாவது மைத்துனக்கோத்திரத்தான் மகள் வேண்டிச் சென்றால் மறாது கொடுப்பது என்பர்"**[8] (சில.பக்.35) ஒப்பு என்பதற்கு சமமான என்ற பொருளைத் தருகிறது தமிழ் அகராதி. ஆனால் ஒப்பு என்பதற்கு மறுக்காமல் கொடுப்பது என்ற பொருளைத் தருகிறார்.

இலக்கியம் சுவைபட எழுதுவதற்க அலங்காரம் தேவை. அந்த அலங்காரங்களைப் பல இடங்களில் பயன்படுத்தியுள்ளார்.**"வெங்கதிரோனாகிய ஞாயிரும் தண்கதிராகிய திங்களும் இல்பொருளுவமம்"** [9] (சில.பக்.61) .இப்பாடலானது கண்ணுக்குப் புலனாகக் கூடிய புலனாகாத பொருள்களை உவமையாகக் கூறுவது இலக்கிய நடை. ஞாயிறும் திங்களும் புலனாகக் கூடிய பொருள்கள்.ஆனால் அதன் தன்மை உடலால் உணரக்கூடியது. இப்பாடலில் கண்ணுக்குப் புலனாகும் உறுப்புகளைப் பாராட்டியும் கண்ணுக்குப் புலனாகாத உணர்வுகளைப் பாராட்டியும் உரை எழுதிச்செல்லும் பாங்கானது சிறப்பாகும்.

மாதவி ஆடிய பதினோராடல்களைப்பற்றி கூறத்தொடங்கிய உரையாசிரியர் முதற்கண் அவற்றிற்கு முன் பாடப்படும் தேவபாணி பற்றிக் கூறுகிறார். பதினோற் ஆடல்களுக்கும் முகநிலையாகிய தேவபாணியாவது காத்தற் கடவுளாகிய மாயோன் பாணி என்பதாகும். யாழ் இசையைப்பற்றிக் குறிப்பிடும் பொழுது **'பருந்தும் அதன் நிழல்போல யாழ்ப்பாடலும் மிடற்றுப்பாடலும் ஒன்றுபட்டியங்க'**[10] (சில.பக்.98) இருக்க வேண்டும் என்கிறார் உரையாசிரியர். விலங்கினங்கள் தமக்கு துன்பம் தந்தாலன்றி பிற உயிரினங்களுக்கு ஊறு விளைவிக்காது என்பதை தெளிவுப்படுத்துகிறார். **"பாம்பு உறைதலான் கொடிய புற்று எனலுமாம்.கரடி தாம் அகல்தற்குரிய புற்றினையும் அகழா எனவும், புலி தாம் மாறுபடுதற்குரிய மானினத்தோடும் மாறபடா எனவும் கூறினமையின் அவை மக்கட்க்கு ஊறு செய்யா என்பது தானே போதரும். அரவு முதலியன உறுகண் செய்யத்தகுந்தனவாயினும் செய்யா"** [11](சில.பக்.61) என்று உயிரினங்கள் துன்பம் தராது காய்கின்ற கதிர் மட்டுமே துன்பம் தரும் என்கிறார் உரையாசிரியர்.

பாடபேதங்களைச் சுட்டிக்காட்டுதல்

சிலப்பதிகார மூலநூலில் உள்ள பாடபேதங்களை தனது உரையில் சுட்டிக்காட்டுகிறார் உரையாசிரியர். அரங்கேற்றுக்காதையில் "**குரலுக்கு இளி ஐந்தாவதாகலின் அதனைக்கிளை என்னும் பெயரால் கூறினார். அன்றி, இளி என்பதே எழுதுவோராற் கிளை எனத் திரிபுற்ற தெனலுமாம்.அரும்பத உரையாசிரியர் சொற்களை எஞ்சாதெடுத்துப் பொருள் கூறி முடிக்குங் கடப்பாடுடையரல்லர்.மற்று அடியார்க்கு நல்லாரே அங்ஙனம் உரைக்குங்**

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

கடப்பாடுடையரைதரல்லர். மற்று அடியார்க்கு நல்லாரே அங்ஙனம் உரைக்குங் கடப்பாட்டினர் ஆயின், அவர் எக்காரணத்தானோ இசைப்பகுதியில் முன்னவருரைத்தவற்றையே தாமும் உரைத்து, மூலத்திலுள்ள சொற்கள் பலவற்றிற்குப் பொருளும் முடிபும் தெரிக்காது போயினர்" (சில.பக்.107) அதனால் தற்போது இவற்றின் பொருளை அறிந்துகொள்வதில் எழுத்தாளர்களுக்கும் பதிப்பாளர்களக்கும் தடுமாற்றத்தை ஏற்படுத்தி விடுகிறது என்ற செய்தியைச் சொல்லிச் செல்கிறார். முந்தைய பதிப்புகள் சிதைந்து கிடத்தல், மூலபாடம் திருத்தம் பெறாமல் இருத்தல் பாடல் வரிகள் உருச்சிதைந்து இருப்பதையும் தனது உரையில் பல இடங்களில் பதிவு செய்கிறார். இக்குறைகள் எல்லாம் திருத்தப்படாமலேயே நூல்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டுகிறார்.

தொகுப்புரை

- சிலப்பதிகாரத்திற்கு பல உரையாசிரியர்கள் உரை இயற்றியிருந்தாலும் ந.மு.வேங்டசாமி அவர்கள் உரை சிறப்பாகக் கூறப்படுகிறது.
- சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்க நல்லார் உரையே சிறந்தது எனினும் அவரையடுத்து ந.மு.வேங்கிடசாமி நாட்டர் அவர்களின் உரையும் சிறப்புப் பெற்றது.
- உரையின் சிறப்பைக்காட்டுவதற்கு இலக்கண இலக்கியங்களை எடுத்தாளுகிறார்.
- பேச்சு வழக்குச் சொற்களையும் மரபுச் சொற்களையும் தன் காலத்தில் வழங்கிவந்த சொல்லாடல்களையும் உரையிடையே சொல்லிச் செல்கிறார்.
- அடியார்க்கு நல்லாரின் உரையை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் மாறுபடும் இடங்களையும் குறிப்பிடுகிறார்.
- மூலப்பதிப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

பார்வை நூல்கள்

[1] **ந.மு.வேங்கடசாமி நாட்டார். சிலப்பதிகாரம். ராமையா பதிப்பகம், சென்னை.**14.

[2] **டாக்டர் ம.பொ. சிவஞானம். சிலப்பதிகாரம். சென்னை** -600004.

[3] **புலவர் வே.இரா.மாதவன். சிலப்பதிகாரச் சிந்தனைகள். மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.**

[4] **டாக்டர் ம.பொ. சிவஞானம். சிலப்பதிகார யாத்திரை. பூங்கொடி பதிப்பகம், சென்னை.**

[5] **தெ.பொ.மீ. குடிமக்கள் காப்பியம். பாவை பப்ளிகேசன்ஸ், சென்னை,** 6

[6] **புலவர்.பொ.வே.சோமசுந்தரனார். சிலப்பதிகார மூலமும் உரையும். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.**

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

சிவசித்ரா. "ந.மு.வேங்கடசாமி நாட்டாரின் சிலப்பதிகார உரைத்திறன்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 1, *திசம்பர்* 2020, பக். 168-172. டிஓஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.026**

Cite this Article in English (*MLA 8 Style*) as:

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

Sivachitra. "The Textual Explanatory Skill of Venkataswami Nattar's "Silapathigaram"." and Textual Convention ." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020, pp. 168-172. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.026**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /NIL

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இல்லை /NIL

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

ஒப்பியல் நோக்கில் உரையாசிரியர்களின் பெருந்திணைக் கோட்பாடு
Comparative Study of Commentator's Peruntinai Theory

முனைவர் பெ.சுமதி, உதவிப் பேராசிரியர், ஒப்பிலக்கியத் துறை, தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை
Dr.P.Sumathi, Assistant Professor, Department of Comparative Literature, School of Tamil Studies,
Madurai Kamaraj University, Madurai – 21
ORCiD: https://orcid.org/0000-0001-9420-5063
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.027

Abstract

"Tolkappiyam" classifies the life of the people of the Sangam period based on Thinai as Akam and Puram. Kaikkilai, Mullai, Kurinji, Palai, Marutham, Neytal, Peruntinai are mentioned in Akathinai. Conflicts are found between the commentators while defining the Uripporul of Thinai. Peruntinai is divided into four categories. Among these, 'Theruthal olindha kamathu mikuthiram' has been taken for study. Ilampuranar and Naccinarkiniyar had shown Neytal kalippakal as examples for 'Theruthal olindha kamathu mikuthiram'. V.Suba Manikkam says Lust's excessive is Neytal kalippakal. K. P. Aravanan says Neytal kalippakal conveys Neytal Uriporul. N. Selvaraj says that to solve this problem there is no evidence in Sangam Literature but Kathasapthasathi has evidence. As in Sangam Literature, there is no structure of Akam and Puram in Kathasapthasathi. People are not called by their Proper names instead they are called by the Common name. Based on Sangam Literature and Kathasapthasathi, 'Theruthal olindha kamathu mikuthiram' has been taken for investigation and lucid explanations on the contradiction between the Commentators are the chief notion of the study.

Keywords: Tolkappiyam, Akam, Puram, Neytal kalippakal, Uripporul, Kathasapthasathi

முன்னுரை

தொல்காப்பியம் சங்க கால மக்களின் வாழ்க்கையை அகம், புறம் என திணை அடிப்படையில் வகைப்படுத்துகின்றது. அகத்திணை, கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்று குறிப்பிடப்படுகின்றது. திணைக்குரிய உரிப்பொருளை வரையறை செய்யும் நிலையில் உரையாசிரியர்களிடம் முரண்பாடுகள் காணப்படுகின்றன. பெருந்திணைக்கு நான்கு துறைகள் வகுக்கப்படுகின்றன. அவற்றில் தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம் மட்டும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறத்திற்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர் நெய்தல் கலிப்பாடல்களை சான்று காட்டுகின்றனர். வ.சுப.மாணிக்கம் காமத்தின் மிகுதி நெய்தல் கலிப்பாக்கள் என்று கூறுகின்றார். க.ப.அறவாணன் நெய்தல் கலிப்பாக்கள் நெய்தல் உரிப்பொருளை உணர்த்துகின்றன என்று கூறுகின்றார். இந்தச் சிக்கல்களைக் களைவதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் இல்லை. ஆனால் காதாசப்தசதியில் உண்டு என்று சிலம்பு நா.செல்வராசு கூறுகின்றார். சங்க

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

இலக்கியம் போன்று காதாசப்தசதியில் அகம், புறம் கட்டமைப்பு இல்லை. ஆனால் மக்கள் இயற்பெயரால் அழைக்கப் பெறாமல் பொதுப் பெயரால் அழைக்கப் பெறும் தன்மை காணப்படுகின்றது. அதனடிப்படையில் சங்க இலக்கியம், காதாசப்தசதியில் தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம் மட்டும் எடுத்துக்கொள்ளப்பட்டு உரையாசிரியர்களிடையே உள்ள முரண்பாடுகள் ஆராயப்பட்டுள்ளன.

பெருந்திணைப் பெயர்க் காரணம்

இளம்பூரணர் பெருந்திணைப் பற்றி

கைக்கிளை முதலா பெருந்திணை இறுவாய்

முற்படக் கிளந்த எழுதினை என்ப (தொ.பொ.1)

முற்படக் கிளந்த எழுதிணை கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுதிய எனினும் இழுக்காது. முற்படக் கிளந்த என்றமையான் அவை ஏழும் அகப்பொருள் என்று கூறினாருமாம் அகம், புறம் எனப் பொருளை வரையறுத்தல் இவர் கருத்தாகலின். அன்னதாதல்.

அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்

புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின் (புறத்.1)

என்பதனாற் கொள்க. முற்படக் கிளந்த எழுதிணை எனவே பிற்படக் கிளக்கப்படுவன எழுதிணை உள என்பது பெறுதும்;." (இளம்பூரணர், (உ.ஆ) தொல்காப்பியம், பொருளதிகாரம், 1977, ப.5)ஏழு அகத்திணைக்கும் ஏழு புறத்திணை உண்டு என்று இளம்பூரணர் கூறுவதிலிருந்து பெருந்திணை அகத்திணைகளுள் ஒன்றாக வைக்கப்பட்டுள்ளது.

"பெருந்திணை, நடுவண் ஐந்திணையாகிய ஒத்த காமத்தின் மிக்கும் குறைந்தும் வருதலானும், எண்வகை மணத்தினும் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் என்பன அத்திணைப்பாற் படுதலானும், இந்நான்கு மணமும் மேன்மக்கள் மாட்டு நிகழ்தலானும், இவை உலகினுள் பெருவழக்கு எனப் பயின்று வருதலானும், அது பெருந்திணை எனக் கூறப்பட்டது. அஃதேல் நடுவண் ஐந்திணையாகிய ஒத்தக்கூட்டம் பெருவழக்கிற்றன்றோ எனின் அஃது அன்பும் குலனும் முதலாயின ஒத்துவருவது உலகினுள் அரிதாகலின் அருகியல்லது வாராது என்க." (மேலது, ப.6)

எட்டு வகையான மணமுறைகளில் நான்கு வகையான மணமுறைகளைப் பெற்று வருவதாலும் அவை மேன்மக்களிடம் நிகழ்வதாலும் பெருந்திணை எனப் பெயர் பெற்றது என்று பெயர்க் காரணம் கூறப்படுகின்றது.

நச்சினார்க்கினியர் "எல்லாவற்றினும் பெரிதாகிய திணையாதலின் பெருந்திணையாயிற்று. என்னை? எண்வகை மணத்தினுள்ளுங் கைக்கிளை முதல்ஆறு திணையும் நான்க மணம்பெற,தான் ஒன்றுமே நான்கு மணம் பெற்று நடத்தலின்,அகங்கை இரண்டுடையார்க்குப் புறங்கை நான்காகாதாது இரண்டாயவாறு போல அகத்திணை

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

யேழற்கும் புறத்திணை யேழேன்றழே பொருத்தம் உடைத்தாயிற்று.” (நச்சினார்க்கினியர், (உ.ஆ)., தொல்காப்பியம், பொருளதிகாரம், 1975, ப.260)

எட்டு மணமுறைகளில் நான்கைப் பெற்று வருகின்றது என்றும் அகத்திணைக்குப் புறமாகப் புறத் திணை ஏழு உண்டு என்று நச்சினார்க்கினியர் கூறுகின்றார். இளம்பூரணரும்நச்சினார்க்கினியரும் பெருந்திணை எட்டு மணமுறைகளில் அதிகமாக நான்கு மணமுறைகளைப் பெற்று வருவதால் பெருந்திணை என்றும் அகத்திணைகளுள் ஒன்று என்றும் குறிப்பிடுகின்றனர்.

வ.சுப.மாணிக்கம் பெருந்திணை என்பதற்கு பெரிய திணை இல்லை என்று விளக்கம் கொடுக்கின்றார். “தலைவன் தலைவியர் சில காதல்களை உள்ளத்தளவிலும் சொல்லளவிலும் காத்தோம்பிக்கொள;ளும் போது, அக்காதற் பாங்குகள் ஐந்திணைப்படுகின்றன. அவ்வளவுகளுள் காத்தோம்பமாட்டாது சிலர் காதல் மிகுவர்., மிகுதியால் சில காதற்செயல்களை மேற்கொள்வர். அதனால், ஊரறியும் இக்காதல் மிகைகளே பெருந்திணைப் பொருளாவன. ஐந்திணையாவது அளவுக் காதல், பெருந்திணையாவது மிகுதிக் காதல். பெரும் என்ற அடை அளவினும் மிகுதிப்பாட்டை, மிகையைக் குறிக்கின்றது. பெருமூச்சு, பெருங்காற்று, பெருமழை, பெரும்பேச்சு பெருங்காஞ்சி, பெருவஞ்சி என்ற தொடர்களை உடன்நோக்குக.” (மாணிக்கம், வ.சுப., தமிழ்க் காதல், 2009, ப.194)

பெருந்திணை என்பது நான்கு மணமுறைகளைப் பெற்று வருவதால் பெருந்திணை இல்லை என்றும் மிகுதியான காதலைக் குறிப்பதால் பெருந்திணை எனப் பெயர் பெற்றது என்று விளக்கம் கொடுப்பது பொருத்தமாக அமைகின்றது.

அடியோர், வினைவலர்

பெருந்திணை ஒழுக்கத்திற்கு உரியவர்கள் பற்றி குறிப்பிடப்படுகின்றது.

அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்

கடிவரை இலபுறத்து என்மனார் புலவர் (தொ.பொ.25)

அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும் அடித்தொழில் செய்வார் பக்கத்தினும் வினைசெய்வார் பக்கத்தினும், கடிவரைஇல் (மேற்சொல்லப்பட்ட புணர்தல் முதலான பொருளைக் கூறல்) கடிந்து நீக்கும் நிலைமையில்லை புறத்து என்மனார் புலவர். ஐந்திணைப் புறத்தவாகிய கைக்கிளை பெருந்திணைக்கண் என்று சொல்வார் புலவர்.” (இளம்பூரணர், (உ.ஆ) தொல்காப்பியம், பொருளதிகாரம், 1977, ப.27) என்று கூறி “புணர்தல் முதலான பொருள் என்பது அதிகாரத்தான் வந்தது. வினை செய்வார் என்பதனால் அடியரல்லாதார் என்பது கொள்க. இவர் அகத்திணைக்கு உரியரல்லரோ வெனின், அகத்திணையாவன அறத்தின் வழாமலும் பொருளின் வழாமலும் இன்பத்தின் வழாமலும் இயலல் வேண்டும். அவையெல்லாம் குற்றேவல் செய்வார்க்குச் செய்தல் அரிதாகலானும், அவர் நாணுக்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

குறைபாடுடையராகலானும், குறிப்பறியாது வேட்கை வழியே சாரக் கருதுவராகலானும், இன்பம் இனிது நடத்துவார் பிறரேவல் செய்யாதார் என்பதானானும், இவர் புறப்பொருட்குரியராயினார் என்க. எனவே, இவ்வெழுவகைத் திணையும் அகம், புறம் என இருவகையாயின." (மேலது, ப.27)

என்று இளம்பூரணர் குறிப்பிடுகின்றார்.

நச்சினார்கினியர் "பிறர்க்கு குற்றேவல் செய்வோரிடத்தும், பிறர் ஏவிய தொழிலைச் செய்தல் வல்லோரிடத்தும் தலைமக்களாக நாட்டிச் செய்யுள் செய்தல் நீக்கப்படாது நடுவணைந்திணைப் புறத்துநின்ற கைக்கிளை பெருந்திணைகளுள் என்றவாறு, கடிவரையிலை என்றதனான் அவருட் பரத்தையரும் உளரென்று கொள்க. " (நச்சினார்க்கினியர், (உ.ஆ)., தொல்காப்பியம், பொருளதிகாரம், 1975, ப.283) என்று கூறுவதில் பரத்தையர்களுக்கும் உரியது என்று கூடுதல் விளக்கம் கொடுக்கின்றார்.

கைக்கிளை முதலா எனத் தொடங்கும் நூற்பாவில் பெருந்திணை அகத்திணைகளுள் ஒன்று மேன்மக்களுக்குரியது என்று இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் கூறுகின்றனர்.ஆனால் அதற்குமாறாகஅடியோர் பாங்கினும் எனத் தொடங்கும் நூற்பாவில்அடியோர்க்கும் வினைவலருக்கும் உரியது என்று கூறுகின்றனர். நச்சினார்க்கினியர் பரத்தையர்களுக்கும் உரியது என்ற கூடுதல் விளக்கமளிக்கின்றார். அகம் × புறம், மேன்மக்கள் × அடியோர், வினைவலர், பரத்தை என்று முரண்பட்ட கருத்தைக் கூறுவது உரையாசிரியர்களிடம் பெருந்திணையை எவ்வாறு பொருள் கொள்வது என்பதில் சிக்கல்கள் இருந்துள்ளதை அறியமுடிகின்றது.

இந்த சிக்கல்களுக்கு, வ.சுப.மாணிக்கம், "அகத்திணையாவது ஐந்திணையே எனக்கொண்டதும், கைக்கிளை பெருந்திணைகள் அகமல்ல என்று எளிதாகக் கருதிவிட்டதுமாம். அறம் பொருள் இன்பங்களில் வழுவாத அகத்திணை நன்மக்கள் கொள்ளும் காதல் நிலை எனவும், கைக்கிளை பெருந்திணைகள் குற்றேவல் செய்வார் கொள்ளும் காதல் நிலைகள் எனவும் இளம்பூரணர் எழுதுகின்றார். எழுதிய பின் குற்றேவல் செய்வார் புறப்பொருட்டு உரியராயினார் என்க. எனவே இவ்வெழுவகைத் திணையும் அகம் புறம் என இருவகையாயின என்று முடிக்கின்றார். எவ்வளவு முரண்? இடைக்காலத் தமிழ் சமுதாயத்தில் மதங்களும் சாதிகளும் பல கோட்பாடுகளை விதைத்தன, பரப்பின. இவற்றைத் தொல்காப்பியம் சங்கவிலக்கியம் போன்ற தொன்னூல்களிலும் காணவிழைந்தனர் அக்காலப் பலவர்கள். இவ்வேண்டா வேட்கையால், பண்டைய எளிய கருத்துக்கள் அரியவாயின, தெளிந்த கருத்துக்கள் கலங்கின." (மாணிக்கம், வ.சுப., தமிழ்க் காதல், 2009, ப.194) என்று விளக்குகின்றார். பெருந்திணையைப் பற்றி தொல்காப்பியர்,

ஏறிய மடற்றிறம் இளமை தீர்திறம்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்

மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்

செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே (தொ.பொ.54)

என்று பெருந்திணையை நான்கு துறைகளாகக் குறிப்பிடுகின்றார்.

1. "ஏறிய மடற்றிறம் - தலைமகனுக்கே உரியது. (தலைவன் மடலேறி வருவது)
2. இளமை தீர்திறம் - இளமை நீங்கிய திறத்தின் கண் நிகழ்வது அது மூன்று வகைப்படும்.தலைவன் முதியவனாகி – தலைமகள் இளையளாதலும்,தலைமகள் முதியாளாகித் தலைவன் இளையனாதலும்,இவ்விருவரும் இளமைப் பருவம் நீங்கியவழி அறத்தின் மேல் மணம் நிகழ்தலன்றிக் காமத்தின் மேல் மணம் நிகழ்தலும்.
3. தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம் - தெளிவு ஒழிந்த காமத்தின் கண்ணே மிகுதலும் என்றவாறு.
4. மிக்க காமத்து மிடல் - ஐந்திணைக்கண் நிகழும் காமத்தின் மாறுபட்டு வருவது. அஃதாவது, வற்புறுத்துந் துணையின்றிச் செலவழுங்குதலும், ஆற்றருமை கூறுதலும் இழிந்திரந்து கூறுதலும், இடையூறு கிளத்தலும் அஞ்சிக்கூறுதலும், மனைவி விடுத்தலிற் பிறள்வயிற் சேறலும், இன்னோரன்ன ஆண்பாற்கிளவியும், முன்னுறச் செப்பலும் பின்னிலை முயல்தலும் கணவனுள்வழி இரவுத் தலைச் சேறலும், பருவம் மயங்கலும், இன்னோரன்ன பெண்பாற் கிளவியும், குற்றிசையும், குறுங்கலியும் இன்னோரன்ன பிறவுமாகிய ஒத்த அன்பின் மாறுபட்டு வருவன எல்லாம் கொள்ளப்படும்."(இளம்பூரணர்,(உ.ஆ) தொல்காப்பியம், பொருளதிகாரம், 1977, ப.65)

என்ற தொல்காப்பியர் பெருந்திணைக் குறிப்பிற்கு இளம்பூரணர் விளக்கமளிக்கின்றார்.

1. "ஏறிய மடல்திறம் - மடன்மா கூறுதலன்றி மடலேறுதலும்.
2. இளமைதீர்திறம் - தலைவற்கு இளையாகாது ஒத்த பருவத்தாளாதலும்
3. காமத்து மிகுதிறம்– இருபத்து நான்காம் மெய்பாட்டில் நிகழ்ந்து ஏழாம் அவதி முதலாக வரும் அறிவழிகுணன் உடையளாதலும்.
4. மிக்க காமத்து மிடல் - காம மிகுதியானே எதிர்பட்டுழி வலிதிற் புணர்ந்த இன்பத்தோடே கூட்டப்பட்டது என்று நச்சினார்க்கினியர் விளக்குகின்றார். " (நச்சினார்க்கினியர்,(உ.ஆ)., தொல்காப்பியம், பொருளதிகாரம், 1975, ப.134)

இளமை தீர்திறம் என்பதற்கு இளம்பூரணரின் கருத்திலிருந்து நச்சர் சிறிது வேறுபடுகின்றார். தலைவனைவிட தலைவி முதியவள் என்று இளம்பூரணரின் கருத்திற்கு மாறுபட்டு தலைவனுக்கு ஒத்த வயதுடையவளாகத் தலைவி இருத்தல், அதாவது இருவரது வயதில் ஒத்த அளவில் முதிர்ந்து காணப்படுதல் என்று விளக்கமளிக்கின்றார். மிக்க காமத்து மிடல் என்பதற்கு இளம்பூரணர் ஆண்பாற்கிளவி, பெண்பாற்கிளவி என்று இருவருக்கும் பொதுவாகக்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

குறிப்பிடுகின்றார். ஆனால் நச்சர் வலிதிற் புணர்தல் என்று குறிப்பிடுகின்றார். இதில் இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடு காணப்படுகின்றது. கணவனுள் வழி இரவுத்தலை சேறல் என்று இளம்பூரணர் கூறுவது தொல்காப்பிய வரையறைக்கு முற்றிலும் வேறுபட்டதாகக் காணப்படுகின்றது.

தேறுதல் ஒழிந்த காமத்து மிகு திறம்

வரைவிடை வைத்து பிரிந்த தலைவனின் பிரிவை ஆற்றாது தலைவி தன் நாணத்தை விட்டு பிரிவாற்றாமையை வெளிப்படையாகக் கூறி தலைவன் திரும்பியவுடன் மகிழ்கின்றாள்.

புரிவுண்ட புணர்ச்சியுள் புல்லாரா மாத்திரை
அருகுவித் தொருவரை அகற்றலில் தெரிவார்கண்
கலங்கிய நீர்போல் தெளிந்து நலம்பெற்றாள்
நல்லெழின் மார்பனைச் சார்ந்து" (க.தொ.142)

பல்லின் நுனி தெரியாமல் சிரித்தவள் தலைவன் பிரிவுத்துயரின் காரணமாக நாணத்தைவிட்டு தன் துன்பத்தை வெளிப்படுத்துகின்றாள். சான்றோர்களிடம் தன் துன்பத்தை நீக்குமாறு வேண்டுகின்றாள். தலைவனின் பிரிவுத் துயரமும் ஊராரின் பழிச் சொல்லும் தன் உயிரைக் கவடியாகக் கொண்டு இருபுறமும் பாரமாகத் தொங்கி என்னைத் துன்புறுத்துகின்றன என்று வருந்துகின்றாள். இந்நிலையில் ஓர் இரவில் தலைவன், தலைவியை வந்தடைகின்றான். அதனால் தலைவி தேற்றங் கொட்டையினால் தெளிவாக்கப்பட்ட தண்ணீரைப் போல துன்பம் நீங்கி இன்பமடைந்தாள் என்று தலைவியின் மிகு காதல் கூறப்படுகின்றது. இளம்புரணரும் நச்சினார்க்கினியரும் இப்பாடலை சான்று காட்டுகின்றனர்.

"ஐந்திணை நெறி வழுவிக் காதலனைப் பிரிந்த தலைவி தனைமறந்த துயர்கொண்டு ஊர் அறிய வந்து புலம்பும் போது நாண் நீங்குகின்றது, பெருந்திணை தோன்றுகிறது." (மாணிக்கம், வ.சுப., தமிழ்க் காதல், 2009, ப.203) என்று பெருந்திணைக்கு விளக்கம் கூறப்படுகின்றது.

தலைவன் வரைவிடை வைத்துப் பிரிந்ததை ஆற்றாது தலைவி தன் துன்பத்தை வெளிப்படுத்தி ஆறுதல் தேட நினைக்கின்றாள். தலைவன் திரும்பியவுடன் ஆறுதலடைந்து தெளிவடைகின்றாள். தலைவியின் மிகுதியான காதலின் வெளிப்பாடுதானே தவிர பொருந்தாக் காதல் இல்லை என்று வ.சுப. மாணிக்கம் கூறுவதிலிருந்து பெருந்திணை அகத்திணைகளில் ஒன்று, அது காதலின் மிகுதியை வெளிப்படுத்துகின்றதே தவிர பொருந்தாக் காமம் இல்லை என்பதாக அறியமுடிகின்றது.

கலித்தொகையில் 142 முதல் 147 வரை உள்ள நெய்தல் பாடல்களை நச்சினார்க்கினியர் தேறுதல் ஒழிந்த காமத்து மிகு திறத்திற்கு உதாரணமாகக் காட்டுகின்றார்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

க.ப.அறவாணன், நெய்தல் கலிப்பாடல்கள் நெய்தலின் உரிப்பொருளான இரங்களும் இரங்கல் நிமித்தமும் என்று கூறுகின்றார்.

“கலித்தொகையில் பெருந்திணையாகக் காட்டப் பெற்ற தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம் என்ற பாக்களில் தலைவியின் ஆற்றாமை வெளிப்படுகின்றது. அதைக் கண்டோர்கள் கூறுகின்றனர். நாணத்துடன் நடக்க வேண்டியவள் நாணத்தை விட்டு தன் ஆற்றாமையை வெளிப்படுத்துகின்றாள். பெருந்திணைக்குக் காட்டப்பற்றவற்றுள் 142, 3, 4, 5, 6, 7 என்ற ஆறு பாக்கள் பெண்டிர் மிகு காமம் பேசும் நெய்தல் கலிபாக்கள் அப்பாக்கள் தலைவனை நினைந்து இரங்குகின்றன. இரங்கல் நெய்தலின் உரிப்பொருள். நெய்தல்பா இரங்காமல் என்செய்யும்? நச்சர் காட்டிய அனைத்தையும் நெய்தற்குரிய இரங்கலாக அமைத்துக் கொள்ள இயலும். வறிதே பெண்பாற்கூற்று உண்டு என்று வலித்துக் காட்ட வேண்டுவது இன்று” (அறவாணன்,க.ப., அற்றைநாட் காதலும் வீரமும், 2002, ப.211) என்று கூறுகின்றார்.

வ.சுப.மாணிக்கம் தேறுதல் ஒழிந்த காமத்து மிகு திறம் காதலின் மிகுதியான வெளிப்பாடு என்றும்க.ப.அறவாணன் நெய்தலின் உரிப்பொருள் என்றும் கூறுவது பெருந்திணை அகத்திணைகளுள் ஒன்று அது மிகு காமத்தை வெளிப்படுத்துகின்றது, பொருந்தாக் காமத்தை அல்ல என்பதை அறியமுடிகின்றது.

காதாசப்தசதி

சிலம்பு நா.செல்வராசு தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம் பற்றி,

“ஆற்றமுடியாத காமத்தின் மிகுதியைப் பற்றி பேசுவது தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம் என்பது ஆகும். அறிவு பண்பு நலன் ஆகியவற்றை அழித்து அடக்க இயலாத காம வெளிப்பாடு இதன் இயல்பாகும். இதற்கு இராவணன் வரலாற்றை எடுத்துக் காட்டி விளக்குவர். இளமை தீர் திறம் போன்றே அதற்கும் சங்க இலக்கியச் சான்றுகள் கிட்டவில்லை என்றே கூறவேண்டும். இது தலைவிமாட்டே நிகழும் என்று இளம்பூரணர் கூறுவர். இத்துறையோடு எண்ணத்தக்கவையாகச் சில பாடல்கள் காதாசப்தசதியில் உள்ளன. ” (செல்வராசு,நா., தொல்காப்பியத்தில் மணமுறைகள், சமூக மானுடவியல் ஆய்வு, 2010, ப.147) என்று கூறுகின்றார். அதனடிப்படையில்,

தலைவனைப் பிரிந்து ஆற்றியிருக்கின்ற தலைவியின் வீட்டுத் திண்ணையில் வழிப்போக்கன் தங்குகின்றான்.

செவ்வரிக் கடைக்கணுற் சிறிதுஅரை விழியின்
காணும் மருமகள் காட்சி கண்டு
இல்லக் கிழவன் எதிர்த்தும் படுத்தான்
வாயில் தன்னில் வழிப்போக் கன்தான் (காதா.3-54)

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

தலைவி, மாமன், மாமியுடன் தங்கியிருக்கும் சூழலில் அவள் வீட்டுத் திண்ணையில் வழிப்போக்கன் தங்க நினைக்கின்றான். தலைவியின் மாமன் வழிப்போக்கன் தங்குவதற்கு அனுமதி மறுக்கின்றான். ஆனால் வழிப்போக்கன் நகருவதாக இல்லை. அந்நிலையில் தலைவி, வழிப்போக்கனைப் பார்க்கும் பார்வை தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறத்திற்குச் சான்றாகின்றது. காரணம் சங்க இலக்கியத் தலைவி தலைவனை நினைத்து வருந்துகின்றாள். ஆனால் காதா தலைவி வேற்று ஆடவனை நினைத்து வருந்துகின்றாள்.

கண்டோர், கற்பு நிலை தவறும் பெண்ணின் செயல் பற்றி கூறுகின்றனர்.

இல்லத் தலைவன் எதிர்வந் திடவும்
காப்பில் மடந்தை காப்பா யாக!
சரண்என வந்தோர்க் கரண்நீ யென்றே
கணவ னிடமே கடிதொப் படைத்தாள் (காதா.3-97)

கணவன் இருக்கின்ற நிலையில் ஒழுக்கம் தவறி நடக்கும் பெண்ணின் இல்லத்திற்கு தவறான ஒழுக்கமுடையவன் வருகின்றான். அந்நிலையில் கணவன் இல்லத்திற்கு வந்துவிடும் சூழலில் தலைவி இவன் தங்களைக் காண வந்திருக்கிறான் என்று கூறி தலைவனிடம் சரணடைய வைக்கின்றாள். தலைவியின் தவறான ஒழுக்கம் காமத்தின் மிகுதியாகக் காணப்படுகின்றது.

இரவில் தங்கும் வழிப்போக்கனிடம் தலைவி தன் எண்ணத்தைக் குறிப்பாக வெளிப்படுத்துகின்றாள்.

இங்கே துயில்வள் எனது மாமி!
இங்கே யானே! இங்கே சுற்றம்!
பயணி! இரவில் பார்வை யிலாதோய்
என்படுக் கையிலே வீழ்ந்திடல் வேண்டா! (காதா.7-67)

தலைவி வழிப்போக்கனிடம் தான், மாமி, உறவினர்கள், எங்கே தூங்குவோம் என்பதை வழிப்போகனுக்கு உணர்த்துகின்றாள். தான் தூங்கும் இடத்தில் விழுந்து தொலைத்துவிடாதே என்று கண்டிப்பது போன்று குறிப்பாகத் தான் தூங்கும் இடத்தை வழிப்போக்கனுக்குக் குறிப்பிடுகின்றாள்.

முடிவுரை

பெருந்திணைப் பற்றி இளம்பூரணர், நச்சினார்க்கினியர் குறிப்பிடுகின்ற நிலையில் பெருந்திணை அகத்திணை என்றும் மேன்மக்களுக்குரியது நான்கு மணமுறைகளைப் பெற்றுவருவது அதனால் பெருந்திணையாயிற்று என்று பெருந்திணைக்கு பெயர்க் காரணம் கூறுகின்றனர். ஆனால் அடியோர் பாங்கினும் என்று தொடங்கும் நூற்பாவில் அடியோருக்கும் வினைவலருக்கும் உரியது என்று கூறி இளம்பூரணர், நச்சினார்க்கினியர் பெருந்திணையை

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

புறத்திணையில் வைக்கின்றனர்.; நச்சினார்க்கினியர், பரத்தையருக்கும் உரியது என்று கூடுதல் விளக்கமளிக்கின்றார். இவை உரையாசிரியர்களிடம் பெருந்திணைப் பற்றி பொருள்கொள்வதில் இருந்த முரண்பாட்டை வெளிப்படுத்துகின்றது. தேறுதல் ஒழிந்த காமத்தின் மிகுதிறத்திற்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர் சான்று காட்டும் பாடல் நெய்தலின் உரிப்பொருளை வெளிப்படுத்துகின்றது. வ.சுப.மாணிக்கம் குறிப்பிடும் மிகு காமத்தின் வெளிப்பாடு என்பதும் நெய்தல் கலி இரங்காமல் என் செய்யும் என்று க.ப.அறவாணன் கேட்கும் கேள்வியும்சங்ககாலப் பெண்கள் உரிப்பொருள் ஒழுக்கம் தவறியவர்கள் இல்லை என்பதைப் பதிவு செய்கின்றது. சரியான சான்று காதா சப்தசதியில் காணப்படுகின்றது என்று சிலம்பு நா.செல்வராசு கூறுவது குறிப்பிடத்தக்கது. சங்க காலத்தில் தோன்றிய காதாசப்தசதி சமூகத்தில் நடைபெற்ற அனைத்து செயல்களையும் பதிவு செய்திருக்கின்றது என்பதற்கு தேறுதல் ஒழிந்த காமத்திற்குச் சான்றாக அமைந்த பாடல்கள் குறிப்பிடுகின்றன.

பயன்பட்ட நூல்கள்

[1] அறவாணன்,க.ப., அற்றைநாட் காதலும் வீரமும், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2002.

[2] இளம்பூரணர், (உ.ஆ) தொல்காப்பியம், பொருளதிகாரம், கழக வெளியீடு, சென்னை, 1977.

[3] செல்வராசு,நா.,தொல்காப்பியத்தில் மணமுறைகள், சமூக மானுடவியல் ஆய்வு, புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி, 2010.

[4] நச்சினார்க்கினியர், (உ.ஆ)., தொல்காப்பியம், பொருளதிகாரம், கழக வெளியீடு, ஆறாம் பதிப்பு, சென்னை, 1975.

[5] மாணிக்கம், வ.சுப., தமிழ்க் காதல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2009.

[6] விசுவநாதன், அ., (உ.ஆ), கலித்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, முதற் பதிப்பு, 2004.

[7] ஜகந்நாதராஜா,மு.கு., காதா சப்தசதி, விசுவசாந்தி பதிப்பகம், இராஜபாளையம், 1982.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

சுமதி. “ஒப்பியல் நோக்கில் உரையாசிரியர்களின் பெருந்திணைக் கோட்பாடு.” *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 1, *திசம்பர்* 2020, பக். 173-182. டிஒஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.027**

Cite this Article in English (*MLA 8 Style*) as:

Sumathi. “Comparative Study of Commentator’s Peruntinai Theory.” *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020, pp. 173-182. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.027**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

E-ISSN: 2581-7140
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /NIL

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இல்லை /NIL

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

இன்றைய கல்விச் சூழலில் ச. திருஞானசம்பந்தத்தின் நன்னூல் உரை

S.Thriugnanasambatham's Nannool Urai in Today's Educational Environment

ம. செந்தில்குமார், முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம்.
M.Senthilkumar, Ph.D. Research Scholar, Dept. of Tamil, Periyar University, Salem – 11
ORCiD: https://orcid.org/0000-0002-9436-132X
முனைவர் ரா.தேவணன், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம் – 11,
Dr.R.Devanan, Assistant Professor, Dept. of Tamil, Periyar University, Salem -11
ORCiD: https://orcid.org/0000-0002-8598-2984
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.028

Abstract

The secondary texts for "Nannool" have been written by many scholars. It shows the need and context of the classic work. It is commonly said that a good book should have a lot of texts to see the multi-faceted perspectives of the source work. Among the commentators, the text of Thirugnanasampantham is found to be simple and concise to elucidate the novelty of the work. He explains more than one interpretation of words in terms of semantics in a vivid manner. His interpretations illustrate the reader about the original sense of the text. He had used parables to illustrate grammar for better understanding. This method can be helpful in the present pedagogical instruction of Tamil grammar. So, this article reviews the scope and importance of the use of "Nannool" explanatory text in current educational setup.

Keywords: "Nannool", Interpretation, Parable, Text Code Method, Example Method

முன்னுரை

ஒரு மொழியைக் கற்றுக் கொள்வதிலும், கற்றுக் கொடுப்பதிலும், ஒரு தலைமுறையிடமிருந்து மற்றொரு தலைமுறைக்கு மொழியைக் கொண்டு சேர்ப்பதிலும் இலக்கணங்கள் மிகப்பெரிய பங்களிப்பைச் செய்கின்றன. தமிழ் இலக்கணமானது அகத்தியம் மூலம் அடையாளப்படுத்தப்பட்டு ஏழாம்இலக்கணம் வரையில் ஏறத்தாழ 51 இலக்கண நூல்கள் அறியப்பட்டுள்ளன. இவ்விலக்கண நூல்கள் தனக்கு முன்பிருந்த முந்து நூல் மரபையும், சமகால மொழிச் சூழலையும் கவனத்தில் கொண்டு, பிற்கால மொழியியலில் நிகழும் மாற்றத்தையும் ஏற்கும் விதமாக இலக்கணம் கூறுகின்றன. மொழி கற்பித்தல் நோக்கில் ஐரோப்பியர்களின் வருகைக்குப் பிறகு இருவகையான இலக்கண உருவாக்கம் நிகழ்ந்துள்ளது. ஒன்று தமிழர்கள் ஐரோப்பியர்களுக்கு மொழியைக் கற்பிக்க உருவாக்கிய இலக்கண நூல்கள், மற்றொன்று ஐரோப்பியர்களுக்கு ஐரோப்பியர்கள் உருவாக்கிய இலக்கண நூல்கள் மொழி கற்றல் கற்பித்தலில் எழுத்து இலக்கணமும், சொல் இலக்கணமும் மிக முக்கிய அங்கம் வகிக்கின்றன.

எத்தனையோ இலக்கண நூல்கள் தமிழில் இருந்தாலும், கல்வியியல் சூழலில் எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம் இரண்டிற்கும் தொல்காப்பியம், நன்னூல் ஆகிய இரண்டு

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

நூல்கள் பள்ளி, கல்லூரிகளில் பாடநூல்களாக அமைந்துள்ளன. குறிப்பாக நன்னூல் பள்ளி, கல்லூரி இளங்கலை அளவில் எழுத்து சொல் இலக்கணத்திற்குப் பாடமாக அமைந்துள்ளது. இலக்கண நூலின் கருத்துக்களை வாசகனுக்கு கொண்டு சேர்ப்பதில் உரையாளர்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். அந்த வகையில் 14-ஆம் நூற்றாண்டளவிலேயே மயிலை நாதரால் உரை எழுதப்பட்ட நன்னூல், ஐம்பத்திற்கும் மேற்பட்ட உரையினைப் பெற்றுள்ளது. தமிழ் இலக்கண நூல்களிலேயே மிக அதிகமான உரையினைப் பெற்ற நூலாக நன்னூல் உள்ளது. பல உரைகள் நன்னூலுக்குக் காலந்தோறும் தோன்றியவண்ணமிருந்தாலும் இன்றைய கல்விச்சூழலில் ச. திருஞானசம்பந்தம் எழுதிய உரையே மாணவர்கள் பெரிதும் விரும்பி கற்கின்றனர். அந்த வகையில் ச. திருஞானசம்பந்தத்தின் உரை எவ்வாறு அமைந்துள்ளது என்பதனை ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

சொற்பொருள் விளக்கம்

நூற்பாக்களில் உள்ள கடினமான சொற்களுக்குப் பொருள் விளக்கம் தருவது உரையாசிரியர்களின் அடிப்படையான உரைநெறிகளில் ஒன்றாக அமைகிறது. சொற்பொருள் விளக்கம் இல்லையென்றால் வாசகர்கள் முழுமையாகச் செய்யுளின் பொருளைப் புரிந்து கொள்ள முடியாது. பழங்காலத்தில் தோன்றிய நூல்களை இன்றும் வாசகர்கள் வாசிக்க உறுதுணை புரிவது இந்தச் சொற்பொருள் விளக்கமே ஆகும். இதனையே ச. குருசாமி. "உரையாசிரியர்கள் உரையெழுதுங்காள் சில சொற்களுக்குப் பதப்பொருள் தருவதோடு அதற்கு விளக்கமும் தருவது உண்டு.

இளம்பூரணர் மூலத்திலிருந்து சொற்களை எடுத்துரைத்துப் பதப்பொருள் கூறிச் செல்லுகிறார். இம்முறையினைத் தொல்காப்பிய உரையாசிரியர்கள், நன்னூல் உரையாசிரியர்கள், திருக்குறள் உரையாசிரியர்கள் ஆகியோர் மேற்கொண்டிருக்கின்றனர். அரும்பதவுரை எனவும், குறிப்புரை எனவும் இலக்கியங்களுக்கு உரையெழுதத் தொடங்கினர். இவை யாவும் நிகண்டுகளின் வளர்ச்சி எனலாம்" (ச.குருசாமி, இளம்பூரணர் உரைநெறி, ப.22) என்று குறிப்பிடுவதைக் காணமுடிகிறது.

இதைப் போன்றே ச. திருஞானசம்பந்தம் உரை செய்த நன்னூல் எழுத்ததிகாரத் தெளிவுரையில் அருஞ்சொற்பொருள் பயன்பாடு என்னும் உரைதிறன் பின்பற்றப்பட்டுள்ளது. மேலும், அவர் இரண்டு முறைகளில் சொற்பொருள் விளக்கம் தருவதைக் கையாண்டுள்ளார். ஒரு பாடலுக்கான உரை விளக்கம் தருகிறபோது சொல்லுக்கானப் பொருளை அடைப்புக்குள் தருவது, உரை. முடிவில் தருவது போன்ற இரு முறைகளையும் தனது உரையில் பின்பற்றியுள்ளார். சான்றாக, அடைப்புக்குள் தருகிற உரை விளக்கத்திற்கு, "ஓத்து (இயல்), படலம் (அதிகாரம்), சூத்திரம் (நூற்பா) (ப.10) தான் என்ற வீரம் (அகந்தை) ப.28, கொள்ளுமிடமாகவும் (கலனாகவும்) ப.29" ஆகியவற்றைக் கொள்ளலாம் உரை முடிவில்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

தருகிற உரை விளக்கத்திற்கு, “ஆசு- குற்றம், இரிதல்- நீக்குதல் (ப.21)” போன்றவற்றை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம் இருவகையான முறையை அவரது உரைவழி காண முடிகிறது.

உவமை

கவிஞர்கள் ஒரு கருத்தை மிக எளிமையாக வாசகனுக்குப் புரிய வைக்கக் கையாளும் உத்தி முறைகளுள் ஒன்று உவமையாகும். உவமை நம் வாழ்வோடு தொடர்புடையது. இதனை ச.குருசாமி, "இஃது இலக்கியத்தில் வருவது இயல்பு. இலக்கணத்தில் இடம் பெறுவது சிறப்பு. இலக்கணமும் செய்யுள் வடிவில் அமையப் பெறுதலின் தொல்லாசிரியர் நூற்பாவில் உவமையினை மேற்கொண்டிருக்கிறார்" (ச.குருசாமி, இளம்பூரணர் உரைநெறி, ப.230) என்று குறிப்பிடுகிறார்.

செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே (தொல், வினை,47)
வருவிசைப் புனலைக் கற்சிறை போல
ஒருவன் தாங்கிய பெருமை யானும் (தொல், புறத்,8)

என்ற மேற்கண்ட தொல்காப்பிய நூற்பாக்களிலேயே உவமைநயம் அமைந்துள்ளமையைக் காணமுகிறது.

வழக்கு உவமை

நன்னூல் எழுத்ததிகாரத்திற்குக் காண்டிகையுரை இயற்றிய ச.திருஞானசம்பந்தம் நூலாசிரியர் பயன்படுத்திய வழக்கு உவமைகளைப் 'பிரித்தும் பொருத்தியும்' காட்டியிருக்கிறார். உதாரணமாக,

அன்னம் ஆவே மண்ணொடு கிளியே
இல்லிக் குடம் ஆடு எருமை நெய்யரி
அன்னர் தலை இடை கடை மாணாக்கர் (நன்னூல். நூ. 38)

அன்னம் பசு போல தலை மாணாக்கர் கல்வி கற்கும் திறன் பெற்று இருப்பர் என்றும், மண்ணையும் கிளியும் போன்றவர்கள் இடைமாணாக்கர் என்றும், ஓட்டைக்குடம், ஆடு, எருமை ஆகியவற்றின் செயல்கள் போல இடை மாணாக்கரின் செயல் இருக்கும் என்றும் இதன் மூலம் விளக்குகிறார்.

இலக்கண உவமை

உரையாசிரியர் இலக்கண நூற்பாக்களுக்கு விளக்கம் தரும்போது சில இலக்கண உவமைகளைப் பயன்படுத்துவதைக் காணமுடிகிறது. இதற்குச் சான்றாகக் கீழ்க்காணும் உரை விளக்கத்தைக் கொள்ளலாம்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

"எழுத்துக்களை ஒலிக்கும் கால அளவே மாத்திரை உலகத்தில் பொருள்களை அளக்கப் பல கருவிகள் பயன்படுதல் போல ஒலி அளவைக் கணக்கீடு செய்வதே மாத்திரை. கண்ணை இமைப்பதற்கு ஆகும் கால அளவும் கையை நொடிப்பதற்கு ஆகும் கால அளவும் ஒரு மாத்திரை எனப்படும்" (ச.திருஞானசம்பந்தம், நன்னூல் எழுத்ததிகாரம், ப.55) இவ்வாறு உவமைகள் மூலம் பாடலின் பொருளைத் தெளிவாக உரையாசிரியர்கள் விளக்குகின்றனர். அவ்வாறு மக்களுக்கு எளிதாகப் புரியும் வழக்குச் சார்ந்த உவமைகளையே அதிகமாகப் பயன்படுத்தி இருப்பது தெளிவாகிறது.

சான்றுகாட்டி விளக்குதல்

பாடல், உரை விளக்கத்தைத் தொடர்ந்து அந்தப் பாடலுக்கான பொருத்தமான ஓர் எடுத்துக்காட்டினைத் தருவதும் உரைநெறிகளில் ஒன்றாகப் பயன்படுத்தி இருக்கிறார். ச. திருஞானசம்பந்தம். தெரிந்த ஒரு பொருளை அல்லது கருத்தைக் கூறி இது போன்று என்று கூறுதல் இவ்வுரையின் நெறியாகும்.

"தாம் சொல்லும் சொற்பொருளுக்குச் செய்யுள் வழக்கிலிருத்தோ, உலக வழக்கிலிருந்தோ ஒரு சான்றுகாட்டி அங்ஙனம் பொருள் கொள்வது முறையானதே என நிறுவும் மரபு உரையாசிரியர்களிடம் காணப்படுகிறது. நட்பாடல் தேற்றாதவர் என்பது (18-7) நட்பாடலை அறியாதார் எனத் தன்வினையாகவே பொருள்படும் என்பது பரிமேலழகர் கருத்து கடியும் இடந்தேற்றால் சோர்ந்தனள் கை' (கலி.27) என் புழிப் போலத் தேற்றாமை தன்வினையாய் நின்றது' என்பார் அவர். வினை பகைவீயாது பின்சென்று அடும் (207) என்னும்போது வீயாது என்பதற்கு நீங்காது எனப் பொருள் எழுதும் பரிமேலழகர் புறநானூற்றடியைக் காட்டி அதை நிறுவுகின்றார்" (தமிழண்ணல், உரை விளக்கு, ப.104)

உரைக்குறியீடு

உரையாசிரியர்கள் தங்களை அடையாளப்படுத்த சில குறியீடுகளைப் பயன்படுத்துவது உண்டு. வாசகன் பார்த்தவுடன் புரிந்து கொள்ளவும், மீண்டும் மீண்டும் அந்தச் சொற்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாகவும் இம்முறைப் பயன்படுகிறது. இதனை, ச. குருசாமி, "உரையாசிரியர்கள் நூற்பாவின் மையக் கருத்தைத் தமது சொல் திறனால் கருத்துச் செறிவு மிக்க சொற்களால் குறியீடு இட்டுள்ளனர். இவை உரைக்குறியீடுகள் ஆகும். இது உரை நெறிகளுள் ஒன்றாகும். முன்பின் உள்ள நூற்பாக்களை மட்டுமன்றி முன்பின் இயலில் உள்ள நூற்பாக்களையும் இக்குறியீடு இயைபுப்படுத்துகிறது." (குருசாமி, ச., இளம்பூரணர் உரைநெறி, ப.24) என்கிறார்.

மேலும், வ.சுப. மாணிக்கம், "கலைத்துறைகள் வளரும்போது நுண்ணிய சிறிய குறியீடுகளும் படைத்துக் கொள்ளப்படும். இவை நினைவுக்கும் தெளிவுக்கும் தேவை குறியீடுகள் கற்பவர்க்கு அச்சம் தருபவை என்ற எண்ணம் பிழையாகும். பொருட் செறிவுப்

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

பெட்டி போல்பவை குறியீடுகள் இலக்கணத்தை வரம்பாகக் கசடற விளங்கிக் கொள்ளவும் மனத்தில் இறுத்திக் கொள்ளவும், தொடர்புபடுத்திக் கொள்ளவும் இலக்கண நூலாசிரியர்கள் அமைத்த குறியீடுகள் உண்டு. அவர்களைப் போலவே உரையாசிரியர்களும் கற்பிப்பதற்கு எளிமையாக அமைத்த குறியீடுகளும் உண்டு" (வ.சுப.மாணிக்கம், தொல்காப்பியத் திறன், ப.29) என்கிறார். (இ-ள்) 'இதன் பொருள்' நூற்பாவைத் தொடர்ந்து உரைவிளக்கம் தரும்போது (இ-ள்) என்ற குறியீட்டைப் பயன்படுத்துவதைக் காணமுடிகிறது. உரை விளக்கத்திற்கான சான்று தரும் பொழுது (எ.டு.) எடுத்துக்காட்டு என்ற குறியீடு தருகிறார். இது போன்ற குறியீட்டுச் சொற்களை இவரது உரையில் காணமுடிகிறது.

தலைப்பிடல்

உரையாசிரியரின் தனித்துவத்தை வெளிப்படுத்தும் உரைநெறிகளில் ஒன்றுதான் உரை செய்யும் நூல்களில் உள்ள ஒவ்வொரு நூற்பாவுக்கும் தலைப்பிடுவது ஆகும். அந்த வகையில் ச.திருஞானசம்பந்தம் நூற்பாவின் பொருளை முழுமையாக வாசித்து உள்வாங்கிக் கொண்டு பொதுவாக ஒரு தலைப்பிட்டு முன்னுரைக் கொடுத்துப் பின்பு சிறப்புத் தலைப்பிட்டு நூற்பாவைத் தொடங்குகிறார். உதாரணமாக, மாணவர் (பொதுத்தலைப்பு), மாணக்கர் ஆதற்கு உரியவர் (குறிப்புத் தலைப்பு), ஆசிரியர் (பொதுத்தலைப்பு), நல்லாசிரியரின் இலக்கணம் (சிறப்புத் தலைப்பு) போன்று பல தலைப்புகள் அமைந்து இருப்பதைக் காணமுடிகிறது.

ஆங்கிலத்தில் தலைப்பிடல்

தலைப்பிடுதல் என்பதே சிறப்பான உரைநெறியாக இருக்கும் பட்சத்தில் அத்தலைப்பிற்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லாடல்களையும் இவ்வுரையாசிரியர் பயன்படுத்தி இருப்பதைக் காணமுடிகிறது. அளபெடை (Prologetion)

மங்கலம் ஆகி இன்றி யமையாது
யாவரும் மகிழ்ந்து மேற்கொள் மெல்கிப்
பொழுதின் முகமலர் உடையது பூவே (நன்னூல், எழுத்து, நூற்பா. 30)

மலர்	ஆசிரியர்
மங்கல காரியங்களுக்கு உரியது	நன்மையான செயல்களுக்கு உரியர்
தானின்றி எச்செயலும் நடைபெறாச் சிறப்புடையது	ஆசிரியர் இன்றி எச்செயலும் நடைபெறாமை

இவ்வாறு உவமையின் மூலம் வெளிப்படும் ஒப்பீட்டை உரையாசிரியர் வழி அறியமுடிகிறது.

முடிவுரை

மேற்கண்ட சான்றுகளின் ஊடாகப் பார்க்கும்போது மூல நூலாசிரியன் கருத்தை வாசகருக்கு கொண்டு சேர்ப்பதில் உரையாளரின் பங்கு மிக முக்கிய இடத்தினைப்பெறுகிறது. இன்றைய பள்ளி, கல்லூரிக் கல்விச்சூழலில் நன்னூலுக்கான ச. திருஞானசம்பந்தம் எழுதிய

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

உரையினை மாணவர்கள் பெரிதும் விரும்புவதற்குக் காரணம் எளிமையான முறையில் சமகால உதாரணங்களைக் கொடுத்து விளக்குவது என்பது புலனாகிறது. மேலும், அவரது உரையின் சொற்பொருள் விளக்கம், உவமை, சான்றுகாட்டி விளக்குதல், உரைக்குறியீடு, ஒப்பீடு, தலைப்பிடல், ஆங்கிலத்தில் தலைப்பிடல் போன்ற உரைமுறைமையினால் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மட்டுமல்லாது போட்டித் தேர்வுக்குத் தயாராகுபவர்களும் இந்நூலினைப் பெரிதும் விரும்பி கற்பதற்கான சூழல் அமைவதனை அறியமுடிகிறது.

துணைநூற்பட்டியல்

[1] குருசாமி, ச இளம்பூரணர் உரை நெறி, இராணி பதிப்பகம், சென்னை. ப.22, 2007.

[2] குருசாமி, ச இளம்பூரணர் உரை நெறி, இராணி பதிப்பகம், சென்னை, ப.230, 2007.

[3] திருஞானசம்பந்தம், ச., (உ.ஆ), பவணந்தி முனிவரின் நன்னூல், எழுத்ததிகாரம், கதிர் பதிப்பகம், திருவையாறு, 2009.

[4] தமிழண்ணல், உரை விளக்கு, ப.104, 2011, விழிகள் பதிப்பகம், சென்னை.

[5] குருசாமி, ச., இளம்பூரணர் உரைநெறி, ப.24.

[6] மாணிக்கம், வ.சுப., தொல்காப்பியத் திறன், ப.29, 1984, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

செந்தில்குமார் & தேவணன் . “இன்றைய கல்விச் சூழலில் ச. திருஞானசம்பந்தத்தின் நன்னூல் உரை.” *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 1, *திசம்பர்* 2020, பக். 183-188. டிஒஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.028**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Senthilkumar & Devanan. “S.Thriugnanasambatham’s Nannool Urai in Today’s Educational Environment.” *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020, pp. 183-188. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.028**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /NIL

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இல்லை /NIL

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

தமிழ் உரைநடையின் ஆளுமை
The Influence of Tamil Prose

முனைவர் மா.ஞானமணி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, உருமு தனலெட்சுமி கல்லூரி, திருச்சி.
Dr.M.Gnanamani, Assistant Professor, Department of Tamil, Urumu Dhanalakshmi College, Trichy.
ORCiD: https://orcid.org/0000-0001-5139-9400
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.029

Abstract

The influence of Tamil Literature and Language uplifts its merits by the aid and dedication of the explanatory writers on the source works of Tamil Literature. Without them the prose tradition will be mundane and is existing because of the intellect of the writers who shaped up the language with the explanatory notes. This article is about the influence of Tamil prose and the specialty of text editors and the trend of prose today.

Keyword: Tamil Prose, Specialty, Text Editors

முன்னுரை

தமிழ் மொழி வளம் பெறுவதற்கு உரைநடை முதன்மையானதாகும். தமிழ் இலக்கிய வரலாற்றின் அடிப்படையில் பார்க்கும்போது தமிழ்மொழியானது காலத்திற்கேற்ப மாற்றம் பெற்றுள்ளது. இம்மொழி மற்ற மொழிகளைக் காட்டிலும் வேறுபட்டிருப்பதற்குக் காரணம் இதன் கருத்துக்கள் பழமையும், வளமையும் பெற்று காணப்படுகின்றன. ஒரு மொழியின் கலாச்சாரப் பண்பாட்டு பழக்க வழக்கங்களை செய்யுள் வடிவில் படித்து புரிந்து கொள்வது என்பது கடுமைக்குரிய ஒன்றாகும்.

தமிழ் உரைநடையின் ஆளுமை

அடியார்க்கு முன் சிலப்பதிகாரத்திற்கு அரும்பத உரையாசிரியரின் உரை இருந்ததாக கூற முடிகிறது. சிலப்பதிகாரத்தின் அருஞ்சொற்களுக்கு மட்டுமே உரை எழுதியிருந்தார். ஆகையால் அரும்பத உரைகாரர் எனப் பெயர் பெற்றதாக கூற முடிகிறது. உரை வளர்ச்சிக்கு சைவ, வைணவ நூல்களுக்கு சிலர் எழுதிய உரை பக்தி இலக்கியமான இடைக்கால இலக்கியத்திற்கு பெருமையினை சேர்த்துள்ளது.

சங்க நூல்கள் என்றழைக்கப்படும் பழந்தமிழ் இலக்கிய நூல்களின் செம்பதிப்பின் மூலமாக உ.வே.சாமிநாதையர் கவிதை தமிழிலக்கிய உரைநடைக்கு ஆக்கம் நிறைந்த பங்களிப்பினை நல்கியவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அந்த வகையில் இவரின் என் சரித்திரம், நல்லுரைக்கோவை முதலிய நூல்கள் குறிப்பிடத்தக்கனவாகும். தமிழ் உரைநடை முன்னேற்றத்திற்கு உ.வே.சாவின் பதிப்புத் தன்மை ஆக்கம் மிகுந்த ஒன்றாய் தமிழ் இலக்கியத்தில் அமைந்துள்ளது.

செய்யுள் வடிவத்திற்கு உரைநடை என்ற ஓர் வடிவம் தோன்றி கருத்துக்களை மக்களுக்கு எளிமைப்படுத்தி படிப்பதற்கு முக்கிய பங்கினை உரைநடை நல்குகின்றது. தமிழ்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

இலக்கண, இலக்கியத்துக்கு உரையாசிரியர்கள் மொழிக்கு விளக்கம் தந்து படைப்புகளை பெருமைப்படுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தகுந்ததாகும் 'இறையனார் களவியல் உரை' என்னும் நூலிலே உரை என்ற பெயர் பதிவாகியுள்ளது. முச்சங்கங்ளின் செய்திகள் இந்நூலில் கூறப்பட்டுள்ளது. "பழைய உரையாசிரியர்கள் கூறுவன உண்மை ஆதலால் மூன்று சங்கங்கள் இருந்திருக்க வேண்டும் என்பர் டாக்டர்.உ.வே.சாமிநாதையர், கா.சுப்பிரமணியப்பிள்ளை போன்றோரின் கருத்து வரவேற்கத்தக்கதாகும் (சோ.ம. இளவரசு, இலக்கிய வரலாறு ப-9).

மேலும் தமிழில் தோன்றிய முதற்காப்பியமான சிலப்பதிகாரம் என்னும் நூலிற்கு 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்ற பெயர் அமைந்துள்ளது. இந்நூல் தமிழரின் வாழ்வியலுக்கு அடையாளமாகத் திகழ்கின்றது. மேலும் விளக்கமாக பிறந்ததே உரைநடை என்று "கடைச்சங்கப் புலவராகிய பெருந்தேவனார் இயற்றிய பாரத நூலைப் 'பாரத வெண்பா' என்றும் அழைப்பர். இச்செய்யுள் நூலில் இடையிடையே உரைநடையும் கலந்து வருவதால் இதனை "உரையிடையிட்டப் பாட்டுடைச் செய்யுள்" என்றனர். முதன் முதலாகத் தமிழ் மொழியின் 'உரைநடைத் தோற்றத்தை இந்நூலிலே காணலாம். என எம். ஆர் அடைக்கலசாமி தனது நூலில் குறிப்பிட்டுள்ளார் (எம்.ஆர் அடைக்கலசாமி, தமிழ் இலக்கிய வரலாறு, 152).

தொல்காப்பிய பதிவு

உரை என்னும் சொல் தமிழின் தொன்மை இலக்கணமாக கருதப்படும் தொல்காப்பியத்தில் பதிவாகியுள்ளது.

உரைப்பொருள் கிளவி நீட்டமும் வரையார் (தொல்.எழுத்து.நூ.212)

"**உரையிடத்தியலும் உடனிலை அறிதல்** (தொல்.சொல்.நூ.941)

"**மரபு நிலை திரியா மாட்சிய ஆகி**
உரைபடு நூல்தாம் இருவகை இயல
முதலும் வழியும் என நுதலிய நெறியின" (தொல்.பொருள்.நூ.1593)

"**உரை எடுத்து அதன் முன் யாப்பிலும் சூத்திரம்**
புரைதப உடன்படக் காண்டிகை பணர்ப்பினும்
விடுத்தலும் விலக்கலும் உடையோர் வகையோடு
புரைதப நாடிப் புணர்க்கவும் படுமே" (தொல்.பொருள்.நூ.1599)

தொல்காப்பியத்தில் ஒரு சில இடங்களில் உரை பற்றிய நூற்பாக்கள் காணப்படுகின்றன. தொல்காப்பியத்திற்கு பின் பல நூற்றாண்டுகள் கடந்து தோன்றிய 'நன்னூல்' என்னும் இலக்கண நூல் உரையின் வகைமையை இரண்டாகக் கூறுகின்றது. ஒன்று காண்டிகையுரை, மற்றொண்டு விருத்தியுரையாகும்.

"**கருத்துப் பதப்பொருள் காட்டும் மூன்றிலும்**
அவற்றோடு வினாவிடை யாக்கலானும்
சூத்திரத் துட்பொருள் தோற்றுவ காண்டிகை" (நன்னூல், நூ.22)

"**சூத்திரத் துட்பொருள் அன்றியும் ஆண்டைக்(கு)**

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

இன்றி யமையா யாவையும் விளங்கத்
தன்னுரை யானும் பிறநூ லானும்
ஐயம் அகல ஐங் காண்டிகை உறுப்பொடு
மெய்யினை எஞ்சா திசைப்பது விருத்தி" (நன்னூல், நூ.23)

உரைப்பற்றி நன்னூல் கூறுகின்றது. பழங்காலத்தில் உரை வடிவங்கள் இருந்திருக்கலாம் என்றும் அவை காலப்போக்கில் இயற்கையின் சீற்றத்தால் அழிந்திருக்க கூடும் என்ற கருத்து தமிழறிஞர்களின் வட்டத்தில் இன்றும் காணப்படுகின்றது. இது குறித்து அ.ச.ஞானசம்பந்தன் "அக்காலத்தில் உரைச்செய்யுள் என்ற இலக்கணம் பேசுகிறதாகலின் ஏதேனும் உரை நூல்கள் இருந்திருத்தல் வேண்டும். ஆனால் அவை மறைந்தொழிந்தன" (அ.ச.ஞானசம்பந்தன், இலக்கியக் கலை, ப-344) என்று கூறுகிறார்.

உரையாசிரியர்கள் பொதுவாக புலமை மிக்கவராகவே விளங்கினர். குறிப்பாக தமிழ் உரையாசிரியர்கள் வடமொழி புலமை மிக்கவராகவும் விளங்கினர். ஆகையால் அதிகபட்சமான இலக்கிய இலக்கண உரைகளில் வடமொழியின் தாக்கம் காணப்படுகின்றன. மூல ஆசிரியர்களுக்கு நிகராக உரையாசிரியர்கள் மதிக்கப்படுகின்றனர். மூல நூற்கள் தோன்றி பல ஆண்டுகள் கடந்து உரைகள் எழுதப்பட்டன. "பொதுவாக உரையாசிரியர்கள் காலம் கி.பி.12 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 14ஆம் நூற்றாண்டு வரை உரையாசிரியர்களுள் இலக்கிய உரையாசிரியர்கள் சிலர், இலக்கண உரையசிரியர் பலர் இலக்கணத்திற்கும், இலக்கியத்திற்கும் ஒரு சேர உரை வகுத்தவர் என இருந்திருக்கின்றனர். உச்சிமேல் புலவர் கொள் நச்சினார்க்கினியர் ஒருவரே, சில இலக்கிய உரையாசிரியர்கள் ஆங்காங்கு இலக்கணக் குறிப்புகள் தந்துள்ளனர் (நா.பாலுசாமி, பன்முகப் பார்வையில் பரிமேலழகர், ப-9) என்று உரையாசிரியர்களின் ஆக்கப்பூர்வமான பணிகளை நா.பாலுசாமி கூறியுள்ளார்.

உரையாசிரியர்களின் பணி அரியத்தக்கப் பணியாகத் திகழ்கின்றாது. மூல நூலில் உள்ள செய்யுளுக்கேற்பவும், இலக்கண விதிகளுக்கு உகந்தும் உள்ளக் கருத்தை உள்ளவாறு விளக்குதல் உரைகளின் சிறப்பாகும். மொழி, இனம், மதம் வேறுபாடின்றி உரையாசிரியர்களின் கருத்து அமைந்திருந்தாலும் ஏதோ ஓர் வகையில் உரைகளின் சமயச் செல்வாக்கு காணப்படுகின்றன. இதற்கு சான்றாக சமண சமய உரைகளை கூறலாம். உரைகளை பல நோக்குடன் பார்த்தாலும் "தமிழ் இலக்கிய வரலாற்றை முன்னும் பின்னும் ஆய்ந்து கவனித்தால் உரையாசிரியர்களின் பணி தமிழ் நூல்களின் வாழ்விற்கு எவ்வளவு முதன்மை வாய்ந்தது என்பதை உணரலாம் (மு.வை.அரவிந்தன், உரையாசிரியர்கள், ப-55) என்று உரையாசிரியர்களை மு.வை அரவிந்தன் பெருமைப்படுத்தியுள்ளார்.

உரைநடை வடிவத்திற்கு முன் உரை செய்யும் வடிவில் இருந்துள்ளன என்பவை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இவ்வுரை வியப்பிற்குரிய ஒன்றாகவும் அமைந்துள்ளது. குறிப்பாக திருக்குறளுக்கு பல உரைகள் செய்யுள் வடிவில் தோன்றியுள்ளன.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

"குறட்பா ஒன்றைக்கூறி அதன் கருத்தை விளக்க ஏதேனும் ஒரு கதையோ வரலாறோ உதாரணம் காட்டி பாடல் இயற்றும் வழக்கம் இலக்கிய உலகில் தோன்றியது. இத்தகைய நூல்களை உரை நூல்கள் என்றே கருத வேண்டும் என்பது டாக்டர்.உ.வே.சாவின் கொள்கையாகும்" (மு.வை.அரவிந்தன், உரையாசிரியர்கள், பக். 70-71) என்று தனது நூலில் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

உரைநடையின் வளர்ச்சி

மொழியைக் காலந்தோறும் வளர்ப்பதன் மூலமே மொழி வளர்ச்சி பெறும். மரபு சார்ந்த நூல்களும் நவீன இலக்கியங்களும் மொழியை காலத்திற்கேற்ப வளர்க்கின்றனர். பாண்டியன் காலம் தொட்டு இன்று வரை மொழியானது பல சூழல்களில் வளர்ந்தாலும் உரைநடை தமிழ் மொழியைத் தூக்கிப்பிடித்துள்ளது. தமிழ் மொழியைத் தனித் தமிழாக பார்த்த அறிஞர் பெருமக்கள் பல போராட்ட சவால்களை எதிர்கொண்டு வந்துள்ளனர். தமிழ் மொழிக்கும் சான்றாதாரங்கள் எவ்வளவோ இருந்தாலும் கூட தமிழ் செம்மொழி ஆவதற்கு நெடுங்காலம் தேவைப்பட்டது. குறிப்பிட்ட நூல்களுக்கே மதிப்புகள் கொடுக்கப்பட்டன. இதற்கு உரைநடையின் வடிவம் முக்கிய காரணம் ஆகும். இயல், இசை, நாடகம், என்னும் முத்தமிழுக்கும் உரைநடை பொதுவாயிற்று. இருப்பினும் கட்டுரையின் உருவமே உரைநடையை வளர்த்தது என்றும் சொல்லமுடியும், தமிழர்கள் பயன்படுத்திய பொருட்களின் அடையாளங்களை பார்க்கும்போது உரைநடை மண்பாண்ட பொருட்களிலும், கோயிற் கற்கள், ஓடுகள், ஓலைச்சுவடிகள், செப்புப்பட்டயங்கள் முதலியவற்றில் உரைநடை எழுத்துக்கள் காணப்படுகின்றன. மேலும் ஓதுவார்கள் தேவாரப் பாடல்களையும் ஆழ்வார்கள் பிரபந்த பாடல்களைப் பாடியும் அதன் பொருளை எடுத்துச்சொல்லியும் உரைநடைக்கு மதிப்பளித்துள்ளனர்.

முடிவுரை

ஞாயிறு தேவநேயப்பாவணார், உ.வே.சாமிநாதையர், மறைமலையடிகள். ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, மு.வரதராசனார், நா.வானமாமலை, வ.சுப. மாணிக்கம், திரு.வி.க., தே.பொ.மீனாட்சிசுந்தரம் போன்ற பல அறிஞர்கள் எழுத்தாற்றலின் வாயிலாக உரைநடையை வளர்த்துள்ளார்கள். குறிப்பாக நவீன எழுத்தாளர்களின் எழுத்தாற்றல் தன்மை உரைநடையை வளர்த்து வருகின்றது. இந்திய இலக்கிய சிற்பிகள் எனும் பெயரில் சாகித்ய அகாதெமி வெளியிட்டுள்ள நூல்கள் இருபதாம் நூற்றாண்டின் உரைநடையின் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்கின்றன. நவீன எழுத்தாளர்களை எதிர் நோக்கி இருபத்தொன்றாம் நூற்றாண்டை கடந்து போகும் இந்த உரைநடையின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பது மேலும் ஆய்வுக்குரிய ஒன்றாகும்.

துணைநின்ற நூல்கள்

[1] அடைக்கலசாமி. எம்.ஆர்., தமிழ் இலக்கிய வரலாறு, கழக வெளியீடு, சென்னை. 1976

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

[2] அரவிந்தன். மு.வை., உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை - 600108. 2012.

[3] இளவரசு. சோம., இலக்கிய வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை - 600108. 2010.

[4] சுப்பிரமணியன். ச.வே., தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை - 600108. 2012.

[5] ஞானசம்பந்தன். அ.ச., இலக்கியக் கலை, கழக வெளியீடு, சென்னை - 600018. 1999.

[6] தண்டபாணிதேசிகர் (ப.ஆ.), நன்னூல் விருத்தியுரை, பாரிநிலையம், சென்னை. 1976.

[7] பாலுசாமி. நா., பன்முகப் பார்வையில் பரிமேலழகர், அன்னம் - அகரம் பதிப்பகம், தஞ்சாவூர்.

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

ஞானமணி. "தமிழ் உரைநடையின் ஆளுமை." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 1, *திசம்பர்* 2020, பக். 189-193. டிஓஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.029**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Gnanamani. "The Influence of Tamil Prose." *International Journal of Tamil Language and Literary Studies,* Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020, pp. 189-193. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.029**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /Nil

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

நம்பியகப் பொருளும் நாற்கவிராச நம்பி உரையும்

Nambiyagap Porul and the Textual Commentary of Narkavirasa Nambi

முனைவர் இரா. தனலெட்சுமி, உதவிப் பேராசிரியர், இலக்கியத் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
Dr.R.Dhanalakshmi, Assistant Professor, Literature Department, Tamil University, Tanjore.
ORCiD: https://orcid.org/0000-0001-7130-2565
DOI: 10.38067/ijtlls.2020.spl.v03i02v1.030

Abstract

There were times when only the original text was learnt without the need for commentaries. Later, due to various reasons, commentaries for the original text were required for learning the original text. Tamil language has wealth of original texts for which commentaries were written at different periods of time. Commentaries are available for both literature and grammatical works in Tamil. This article explains the distinctive features in the commentary of the text Nambiyagap porul. The commentary is written by the author, Narkavirasa Nambi, himself. Therefore, this work is considered to be a unique feature of this book.

Keywords: Commentary, Nambiyakap porul, Narkavirasa Nambi, Tamil Grammar.

பழங்காலத்தில் நூல்கள் அனைத்தும் செய்யுள் வடிவிலேயே அமைந்திருந்தன என்பதை அனைவரும் அறிவர். ஆசிரியர் – மாணவர் என்னும் தொடர்பு இலக்கியம் பயில்வதற்கு ஏற்றதாக அமைந்தது. காலம் செல்லச் செல்ல மூல நூலை (செய்யுள் வடிவத்தை) படித்துப் பொருளை அறிந்து கொள்வது என்னும் வழக்கம் தொடர்ந்து வருகின்றது. இதற்கு காரணம் போதிய பயிற்சி இல்லாமையே. பழைய நூல்களை நன்கு விளங்கிக் கொள்வதற்கு உதவியாக நூலுக்கு விரிவாகப் பொருள் கூறினர் உரையாசிரியர்கள். உரை என்பது சொல்லுக்குப் பொருள் கூறுவதாக மட்டும் அமையாமல் விளக்கம் தந்து அதன் நயத்தை எடுத்துக் காட்டியது.

இலக்கண இலக்கியங்களைப் படைத்த சமணச் சான்றோர் சிறந்த உரையாசிரியர்களாகவும் விளங்கியுள்ளனர். அவர்கள் உரை இல்லை என்றால் பல இலக்கிய இலக்கணங்களை உரிய முறையில் புரிந்து கொள்ள இயலாமல் போயிருக்கும். உரை எழுதுபவர்கள் பல்துறை வல்லுநராகவும் கூர்மையான அறிவு உடையவராகவும் இருக்க வேண்டும்.

உரை ஏன் தேவை

இலக்கணமும் இலக்கியமும் சுருங்கிய சூத்திர வடிவில் அமைந்திருப்பதால் அவற்றின் பொருளை அறிந்து கொள்ள உரைகள் தேவையாகின்றன. இலக்கியங்கள் சிலவற்றை உரைகளின் உதவி இல்லாமல் அறிவது கடினம். மேலும் மொழி வளர்ச்சியின்போது சொல்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

மாற்றங்களும் பொருள் மாற்றங்களும் நிகழ்கின்றன. காலம் செல்லச்செல்ல முந்தைய காலத்தில் வழங்கிய சொல்லின் பொருளை இன்னொரு காலத்தில் புரிந்துகொள்வது கடினமாகிப்போகிறது. கடினம் என்பது காலத்திற்கேற்பவும் அவரவர் தகுதிக்கேற்பவும் அமையும். படிப்பவர்களுக்கு எளிதாகப் புரியும் வண்ணம் உரை காண முயன்ற ஆசிரியர்கள் பயன்பாடுடைய நூல்களை பயன்படத்தக்க வகையில் எளியமுறையில் புரிந்து கொள்ளும் நோக்கில் உரை அமைத்தனர்.

இலக்கண உரையாசிரியர்கள்

பல இலக்கணங்களை இயற்றிய சமணப் பெரியோர்கள் இலக்கியம் இலக்கணம் ஆகியவற்றிற்கு உரை எழுதி மேலும் வளம் சேர்த்தனர். தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியவர் இளம்பூரணர். முதல் உரையாசிரியர் இவரே அதனால் இவர் உரையாசிரியர் என்ற பெயராலேயே அழைக்கப்படுகிறார். இவரை துறவி என மயிலைநாதர் சுட்டிக்காட்டுகின்றார். நன்னூலுக்கு உரைகண்ட மயிலைநாதரும் சமண சமயத்தைச் சார்ந்தவர். இளம்பூரணர் உரை பின்வந்த உரையாசிரியர்கள் பலராலும் மேற்கோளாகக் காட்டப்பட்ட சிறப்பை உடையது.

உரை இலக்கணம்

உரையின் பொது இலக்கணத்தை நான்னூலின் பொதுப்பாயிரம் இவ்வாறு கூறுகின்றது.

பாடம் கருத்தே சொல்வகை சொற்பொருள்
தொகுத்துரை உதாரணம் வினாவிடை விசேடம்
விரிவு அதிகாரம் துணிவு பயனோடு
ஆசிரிய வசனம் என்று ஈரேழ்உரையே (பொதுப்பாயிரம் 21)

என்று உரையின் பொது இலக்கணத்தைச் சுட்டுகிறது.

உரையாசிரியர்களின் சொற்பொருள் விளக்க நெறிமுறைகள்

உரையாசிரியர்கள் பாடலின் கருத்தை விளக்குவதற்குச் சொற்களின் பொருளையும் அவற்றின் பல்வேறு பரிமாணங்களையும் எடுத்துவிளக்க வேண்டியது அவசியம். இதற்கு அவர்கள் பின்பற்றியுள்ள நெறிமுறைகள் பலவாக உள்ளன. பின்னே தரப்பட்டுள்ளவை உரையாசிரியர்களின் உரைகளில் இடம்பெற்ற சொற்பொருள் விளக்க நெறிமுறைகளாக உள்ளன.

சொற்பொருள் தருதலில் உரைகளில்

1. ஒரு பொருட்பலசொல் தருதல்
2. விளக்கச் சொற்பொருள் தருதல்
3. மீச்சொல் தருதல்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

4. எடுத்துக்காட்டுப் பொருள் விளக்கம்
5. உதாரணம் தந்து பொருள் விளக்கம் தருதல்
6. மேற்கோள் தந்து பொருள் விளக்கம் தருதல்
7. காரணங் காட்டிப் பொருள் விளக்குதல்
8. வினாவிடை முறையில் பொருள் தருதல்
9. பொருள் வேறுபாடுகாட்டுதல்
10. பிற உரையாசிரியர்கள் கருத்துக்களை தருதலும் மறுத்தலும்

எனும் பல்வேறு நெறிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன. இவ்வாறே இலக்கணப் பொருள் தருவதில்

1. இலக்கணப் பொருள் தருதல்
2. திரிபை விளக்குதல்

என்பன போன்ற நெறிகள் பின்பற்றப்பட்டுள்ளன.

நம்பியகப்பொருளுக்கு உரையும் நாற்கவிராசரே எழுதியுள்ளது மிகவும் சிறப்புக்குரியது. தண்டியலங்கார உரையாசிரியர் யார் என்பது விளங்கவில்லை. நூல் தோன்றிய காலத்தை அடுத்து உரையும் தோன்றியிருக்கக்கூடும் என்று கருதுகின்றார் டாக்டர் உ.வே.சாமிநாத அய்யர். அவர் தண்டியலங்கார உரை அனபாயசோழன் காலத்தில் இயற்றப்பட்டது என்று அந்நூலின் உரையிலுள்ள மேற்கோள்களால் தெரிய வருகின்றது.

புறப்பொருள் வெண்பாமாலை தொல்காப்பியத்திற்குப் பின் பெரிதும் பயிலப்படும் புறப்பொருளின் இலக்கணத்தை உணர்த்தும் தனிநூல் இது. இந்நூலை உரையாசிரியர் அனைவரும் பயின்றுள்ளனர். இந்நூலின் ஆசிரியர் ஐயனாரிதனார். சேர அரச பரம்பரையில் தோன்றிய புலமைச் செல்வர். இவர் பிற நூல்களிலிருந்து மேற்கோள் தராமல் தக்கமேற்கோள்களை இவரே வெண்பாக்களால் பாடிச் சேர்த்துள்ளார். மேற்கோள் காட்டுதல் உரையாசிரியரின் பணி என்றாலும் நூலாசிரியரே அதனை திறம்படச் செய்திருக்கின்றார். இந்நூலின் உரையாசிரியர் சாமுண்டிதேவநாயகர். மேற்கோள் தேடித்தர வேண்டிய பணியை நூலாசிரியரே செய்து உரையாசிரியர்க்குப் பெரிதும் உதவி செய்துவிட்டார்.

அந்த வகையில் மற்ற உரையாசிரியர்களுக்கு இல்லாத ஒரு சிறப்பு நம்பியகப்பொருளின் ஆசிரியரும், உரையாசிரியருமான நாற்கவிராச நம்பி என்னும் புலமையோனுக்கு உண்டு. இதனை சிறப்புப் பாயிரம்,

மாந்தரும் தேவரும் வாழ்த்தி முக்குடைக்கீழ்
ஏந்தெழில் அரிமான் ஏந்துபொன் அணைமிசை
மதிமூன்று கவிப்ப உதயமால்வரைக்
கதிர்ஒன்று இருந்தெனக் காண்டக இருந்து

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

தத்துவம் பகர்ந்தோன் சரணம் பொருந்திய உத்தமன் என்று இவரைக் கூறுகின்றது. உரை மிகவும் எளிமையும் தெளிவும் உடையது. இறையனார் களவியல் உரையின் சார்பு சில இடங்களில் காணப்படுகிறது. இளம்பூரணர் உரையின் இயல்புகளை எல்லாம் இவ்வுரையிலும் காணலாம். அடக்கமும் அமைதியும் இவரது உரைநடையில் காணப்படுகின்றன.

நம்பியகப் பொருள்

தொல்காப்பியப் பொருள் இயல்களுக்குப் பிறகு இறையனார் அகப்பொருள் தோன்றியது. அதன்பின் அகப்பொருள் இலக்கியங்கள் தோன்றின. அகப்பொருள் மரபுகளை பின்னர் தோன்றிய இலக்கணங்கள் விளக்கின. சில நூல்கள் கிடைக்கவில்லை. வீரசோழியம் அகப்பொருள் இலக்கணத்தைக் கூறினாலும் அது பரவலாக படிக்கப்படவில்லை. அத்தகைய சூழலில் பிறந்ததுதான் நம்பியகப் பொருள். புறப்பொருளாவது தனிமனிதனின் கல்வி, ஈகை, புகழ், வீரம், போன்றவற்றைப் பிறருக்குப் புரியும்படியாக எடுத்துரைப்பது, பகிர்ந்து கொள்ளக்கூடியதாய் அமைவது. எனவே இது புறம் எனக் கூறப்படுகிறது. ஆனால் அகப்பொருளோ தலைவன் தலைவியின் இன்பத்தைப் பற்றிப் பேசுவது. ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் தம்முள் கூடிப்பெற்ற இன்பம் இவ்வாறு இருந்தது எனப் பிறருக்குக் கூறமுடியாததாய், தாமே உணர்ந்து மகிழத் தக்கது.

உரைமரபு

சமண இலக்கிய நூல்களுக்கு எழுதப்பட்ட உரைகள் பெரும்பாலான நூலாசிரியர் காலத்திலேயே எழுதப்பட்டிருக்கின்றன. யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை இவ்வகையுள் அடங்கும். இவற்றுக்கு உரை எழுதியவர் குணசாகரர். நேமிநாதம், வச்சணந்திமாலை, ஆகிய நூல்களுக்கு உரை வகுத்தவர் குணவீரபண்டிதர். உரையை நூலாசிரியரைத் தவிர்த்துப் பிறர் எழுதுவது மரபு, இம்மரபு இக்காலத்தில் மாறியது.

நூலும் உரையும்

தமிழிலக்கிய உலகில் இறையனார் அகப்பொருள் நூலுக்குப்பின் நாற்கவிராச நம்பி இயற்றிய ***அகப்பொருள் விளக்கம்*** சிறப்புற்று விளங்குகின்றது. தமிழ் அகப்பொருள் இலக்கணம் பயில்வோர் விரும்பிப் பயிலும் சிறந்த இலக்கண நூலாக இந்நூல் விளங்குகிறது.

அகப்பொருள் விளக்கம் எழுதிய நாற்கவிராச நம்பியே தம் நூலுக்கு உரையும் இயற்றியுள்ளார். இதனை,

அகப்பொருள் விளக்கம் என்று அதற்கு ஒரு நாமம்
புலப்படுத்தும் இருளறப் பொருள் விரித்து எழுதினன்

என்று சிறப்புப்பாயிரம் கூறுவதாலும்

இருளறப் பொருள் விரித்து எழுதினன்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

என்பதற்கு மயக்கம் தீர உரையைப் பரப்பி எழுதினன் என்று அதன் உரை கூறுவதாலும் அறியலாம். நம்பி என்பது இயற்பெயர் என்று பாயிரவுரை கூறுகின்றது. நால்வகைக் கவிதைகளாகிய ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி, என்பனவற்றைப் பாடும் திறன் பெற்றிருந்ததால் நாற்கவிராசர் என்னும் சிறப்பு பெயர் பெற்றார். தமிழ், வடமொழி இரண்டிலும் வல்லவர் என்பதை சிறப்புப்பாயிரம்,

இருபெருங் கலைக்கும் ஒருபெருங் குரிசில்
பாற்கடற் பல்புகழ் பரப்பிய நாற்கவிராச நம்பி

என்று இவர் புகழைக் கூறுகின்றது. புளியங்குடி என்னும் ஊரில் வாழ்ந்த முத்தமிழ் ஆசானாகிய உய்யவந்தான் என்பவரின் மைந்தர் இவர் என்பதைச் சிறப்புப்பாயிரம்,

உத்தமன் புளியங்குடி உய்யவந்தான் எனும்
முத்தமிழ் ஆசான் மைந்தன்

என்று அறிவிக்கின்றது. இவர் காலம் குலசேகர பாண்டியன் (1196-1266) அரசாண்ட காலம் என்று சிறப்புப்பாயிரம் கூறுகிறது. நாற்கவிராச நம்பி, நம்பியகப்பொருளுக்கு உரை கண்டார். நூல் எழுதிய ஆசிரியரே அதற்குரிய உரையையும் எழுதுதல் புதுநெறி. இந்நெறியை குணவீர பண்டிதரும் நாற்கவிராச நம்பியும் மேற்கொண்டார்கள். பின்வந்த உரையாசிரியர்களுக்கு இம்முறை முன்னோடியாக அமைந்தது.

இலக்கிய உரைகள்

இலக்கணங்களுக்கு மட்டுமின்றி இலக்கியத்திற்கும் உரைகண்டவர்கள் சமணச் சான்றோர். அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்திற்குச் சிறந்ததோர் உரை எழுதியுள்ளார். சிலப்பதிகாரத்தில் வரும் இசை,நடனம் முதலிய நுட்பங்களை விளக்கிக்கூறுவதற்குப் பெரிதும் உதவுவது இவரது உரை. இவருடைய உரை சொற்பொருள் கூறி நிற்பதில்லை. பொழிப்பைத் திரட்டிச் சிறப்பு உரையைத் தருவது. இவர் கொங்கு மண்டலத்தைச் சார்ந்தவர். இவரை பாதுகாத்தவரும் சமணர் இவரது உரை விளக்கத்தினின்றும் இவர் சமணராக இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரமுடிகிறது. இருந்தபோதிலும் சிலர் இவரை சைவர் என்று கூறுவதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

நச்சினார்க்கினியர் மதுரையில் பிறந்த வைதிக அந்தணர். தொல்காப்பியம், சிந்தாமணி, கலித்தொகை, பத்துப்பாட்டு ஆகிய நூல்களுக்கு முழுமையாகவும், குறுந்தொகையில் சில பாடல்களுக்கும் உரை எழுதிச் சிறப்புப் பெற்றவர். உச்சிமேல் புலவர் கொள் நச்சினார்க்கினியர் என்று பாராட்டப்படுபவர். சிந்தாமணிக்கு உரைகாண சில காலம் சமணராகி, சமணர்களிடம் அதன் உரையை அறிந்து எழுதினார் என்றும் சமணர்களாலேயே அவ்வுரை பாராட்டப்பட்டது என்ற ஒரு செய்தியும் வழங்குகிறது.

மேற்கோள் பாடல்கள்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

இன்று அச்சில் உள்ள உரையில் அகப்பொருள் இலக்கணத்திற்கு இலக்கியமாகத் தஞ்சைவாணன் கோவை செய்யுட்களில் யாவும் காட்டப்பட்டுள்ளன. நம்பியகப்பொருள் இலக்கணத்திற்கு இலக்கியமாக எழுதப்பட்ட நூல் தஞ்சைவாணன் கோவை ஆதலின் நூலாசிரியரே உரை எழுதிய அகப்பொருள் இலக்கணத்தில் மேற்கோளாகத் தஞ்சைவாணன் கோவைப் பாடல்கள் இடம்பெற முடியாது. காலப்போக்கில் யாரோ ஒருவர் தஞ்சைவாணன் கோவைப் பாடல்களை மேற்கோளாக அமைத்திருக்க வேண்டும்.

1878 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் வ.ச.வைத்தியலிங்கப்பிள்ளை அகப்பொருள் விளக்கத்திற்கு ஓர் உரை இயற்றி மேற்கோள் பாடல்களைத் தஞ்சைவாணன் கோவையிலிருந்து தந்தார். இந்தப் புது உரைக்குப்பின் பழைய உரையிலும் அக்கோவைப்பாடல்கள் சேர்க்கப்பட்டிருக்கலாம்.

சொற்பொருள் விளக்கம்

சில சொற்களுக்கு நாற்கவிராச நம்பி கூறும் பொருள் கீழே தரப்படுகின்றன.

நூல் என்ற சொல்லுக்குப் பொருள் உரைக்குங்கால் தந்திரம் என்னும்
வடமொழியை நூல் என்று வழங்குவது தமிழ் வழக்கு எனக்கொள்க
உரன் என்னும் அறிவு எனினும் ஒக்கும்
நாணம் என்பது பெண்டிர்க்கு இயல்பாகிய குணம்
மடம் என்பது பேதைமை

என்றும் சொற்களுக்குரிய பொருளை விளக்குகிறார்.

முடிவுரை

நாற்கவிராச உரை மிகவும் எளிமையும் தெளிவும் உடையது இறையனார் களவியல் உரையின் சார்பு சில இடங்களில் காணப்படுகின்றது. இளம்பூரணர் உரையின் இயல்புகளை எல்லாம் இவ்வுரையிலும் காணலாம். அடக்கமும் அமைதியும் இவரது உரைநடையில் காணப்படுகின்றன. சூத்திரங்களின் பொழிப்புரைக்குப் பின் மிகச்சுருக்கமாக விளக்கமும் அருஞ்சொற்பொருளும் இலக்கண ஒப்புமையும் தருகின்றார். அந்த வகையில் நம்பியகப்பொருளின் மூலத்தின் ஆசிரியரான நாற்கவிராச நம்பியே அந்நூலிற்கு உரையையும் எழுதியிருப்பது மிகவும் சிறப்பான ஒன்றாகும்.

சான்றெண் விளக்கம்

[1] பெ.மாதையன், ***உரையியல்,*** பாவை பப்ளிக்கேஷன்ஸ்,16 (142) ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600

[2] இரா.குமரவேலன், ***உரை மாண்புகள்***, விழிகள் பதிப்பகம், 8எம்.139,7-ம் குறுக்குத் தெரு, திருவள்ளுவர் நகர் சென்னை-41.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Special Issue - 2, Vol.1, December 2020 Available at: www.ijtlls.com

[3] முனைவர்.ச.திருஞானசம்பந்தம், ***அகப்பொருள் விளக்கம்***, கதிர் பதிப்பகம், திருவையாறு.

மு.வை. அரவிந்தன், ***உரையாசிரியர்கள்,*** தமிழ் இணையக் கல்விக்கழகம்.

[4] முனைவர்.தேவிரா,(இரா.இராசேந்திரன்), ***நம்பியகப்பொருள் விளக்கம்*** தேவிரா உரை ஸ்ரீ நந்தினி பதிப்பகம் 38/18, முதல் தெரு,வெல்கம், காலனி அண்ணாநகர், மேற்குவிரிவாக்கம், சென்னை -101

தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:

தனலெட்சுமி. “நம்பியகப் பொருளும் நாற்கவிராச நம்பி உரையும்.” *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,* தொகுதி 3, சிற.இதழ் 2, தொகுதி 1, *திசம்பர்* 2020, பக். 194-200. டிஓஐ: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.030**

Cite this Article in English (*MLA 8 Style*) as:
Dhanalakshmi. “Nambiyagap Porul and the Textual Commentary of Narkavirasa Nambi.” *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 3: Special Issue - 2, Vol. 1, December 2020, pp. 194-200. DOI: **10.38067/ijtlls.2020.spl.v03i02v1.030**

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement: இல்லை /NIL

கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement: இல்லை /NIL

கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration: இல்லை /NIL